தமிழக வரலாற்றில் அதியர் மரபு



முனைவர் நா. மார்க்சிய காந்தி

தமிழக வரலாற்றில் அதியர் மரபு

(சங்க காலம் முதல் கி.பி. 13ஆம் நூற்றாண்டு வரை)

(Atiya Lineage - From Sangam Age to 13th century A.D.)

முனைவர். நா. மார்க்சிய காந்தி,

எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (வரலாறு), டிப்.கல்.தொல்., பி.எச்டி.,

அமுதன் பதிப்பகம்,

சென்னை–28.

BIBLIOGRAPHICAL DATA

Title	:	THAMIHZAKA VARALATTRIL ATHIYAR MARAPU
Author	:	Dr. N. MARXIA GANDHI Assistant Superintending Epigraphist, State Department of Archaeology. Govt. of Tamil Nadu, Chennai - 600 113.
Publisher	:	AMUTHAN PATHIPPAGAM, AR-1, Forshore Estate, Chennai - 600 025.
Publication No	:	2
Language	:	Tamil
Year of Publication	:	1998
Edition	:	First
Copyright	:	Author
Paper used	:	14.4 kg Creamwove
Size of the book	:	Demy Octova
Font size	:	10 Points
No of Pages	:	(xiv) + 193 pages
Price	:	Rs.60/-
No of Copies	:	1000
Printed at	:	Alamu Printing Works, No.5 Iyyah Mudali Street, Royapettah, Chennai - 600 014.
Subject	:	History.

அரிய நூல்கள் வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதியுதவிய தமிழ் வளர்ச்சி இயக்கத்திற்கு நன்றி.

எனை ஈன்று எனக்குள் ஒரு சுடராய் நின்று•
வழிகாட்டும் என் அன்னை
திருமதி ஆழ்வாரம்மாள்,
சுதந்தரப் போராட்ட வீரராய்த் திகழ்ந்து
எனக்கு வெளியுலகப் பலகணியாய் நின்று
தெளிவான உணர்வோடு எனை வளர்த்த என் தந்தை
திரு. ல. நாராயணன்
இருவர் பதம் வணங்கிப் படைக்கின்றேன்.

நா. மார்க்சிய காந்தி.

அணிந்துரை

அ. அ. மணவாளன்
பேராசிரியர் – தலைவர் (ஓய்வு)
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்.

'தமிழக வரலாற்றில் அதியர் மரபு' என்னும் இந்த நூல் டாக்டர் மார்க்சிய காந்தி அவர்களால் டாக்டர் பட்டப்பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு 1992இல் அளிக்கப்பெற்ற ஆய்வேட்டின் அச்சு வடிவமாகத் திகழ்கிறது. சேர,சோழ, பாண்டியர் என்னும் தொல்குடி அரசுக் குலங்களுக்கு அடுத்த நிலையில் குலமரபுச் சமுதாய காலத்திலிருந்தே ஆளும் குலமரபாக விளங்கியது அதியர் குலம். மூவேந்தரை அடுத்து ஆளும் குலமரபாக அதியர்களை அசோகன் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இந்தக் குலமரபு, குலமரபுச் சமுதாய காலம், பேரரசு தோன்றுவதற்கு முற்பட்ட காலம், பேரரசுக்காலம், பேரரசு வீழ்ச்சி அடைந்த காலம் என வளர்ந்த அல்லது நடந்த தமிழக அரசியல் வரலாற்றில், மூவேந்தரோடு இணையாகவும், ஒன்றுபட்டும், அடங்கிநின்றும், தனித்துநின்றும் கி.பி. 13ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து வந்த பெருமையுடையதாக விளங்குகிறது.

தமிழக அரசியலோடும், சமுதாய வளர்ச்சியோடும் கலை இலக்கியப் பண்பாட்டு வரலாற்றோடும் இணைந்து வளர்ந்த இத்தகைய அதியர் மரபினைச் சங்க காலம்தொட்டுப் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை நிலவிவந்த அதியர் குல வரலாற்றை – ஒவ்வொரு படிநிலையிலும் தமிழக அரசியலிலும் கலைஇலக்கியப் பண்பாட்டு வளர்ச்சியிலும் அவர்தம் பங்களிப்பினை – வரலாற்று நெறிமுறைகளின் அடிப்படையில் முதன்முதலாகச் செய்யப்பெற்ற ஆய்வு என்று இதனைக் கூறலாம். தமிழிலும் வரலாற்றிலும் முதுகலைப் பட்டங்களும், தொல்லியல் புலத்தில் பட்டயமும் பெற்றுள்ள இந்த ஆய்வாளர் திருமதி மார்க்சிய காந்தி இத்தகைய ஆய்வினை நிகழ்த்துவதற்குரிய தகுதி பெற்றவர் என்பதையும், தரவுகள் தந்த முடிபினைத் தவிரத் தம்விருப்ப முடிபுகளாக இவர் எதனையும் இந்த ஆய்வில் கூறவில்லை என்பதையும் இந்த நூலை மேற்போக்காகப் படிப்பவர்களும் எளிதில் உணரலாம்.

இந்த ஆய்வு அரசியல், வாழ்வியல் என்னும் இருபகுதிகளைக்

கொண்டதாக அமைந்துள்ளது. அதியர்கள் ஆளும் மரபினராகக் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே நிலைபெற்று விட்டனர் என்பதும், குலமரபுத் தலைவர்கள் வீழ்ச்சியடைந்த காலகட்டத்தில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட புதிய சமுதாய அமைப்பு தோன்றியபோது துளிர்விட்ட பழைய குலமரபுகளுள் ஒன்றாக அதியர் மரபும் துளிர்த்து பொருளாதார வளர்ச்சி பெற்ற குடியாக விளங்கியது என்பதும், சோழப் பேரரசுக் காலத்தில் மழவரையர் என்ற பெயரில் பேரரசுகளுடன் மணஉறவு கொள்ளும் அளவிற்குப் பெருமை பெற்றகுலமாக இது விளங்கியது என்பதும், பேரரசின் வீழ்ச்சிக் காலத்தில் பல குறுநில மன்னர்களைப் போலவே அதியர்மரபினைச் சார்ந்த அரசர்களான அதியமானார், இராஜஇராஜ அதிகைமான், விடுகாதழகிய பெருமாள் என்ற மூவரும் தன்னாட்சியுடைய அரசர்களாக மேம்பட்டு விளங்கினர் என்பதும் அரசியல் என்னும் முதற்பகுதியில் பல்வேறு ஆதாரங்களுடன் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

குலமரபுக் காலத்தில் அதியர் மரபினைப் போற்றிப் பாடிய சங்கப் புலவர்கள் பலர் இருந்தனர் என்பதும், அக்காலத் தமிழ் வளர்ச்சியில் அதியர்பற்றிய பாடல்கள் தனியிடம் பெற்றவை என்பதும், பேரரசு தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தில் அக்கால இலக்கியச் சூழலுக்கு ஏற்ப அதியரின் தொல்மரபுச் சிறப்புகளைத் தொகுத்துக் கூறும் நூலாகத் தகடூர் யாத்திரை என்ற நீண்ட கதைப்பாடல் தோன்றக் காரணமாயிருந்தனர் என்பதும், பேரரசு வீழ்ச்சிக்காலத்திலும் அதியர் மரபினைச் சிறப்பித்துப் பாடிய பல தனிப்பாடல்களும் கல்வெட்டுக் கவிதைகளும் தோன்றக் காரணமாயிருந்தனர் என்பதும் தமிழ் வளர்ச்சிக்கு அதியர் ஆற்றிய பங்களிப்பாக ஐந்தாம் இயலில் மிக விரிவாக ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

குலமரபுச் சமுதாய காலத்தில் நடுகல் வழிபாடு அதியரிடையே சிறப்புப் பெற்றிருந்த தன்மையும், சமண, பௌத்த சமயங்களுக்கு அதியர் அளித்திருந்த ஆதரவும், வைதிக சமயங்களின் மலர்ச்சிக் காலத்தில் சைவத்தையும், வைணவத்தையும் பல்வேறு வகைகளில் ஆதரித்த சிறப்பும், தம்மாட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் கட்டடக் கலையும் சிற்பக்கலையும் சிறந்து விளங்கும் குடைவரைகளையும், கோயில்களையும் அமைத்து அரும் பணியாற்றிய செய்திகளும் மிக விரிவாக அடுத்த இயலில் ஆராயப்பட்டுள்ளன.

தமிழகத்தின் வடமேற்கு எல்லைப்புறத்தைத் தம் ஆட்சிப்பரப்பாகக் கொண்ட அதியர்கள் வேளாண்மைக்கும்

வாணிகத்துக்கும் சிறப்பளித்துத் தம் பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றினர் என்னும் செய்தியை ஏழாம் இயல் மிக விரிவாகப் பேசுகிறது. வாணிகப் பெருவழிகளை அமைத்தல், குறிப்பாக அதியமான் பெருவழி என்ற வாணிகப் பெருவழியை அமைத்துத் தமிழகத்திலேயே முதன்முதலில் வழிக்கற்களை அமைத்து அதில் பெருவழியின் பெயர், பெருவழி செல்லும் இடம், செல்லவேண்டிய தூரம் ஆகிய குறிப்புகளைப் பொறித்து வைத்த அதியரின் சிறப்பியல்புகள், குழாய்ப் பாசன முறையைத் தோற்றுவித்துத் தம் ஆட்சிப் பரப்பில் உள்ள நிலங்களில் வேளாண்மை செழிக்க உதவிய பாங்கு, தமிழக வேளாண்மை செழிக்க வழிசெய்யும் வகையில் முதன்முதலாகக் கரும்புபயிரிடுதலை அறிமுகப்படுத்திய அதியரின் தனிப்பெருஞ்சிறப்பு ஆகிய பல்வேறு செய்திகள் தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் இவ்வியலில் தெளிவாக ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

தமிழக அரசியல் வரலாற்றின் இன்றியமையாத ஒரு கூறாக விளங்கிய அதியர் மரபு அரசியல், கலை, இலக்கியம், வாணிகம், வேளாண்மை ஆகிய பல்வேறு வாழ்வியல் நிலைகளில் தமிழகத்துக்குப் பெருந்தொண்டாற்றியுள்ள மாண்பினை இலக்கியங்கள், கல்வெட்டுகள் ஆகிய வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில், முறையாக ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ள ஆய்வாளர் டாக்டர் மார்க்சிய காந்தியின் ஆய்வு ஆர்வத்தையும், ஆய்வு நாகரிகத்தையும் உளமார மகிழ்ந்து பாராட்டுகிறேன். மேலும் இத்தகைய நல்லாய்வுகள் பலவற்றைப் படைத்துத் தமிழாராய்ச்சி உலகிற்கு பயன்படுவாராக என்றும் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

சென்னை, **அ.அ. மணவாளன்**
9-11-98.

என்னுரை

தமிழக வரலாற்றில் அதியர் மரபு என்ற இந்த ஆய்வினை மேற்கொள்ள எனக்குத் தூண்டுதலாக அமைந்தது 'குலமரபு முதல் அரசுவரை' என்ற வரலாற்று அறிஞர் ரோமிலா தாப்பர் அம்மையாரவர்களின் நூலே. அந்நூலின் ஒவ்வொரு பகுதியைப் படிக்கும் போதும், முன்னரே என்னுள் இருந்த சங்க இலக்கிய நூற்பயிற்சி காரணமாக, சங்க காலத் தமிழ்ச் சமுதாய வரலாற்றினை மீட்டு எழுத வேண்டும் என்ற அவா மேலேங்கியது. அதியர் மரபு மிகப்பழங்காலத்தொட்டு, கி.பி.13–ஆம் நுற்றாண்டு வரை தொடர்ந்து சிறப்புடன் விளங்கிய மரபாதலின் அதனை முன்னிருத்தி, தமிழ்ச் சமுதாய வரலாற்றை எழுத முனைந்து, சங்க காலச் சமுதாய அரசியல் வரலாற்றை முதன் முதலாக புதிய கண்ணோட்டத்தில் சங்க இலக்கிய வாயிலாக உணர்ந்து எழுதிய ஆய்வேடு இங்கு அச்சு வடிவம் பெற்றுள்ளது. அதன் தொடர்ச்சி பதின் மூன்றாம் நூற்றாண்டு வரை நீள்கிறது.

ஒரு சிறிய அரச மரபு அரசியலில் பல்வேறு கால கட்டங்களில், பெரிய அரச மரபுகளுடன் ஒன்றியும், அடங்கியும், ஓங்கியும் எப்படி நிலைபெற முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குவது அதியர் மரபாகும். அவர்தம் ஏற்றமும், அடக்கமும் பிற பெரிய அரச மரபுகளின் அவ்வக்காலத் தன்மையைப் பொருத்தே அமைகின்றன. இருப்பினும் தமக்கென இருந்த பொருளாதார நிலைப்பாட்டுக்குரிய தனித்தன்மைகள் காரணமாகவே அம்மரபு நீண்டகாலம் தொடர்ந்து நிலைபெற்றது. இக்கருத்தடிப்படையில் அதியர் மரபின் வரலாறு இந்நூலில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

இவ் ஆய்வேட்டினை நூலாக வெளியிட அனுமதித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறைக்கும் எனது நன்றி. இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய பேராசிரியர் டாக்டர் அ.அ.மணவாளன் அவர்களுக்கும், அச்சுப்படியினைப் பார்வையிட்டு உதவிய திரு. செங்கல்வராயன் அவர்களுக்கும். நுலினை வடிவமைத்து அச்சிட்டு வழங்கிய அலமு அச்சகத்தார்க்கும், என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். புகைப்படங்களைத் தந்துதவிய தொல்லியல் துறை புகைப்படப் பிரிவினர்க்கும் என் நன்றி

நா. மார்க்சிய காந்தி.

குறுக்க விளக்கம்

அகம்.	...	அகநானூறு
அடி.	...	அடிகள்
கழகம்.	...	தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்
குறுந்.	...	குறுந்தொகை
சிலம்பு.	...	சிலப்பதிகாரம்
தொ.ஆ.	...	தொகுப்பாசிரியர்
தொல்.	...	தொல்காப்பியம்
நற்.	...	நற்றிணை
ப.ஆ.	...	பதிப்பாசிரியர்
பதிற்று.	...	பதிற்றுப்பத்து
புறம்.	...	புறநானூறு
புறத்.	...	புறத்திரட்டு
பொருள்.	...	பொருளதிகாரம்
மதுரை.	...	மதுரைக்காஞ்சி
மலைபடு.	...	மலைபடுகடாம்
மொ.ஆ.	...	மொழிபெயர்ப்பு ஆசிரியர்
ARE	...	Annual Report on Indian Epigraphy
A.I.	...	Ancient India
C.I.I.	...	Corpus Inscriptions Indicarum
E.C.	...	Epigraphia Carnatica
E.I.	...	Epigraphia Indica
I.A.	...	Indian Antiquiry
S.I.I.	...	South Indian Inscriptions

தமிழக வரலாற்றில் அதியர் மரபு

பொருளடக்கம்

நூலில் இடம் பெறும் புகைப்படங்கள்

முன்னுரை

ஆய்வு நோக்கம்

தமிழக வரலாற்றில் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்றும் ஆட்சிக்குரிய குலங்களாகச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தன. அவையன்றி, வேறு சில குலங்களும் தொடக்க காலத்திலிருந்தே ஆளும் உரிமையுடையனவாகச் சிறந்துள்ளன. அத்தகைய குலங்களுள் ஒன்றாகத் தகடூரைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய அதியர் குலத்தைக் கருதலாம். சேர, சோழ, பாண்டிய குலங்களுக்கு அடுத்த நிலையில் வரலாற்றில் நிலைத்த இடத்தினை இவ்வதியர் குலத்தினர் பெற்றிருந்தனர். தமிழக வரலாற்றில் தொடக்க காலம் முதல் ஏறத்தாழ கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரையிலும், சிறிய இடையீடுகளுடன் தொடர்ந்து வந்த பெருமைக்குரியது இவ்வதியர் குலம். இவ்வாறு ஒரு சிறிய குலம் தொடர்ந்து வரலாற்றில் பெற்ற இடத்தினையும், அவ்வாறு தொடர்ந்து நிலைபெறுவதற்குரிய காரணங்களையும் கண்டறியும் பொருட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுத் தலைப்பும் ஆய்வு எல்லையும்

''தமிழக வரலாற்றில் அதியர் மரபு'' – (சங்ககாலம் முதல் கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரை) என்பது இவ்வாய்வுத் தலைப்பாகும். இத்தலைப்பில் காணும் 'மரபு' என்ற சொல் `Lineage' என்னும் ஆங்கிலச் சொல்லிற்கிணையான தமிழாக இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு குலம் பேரரசாக (Dynasty) உருவாகாத வரையில் அது வெறும் குலமரபாகவே வரலாற்றில் இடம் பெறுகின்றது. ஏறத்தாழ 1600 ஆண்டுகள் (சில இடைவெளிகளுடன்) தொடர்ந்து வந்த இவ்வதியர் ஆளும் மரபாக விளங்கிய காலப் பகுதிகளைச் சமுதாய வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் நான்கு பகுதிகளாக்கி இங்கு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரலாற்று ஆசிரியர்கள் பலராலும் கூறப்பட்ட 'சங்ககாலம்' என்பது, 'குலமரபுச் சமுதாய கால' மாகவும் (கி.பி. 4 ஆம் நூற்றாண்டு வரை), அதனை அடுத்து வந்த பல்லவ – பாண்டியர் காலம் (கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை) 'பேரரசு தோன்றுவதற்கு முன்னுள்ள கால'மாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. முதலாம் இராஜராஜன் அரசுக் கட்டில் ஏறியது முதல், முதலாம் குலோத்துங்கன் ஆட்சி ஏற்றது வரையிலான சுமார் ஒரு நூறு ஆண்டு காலம் 'பேரரசுக் காலம்' எனவும் அதன் பின்னர்ச் சோழர் ஆட்சி நிலைபெற்றிருந்த இருநூறு ஆண்டுக் காலம் 'பேரரசின் வீழ்ச்சிக்கால'மாகவும் பாகுபடுத்தப்பட்டுள்ளன. ஒரு சிறு குலமரபின் ஏற்றத்தினையும், இறக்கத்தினையும் தெளிவாக வரையறுக்கப் பயன்படுவதால் இத்தகைய பாகுபாட்டு எல்லை இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வு ஆதாரங்கள்

சங்க காலம் முதல் 13ஆம் நூற்றாண்டு வரையிலான நீண்ட கால வரலாற்றுக்குப் பெரும்பாலும் இலக்கியங்களும், தேவையான அளவிற்குக் கல்வெட்டுகளும் இவ்வாய்வில் அடிப்படைச் சான்றுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முதலியல் பெரிதும் இலக்கியங்களையே அடிப்படை ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஓரிரு கல்வெட்டுகளே இக்காலப் பகுதியில் கிடைத்துள்ளன. இரண்டாம் இயலில் இலக்கியங்களும், செப்பேடுகளும், பெரும்பாலும் அடிப்படை ஆதாரங்களாய் அமைந்துள்ளன. மூன்று, மற்றும் நான்காம் இயல்கள் பெரிதும் கல்வெட்டுகளை ஆதாரமாகக் கொண்டிருப்பினும், கல்வெட்டிலக்கியங்களான தனிப்பாடல்கள் பலவும் இவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் மட்டும் அல்லாது வடமொழியிலமைந்த காவியமான கத்யகர்ணாமிர்தமும், கல்வெட்டுகளுள், பிராகிருதம், சமஸ்கிருதம் மற்றும் கன்னடத்தில் அமைந்த கல்வெட்டுகள் சிலவும் இவ்வாய்விற்கு அடிப்படை முதன்மைச் சான்றுகளாக அமைந்துள்ளன.

ஆய்வு முன்னோடிகள்

சங்ககால இலக்கியங்கள் பற்றி எழுதிய தொடக்ககால ஆய்வாளர்கள் சிலர், அதியரைப் பற்றிப் பொதுவாக எழுதியுள்ளனர். திரு.கே.என். சிவராஜ பிள்ளை அவர்களின் 'பண்டைத் தமிழரின் கால முறை அடைவு (Chronology of the early Tamils) என்ற நூலும், திரு மொ. அ. துரைரங்கசாமி அவர்கள் எழுதிய சங்ககாலச் சிறப்புப் பெயர்கள் (Surnames of the Sangam age - Literary and Tribal) என்ற நூலும், பின்னர் வந்த திரு. கைலாசபதி அவர்களின் தமிழ் வீரயுகப் பாடல்கள் (Tamil Heroic Poetry) என்ற நூலும், அவற்றுள் குறிப்பிடத்தக்கன. திரு கி.வா. ஜகந்நாதன் அவர்கள், 'அதியமான் நெடுமான் அஞ்சி' என்னும் சிறிய நூல் எழுதியுள்ளார். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம் – அரசியல்' என்ற நூலில் திரு க. த. திருநாவுக்கரசு, 'குறுநில மன்னர்கள்' என்ற கட்டுரையில் அதியரைப் பற்றியும் எழுதியுள்ளார். கொங்கு நாட்டு வரலாறு எழுதிய ஆசிரியர்களான, மயிலை சீனி வேங்கடசாமி, திரு. கோவைகிழார், திரு. இராமமூர்த்தி ஆகியோரும், 'வரலாற்றில் தகடூர்' என்னும் நூலை எழுதிய திரு. சொ. சாந்தலிங்கம், 'தருமபுரி வரலாறும் பிரகலாதன் சரித்திரமும்' என்னும் நூலை எழுதிய திரு. கிருஷ்ணமூர்த்தியும் தத்தம் நூல்களில் அதியரைப் பற்றி எழுதிச் சென்றுள்ளனர். சங்ககாலத்திற்குப் பின்னர் வாழ்ந்த அதியமான்களைப் பற்றித் திரு எம்.எஸ். கோவிந்தசாமி, தனது 'பல்லவர் வரலாற்றில் குறுநில மன்னர்களின் பங்கு' (The Role of fudatories in Pallava History) மற்றும், 'பிற்காலச் சோழர் வரலாற்றில் குறுநில மன்னர்களின் பங்கு' (The Role of fudatories in Later Chola History) ஆகிய இரு

நூல்களிலும் ஆராய்ந்துள்ளார்.

இவை தவிர, செந்தமிழ் பன்னிரண்டாம் தொகுதியில் திரு. சதாசிவப் பண்டாரத்தார் எழுதியுள்ள ‘அதிகமான் நெடுமான்ஞ்சி’, திரு.சி. எம். இராமசந்திரஞ் செட்டியார், செந்தமிழ்ச்செல்வி பதின்மூன்றாம் தொகுதியில் எழுதியுள்ள ‘தர்மபுரி’, திரு. வையாபுரிப் பிள்ளையவர்களின் இலக்கியச் சிந்தனைகள் நூலில் இடம் பெறும் ‘அதியமான் அஞ்சி’ , தமிழர் பண்பாட்டு ஒன்பதாந்தொகுதியில் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதியுள்ள ‘எழினி – யாவனிகா’, புலவர் செ. இராசுவின் ‘சங்ககாலத் தகடூர்’, ‘அதியர் மரபு – சங்ககாலம்’, திரு ந. சஞ்சீவி எழுதிய ‘சங்ககாலச் சான்றோர்கள்’ நூலில் இடம்பெறும் ‘ஔவையும் நக்கீரரும்’ ஆகிய கட்டுரைகளும் குறிப்பிடத்தகுந்தவை ஆகும். கொங்கு ஆய்வகம் நடத்திய தருமபுரி மாவட்டக் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற அச்சில் வராத கட்டுரைகளில் சில அதியரைப் பற்றியனவாக உள்ளன. இவர்கள் எல்லாம் அதியர் வரலாறு பற்றிச் சிந்தித்து எழுதிய முன்னோடிகள் ஆவர்.

நூலின் அமைப்பு

அதியர் குறித்து இங்குச் செய்யப்பட்டுள்ள ஆய்வு, இருபெரும் பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி ‘அரசியலை’யும் இரண்டாம் பகுதி ‘வாழ்வியலை’யும் பற்றி அமைந்துள்ளன. இவ்விரு பகுதிகளிலும் இடம் பெறும் இயல்களாவன:

பகுதி 1 - அரசியல்

இயல் 1 : குலமரபுச் சமுதாய காலத்தில் அதியர் குலம்

இயல் 2 : குலமரபுச் சமுதாய வீழ்ச்சிக் காலத்தில் அதியர் நிலை

இயல் 3 : பேரரசுக் காலத்தில் அதியரின் நிலை (கி.பி. 985 முதல் 1070 வரை)

இயல் 4 : பேரரசு வீழ்ச்சிக் காலத்தில் அதியர் நிலை

பகுதி 2 - வாழ்வியல்

இயல் 5 : அதியர் வளர்த்த இலக்கியக்கலை

இயல் 6 : அதியர் ஆட்சியில் சமயமும் கலைகளும்

இயல் 7 : அதியர் ஆட்சியில் வணிகமும் வேளாண்மையும்

பகுதி 1 - அரசியல்

இயல் 1

இவ்வியலில் தமிழ் மக்களின் சமுதாய வாழ்வின் தொடக்க நிலையான 'குலமரபுச் சமுதாயம்' பற்றிய விரிவான ஆய்வு இடம் பெறுகிறது. தமிழகத்தின் புவியியல் அடிப்படையில் நானிலப் பாகுபாடு அமைந்திருந்த நிலையில், அதன் இயல்பான வளர்ச்சி ஒரு சமுதாயப் படி நிலைக்குக் கொண்டு சென்ற தன்மையும், முதற்படி நிலையான 'குடி' யின் தோற்றம், அவற்றின் பெருக்கம், இணைப்பு, இவை நடைபெறுவதற்கான அடிப்படை, அந்த அடிப்படையிலேயே குறுநில மற்றும் பெருநிலப் பகுதிகளில் 'குலங்'கள் தோன்றி மலர்ந்த வளர்ச்சி ஆகியன விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

சிறுநிலப் பகுதிகளில் சீறூர் மன்னரும், வேளிரும் உருவாயினர் என்றும், பெருநிலப் பகுதிகளில் வேந்தர் உருவாயினர் என்றும், அந்நிலையில் அரசு என்ற அமைப்பு உருவான தன்மையும், தலைமைப் பொறுப்பில் இருப்போருக்கு அப்பொறுப்பு வரக் காரணம், அதற்குரிய அடிப்படைத் தகுதிகள் ஆகியனவும், பின்னர் அப்பொறுப்பினைத் தத்தம் குலங்களுக்கு நிலைநிறுத்திக் கொள்ள அவர்கள் செய்த முயற்சிகள், வெற்றி ஆகியனவும் இதில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இவ்வளர்ச்சி அடிப்படையில் 'குடி' யின் தலைவனாக விளங்கிய அதியனின் தனிமனித வீரம், படைமாட்சி, பின்னர்க் குலத்தின் பெருந்தலைவனாக விளங்கிய தன்மை, 'கோமான்' ஆகி வேளிருள் ஒருவனாய் நிலைபெற்ற சிறப்பு ஆகியன விளக்கப்பட்டுள்ளன. இக்குலமரபுச் சமுதாயத்தில், ஆளும் குலமரபாய் நிலைத்த பின்னர், எத்தனை பேர் இருந்தனர், அவர்கள் காலம், அவர்கள் பங்கேற்ற போர்கள், அவரது நகரம், நாடு, மலை, அவருக்கு எடுக்கப்பட்ட நடுகல், அவர்களைச் சுற்றியெழுந்த தொன்மக் கதைகள், அவர்கள் குலத்தோடு தொடர்புடைய சில குலமரபுத் தலைவர்கள் பற்றிய வரலாறு ஆகிய செய்திகள் ஆராய்ந்து உரைக்கப்பட்டுள்ளன.

இயல் 2

குலமரபுச் சமுதாயம் வீழ்ச்சியுற்றுப் புதிய சமுதாயம் மலர்ந்த நிலை, முதலில் பேரரசர்கள் போல நமக்குத் தோற்றமளித்த தலைவர்கள் வீழ்ச்சியடைந்த வகை, பேரரசு தோன்றுவதற்கான அடிப்படை உருவான முறை, அதற்குரிய கொள்கைகள் ஆகியன பற்றியும், வளர்ந்து வரும் பெருங்குல மன்னர்களுக்கு நடுவே சில சிறிய குலங்களும் போட்டியிட்டு வளர்ந்த வகை, அவ்வகையில் எல்லைப்புறமான கொங்குப் பகுதியில் வந்து குடியேறி வேளாண்மையிற் சிறந்து பெருமன்னர்களோடு உறவு கொள்ளும் நிலையில் ஒரு கிளைக் குடியும், தகடூரிலேயே தொல்குடியாகத் தங்கிவிட்ட ஒரு கிளைக்குடியுமாக அதியர் விளங்கிய நிலைமை பற்றியும் இரண்டாம் இயல் ஆராய்கிறது.

இவ்வகையில் கொங்குநாடு, மழநாடு ஆகியவற்றுக்கும், அதியருக்கும் உள்ள தொடர்பு, தகடூரில் தங்கிய கிளைக்குடியினைச் சார்ந்த அதியர்கள், நாமக்கல் கல்வெட்டு காட்டும் மற்றொரு கிளைக் குடியினைச் சார்ந்த அதியர், பெரிய புராணம், சீவரமங்கலச் செப்பேடுகள் காட்டும் அதியர் குலத்தோர் ஆகிய வர்களைப் பற்றிய ஆராய்ச்சி அடிப்படைச் சான்றுகளைக் கொண்டு மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

இயல் 3

'பேரரசுக் காலம்' என்னும் மூன்றாவது இயலில் பேரரசின் தன்மை பற்றிச் சுருக்கமாகக் கூறி, அச்சமுதாய அமைப்பில், குறுநிலத் தலைவர்களோ, எல்லைப்புறத் தலைவர்களோ, தனியாகச் சிறப்பிடம் பெற இயலாத நிலையில், தற்காலிகமாக அதியரும் தன் குலப் பெயரை மட்டும் மாற்றிக் கொண்டு, அக்கால கட்டத்தில் மழவரையர் என்ற பெயரில் வரலாற்றில் இடம் பெற்றிருந்தனர் என்ற உண்மை விளக்கப் பெற்றுள்ளது.

இயல் 4

பேரரசின் வீழ்ச்சிக் காலத்தினைக் குறித்த இந்நான்காம் இயலில், பேரரசின் கட்டுறுதி குலைந்ததனால், அடக்கப்பட்டிருந்த குலங்கள் மீண்டும் எழுச்சிபெற்ற தன்மையும், முதலில் அரசியல் அதிகாரிகளாக – சேனாதிபதிகளாக வெளிப்பட்டுப் பின்னர் அதினின்றும் வளர்ச்சி பெற்றுப் பண்டைய தலைநகரான தகடூர்ப் பகுதியிலேயே, பழைய குலப் பெயரிலேயே, ஆளும் தலைவராகிப் பெயரளவில் இருந்த பேரரசான சோழர்களோடு நட்புறவோடும், அதே நேரத்தில் தனியுரிமையோடும் வாழ்ந்த அதியர்களைப் பற்றி விரிவாக ஆராயப்படுகிறது. பெயரளவில் பேரரசை ஏற்றுக்கொண்டு தன்னாட்சி புரியும் ஒரு தலைவன், பெரும் பரப்பிற்கு ஆட்சியாளனாய், அதே நேரத்தில் பொறுப்புமிக்க எல்லைப் பாதுகாவலனாய், எல்லைக்கப்பால் உள்ள வேற்றரசர்கள் போரிடும்போது தன் வலிமை காட்டி நாட்டினைக் காப்பவனாய் விளங்கிய அதியரின் நிலையும் விளக்கப் பெறுகிறது.

மேலும், பேரரசு வலி குன்றியிருப்பதன் காரணமாகவே, ஆங்காங்குள்ள குறுநிலத் தலைவர்கள் தம்முள் போரிடுவதும், உடன்படிக்கைகள் செய்வதும், அக்குலத்திற்குள்ளேயே தாயத்திற்கு உரிமை கோரி இருவர் இருக்கும்போது ஒவ்வொருவரும் பிற சிற்றரசுகளைத் தத்தமக்கு உறவாக்கிக் கொள்ளச் செய்த முயற்சிகள் போன்றவையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அடுத்தடுத்து ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்று அதியமான்களைப் பற்றிய வரலாறு இவ்வியலில் தெளிவாக்கப் பெற்றுள்ளது.

பகுதி 2 - வாழ்வியல்

எந்த இனத்தின் வரலாறும் அவர்தம் அரசியல் வரலாற்றோடு நிறைவு பெறுவதில்லை; அவர்தம் வாழ்வியற் கூறுகளையும் அறிந்து கொள்வதன் மூலமே நிறைவு பெறுகிறது. அவ்வகையில் அதியர் மரபின் வாழ்வியற் கூறுகள் இரண்டாவது பகுதியில் இடம் பெறுகின்றன.

இயல் 5

அதியரைப் பற்றிய சங்க இலக்கியங்களில் காணப்படும் அரசியல் வரலாறு அல்லாத பிற கூறுகளும், அதியரைப் பாடிய புலவர்கள் பற்றியும், அதியரைப் பெரிதும் பாடிய ஔவைக்கும் அதியருக்கும் இருந்த தொடர்பு பற்றியும், தகடூர் யாத்திரை என்னும் இலக்கியம் பற்றியும், பிற்காலக் கல்வெட்டு இலக்கியங்களாக விளங்கும் தனிப் பாடல்கள் போன்ற சில பாடல்கள் பற்றியும் ஐந்தாம் இயல் ஆராய்கிறது.

இயல் 6

ஆறாம் இயலில் அதியர் சமயத்தின் பால் காட்டிய ஈடுபாடும், அதையொட்டிச் சமயத் தொடர்பாக அவர்கள் நிறுவிய குடை வரைகளும் கோயில்களும், அவர்கள் ஆதரித்த சமணம், சைவம், வைணவம் பற்றிய சமயத் தொண்டுகளும் கால அடைவில் வைத்து விளக்கப் பெற்றுள்ளன. அவர்களது கலைப் படைப்புகளைக் காணும் வகையில் புகைப்படங்களும் உரிய இடங்களில் இணைக்கப் பெற்றுள்ளன.

இயல் 7

வாழ்வியலின் செழுமைச் சிறப்புக்கு அடிப்படையாய் அமையும் வணிகமும் வேளாண்மையும் பற்றி ஏழாவது இயல் ஆராய்கிறது. இயற்கையிலேயே தமிழகத்தின் வடமேற்கெல்லையில் அமைந்ததால், வெளிநாட்டார் நுழையும் பகுதியில் ஆளும் உரிமை பெற்றிருந்த அதியர்களுக்குக் குலமரபுச் சமுதாய கால முதல் பெருவழி உரிமை இருந்தது. மேலும் மேலைக் கடற்கரையில் இருந்து உள்நாட்டிற்குச் செல்லும் பெருவழிகளும், வட இந்தியாவிலிருந்து தமிழகத்திற்குள் வரும் பெருவழிகளும் கூடும் இடமாக அதியராட்சிப் பகுதி விளங்கியதால், அதியர் வணிகத்தில் பெரிதும் ஈடுபாடு காட்டினர். வணிகத்தை மையமாகக் கொண்டு அதியர் பெருஞ்சிறப்புப் பெற்றனர் என்ற உண்மை தெளிவாக்கப்பட்டுள்ளது.

மேலும் இயற்கையில் வேளாண்மைக்கேற்ற வளமுடைய நிலப்பரப்பினைக் கொண்டிராத அதியர், இடைக்காலத்தில் வேளாண்மையினை விரும்பிக் குடிபெயர்ந்து சிறந்த நிலையும், இருக்கின்ற சிறுசிறு ஆறுகளையும், சமவெளிகளையும், மலைச் சரிவுகளையும் பயன்படுத்தி ஓரளவு விவசாயத்தில் அவர்கள் செய்த முயற்சியும் அடைந்த வெற்றியும் விளக்கப்பட்டுள்ளன.

நிலவியல் அமைப்பு


ஒரு நாட்டின் அல்லது ஓரினமக்களின் அன்றாட வாழ்க்கையிலிருந்து அரசு அமைப்பு வரை அனைத்தும் அந்தந்த நாட்டின் நிலவியல் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்றன. குறிப்பிட்ட பகுதியின் தொழிலும், விவசாயமும் (Industry and agriculture) நிலவியலைச் சார்ந்தே அமைகின்றன. அதன் பயனாகவே அப்பகுதியின் பொருளாதார முன்னேற்றமும் அமைகிறது. பொருளாதாரத் தகுதியினைக் கொண்டே அரசு அமைப்பில் குறிப்பிட்ட அப்பகுதிக்கான தகுதியும் வரையறுக்கப்படுகிறது. அவ்வகையில் அதியர் மரபின் வரலாறு அவர்கள் தோன்றி வளர்ந்த நாட்டுப் பகுதியின் நிலவியல் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டதாகலின் அதனைச் சுருக்கமாகக் காணலாம்.

எல்லைப்புறம்

தமிழகத்தின் எல்லைகளைக் கூறவந்த தொல்காப்பியர் முதல் பவணந்தி வரை அனைவரும் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடம் என்று கூறிச் சென்றுள்ளனர். அது வடக்கில் மேல் எல்லையினைக் குறித்து நிற்கிறது எனக் கொள்ளலாம். தமிழகத்தின் வடமேற்கு எல்லை அதனிலும் நீண்டதாக அமைந்துள்ளது. அவ்வெல்லைப் புறத்தில் தான் நமதாய்வுக்குரிய அதியரின் தகடூர்ப் பகுதி விளங்குகிறது. தமிழகத்தை வடபுறத்திலிருந்து பிரிக்கும் பகுதியாக இது விளங்குகிறது. தென்னிந்தியாவின் மேற்கிலும், கிழக்கிலுமாக அமைந்த மேற்கு மற்றும் கிழக்கு மலைத் தொடர்கள் இணையும் இடம் இதுவாகும். இவ்விரு மலைத் தொடர்களும், இணையும் மூக்குப் போன்ற பகுதியாக நீலகிரி விளங்குகிறது. நீலகிரியின் தொடர்ச்சியாக வள்ளிமலையும், பாலக்காட்டுக் கணவாயும் அமைகின்றன. பாலக்காட்டுக் கணவாய்க்குத் தெற்கில் சேரநாட்டு எல்லையை ஒட்டியதாக ஆனைமலைகளும், அதனைத் தொடர்ந்து கிழக்கு வாக்கில் பழனிமலை, வராகமலை, கோடை மலைகளும் விளங்குகின்றன. கிழக்கு மலைத்தொடர்களும், மேற்கு மலைத் தொடர்களும் இணையும் பகுதியான நீலகிரியில் தொடங்கி, வேங்கடமலை வரை தென்மேற்கிலிருந்து வடகிழக்காகத் தொடர்ந்து மலைகள் உள்ளன. இவை இன்றைய தமிழகத்தின் கோவை மாவட்டத்தில் தொடங்கித் தருமபுரி, வட ஆர்க்காடு, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டங்கள் வழியாக, ஆந்திர மாநிலத்தில் திருப்பதி வரை நீண்டிருக்கின்றன. இம்மலைத் தொடரே தமிழகத்தின் வடமேற்கு எல்லை ஆகும்.

இம்மலைத் தொடருக்கு இப்பால் இணையாகத் தென்மேற்கு வடகிழக்காக ஒரு நீண்ட சமவெளிப் பகுதி உள்ளது. அதுவே தருமபுரி கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை வட்டங்கள் அமைந்துள்ள பகுதியாகும். இச்சமவெளிக்கு இணையாக மறுபுறமும் மற்றொரு மலைத்தொடர்

தென்மேற்கு – வடகிழக்காகச் செல்கிறது. ஆக இருபுறமும் மலைத் தொடர்களும், நடுவில் சமவெளியுமாக அமைந்த நிலவியல் அமைப்பை இப்பகுதி கொண்டுள்ளது (நிலப்படம் 1). இச்சமவெளியின் நடுவில் இன்றைய தருமபுரியான பண்டைய தகடூர் இடம் பெற்றுள்ளது.



நிலப்படம் 1. நிலவியலும் பெருவழிகளும்

தகடூருக்கு வடக்கில் அமைந்துள்ள மலைகளும், ஊர்களுமான முதல் வரிசை பாலகாட் (Phalghat) என்றும், சமவெளிப் பகுதி பாரமகால் (Bara Mahal) என்றும், தெற்கில் அமைந்துள்ள மலைத் தொடர்களும், ஊர்களுமான இரண்டாம் வரிசை தலைக்காட் (Talaghat) என்றும் வரலாற்று ஆசிரியர்களால் குறிக்கப்படுகின்றன. இப்பகுதிகளே அதியமானின் ஆட்சிப் பரப்பாகும். தமிழகத்தில் வேறுபட்ட நிலவியல் அமைப்புக்கொண்ட இப்பகுதி, வடபுறம் உள்ள மலைத்தொடர்களால் மைசூர்ப் பீடபூமியிலிருந்து பிரிந்தும், அதே நேரத்தில் தெற்கில் உள்ள மலைத்தொடர்களால் தமிழகத்தின் பிற பகுதிகளில் இருந்து பிரிந்தும்

தனித்து நிற்கிறது. நடுவேயுள்ள சமவெளிப்பகுதி, தென்மேற்கில் கோவை, திருச்சி மாவட்டப் பகுதிகளிலும், வடகிழக்கில் வட ஆர்க்காடு மற்றும் தென்னார்க்காடு மாவட்டப் பகுதிகளிலும் திறந்த வெளியாய் நீள்கிறது.

மலைத்தொடர்களும் கணவாய்களும்

முதல் வரிசை மலைத்தொடர்கள், மிக உயர்ந்த சிகரங்களைக் கொண்டதாய்த் தொடர்மலைகளாய் விளங்கி, மலையரண்களாக இயற்கையிலேயே அமைந்துள்ளன. இதன் மறுபுறம் மைசூர்ப் பீடபூமி பரவியுள்ளது. மலைகள், அரண்களாக விளங்கினாலும் கூட, அவற்றின் நடுநடுவேயுள்ள கணவாய்கள், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை ஆகியவை அடங்கிய சமவெளிப் பகுதியை மைசூர்ப் பீடபூமியுடன் இணைக்கின்றன. வடபுறம் பூதிக்கோட்டைக் கணவாய், சூளகிரிக் கணவாய், ராயக்கோட்டையிலிருந்து தொடங்கி, பாலக்கோடு வரை வரும் பெரிய கணவாய், தேன்கனிக்கோட்டையிலிருந்து தொடங்கி அஞ்செட்டி வழியாகப் பெண்ணாகரம் வந்தடையும் கணவாய் ஆகியவற்றின் வழியாக வரும் பெருவழிகள் ஆகியவை மைசூருடன் தொடர்பு கொள்ளப் பெரிதும் உதவுகின்றன.

தென்புறம் இணையாக உள்ள இரண்டாம் வரிசை மலைத் தொடரில், சவ்வாது மலை, தீர்த்தமலை, கல்ராயன் மலை, தோப்பூர் வத்தல் மலைகளும், கல்ராயன் மலைகளின் தொடர்ச்சியாகத் தெற்கில் பச்சைமலை, கொல்லி மலைகளும் அமைந்துள்ளன. இம்மலைகளின் நடுவில் வடகிழக்குக் கோடியில் உள்ள செங்கம் கணவாய், தீர்த்த மலைக்கும் கல்ராயன் மலைக்கும் நடுவேயுள்ள கொட்டபட்டிக் கணவாய், தேனாண்டார் மலைக்கும் சேர்வராயன் மலைக்கும் இடையே' உள்ள மஞ்சவாடிக் கணவாய், சேர்வராயன் மலைக்கும், காயரமலைக்கும் இடையில் உள்ள மல்லாபுரம் கணவாய், தெற்கே கொல்லிமலை பச்சைமலை இரண்டிற்கும் நடுவேயுள்ள தம்மம்பட்டிக் கணவாய் ஆகியவை குறிப்பிடத்தக்கன. செங்கம் கணவாய் வழியாக வடார்க்காடு மாவட்டத்திற்கும், மல்லாபுரம் கணவாய், தோப்பூர்க் கணவாய் ஆகிய இரண்டையும் இணைத்துச் செல்லும் பெருவழிமூலம் கோவை மாவட்டத்திற்கும், தம்மம்பட்டிக் கணவாய் வழியே திருச்சி மாவட்டத்திற்கும் செல்ல வசதியுள்ளது.

கோட்டைகள்

தமிழகத்திலேயே மிக அதிகமான மலைக்கோட்டைகளைக் கொண்டிலங்கும் பகுதி இது. மேற்குறித்த கணவாய் வழிகளிலேயே பெரும்பாலும் இம்மலையரண்கள் விளங்குகின்றன. அங்குசகிரி துர்க்கமும், குந்தாணிமலைக் கோட்டையும், மைசூரிலிருந்து வரும் வழியில் முதற் கோட்டைகள். ராயக்கோட்டை – பாலக்கோட்டுக் கணவாயில் அமைந்துள்ள ராயக்கோட்டை அப்பெருவழிக்குக் காவலாய் அமைந்தது. ராயக்கோட்டை மற்றும் ஒசூரில் இருந்து வரும்


வழியில், அஞ்செட்டி துர்க்கம் நீலகிரி, தியரணமலை துர்க்கம் ஆகியனவும், சனத்குமார நதிப் பள்ளத்தாக்கு வழியில் உறாடி துர்க்கம், ரத்னகிரி ஆகியவையும், வடமேற்குப் பகுதியில் மேளகிரி, குண்டு கோட்டை, மல்லிகார்ஜுன துர்க்கம் ஆகியவையும் காவலரண்களாய் விளங்குகின்றன. எனவே எல்லைப்புறத்திற்கேயுரிய அச்சத்தோடும், அதே நேரத்தில் பாதுகாவலோடும் இப்பகுதி விளங்கியிருக்கின்றது.

ஆறுகள்

மலைகள் நிறைந்து காணப்படுதலின், ஆறுகள் மிக அதிக எண்ணிக்கையில் உள்ளன. ஆனால் அவை சிறுசிறு ஆறுகளாக இருப்பதாலும், பெரும்பாலும் மலைப்பகுதிகளில் ஓடுவதாலும், விவசாயத்திற்கேற்ற வகையில் சமவெளியில் ஓடாமையாலும், வேளாண்மைக்குத் துணை புரிவதாய் இல்லை. மைசூரில் தொடங்கி வரும் காவிரி ஆறு ஓசூர், தருமபுரி வட்டங்களின் வழியாக ஒடுகிறது. தளியில் தொடங்கும் சனத்குமாரநதி, சேர்வராயன் மலையில் தொடங்கிவரும் தோப்பூர் நதி என்னும் வேப்பாடி ஆறு, ஏற்காடு, சேர்வராயன் மலைகளில் தொடங்கிப் பேரியாற்றில் கலந்து பின் காவிரியில் கலக்கும் சரபங்க நதி. மஞ்சவாடிக் கணவாய்ப் பகுதியில் தொடங்கி நாமக்கல்லில் காவிரியில் கலக்கும் திருமணிமுத்தாறு என்னும் சேலநதி ஆகியவை காவிரியின் உபநதிகளாக இப்பகுதியில் ஓடுகின்றன. மைசூர் நந்தி துர்க்கத்தில் தொடங்கும் பெண்ணையாறு ஓசூரில் நுழைந்து மாலூர், சூளகிரி, ராயக்கோட்டைக் கணவாய்களைக் கடந்து சமவெளியில் நுழைகிறது. ஓசூர்ப் பகுதியில் சின்னாறும், கிருஷ்ணகிரிப் பகுதியில் மல்லப்பாடி ஆறும், திருப்பத்தூர்ப் பகுதியில் பாம்பாறும், ஊத்தங்கரைப் பகுதியில் வாணியாறு, மார்க்கண்டேய நதி, கம்பைய நல்லூர் ஆறு ஆகியனவும் பெண்ணையாற்றுடன் கலக்கின்றன. இந்த ஆறுதான் திருக்கோவலூர் வழியாகக் கடலூர் வரை செல்கிறது. இவ்வாறு பெரிய ஆறுகளோடு, வசிஷ்டநதி, ஸ்வேதாநதி இணைந்த வெள்ளாற்றில், அம்மம்பாளையம் ஆறு, கரியக்கோயில் நதி, சிங்கபுர ஆறு, மெக்கபள்ளி ஆறு ஆகிய சிறிய ஆறுகளும் இணைகின்றன. இவ்வாறு ஆறுகளின் நடுவே ஆங்காங்குச் சில ஏரிகள் அமைக்கப்பட்டு, விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. வெள்ளாறு ஓரளவு பாசனத்திற்குப் பயன்படுகின்றது.

கனிம வளம்

மலைவளமும், காட்டுவளமும் உள்ள இப்பகுதியில் கனிமவளங்களும் நிறைந்துள்ளன. தமிழகத்திலேயே கனிமங்கள் நிறைந்த அளவில் உள்ள பகுதி இது (நிலப்படம் 2). தமிழ்நாடு, ஆந்திரம், கன்னடம் இணையும் மல்லப்ப கொண்டா மலைவரை கோலாரின் தங்கப்படிவங்கள் இருப்பது அறியப்பட்டுள்ளது. மேலும், வேப்பனப்பள்ளி, கஞ்சமலை அடிவாரம், கணவாய்ப் புதூர், குறும்பட்டி ஆகிய இடங்களில் தங்கம் கிடைக்கின்றது. இப்பகுதியில் கிடைக்கும் தேனிரும்புக் கனிமம் மிகச் சிறந்த தரமுடையதாகக்



நிலப்படம்-2. Mineral Resoursces in Tamilnadu

கருதப்படுகிறது. கஞ்சமலை, கொடுமலை, சிங்கிபட்டி, கொல்லி மலை, தலைமலைத் தொகுதிகள், தீர்த்தமலைத் தொகுதிகளிலும் இரும்புத் தாதுகள் கிடைக்கின்றன. ஓசூர், கிருஷ்ணகிரி வட்டங்களிலும், அஞ்செட்டி மலையின் அடர்ந்த காடுகளுக்கு நடுவேயும் கூட உலைகள் மூலம் இரும்புருக்குவதைக் குடிசைத் தொழிலாக மக்கள் கொண்டிருப்பது இத்தொழிலின் தொன்மையை எடுத்துக்காட்டும்.

இத்தொழிலுக்கு இன்றியமையாத துணைப்பொருளான சுண்ணாம்புக்கல்லும் இப்பகுதியில் கிடைக்கிறது. இப்பகுதிகளில் மிகப் பரவலாகச் செந்நிறமான கெம்புக் கல் என்று வழங்கப்படும் மாணிக்கக் கற்களும், குருந்தம் எனப்படும் ஒளிவீசும் வெண்ணிறக் கற்களும் கிடைக்கின்றன. நாமகிரிப்பேட்டையை அடுத்த மலைகளில் ஹெமிடைட் எனப்படும் படிகக் கற்களும், எடப்பாடி, அரசிராமணிப் பகுதியில் மைக்காவும், குரோமைட் எனப்படும் இரும்போடொத்த கனிமமும், மேக்னசைட் எனப்படும் கல்வகைகளும், வெண்ணிறப் படிகக் கற்களும் (Crystals) , குவாட்ஸ் எனப்படும் கற்களும் இப்பகுதியில் ஆங்காங்குக் கிடைக்கின்றன.

இவ்வாறு தமிழகத்தில் மலையரண்களும், காட்டரண்களும் கொண்ட வடமேற்கு எல்லையாகவும், தமிழகத்தினுள் நுழையும் வாயிற்பகுதியாகவும் விளங்கும் இப்பகுதியில் கனிமவளங்களும் நிறைந்துள்ளன. எண்ணிக்கையில் பல ஆறுகளைக் கொண்டதாயினும், வேளாண்மைக்கு ஓரளவே இவை பயன்படுவதாய் உள்ளன. வேளாண்மையில் பின்தங்கி இருப்பினும், பெருவழிகள் காரணமாக இப்பகுதி வணிகத்தில் மேம்பாடுற்று விளங்கியது. இந்த நிலவியல் அமைப்பு அதியரின் நிலைபெற்ற வரலாற்றுக்கு அடிப்படைக் காரணமாய் அமைந்த தன்மை இந்நூலில் பல இடங்களில் சுட்டப் பெற்றுள்ளது.

பகுதி I - அரசியல்

இயல் I

குலமரபுச் சமுதாய காலத்தில் அதியர் மரபு

குலமரபுகளால் ஆளப்பட்ட சமுதாயத்தினைக் கொண்ட காலமே தமிழக வரலாற்றில் பொதுவாகச் சங்ககாலம் என்று அழைக்கப் பெறுகிறது. அக்காலச் சமுதாய அமைப்பினைத் தெளிவாக அறிய நாம் பெற்றுள்ள சான்றுகளே சான்றோர் செய்யுட்களான சங்க இலக்கியங்கள். சங்கப் பாடல்கள் வழி தெரியவரும் அதியர் நிலையினை, அக்காலச் சமூகவியல் மற்றும் அரசியற் கூறுகளை ஆராய்வதன் மூலமே தெளிவுபெற இயலும். இவ்வடிப்படையில் அதியர் மரபின் வரலாற்றினை முதலில் ஆராயலாம்.

சங்ககாலத் தமிழகத்தில் நிலப்பிரிவுப் பாகுபாடுகள் வரையறுக்கப்பெற்றிருந்தன. அவ்வப் பிரிவுகளுக்குரிய பொருளாதாரக் கூறுகளின் அடிப்படையில் ஆட்சிக்குடிகள் தோன்றின. இத்தகைய சமுதாயத்தின் அடிப்படை நிலை 'குடி' என்பதாகும். பலகுடிகள் ஒன்று சேர்ந்து வாழும் சூழலில் ஒரு குழு உருவாகும் நிலை ஏற்பட்டது. குழுக்களின் பெருக்கமும், பெருகிய குழுக்கள் அனைத்திற்கும் தலைமைப் பொறுப்பினை ஒருவன் ஏற்கும் சூழ்நிலையும், சமுதாய வளர்ச்சிப் படிநிலைகள் ஆகும். தனியொருவன் பெற்ற தலைமைப் பொறுப்பு, ஒரு மரபுக்கே பரம்பரை உரிமையாகி விடும் வளர்ச்சிப் படிநிலையே அடுத்த கட்டமாகும். அந்நிலையில்தான் தலைவர்களுக்குரிய பெயர்கள் நிலைபெறுகின்றன.

அதியர் மரபுத் தலைவர்கள் பெருவீரர்களாகவும், வீரமிக்க படையினை உடையவர்களாகவும்,பலகுழுக்களையும் ஒன்றிணைத்துக் கொண்ட உயர்ந்த தலைவர்களாகவும் விளங்கினர். தலைமைப் பொறுப்பேற்ற நிலையில் இம்மரபினர் ஆளுதற்குரிய அரசியல் மற்றும் வாழ்வியல் தகுதிகளை (political and ideological qualifications) முழுமையாகப் பெற்றிருந்தனர். அதே சமுதாயச் சூழ்நிலையில் அகன்ற பரப்பினை ஆண்ட வேந்தர்களும் விளங்கினர். அவர்களோடு அதியர் போன்ற சிறிய தலைவர்களை ஒப்பிடுவதன் மூலம், இவ்வதியர் மரபின் வளர்ச்சியை மேலும் தெளிவாகப் புரிந்துக் கொள்ள முடிகிறது.

நால்வகை நிலப்பிரிவுப் பாகுபாடும் அவற்றின் பொருளாதாரமும்

சங்கப் பாடல்களை வகைப்படுத்திய முறையிலிருந்தும் தொல்காப்பிய நூற்பாக்கள் மூலமும் அக்காலத்தே நிலவியல் பிரிவுகள் ஐந்து வகையாகப் பிரிக்கபட்டிருந்தன எனவும், அவற்றுக்குரிய புற ஒழுக்கங்கள் கீழ்வரும் வகையில் வரையறுக்கப்பட்டிருந்தன எனவும் அறிகிறோம்[1].

1. தொல்காப்பியம்–பொருளதிகாரம் – புறத்திணையியல நூற்பா 59–75 சென்னை கழகம் 1967

திணை	நிலப்பகுதி	புறவொழுக்கம்
1. குறிஞ்சி	மலை, குன்றுப்பகுதி	ஆநிரை கவர்தலும் மீட்டலும்
2. முல்லை	மேய்சசல் நிலங்கள் புல்தரைச் சமவெளிகள்	குடியிருப்புகளைப் பாதுகாத்தலும் தாக்குதலும்
3. மருதம்	வேளாண்மை நடக்கும் ஆற்றங்கரைப் பகுதிகள்	கோட்டைகளைப் பாதுகாத்தலும் தகர்த்தலும்
4. நெய்தல்	கடற்கரைப் பகுதிகள்	இறுதிவரை போராடுதல்
5. பாலை	வறண்ட நிலங்கள்	வெற்றி

மேற்குறித்த பிரிவுகளில் குறிஞ்சியின் பொருளாதாரம் வேட்டையாடுதலை அடிப்படையாகவும், முல்லையின் பொருளாதாரம் ஆநிரைகளை அடிப்படையாகவும், மருதத்தின் பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகவும் கொண்டிருந்தன. குறிஞ்சி நில மக்கள் சிற்சில நேரங்களில் அருகில் உள்ள முல்லை நிலச் சமவெளிகளோடு தொடாபு கொள்வதன் காரணமாக அந்நிலத்துக்குரிய ஆநிரை வளர்ப்புப் பொருளாதாரம் இவர்கட்கும் ஓரளவு உரியதாகினறது. எனவே குறிஞ்சி உள்ளிட்ட முல்லை நிலப்பகுதியில் வாழ்வோர் மேய்ச்சலுக்காக நிலங்களை விரிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. மருத நிலத்து மககள் தமது வேளாண்மைத் தொழிலுக்காக நிலங்களை விரிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இவ்விரிவு படுத்தும் தன்மை, இவ்விரு நிலத்தார்க்கும் தேவையான தவிர்க்க இயலாத கட்டாயம் ஆகிறது. இதன் காரணமாக இவ்விரு பகுதிகளும் முறையே ஆநிரை மற்றும் வேளாண்மைப் பொருளாதார வளர்ச்சியும், முன்னேற்றமும் அடையும் பகுதிகளாக வளர்கின்றன. இதனையே "காலப்போக்கில் ஆடுமாடு மேய்ப்பவர்களிடமும் வேளாண்மை செயபவர்களிடமும் இருந்த சமுதாய அமைப்பு ஒரு குறிப்பிட்ட தெளிவான வடிவமுடையதாய் ஓா அரசியல் அமைப்பின் கட்டாயத்திற்கு வழிநடததிச் சென்றது[2]" என்று விளககுகிறாா ஓர் அறிஞா.

இவ்வாறே நெய்தல் நிலப்பகுதியின் இயறகைவளம் மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் ஆகிய தொழில்களை மேற கொள்ள வழி வகுத்தது எனினும் கடல் வாணிகமும், முத்து, சங்கு எடுக்கும் தொழில்களும் அப்பகுதியின் வளத்திற்குச் சிறப்புக் காரணங்கள் ஆயின.

---

2 T V Mahalingam, The South Indian Polity, Madras University of Madras, 1955 p 11

இயற்கை வளமும், அதன மூலம் பெற்ற பொருளாதார வளர்ச்சியும் தலைவன் தோன்ற வழிவகுத்தன. அடிப்படை நிலையான குடியிலிருந்து தொடங்கும் குடி, கிழார் வேளிர், மன்னர், வேந்தர் என்ற ஏறுமுகத்தில் சமுதாயத்தின் அரசியலமைப்பு உருவாயிற்று. இது பல நூறு ஆண்டுகால வளர்ச்சிதான். எனினும் தமிழகம் முழுவதும் சமஅளவில் வளர்ச்சியுற்றது என்று கொள்வதற்கில்லை. சங்கப் பாடல்களை ஆராய்ந்தால், வேளிர் மற்றும் குறுநில மன்னர்களில் பெரும்பாலோர் குறிஞ்சி, முல்லை நிலப் பகுதிகளில்தான் தோற்றம் பெற்றிருந்தனர் என்பது தெற்றென விளங்கும். நெய்தல் நிலத்திலும், பரதவர் போன்ற மேட்டுக்குடியினர் தோன்றினர். எனினும் கிடைத்தற்கரிய பொருள்களான சங்கு, முத்து போன்றவற்றை எடுக்கும தொழிலும், வணிகமும் பெரும்பாலும் அன்றைய வேந்தனின் நேரடிப பார்வையில் நடைபெற்றிருத்தல் வேண்டும் எனலாம. எனவே தனிப்பட்ட முறையில் இந்நிலப்பகுதிகளில் தலைவர்கள் உருவாக வழியில்லாமல் போயிற்று எனக் கருத வேண்டியுள்ளது.

இவையனைத்திற்கும் மாறாக மருதத்தின் வேளாண்மை உற்பத்தி, தேவையைவிட மிகுதி என்ற நிலைக்கு வந்து விடுகிறது. ஆற்றுப்பாசனம் அதன் உற்பத்திக்கு அடிப்படையாகும். ஆகவே ஆண்டு முழுவதும் நீர்பாயும் காவிரி, வைகை மற்றும் ஆன் பொருநை ஆறுகளின் நீரால் வேளாண்மை செய்யும் பகுதிகளில்தான் முறையே சோழ, பாண்டிய, சேர வேந்தர்கள் உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டது.

திரு. செனவிரத்ன அவர்கள், சங்ககாலத் தமிழகத்தின் நானிலப் பிரிவுகளையும், அதில் தோன்றி நிலை கொண்ட ஆளும உரிமை பெற்ற குழுக்களின் வளர்ச்சிப்படி நிலைகளையும இனங்காண முயலும்போது, இயற்கையான நிலவியல் அடிப்படையில் எவ்வாறு சில பகுதிகள் விரைவாக முனனேறுகினறன, சில தேகக நிலைய டைகின்றன எனபதில் கவனஞ்செலுத்தி இயற்கைவளம் (natural resources), அதில் மேறகொள்ளும தொழில் நுட்பம் (Technology), மக்கள் நெருக்கம் மற்றும் வாழ்விட வசதிகள் (subsistence pattern and settlement pattern) ஆகியவறறின் அடிப்படையில்தான குலமரபு அடிப்படையிலான தலைவர்கள் உருவாக முடியும் என்று கருததுத் தெரிவிக்கிறார். இவறறின் அடிப்படையில், தமிழக வேளிர மறறும் மன்னர் ஆண்ட பகுதிகளைக் குறுநிலப பகுதிகள (micro regions) என்றும், பெருநிலப் பகுதிகள (macro regions) என்றும் இருவகையாகப பிரிவு செய்கிறார். இவற்றினின்றும ஏறபடும் வளாசசியாக முன்னேறறமடைந்த பெரிய பகுதிகள (larger primary regions) தோற்றம் பெற்றன என்கிறார்.[3]

---

3 Sudarsan seneviratne "Pre-state to state Societies transformation in the political ecology of South India with special reference to Tamil Nadu" School of Social Science working papers New Delhi J N University. Unpublished article

தமிழகத்தில், சேர, சோழ, பாண்டியர் என வேந்தர் மூவரும், வேளிர் பலரும், புறநானூற்றுப் பாடல் கொளுவின் மூலம் அறியப்படும் கிழார்கள் சிலரும் இருந்தனரென அறியமுடிகிறது. வேந்தர் மூவரே ஆயினும், வேளிர், ஐம்பெரும் வேளிர், பதினொரு வேளிர், பதினெண் வேளிர் என வேளிர் தொகுதி பலவாறாகக் குறிக்கப்பெறுகிறது. வேளிர் என்ற அடைமொழியுடன் புறநானூற்றில் அறுவரும் பதிற்றுப்பத்தில் இருவருமாக எண்மர் குறிக்கப்படுகின்றனர். ஆயினும் பதினான்கு (அகம் 135) மற்றும் பதினொருவர் (அகம் 246) என்று பல்வேறு எண்ணிக்கையில் கூறும் வழக்கம் இருந்ததை நோக்கும்போது வேளிர் எண்ணிக்கை நிச்சயமாகக் கூற இயலாத நிலையிலேயே அன்றைக்கிருந்தது என்று துணியலாம். மேலும் வேளிர் என்பது ஓரினத்தைக் குறித்தது அல்ல என்றும், ஒரு நிலையை அல்லது தகுதியையே (status) குறித்தது என்றும் தெளிவடைய முடிகிறது. தொகுதிப் பெயர் வருமிடங்களிலெல்லாம், போரில் எதிர்த்தவர்களின் தொகுதிப் பெயராகவே வருகின்றது. எனவே அரசியற்படிநிலையில் உள்ளவர் என்ற விளக்கமே மிகப் பொருத்தமுடையதாகின்றது. பத்து ஊர்கிழார்கள் சங்க இலக்கியத்தில் பாராட்டப் பெறுகின்றனர். பாடலில் இவர்களுக்குக் 'கிழார்' என்ற அடைமொழி இல்லை. எனினும் கொளு இவ்வடைமொழியோடு இவர்கள் பெயரைச் சுட்டுகிறது. இவர்களும் ஏதோ ஒரு வகையில் அரசியற்படிநிலையினை உடையராதல் வேண்டும். இப்படிநிலைகள் எல்லாம் எத்தகைய சூழ்நிலையில் உருவாயின என்பதையும், அதன் தொடக்கநிலை, வளர்ச்சி, முதிர்வுநிலை ஆகியன எவ்வாறு அமைந்திருந்தன என்பதையும் ஆராயின் அந்த வளர்ச்சியின் நடுவே எந்தப்படி நிலையில் அதியமான்கள் இருந்தனர் என்பதைத் தெளிவாக அறிய இயலும்.

சமுதாயத்தின் அடிப்படைநிலை : குடி

மக்கள் இரத்த உறவுள்ள குழுக்களாக வாழ்ந்த நிலையே உலகெங்கும் காணப்படும் மானிட வாழ்வின் முதற்படி ஆகும். சான்றோர் செய்யுட்களின் வழிநின்று காணும்போது குடி என்பது அன்றைய சமுதாயத்தின் அடிப்படைக் கூறாய் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றது. தொல்குடி, கவின்குடி, கொழுங்குடி, பழங்குடி, நீள்குடி, முதுகுடி[4] போன்ற குடிக்குரிய அடைமொழிகளை நோக்கும் போது மதிப்பிற்குரிய தகுதி யடிப்படையில் அமைந்ததாக அச்சொல் வழங்கப் பட்டிருந்ததையறிகிறோம். பல்குடி, சில்குடி, சிறுகுடி, குடிப்பாக்கம்[5] ஆகிய சொல்வழக்குகள், பலகுடியினர் அதாவது பல குடும்பத்தினர்

4. தொல்குடி– புறம் 352; கவின்குடி – பெரும்பாண் 191; கொழுங்குடி – மதுரைக் 122, 577, பழங்குடி – மலைபடு: 479, நீள்குடி – புறம் 71,

5. பல்குடி–பட்டினப் 27 பெரும்பாண் 399; சிறுகுடி–நற் 85, மலைபடு : 156 குடிப்பாக்கம் மதுரைக் –137) சொல்வழக்குகள்.

மேலும் விரிந்த அளவில் ஒரு குழுவினராக இணைந்து வாழ்ந்த நிலையினைப் புலப்படுத்துகின்றன எனத் தெளியலாம். குடி என்ற சொல்லினைத் திரு. செனவிரத்னெ தோடர் மொழியில் உள்ள 'க்விஸ்' என்ற சொல்லோடு தொடர்புபடுத்தி ஆராய்ந்துள்ளார். முதலில் இது ஆநிரைகளின் கூட்டம் என்று பொருள்பெற்றிருந்து பின்னர், குடும்பம், மக்களின் கூட்டம் என்பதையும் குறித்தது என்கிறார். மேலும் இதேசொல் தொழுவம் என்று பொருள் பெற்றுக் காலப்போக்கில் மக்கள் கூட்டமாக வாழுமிடம் என்பதையும் குறித்தது என்கிறார். திராவிடமொழி யகராதியில் உள்ள வீடு, குடும்பம், குடிவழி வாழ்விடம் ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய அனைத்துப் பொருள்களையும் தரும் சொல்லாக இது வளம் பெற்றது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.[6] எனவே குடி என்ற சொல், தொடக்க காலத்தில் இரத்த உறவுள்ள குடும்பத்தைக் குறித்துப் பின் ஏதோ ஒரு வகையில் இணைந்துவிட்ட கூட்டத்தினையும், அவர்கள் வாழ்ந்த இடத்தினையும் குறித்து நின்றது எனக் கொள்ளலாம்.

குழுக்களின் பெருக்கமும் தலைமைப் பொறுப்பும்

இத்தகைய குழுக்களில் இருந்து கால்நடை வளர்க்கும் குழுக்கள் பிரிந்தன. இதுவே சமுதாயத்தில் ஏற்பட்ட முதல் தொழிற்பிரிவினை ஆகும்.[7] தொல்லியல் ஆய்வாளரும் மனிதன் செய்த முதல் தொழிலாகக் கால்நடை வளர்த்தலையே குறிப்பிடுவர்.[8] மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்ட மக்கள், மேய்ச்சல் இடம்தேடி நகர்வது தேவையான ஒன்றாகி விடுகிறது. சில குழுக்கள் குறிப்பிட்ட ஒரு வட்டாரத்திற்குள்ளேயே சுழற்சி முறையில் ஆண்டுதோறும் தங்கியிருத்தலும் உண்டு. அவ்வாறு குறுகிய வட்டத்திற்குள் மேய்ச்சலில் ஈடுபடும் அவர்கள் காலப்போக்கில், குறுகிய காலத்தில் முடிவடையும் வேளாண்மையினைச் செய்யவும் பழகி அதிலும் ஈடுபட்டனர். எனவே அவர்களுக்குக் குறிப்பிட்ட பகுதியின் இயற்கைவளம் பற்றிய அறிவு பெருகலாயிற்று. நிலத்தைக் கொத்தி வேளாண்மை செய்வதும், குளம், குட்டைகளில் மீன்பிடித்தலும், வேட்டையாடுதலும் ஆகியவை முல்லைநிலக் கால்நடை வளர்ப்புக் குழுக்களின் பொருளாதார அடிப்படைகள் ஆயின. எனினும் கால்நடை வளர்ப்பே அவர்களின் சிறப்புத் தொழிலாக இருந்தது. இந்நிலையில் தம் பொருளாதாரமான ஆநிரைகளைப்பெருக்க இக்குழுக்கள் விரும்புவதும், மேய்ச்சலுக்காக அண்டை நிலங்களை வலிதின் பற்றிக் கொள்ள முயல்வதும் தவிர்க்க இயலாதனவாயின. இவ்வாறு ஒவ்வொரு குழுவும் செயல்படும்போது குழுக்களினிடையே பூசல்கள் தவிர்க்க இயலாதனவாகி விடுகின்றன.

6. Seneviratne, p.8
7. எங்கல்ஸ், குடும்பம், தனிச்சொத்து அரசு இவைகளின் தோற்றம். மொ பெ, மாஸ்கோ; அயல்மொழிப் பதிப்பகம், நான்காம் பதிப்பு 1891, ப. 56
8. F.R. Allchin, Neolithic Cattle Keepers of South India, Cambridge University Press, 1963, p. 101.

இத்தகைய குழுப் பூசல்களின் போது தலைமை ஏற்று நடத்த ஒருவன் தேவைப்படுகிறான். ஆநிரைகளைக் கவர்கின்ற போதும், அவற்றை மீட்கின்றபோதும், இணையற்ற திறமையும், ஆர்வமும் காட்டுவோனாக அவன் இருத்தல் வேண்டும். போரில் வெற்றி எய்துவோனாக மட்டும் இல்லாமல், அவ்வெற்றியின் மூலம் ஆநிரைகளைப் பெருக்குவோனாகவும் இருத்தல் மிகத் தேவையான ஒன்றாகிறது. பிற குழுக்களை வெற்றி கொள்ளும்போது தோற்ற குழுவில் உள்ள மக்களையும் தன் குழுவில் இணைத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவனாகவும் இருந்தால் அவனே நிரந்தரத் தலைவன் ஆகும் தகுதியைப் பெறுகிறான். இவையே அரசியல் அடிப்படையில் ஒரு தலைவன் உருவாகக் காரணங்களாய் அமையக் காண்கிறோம்.

ஆநிரை கொள்ளும் வலிமை

இத்தகைய தொடக்கநிலைக் குழுத்தலைவர்கள் பலரைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல்களில் காண முடிகிறது.

'காலைப்
புல்லார் **இனநிரை** செல்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென வெண்ணிச்
சிலையின் மாற்றியோனே அவைதாம்
மிகப் பலவாயினும் என்னாம்' (புறம்: 257)

'ஒருமுறை யுண்ணா வளவைப் **பெருநிரை**
ஊர்புற நிறையத் தருகுவன்' (புறம் : 258)

'ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயரா
திலைபுதை பெருங்காட்டுத் தலைகரந்திருந்த
வல்வின் மழவர்' (புறம் : 259)

'முன்னூர்ப் பூசலில் தோன்றித் தன்னூர்
நெடுநிரை தழீஇய மீளியாளர்.
விடுகணை நீத்தந் துடிபுணையாக
வென்றி தந்து கொன்று கோள் விடுத்து
... .
கையகத் துய்த்த கன்றுடைப் **பல்லான்**
நிரையொடு வந்த உரையன் (புறம் : 260)

'பல்லாத் **திரன்நிரை** பெயர்தரப் பெயர்தந்து
கல்லா இளையர் நீங்க நீங்கான்' (புறம் : 263)

'கன்றோடு
கறவை தந்து பகைவர் ஓட்டிய
நெடுந்தகை' (புறம் : 264)

ஆநிரை கொள்வதில் ஆர்வமும் திறமையும் விரைவும் கொண்ட குழுத்தலைவர்களை இப்பாடல்கள் இனம் காட்டுகின்றன.

புறநானூற்றுத் தொகுப்பில் 253 முதல் 335 வரை எண்ணுள்ள பாடல்கள் பாட்டுடைத் தலைவர்களின் பெயர் இன்றிக் காணப்படுகின்றன. இவை காலத்தால் முற்பட்டவை என்ற கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.[9] இப்பாடல்களின் தலைவன் மள்ளன், நெடுந்தகை, பெருவிரல், விடலை மைந்தன், ஆண்மையோன், பெருந்தகை, பெருஞ்சேயாளன், மூதிலாளன், செம்மல், குரிசில் ஆகிய சொற்களால் குறிக்கப்படுதல் இக்கருத்தினை வலியுறுத்தும். இப்பாடல்கள் எல்லாம் மேற்குறித்தவாறு தலைவனின் வலிமைத்திறம் உரைப்பனவாய் அமைந்துள்ளன.

பகுத்துண்ணும் பண்பு

இனக்குழுவில் இத்தகைய தலைவனுக்கு எனத் தனிப்பட்ட உரிமைகள் இல்லை. இவனும் இவன் குழுவினரும் இணைந்தே பணிபுரிகின்றனர். இவனிடம் பொருளைச் சேமித்து வைக்கும் வழக்கம் இல்லை (புறம் 313). கிடைத்த பொருளைக் குழுவினர் அனைவருக்கும் பகுத்துக் கொடுக்கும் கடமை இவனுக்கு உண்டு. முள்ளம்பன்றியைக் கொன்றபோது, அனைவருக்கும் பகுத்துக் கொடுக்கும் கொடிச்சியையும் (நற்:85), மீன்வேட்டை செய்தபோது அயிரையைப் பகுத்துக் கொடுக்கும் துறைவனையும் (அகம் : 170), வில்லால் வேட்டையாடிய வெண்கோட்டு ஏற்றினைக் குடிமுறை பகுத்துக் தரும் நெடுமலை நாடனையும் (நற் :331), நீரையும் முறைமையின் உண்ணும் நிரையா வாழ்க்கையினையுடைய ஆடவரையும் (புறம் : 325) சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. குழுவினுள் உள்ள மக்களில் ஒருவனாகவே இந்தக் குழுத்தலைவன் விளங்குகிறான்.

தலைவனுக்குரிய பெயர்கள்

குடிகளின் மக்கள் பெருக்கம் அதிகமாகவே, ஆநிரை மேய்த்தலைத் தலையாய தொழிலாகக் கொண்ட நிலை ஓரளவு மாறி, காலப்போக்கில் பிற தொழில்களும் சிறப்புப் பெறத் தொடங்கின. புன்செய் வேளாண்மையும், இயற்கை வளங்களை ஆளும் திறமையும், அவைகளைப் பண்டமாற்று முறையில் மாற்றிக் கொள்ளும் நிலைமையும் ஆகத் தொழில்கள் பரந்து விரிகின்றன. எனவே தொழில் அடிப்படையிலும், இருப்பிடம் அல்லது உறைவிட அடிப்படையிலும் நிலைபெற்ற பல குடிகளாகப் பெருகும் நிலை உருவாகின்றது. அதனடிப்படையில் குடிப் பெயர்களும் பெருகுகின்றன. தொல்காப்பியர் குடிப் பெயர்கள் குறித்துப்,

> 'பெயரும் வினையும் என்று ஆயிருவகைய
> திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே'
>
> (தொல்: பொருள் : 22)

---

9 K. Kailasapathy, Tamil Heroic Poetry. London : Oxford University Press, 1968, p.23.

என்று கூறுகிறார். குடிப்பெயரும், தொழிற் பெயரும் ஆகிய இரண்டு வகைகள் வழக்கிலிருந்ததை இந்நூற்பா சுட்டுகிறது. அடுத்து,

'ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரும் கிழவரும் உளரே' (தொல்: பொருள் : 23)

என்ற நூற்பாவின் மூலம், முல்லைத் திணைக்குரிய பெயர்களாக ஆயர், வேட்டுவர் என்ற பெயர்களைக் கூறுகிறார். அடுத்த நூற்பா

'ஏனோர் மருங்கினும் எண்ணுங்காலை
ஆனா வகைய திணை நிலைப் பெயரே'(தொல் : பொருள் : 24)

என்று உரைக்கிறது. இது முற்கூறிய முல்லையொழிந்த பிற அனைத்துத் திணைகளிலும், அவ்வாறே பெயர்கள் வழங்கப்பெறும் என்ற பொதுப்பண்பைத் தொகுத்துரைப்பதாக அமைகின்றது. இளம்பூரணர், " குறிஞ்சிக்கு மக்கட் பெயர் குறவன் குறத்தி என்பன; தலைமக்கட் பெயர் மலைநாடன், பொற்பன் என்பன; பாலைக்கு மக்கட் பெயர் எயினர், எயிற்றியர் என்பன; தலைமக்கட்பெயர் மீளி, விடலை என்பன; மருதத்திற்கு மக்கட்பெயர் உழவர், உழத்தியர் என்பன. தலைமக்கட்பெயர் ஊரன், மகிழ்நன் என்பன; தலைமக்கட் பெயர் சேர்ப்பன், நுழைச்சியர் என்பன; நெய்தற்கு மக்கட்பெயர் நுழையர், நுழைச்சியர் என்பன; தலைமக்கட்பெயர் சேர்ப்பன், துறைவன், கொண்கன் என்பன, பிறவு மன்ன" என்று மொழிகிறார்.[10] பெயரும் வினையும் என்னும் நூற்பாவுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் குறிஞ்சிக்குக் கானவர், வேட்டுவர், இறவுளர், குன்றவர் என்றும் முல்லைக்குக் கோவலர், இடையர், ஆயர், பொதுவர் என்றும் நெய்தலுக்கு நுளையர், திமிலர், பரதவர் என்றும் மருதத்திற்குக் களமர், உழவர், கடையர் என்றும் குலப்பெயர்களைக் குறிப்பிடுகிறார், தொடர்ந்து தலைமக்கட் பெயர்களாகக் குறிஞ்சிக்கு வெற்பன், சிலம்பன், பொருப்பன் எனவும், முல்லைக்கு அண்ணல், தோன்றல் குறும்பொறை நாடன் எனவும், நெய்தலுக்குக் கொண்கண், துறைவன், சேர்ப்பன், மெல்லம்புலம்பன் எனவும், மருதத்திற்கு மகிழ்நன், ஊரன் எனவும் பலபெயர்களை விரித்துரைக்கிறார்.[11] இவ்வுரைகள் குலத்தாலும், தொழிலாலும் குடிப்பெயர்கள் விரிந்து பரந்த தன்மையினை வெளிப்படுத்துகின்றன. அவையன்றிச் சங்க இலக்கியங்களும், பஞ்சவர் (புறம் ; *58*), கவுரியர் (புறம் ; *3*) செம்பியர் (நற் ; *14*), குட்டுவர் (பதிற்று ; *90*), சேரலர் (அகம் *209*) அதியர் (புறம் ; *91*), உதியர் (அகம்; *168*), மலையர் (குறுந் ; *198*), பூழியர் (பதிற்று ; *84*), குறவர் (அகம் ; *78*), பரதவர் (புறம்; *318*), ஆவியர் (சிறுபாண் ; அடி *86*), ஓவியர் (சிறுபாண் ; அடி; *122*), அருவாளர்

10. தொல்காப்பியம் பொருளதிகாரம, இளம்பூரணர் உரை , சென்னை கழகம, 1967

11 தொல்காப்பியம பொருளதிகாரம், நச்சினாக்கினியா உரை, சென்னை கழகம் 1967, ப, 48

(பட்டினப். அடி 275), அண்டர் (அகம் ; 228), இடையர் (அகம்;94) போன்ற பல குடிகளையும், அக்குடிவழித் தோன்றல்களான தலைவர்களையும் பாராட்டுகின்றன. இவையன்றித் தொழில் அடிப்படையில் வீரமிக்க போர்த்தொழில் காரணமாகப் பெயர்பெற்ற குடிகள் சிலவும் இருந்திருக்கலாம் என்று ஊகிக்க இடமுள்ளது. மழவர், இளையர் ஆகிய சொற்களுக்கு 'வீரர்' என்று பொருள் கூறப்பெறுகிறது. இப்பெயர் கொண்ட குடிகள் என்பதைவிட, ஒவ்வொரு குடியிலும் இத்தகைய போர் மறவர்கள் இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதலாம். உலகின் பிற இனங்கள் சிலவற்றிலும் அத்தகைய போர்மறவர்கள் இருந்ததை ஆய்வாளர்கள் சுட்டியுள்ளனர்.[12] எனவே இவர்கள் திணைக் குடி மக்கள் அல்லர். இவையன்றித் துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று நான்கு குடிப்பெயர்களைப் புறநானூற்றுப் பாடலொன்று (325) குறிக்கிறது. எனவே அடிப்படையான பொதுவான குடி என்ற நிலையில் இருந்து, பல்வேறு தொழில் மற்றும் நில அடிப்படையில் அமைந்த பெயர்களில் குடிகள் பல்கிப் பெருகின என்பது தெளிவாகிறது.

நிரந்தரத் தலைமையும், பெயர்களும்

பெரும்பாலும் ஆநிரை கொள்ளும் அல்லது மீட்கும் நிலையிலும், மேய்ச்சல் நிலப்பகுதிகளைக் கைப்பற்றிக் கொள்ளும் நிலையிலும் ஏற்பட்ட குழுப்பூசல்களுக்குத் தேவைப்பட்ட நேரத்தில் மட்டுமே குடியின் தலைவன், தலைமை தாங்கிய நிலை மாறத் தொடங்கியது. பல்வகைப்பட்ட தொழில்களுக்காகவும், வளர்ந்து விட்ட சமுதாயத்தில் வாழ்க்கைத் தேவைகள் அனைத்திற்காகவும் போரிட வேண்டிய நிலையில், அனைத்துவகைப் போர்களுக்கும் தலைமைப் பொறுப்பினை ஏற்று அவர்கள் செயல்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. பல்வகைத் தொழில் செய்யும் பல குடிகளுக்கும் தலைவனாகும் உயர்நிலையினைத் தலைவன் பெற்றான். தலைமையும் மாறாமல் ஒருவனுக்கே என்ற நிலை ஏற்பட்டது. அந்நிலையில் குறிப்பிட்ட நிலப்பகுதிகளுக்கும், அங்குத் தங்கி வாழும் குடிகளான மக்களுக்கும் அவன் தலைவன் ஆனான்.

இவ்வாறு நிலம், மற்றும், குடிகளின் உரிமை நிலைநிறுத்தப்பட்டபோது கடமைகளும் வலியுறுத்தப்பட்டன. அதியர் கோமான் (புறம் ; 91), குறவர் பெருமகன் (புறம் ; 57), குட்டுவரேறு (பதிற்று ; 90), மழவர் மெய்ம்மறை (பதிற்று ; 21,55) ஆகிய குடியின் தலைமைப் பெயர்களும், பறம்பிற் கோமான் (புறம் ; 201), கோடைப் பொருநன் (அகம்;13), முதிரத்துக் கிழவோன் (புறம் ; 158), என அவரவர் நிலப்பகுதியின் உரிமையினைச் சுட்டி விளிக்கும் தொடர்களும் இடம்பெறலாயின. அவனுக்கு உரிமையான

12. ஆர் பூங்குன்றன, செங்கம் நடுகற்களில் தொறுப்பூசல் தொல்குடிகள், அரசியல, கோயம்புத்தூர் . பாரதியாா பல்கலைக் கழக எம் பில் பட்ட ஆயவேடு 1989 ப. 138.

நிலப்பகுதியில் வாழும் மக்களுக்குத் தேவையான பொருளை ஈட்டுதல், சேமித்தல், வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுத்தல், பகைவர் போரிட வந்தால் தன் குடிகளைக் காத்தல் போன்ற பல கடமைகள் அத்தலைவனுக்கு உரியனவாயின. குடிக்கடன், குடிப்பாடு, குடிப்பொருள் ஆகிய தொடர்கள் தலைவனுக்கும், அவன் பகுதியில் வாழும் குடிகளுக்கும் உள்ள தொடர்பினைக் காட்டுவன. இருவருக்குமிடையே உள்ள கடமைகளையும் உரிமைகளையும் சுட்டிக் காட்டுவனவாய் இத்தொடர்கள் அமைகின்றன.

தலைமை பரம்பரை உரிமையாதல்

பொதுவான குடிப்பண்பைக் குறிப்பதாக இருந்த சொற்கள் மாறிக் குடியின் பெருமகன்களாகத் தலைவர்கள் விளிக்கப்படும் நிலையில் தலைமை வழிவழியாக, குலமரபாக நிலைநிறுத்தப்பட்டது. இத்தகைய தலைவர்கள் வாழும் சமுதாய வளர்ச்சிப் படிநிலையை வரலாற்றாசிரியர்கள் குலமரபுச் சமூதாயம் (Lineage Society) என்று அழைக்கின்றனர்.

குலமரபுத் தலைவனின் அரசியல் தகுதிகள் (Political Qualifications)

குலமரபுச் சமுதாயத்தின் தலைவர்கள், நிரைகோடலில் வெற்றி பெறுபவராக மட்டும் இன்றித் தம் குடிகளைக் காக்கும் கடமையும் உரியவராகக் கருதப்பட்டனர். இக்கடமையினை நிறைவேற்றும் பொருட்டுப் பிற குலமரபுகளைத் தாக்குதலும், கொள்ளையிடுதலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கங்கள் ஆயின. அவன் தானே போர்மறவனாகச் செயல்படுவதோடு, தன் குலமரபுக்குட்பட்ட வீரர்களை ஊக்குவித்தலும் கடமையாகிறது. அவ்வகையில், போருக்குச் செல்லும்போதும், போரில் வெற்றி எய்தும்போதும் வீரர்களோடு உடனிருந்து உண்ணுதல், கட்குடித்தல், வெற்றி எய்திய வீரர்களுக்குப் பரிசளித்தல் ஆகிய செயல்களும் இக்குலமரபுத் தலைவர்களுக்குரிய தனிப்பண்புகள் ஆயின. போரில் பிழையாது அம்பு எய்து எதிரியை வீழ்த்துதல், தேரினை வெகுவேகமாக ஓட்டுதல், போர்த்தொழில் நுட்பங்களில் சீரிய பயிற்சி உடையவனாய் இருத்தல் போன்றவை அவர்களுக்குச் சிறப்புத் தகுதிகள் ஆயின. இவையன்றி அவனுக்கெனச் சில வாழ்வியல் தகுதிகளும் வரையறுக்கப்பெற்றன. புலவரைக் காத்தலும், கொடையளித்தலும், வாழ்வியல் தகுதிகளில் குறிப்பிடத்தக்கன. அக்குலமரபுத் தலைவனை, இறைவனோடு ஒப்பிடுவதன் மூலம் அவனுக்குக் கடவுளுக்கு நிகரான உயர்வு அளிக்கப்பட்டது. சூதர், மாகதர், பாணர்களால் அவன் அவ்வாறு பாராட்டப் பெறுவது அரசாளும் தனிப்பண்புக்கு அரண் செய்வதாக அமைந்தது. அக்குலமரபுத் தலைவனின் பாதுகாப்பின் கீழ் வாழும் மக்கள் தம் அறுவடையின் புதுவருவாயினைப் பெற்றபோதும். கிடைத்தற்கரிய பொருள்களைப் பெற்றபோதும் அவற்றைக்

காணிக்கையாகத் தலைவனுக்குக் கொடுத்தல் வேண்டும் என்னும் வழக்கம் தோன்றுகிறது. காலபோக்கில் இக்காணிக்கை கட்டாயமாகவும் ஆக்கப்பட்டது. தலைவனின் குடிவழித்தூய்மை காக்கப்படுவதற்காகத் திருமண உறவுகளுக்னெச் சில வரன்முறைகள் அறிமுகம் செய்யப்பட்டன. வட இந்தியாவின் குலமரபுச் சமுதாயத்தினை ஆய்வுசெய்த அறிஞர், பரந்த அளவில் வேளாண்மை செய்யத் தகுதியற்றதாக விளங்கிய மேற்குக் கங்கைச் சமவெளியில்தான் இத்தகைய குலமரபுச் சமுதாயங்கள் தோன்றி நிலைபெற்றிருந்தன என்பர்.[13]

இதுகாறும் குறிப்பிட்டு விளக்கிய படிநிலைகளில் வளர்ந்து நிலைபெற்ற குலமரபுச் சமுதாயங்களுள் ஒன்றின் பிரதிநிதியாகத்தான், அதியர் மரபினை நாம் காண்கிறோம். சங்க இலக்கியங்கள் சில நூறு ஆண்டு கால இடைவெளியில் பாடப்பெற்ற பாடல்களின் தொகுதி. ஆதலின் இப்படிநிலைகள் அனைத்தையும் தெளிவாகக் காட்டும் பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன. அதியர் என்ற குடியின் தலைவனாக அதியர் கோமான் விளங்குகிறான். குலமரபுத் தலைவராக விளங்குதற்குரிய அரசியல், வாழ்வியல் தகுதிகளையெல்லாம் அதியர் மரபினரும் பெற்றிருந்தனர் என்பதைச் சங்கப் பாடல்கள் வழி இனிக் காணலாம்.

அதியன் - பெருவீரன்

அதியனின் தனிப்பெரும் வீரத்தைப் பற்றிய குறிப்புகள் பல பாடல்களில் காணப்படுகின்றன. வைகல் எண்தேர் செய்யும் தச்சன் திங்கள் வலித்த காலன்னோன் (புறம் 87) எனவும், முழவுத்தோளுடையவன் (புறம் 88) எனவும், மான் கணத்திற்கு மறப்புலி போலவும்,, இருளுக்கு ஞாயிறு போலவும், பெருவழியினைக் கடக்கும் பெருமிதப் பகடு போலவும் வீரம் விளைப்பவன் (புறம் 90) எனவும், பெருங்களிறு மதம் பிடித்தது போன்று பெருவலியுடையவன் (புறம் 94), கூற்றுவன் போன்றவன் (புறம் 98) வரிவயம் பொருத வயக்களிறு அவன் (புறம் 100) எனவும் அவனது பெருவீரம் பலவாறு புகழ்ந்துரைக்கப்படுகிறது.

அதியர் வீரமிக்க படையினை உடையவர்

தனிப்பெரும் வீரத்தினை உடையவர் மட்டுமல்லர். தன் குடிகளைக் காக்கவும், வளம் பெறச் செய்யவும் தாம் மேற்கொள்ளும் போர்களில் ஈடுபடுதற்குரிய பெருவலிமையுள்ள வீரர்கள் பலரைக் கொண்ட பெரும் படையினையுடையவராகவும் இவ்வதியர் குடியினர் விளங்கினர். தம் படையில் வலிமையும் திறமையும் மிக்க வீரர்களைக் கொண்டிருந்தனர். தம் மரபுக்கெனப் போருடற்றும் பெரும்படை அது. அப்படையில், கோலைக் கண்டு அஞ்சாத அரவினை ஒத்த

13. Romila Thapar, From lineage to state, Bombay, Oxford University Press, 1984, pp. 68, 69.

சிறுவன்மள்ளர் பலர் இருந்தனர் (புறம் ; 88). குறும்படைந்த அரண்களைக் கடந்து பகைவரது கள்ளுடைய நாட்டினைக் கதிகலங்கச் செய்யும் திறன்மிக்க வேற்படையினைக் கொண்டிருந்தனர். பகைவரின் காப்புடைய மதிலழித்து உருவிழந்த வாட்படை அவரிடம் இருந்தது. இவரது யானைப் படையினைக் கண்டு மதிற்கதவங்களைப் பகைவர் இழுத்து மூடுவர். எதிர் மலைந்த மறவர்களின் பொன்னால் ஆன மாலைகளைச் சிதைத்ததால், தம் குளம்புகள் சிதைந்த நிலையில் உள்ள குதிரைப்படையினை அதியர் கொண்டிருந்தனர். இவர்தம் குதிரைப் படையினைக் கண்ட பகைவர் தம் வழிகளையெல்லாம் கவை முட்களைக் கொண்டு அடைத்து விடுவர் (புறம் 98). அதியர் படைகளைப் பற்றிய வருணனைகளாகச் சங்க இலக்கியங்கள் தரும் இக்குறிப்புகள் எல்லாம் பெருவலிமையையும், நாற்படைத் திறமும் கொண்ட பெரும்படையையும் உடைய குலமரபுத் தலைவராக அதியர் விளங்கினர் என்னும் உண்மையைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

அதியர் பல குழுக்களின் தலைவர்

சிறிய குழுவிற்கு மட்டும் தலைவராக விளங்கிய அதியர் மரபு, காலப் போக்கில் பிற குழுக்களையும் தன்னுள் ஏற்றுக்கொண்ட த கைமைத்தாக வளர்ந்திருக்கின்றது. இதையே,

> 'எழுபொறி நாட்டத்து எழாஅத்தாயம்
> வழுவின்றி எய்தியும் அமையாய் செருவேட்டு
> இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்
> சென்றமர் கடந்து நின் ஆற்றல் தோற்றினை' (புறம் 99)

என்ற பாடல் அடிகளும்

> 'பிணிக்கதிர் நெல்லின் செம்மல் மூதூர்
> நுமக்குரித்தாகல் வேண்டின் சென்றவர்க்கு
> இறுக்கல் வேண்டும் திறையே' (புறம் 97)

என்ற ஔவையின் எச்சரிக்கையும் புலப்படுத்துகின்றன. மேலும், பகைவர் இக்குலமரபு இளமைத் தன்மையது என்று கருதிப் போர் தொடுப்பாராயின், அவரிடம் தோல்வியைத் தழுவ வேண்டியிருக்கும் என்கிறார் ஔவையார். மேலும் அவர் இளையவராயினும் சிறப்பும், தலைமைப் பண்பும் உடையவராக விளங்கினர் என்பதையும், குடிகளினிடையே ஆளுமைத் திறம் பொருந்தியவராக விளங்கினர் என்பதையும் குறிப்பிடுகிறார். 'நுண்பல் கருமம் ஆராயும்' தகுதி அவரிடம் காணப்பட்டதைப் புறநானூறு (164) தெளிவாகச் சுட்டுகிறது. இத்தகைய காரணங்களால், பல சிறு குழுக்களுக்கும் தலைமைப் பொறுப்பேற்கும் தகுதியினை அதியர் குலம் பெற்றது. பிற சிறு குழுக்கள் அதியர் மரபின் கீழ்வந்தன எனத் தெரிகிறது.

வாழ்வியல் தகுதிகள் (Ideological Qualifications)

குலமரபுச் சமுதாய காலத்தில் கொடை, அன்பு, சுற்றம் தழாஅல்

போன்ற வாழ்வியற் பண்புகள் சிறப்புக்குரியனவாய் விளங்கின. அதியர் மரபினர், புலவரைப் புரக்கும் பெருந்தகையாளராய் இருந்தனர் இரவலரிடம் ஒருநாட் செல்லினும் பலநாட் செல்லினும், பலநாள் பயின்று பலரொடு செல்லினும், தலைநாள் போன்ற விருப்புடையவராக விளங்கினர் (புறம் 101); உண்டாயிற் பதங்கொடுத்து இல்லாயின் உடனுண்ணும் இல்லோர் தலைவராகச் சிறந்தனர் (புறம் ; 95); அதியரின் கொடை களிறு தன் கோட்டிடை பெற்றுவிட்ட கவளம் போன்று உறுதியாகக் கிடைக்கவல்லது. 'அதியரிடம் சென்றபின் ஏமாற்றம் என்பதே இல்லை' என்று புலவர் நம்பிக்கை கொள்ளும் அளவிற்கு உறுதியுடையதாய் அவரளிக்கும் கொடை இருந்தது (புறம் 101). அவன் அலத்தற் காலையாயினும் புரத்தல் வல்லவன் (புறம் 103). சிறிது கள் பெற்றபோது புலவர்க்குக் கொடுத்துப் பெருங்கள் பெற்றபோது பாடும் பரிசிலர்களுடன் அமர்ந்து தாமும் மகிழ்ந்துண்ணும் பண்புடையவராக அதியர் குலக் கோமகன்கள் விளங்கினர். சிறு சோறாயினும், பெருஞ்சோறாயினும் இரவலருடன் கலந்துண்ணும் தகைமையர். இவையெல்லாம், அதியர் குலத் தலைவர்கள், குலமரபுத் தலைவர்களுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத தகுதிகளான கொடைப் பண்பையும், இரவலர் மாட்டு நன்மதிப்பைக் காட்டும் தன்மையையும் பெற்றிருந்தனர் என்பதை தெளிவாகக் காட்டும் சான்றுகள் ஆகும்.

குலமரபின் தலைவர்களாக ஏற்றம் பெற்றவர்களை இறைவனோடு ஒப்பிட்டு பாடுவதன் மூலம், அவர்களின் பெருமையினை மேலும் மிகைப்படுத்துதல் அச்சமுதாயப் பண்புகளில் ஒன்றாக இருந்தது. அப்பணியினை வடஇந்தியாவில் சூதர், மாகதர்களான அரசவைக் கவிஞர்கள் செய்தனர் எனக் கருதுவர்.[14] தமிழகத்தில் இப்பணியினை மிகச்சிறப்பாகப் புலவர்கள் செய்தனர். இவ்வகையில் அதியனும் ஔவையாரால்,

> 'பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
> நீலமணி மிடற்று ஒருவன் போல
> மன்னுக பெருக நீயே' (புறம் 91)

என்று வாழ்த்தியுரைக்கப் பெற்றதை அறிகிறோம்.

இச்சமுதாய வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வேள்விகளைப் புரிந்து அந்தணர்க்குக் கொடை அளித்தலும் குலமரபுத் தலைவரின் பண்புத் தகுதிகளில் ஒன்றாகிவிட்டது. எனவே இத்தகைய செயலை அதியரும் செய்துள்ளனர். 'அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்' என்ற தொடர் (புறம் 99) இப்பண்பினை வலியுறுத்தும்.

தனிப்பட்ட வீரர்களைக் கொண்டிலங்கிய அதியர்குடி பலகுழுக்களைப் போரின் மூலம் இணைத்துக் கொள்ளும் திறமையும்,

---

14. Thapar, pp. 136, 137.

வலிமையும் வாய்ந்த படையுடையதாக வளர்ந்து பின் 'அதியர் கோமான் ; அதியர் பெருமகன்' என்று பாராட்டப்பெறும் சிறப்புக்குரிய உரிமையும் கடமையும் நிறைந்த குலமரபுச் சமுதாயத்தின் தலைவர்களைக் கொண்டதாகச் சிறந்து விளங்கியது. குலமரபுத் தலைவர்க்குரிய அரசியல் தகுதிகளோடு வாழ்வியல் தகுதிகளும் உடையவர்களாய் புலவரால் பாராட்டபெற்ற சிறப்புக்குரியோராய்த் தமிழ்ச் சமுதாயத்தில் அதியர் தனியிடம் பெற்றனர்.

குலமரபுச் சமுதாயத்தில் பிற குலமரபுத் தலைவர்களும் வேந்தர்களும்

ஆற்றுநீரால் வளம்பெற்றுத் திகழ்ந்த இடங்கள் தவிரப் பிறபகுதிகளில்தான் பெரும்பாலான குலமரபுச் சமுதாயங்கள் தோன்றி வளர்ந்தன. இதன் தலைவர்கள், 'வேளிர்' என்றும், 'சீறூர் மன்னர்' என்றும் சங்க இலக்கியங்களில் பாராட்டப் பெறுகின்றனர். பாரி, காரி, அதியன், பேகன், ஆய், இருங்கோவேள் போன்ற வேளிர்களும், பல பெயர் அறியப்படாத சீறூர் மன்னர்களும் புன்புலத்தை உரிமையாக உடையவர்கள். உழவரால் உழுது விளைவிக்கப் பெறாத நான்கு பயன்களையும் (புறம் 109), புதுவரகும், தினையும், கவ்வையும், அவரையும் விளையும் நிலத்தையும் (புறம் 120) உடையவன் பாரி. பேகனின் வன்புல நன்னாட்டினைப் பாடவந்ததாகக் கூறுகிறார் அரிசில் கிழார் (புறம் 144). குறவர் மாக்கள் மலைச் சாரலில் புனத்தினை அயிலும் நாடன் அவன் என்கிறார் கபிலர் (புறம் 143). சாரல் அருவிப் பயமலைக் கிழவனான ஓரியை, 'நின்னை ஒக்கும் வேட்டுவர் இல்லை' என்கிறார் வன்பரணர் (புறம் ; 152). கண்டீரமலைத் தலைவன் கோப்பெருநற்கிள்ளி, பெறுதற்கரிய வீறுசால் நன்கலம் பிறிதொன்று இல்லை; காட்டு நாட்டேன் என்று தன்னைக் கூறிக் கொள்கிறான் (புறம் ; 150). இதுபோலப் புன்புலச் சீறூர் மன்னர்கள் பலரைப் பின்வரும் பாடல்கள் காட்டுகின்றன.

> 'இடுமுற் படப்பை மறிமேய்ந்து ஒழிந்த
> குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு
> புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம்
> சீறூர் மன்னர்' (புறம் ; 197)
>
> 'பருத்தி வேலிச் சீறூர்' (புறம் ; 299)
>
> 'படலை முன்றில் சிறுதினை உணங்கல்
> இதலும் அறவும் உண்கெனக்
> கொடுக்கும் .. சீறூர் மன்னர்' (புறம் : 319)
>
> 'புன்புலச் சீறூர் நெல்விளையாதே
> வரகும் தினையும் உள்ளவை' (புறம் : 328)

மேற்குறித்த பாடல்களில் இருந்து புன்புலங்களில் சீறூர் மன்னர்களும், குலமரபுத் தலைவர்களும் விளங்கினர் என்பது தெளிவாகிறது. ஆனால்

இவர்களே வள்ளன்மையிற் சிறந்து விளங்கினர். ஈகைச் செந்நுகம் பூண்ட எழுவரும் வேளிரே; வேந்தர் எவரும் இலர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் குடிமரபுகளுக்கிடையே பூசல்களும், போர்களும் தவிர்க்க இயலாதனவாய் இருந்தன. பொருளாதார வளர்ச்சிக்கு, அருகில் உள்ள குடிமரபுகளை வென்று, அவர்களின் இயற்கைச் செல்வங்களையும், உரிமைப் பகுதிகளையும் அகப்படுத்துவதன் மூலம் பிற குடிமரபுகளின் வீரர்களையும் தம் வசம் ஆக்கிக் கொள்ள ஒவ்வொரு ஆளும் மரபும் முயன்றது. வேளிர்களுக்குள்ளேயே நிகழ்ந்த போர்கள் பலவற்றைச் சான்றோர் செய்யுட்கள் சுட்டுகின்றன.[15] இவை இக்கருத்தை மேலும் வலியுறுத்தும் சான்றுகள் ஆகும்.

வேந்தர்கள்

'மென்புல வரைப்பின் நன்னாட்டுப் பொருநன்' எவனோ, 'வைகல் யாணர் நன்னாட்டவன்' எவனோ, அவனே நாடுகெழு செல்வத்துப் பீடு கெழு வேந்தன் ஆகிறான். நானில வளங்களையும் தன்நாட்டுப் பகுதிக்குள்ளேயே வேந்தர் கொண்டிருந்தனர். வேந்தர்கள் பிறரிடத்து எந்தவித உதவிக்கும் செல்ல வேண்டாதவர்கள். எல்லாவகையிலும் தன்னிறைவு கொண்ட பகுதிகளின் தலைவர்களே வேந்தர் ஆயினர். குறிஞ்சிநில வேட்டுவனும், முல்லைநில ஆய்மகளும், மருதநில அரிவையரும் இணைந்து பண்டமாற்றிக் கொள்ளும் நாட்டையுடையவனாக சோழன் நலங்கிள்ளி விளங்கினான் (புறம்:33). நாடன் என்கோ? ஊரன் என்கோ? சேர்ப்பன் என்கோ? என்று மயங்கும்படி, குறிஞ்சி மற்றும் முல்லைத் திணைகட்குரியதான நாட்டையும், மருதத்தின் ஊர்களையும், கடற்கரைப் பகுதிகளையும் கொண்டு சேரமான் கோக்கோதை மார்பன் விளங்கினான் (புறம்:49). அரசன் என்ற உயர்நிலை எந்தெந்த செயற்பாடுகளின் அடிப்படையில் வந்தது என்பதை அறிய, முக்குடி வேந்தரும் பாடிய வஞ்சினப்பாடல்கள் பெரிதும் துணை புரிகின்றன. பூதப்பாண்டியன், 'திறனில் ஒருவனை அவையில் நாட்டி மெலிகோல் செய்வதையும்' 'புலவரும் வேளிரும், சுற்றமும் ஆகிய கேளிர் பிரியும் நிலையினை எய்துவதையும், வன்புலங்காக்கும் குடியில் தான் பிறப்பதையும் இழுக்காகக் கூறுகிறான் (புறம்:71). தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனோ, அவன் நாட்டில் வாழ்வோர் வேறிடம் செல்ல விரும்பி அவனைக் கொடுங்கோலன் எனத் தூற்றும் நிலை எய்துவதையும், புலவர்கள் அவனைப் பாடாது வெறுத்து நீங்கும் நிலையினையும், தான் புலவர்க்கு ஈய இயலாத நிலை எய்துவதையும் இழுக்காகக் கூறுகின்றான் (புறம்:72), சோழன் நலங்கிள்ளியோ, காதல் கொள்ளாத பொதுமகளிரோடு தான் இணைவதை இழுக்கெனச் சுட்டுகிறான் (புறம்:73), இம்மூன்று பாடல்களும், அரசன் என்னும் உயர்நிலை எய்துதற்குரிய ஏதுக்களைத் தெளிவாக்கப் போதுமானவை.

15. அகம்:135; 148, 209, 45, 142

இவற்றிலிருந்து 1) முறை செய்யும் பண்பு, 2) கேளிர் சூழ இருத்தல் 3) மென்புலங்காக்கும் நீள்குடிப் பிறத்தல் 4) மக்களை (குடிகளை) நிலைபெற்று, அதாவது குடிபெயராது வாழச் செய்தல், 5) புலவர்க்கும் பாணர்க்கும் இல்லையென்னாது அளித்தல், 6) மரபுரிமைகளை நிலைநிறுத்தும் வகையில் இல்வாழ்க்கையினை நடத்துதல் ஆகியவை வேந்தரின் உயர்நிலைக்கு இன்றியமையாத பண்புகளாகக் கருதப்பட்டன எனத் தெளிகிறோம்.

இவற்றோடு, நாற்படைச்சிறப்பு (புறம்:55), வேற்றுமையில்லா விழுத்திணைப் பிறத்தல் (புறம்:26), வேளாண்மைக்குப் பெருஞ் சிறப்புத் தருதல் (புறம்:35), சரியான வரிவிகிதத்தினை அதாவது விளைச்சலில் ஆறிலொன்றினை வரியாகப் பெறுதல் (புறம்:184) ஆகியவையும் வேந்தனாக நிலைபெறுதற்குரிய தகுதிகளாக விளங்கின.

வட இந்தியாவில், 'அரசு' தோற்றம் பெற்ற பகுதியான மத்திய கங்கைச் சமவெளியின் பண்டைய வரலாற்றினை ஆராய்ந்த அறிஞர், அப்பகுதி நல்ல நீர்வளம் மிகுந்திருந்தது என்றும், வணிகத்திற்கும் போக்குவரத்திற்கும் ஏற்ற பெருவழியாக அப்பகுதி இருந்தது என்றும், இரும்பின் பயனை முதன்முதலில் அறிந்த மக்கள் வாழ்ந்த பகுதியாக அது விளங்கியது என்றும், நெல்லினை முதன்முதலில் பயிரிட்ட பகுதியாகும் அது என்றும் கூறுகிறார். எனவே அங்கு மக்கள் தொகைப் பெருக்கமும், நகர்ப்புற வளர்ச்சியும் ஏற்பட்டன. செல்வம் பெருகியது. செல்வத்தின் மீதும், நில ஆதிக்கத்தின் மீதும் வந்த ஆர்வத்தால் நகர்ப்புறங்கள் பாதுகாக்கப்பட்டன. ஆநிரை கவரும் பூசலாகத் தொடக்க நிலையில் இருந்த போருக்குப் பதிலாக, மிகுந்த ஏற்பாடுகளுடன் கூடிய நகரங்களைக் கொள்ளையிடும் போர்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்போர்கள் வேட்டையில் கிடைத்ததைக் குடியினர் அனைவரும் பங்கிட்டுக் கொண்டது போன்றதல்ல. மாறாக மாற்று அரசனின் அவையிலும், வணிக நகரங்களிலும் இருந்த செல்வம் கொள்ளையிடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது. பாணர்க்கும் வீரர்க்கும் 'பாதீடு'[16] என்ற நிலைமாறி, தன் புகழினை நிலை நிறுத்தும் மறவர்க்கும், அந்தணர்க்கும் நிலத்தினையும் கூடப் பங்கிட்டுக்

16. பாதீடு: வெடசித் திணையின் ஒருதுறையாகத் தொலகாப்பியர் இதனைக் கூறுகிறார், இதற்கு இளம்பூரணா, 'கொள்ளப்பட்ட நிரையைத தம்மூரகத்துக் கொணாந்து கூறிடுதல' என்று விளக்கமளிக்கிறாா (ப 78), நச்சினாாக்கினியர், 'வேந்தனேவலால் தான கொண்ட நிரையைப் பகுத்துக் கோடலும, நிரை மீடடோரும் தத்தம் நிரையைப் பகுதது‌க் கொடுத்தலும்' என்றுரைக்கிறார் (ப 137) புறப்பொருள் வெண்பாமாலை, 'ஒள்ளிய வாட்போரினை மேற்கொண்டோர்கும், ஒற்றுத் தெரிந்து சொன்னார்க்கும், நிமித்தம் தப்பா வகைசொனன அறிவுடையோர்க்கும், தம்முள் வேறுபடுவோரை மாறுபாடு கெடுத்த வெற்றியினையுடைய மறவினையாளா தம் சீறூரிடத்துப் பங்கிடுதல்' எனறு இதற்கு விளக்கமளிக்கிறது புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் சாமுண்டி தேவநாயகரியற்றிய உரையும் (பதிப்) உ வே.சா ஒன்பதாம்பதிபபு, சென்னை தியாகராச விலாச வெளியீடு, 1963.ப 9.

கொடுக்கும் நிலை வந்தது. இவ்வாறு வளர்ச்சியடைந்த அரசே பின்னர்த் தனியரசாக நிலைபெற்றது என்று கூறுவார்.[17]

இவையனைத்தும் சங்ககால வேந்தர்கட்கும் பெரிதும் பொருந்துவன. இவர்கள் பேரரசாக நிலைபெறுவதற்கு இயற்கையான ஆற்றுநீர்ப் பாசன நிலங்கள் பெருந்துணை புரிந்தன. ஆயினும் ஏதேனும் ஒருவகையில் சிறந்துவிளங்கிய வேளிர்களைத் தம்முள் இணைத்துக்கொள்ள விரும்பிப் பல போர்கள் நடைபெற்றன. சிறப்புக்குரியவையாகத் திகழ்ந்த வீரக்குடிகளைத் தமக்குரிமையாக இருந்த ஊரையே கொடுத்துத் தன்வயமாக்கினர் (புறம்:285). வீரக்குடி மகளிரை வேட்டதன் மூலம் அக்குடிகளைத் தமக்கு உறுதுணையாக்கிக் கொண்டதை மகட்பால் காஞ்சித்துறைப் பாடல்கள் காட்டும். பெருமன்னர்கள் எதிரியை வென்றபோது, அவர்தம் வேளாண் நிலங்களை அழிப்பதன் மூலம் அவரை வலியற்றவராக்கினர் (புறம் 15,16,23). அச்செய்கை புலவர்களாலும் பாராட்டப்பெற்றது (புறம்:57), தன்மலைப் பிறந்த தாவில் நன் பொன்னைப் பன்மணிக் குவையொடும் விரைஇப் பாணர் பலரையும் கொண்டு செல்லுங்கள் எனக்கொடுக்கும் ஓரியைப் பலர் வென்று அவன் நாட்டைப் பிடிக்க விரும்பினர். பொன் விளையும் ஏழில் மலைக்குரிய நன்னனை வென்று அழிக்க முயன்றனர். அவ்வாறே அருங்குறும்பு அதாவது கடிமதில் அரணுடைய சிற்றரசுகளை வென்று பெருமை தேடினர். ‘கதிர்நுழைகல்லா மரம்பயில் கடிமிளை அருங்குறும்புடுத்த கானப் பேரெயிலை’ வென்று, அது கடந்த உக்கிரப் பெருவழுதி என்று சிறப்புப் பெயர் பூண்டான் பாண்டியன் (புறம் 21,367), பாரியின் பறம்பினை மூப்பெரும் வேந்தரும் முற்றுகை இட்டு வென்றனர் (புறம்:109,110). சேரன் தன் கடற்பகுதியை வணிகத்திற்கென எவர்க்கும் விட்டுக் கொடுப்பவன் அல்லன் என்பதைப் புறம் 126–ஆம் பாடல் காட்டும். சோழரும், பாண்டியரும் தம் நாட்டுப் பிறந்த இயற்கை வளங்களையெல்லாம் அயல்நாட்டுக்கு அனுப்பி அயல்நாட்டவர் தரும் தண்கமழ் தேறலாகப் பெற்றனர் (புறம்:56). இவ்வாறு வேளாண்மையாலும், வணிகத்தாலும் சிறந்து வேந்தர் விளங்கினர். இவ்வாய்ப்புகளை மிகக் குறைந்த அளவில் பெற்றவர்களாக வேளிரும் சீறூர்த் தலைவர்களும் விளங்கினர். வளம் பெற்ற வேந்தர்கள், பண்டைய குலமரபுக்குரிய தனித்தன்மைகளைக் கைவிடத் தலைப்பட்டனர். குலமரபுச் சமுதாயத்தின் நற்பண்புக் கூறுகளை நிலைநிறுத்தும் வகையில் புலவர்கள் அறிவுரை கூறும் பாடல்களையும் புறநானூற்றுத் தொகுப்பில் காண்கிறோம் (புறம்:198). ஆனால் சீறூர் மன்னர்களும், வேளிர்களும் பண்டைய வாழ்வியற் பண்புகளை மதித்து நடந்ததால், வேளிரைப் பாடுவதில் புலவர் ஆர்வம் காட்டினர். (புறம்.154, 119, 137). அத்தகைய வேளிருள் ஒருவராக அதியர் விளங்கினர். அது வேந்தன் என்ற உயர்நிலையை எய்தாத நிலை;

17. Thapar 157,158.

அந்நிலையினை எய்தும் அளவுக்கு நானில வளங்களும், வேளாண்மைக்குரிய வளமான மருதநிலப் பெரும்பரப்பும் அவர்களுக்கு இல்லை. எனினும் குலமரபுத் தலைவர்களுக்குரிய பண்புகள் அனைத்தையும் பெற்று இவர்கள் சிறந்து விளங்கியதைச் சான்றோர் செய்யுட்கள் தெற்றெனக் காட்டுகின்றன.

அதியர் பெயராய்வு

சங்க இலக்கியங்களில் அதியன் (அகம் *325*), அதிகன் (அகம் *142, 162*), அதியமான் (புறம் *101*), அதிகமான் (புறம்:*81*–இன்கொளு), அதியர் கோமான் (புறம்:*91*) என்று இம்மரபினர் குறிக்கப்படுகின்றனர். அதியர் கோமான் அஞ்சி (புறம்:*91*, அகம்:*142*, குறுந்:*393*), நெடுமான் அஞ்சி (புறம்:*92, 206,315*) பல்வேல் அஞ்சி (புறம்:*103*) என அஞ்சி என்ற பெயரும் இணைந்த வழக்குகள் உள்ளன. கோமான் (புறம்:*91*), நெடுமான் (புறம்:*92*), பெருமான் (புறம்:*88*) ஆகிய பொதுப்பெயர் வழக்குகளும் அதியரைக் குறித்து வருகின்றன. இவை அதியர், அஞ்சி ஆகிய இரண்டு பெயர்கட்கும் அடைமொழியாகவும் இடம் பெறுகின்றன. இவ்வழக்குகளை யெல்லாம் கூர்ந்து நோக்கினால், அதியர் என்பது குடிப்பெயர் என்பதும் அஞ்சியென்பது இயற்பெயர் என்பதும் தெளிவாகின்றன.

இப்பெயர்ப் பொருள் குறித்து ஆய்வு செய்த அறிஞர், அதியென்பதை 'அத்தி' என்ற மரப்பெயரின் குறுக்கமாகக் கொண்டு அத்திமரங்கள் நிறைந்த மலைக்குரியோர் அதியர் என்று பெயர் பெற்றனர் என்கிறார்.[18] அதியன், அதிகன் ஆகிய இரண்டும் ஒருபொருள் குறித்தனவே. உயர்ந்தவன், சிறந்தவன், பெருமைக் குரியவன், மேம்பட்டவன் ஆகிய பொருள்களைத் தரும்.[19] இச்சொல்லால் சங்ககாலக் குலமரபுகளில் மேம்பட்டவராக – புகழுடையவராக விளங்கிய இக்குடி குறிக்கப்பட்டது என்று பொருள் கொள்ள வாய்ப்புள்ளது. சங்கத் தொகுப்பில் **முடிகெழு மூவேந்தருக்குப் பின்னர், அதிக எண்ணிக்கையில் பாடல்களைப் பெற்ற மன்னர் மரபு அதியர் மரபாகும்** (அட்டவணை *1*). எனவே இப்பெயர் இக்குடிக்குப் பொருத்தமுடையதாகவே அமைகிறது. எனினும் ஒருகுடி புகழ்பெற்றுச் சிறந்து விளங்கிய பின்னர், புகழ் அடிப்படையிலான ஒரு சொல்லைத் தன் குலப்பெயராக ஏற்றதென்பது பொருத்தமாகப் படவில்லை. இயற்கை முறையிலான, அறிவு பூர்வமாக ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு காரணத்தைக் கூறுவதே வரலாற்றுக்கு ஏற்புடைத்தாக அமையும். அவ்வகையில் அத்திமரங்கள் நிறைந்த மலைக்குரியவர் என்ற பொருள் பொருத்தமுடையதே. இதுபோல இயற்கையான செடிகொடிகள், விலங்குகளின்

18. M.A. Dorai Rangasamy, The surnames of the Cankam age. Literary and Tribal, Madras; Madras University, 1968, p.115.
19. ஞா. தேவநேயப் பாவாணர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி, சென்னை, தமிழ் நாடடுப் பாடநூல் நிறுவனம், 1985, ப 208

அட்டவணை-1

அதியரைப் பற்றிய சங்கப் பாடல்கள்

அரசன்	நூலும் எண்ணும்	பாடிய புலவரும் எண்ணிக்கையும்	மொத்தம்
1. நெடுமிடல் (அதியன் I)	அகம்.266 பதிற்று. 32	பரணர் (1) காப்பியாற்றுக் காப்பியனார்(1)	2
2. அதியமான் நெடுமான் அஞ்சி (அதியன் II)	புறம்.87–95; 97–101 103; 104, 206; 231; 232; 235; 315; 390; 392 நற்றிணை: 381 குறுந். 91 அகம். 142, 162, 372 குறுந். 393 அகம். 325 அகம். 352 புறம். (கொளு) 203 பதிற். 31 பதிற். (பதிகம்) 8	ஔவையார் ஔவையார் } 23 ஔவையார் பரணர் (3) பரணர் (1) மாமூலனார் (1) அஞ்சியத்தை மகள் நாகையார் (1) பெருஞ்சித்திரனார் (1) காப்பியாற்றுக் காப்பியனார் (1) அரிசில் கிழார் (1)	32
3. பொகுட்டெழினி (அதியன் III)	அகம்.105 அகம். 36 அகம். 211 புறம். 158 புறம். 230 புறம். (கொளு) 96,102 சிறுபாண். அடி 100–103	தாயங்கண்ணனார் (1) நக்கீரர் (1) மாமூலனார் (1) பெருஞ்சித்திரனார் (1) அரிசில் கிழார் (1) ஔவையார் (2) இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் (1)	8
		மொத்தம்	44

அடிப்படையில் இடங்களும், குடிகளும் பெயர்பெறுவது உலகு தழுவிய உண்மையாகும்.[20] மேம்பட்டுச் சிறந்து விளங்கிய குடி என்ற பொருள் அச்சொல்லுக்கு மேலும் வலிமை கொடுத்துப் பெருமைக்குரிய பொருளாகப் பின்னர் அமைந்தது என்று கூறலாம். எனவே இக்குடிமரபில் வந்த அனைவரும் அதியர் என்று பெயர் பெற்றனர்.

'அதியமான்' என்ற சொல், அதியர் மரபுத் தலைவன், அதியர் மரபுத் தோன்றல் என்ற பொருளுடையதாய் இக்குலத்துக்கு உரியதாயிற்று. இங்குச் சமுதாயத்தின் இருவகைக் குடியுரிமைகள்— வாரிசுரிமைகள் விளங்கியதை நினைவிற்குக் கொணர்தல் அவசியமாகிறது. ஒன்று தாய்வழி முறையிலும், மற்றொன்று தந்தை வழிமுறையிலும் அமைந்தது. வேளாண்மையைச் சிறப்புத்தொழிலாகக் கொண்ட மக்களிடையே தாய்வழி மரபுரிமை நிலைப்பட்டது என்றும், கால்நடை வளர்ப்பினைச் சிறப்புத் தொழிலாகக் கொண்ட மக்களிடையே தந்தைவழி மரபுரிமை நிலைப்பட்டது என்றும் அறிஞர் கருதுவர். காலப் போக்கில் சிறப்புத்தொழிற் பண்பு மாறிவிட்ட நிலையிலும், சில இன மக்களிடையே பண்டைய மரபுரிமை முறை மாறாமலிருந்ததையும் அறிகிறோம். தந்தைவழி மரபுரிமைக்குக் குறிப்பிட்ட சமுதாயம் மாறிவிட்ட நிலையிலும், பண்டைய முறையினைக் காட்டும் உறவுப் பெயர்ச்சொற்கள் நிலைபெற்றுவிடுவதுண்டு. தமிழைப் பொருத்தவரை 'மருக' என்று சொல் மரபில் வரும் பின்னோர்களை விளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. மருமகனை அதாவது பெண்வழி வரும் மரபுரிமையைக் குறிக்கும் சொல்லே இதுவாகும். தமிழகத்து ஆளும் மரபுகளில் சேரமான், அதியமான், மலையமான் ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கன. சோழருக்கும், பாண்டியருக்கும் பிற குடிமரபுகளுக்கும் இல்லாத பெயர் வகை இது. சேரர் குடியுரிமையில் தாய்வழி உரிமையே இடம்பெற்றிருந்ததைப் பதிற்றுப்பத்துப் பதிகங்கள் காட்டும். எனவே மேலே குறித்த மூன்று குடிகளும் தாய்வழி வாரிசுரிமையைப் பெற்றிருந்தமையையே இப்பெயர்வகை காட்டுவதாகக் கொள்ள இடமுள்ளது. சேரர் + மகன் = சேரமான் என்றும், மலையர் + மகன் = மலையமான் என்றும், பெயர் பெற்றதைப் போலவே அதியர்மகன், அதியமான் என்று பெயர் பெற்றனர்.[21] சில இடங்களில் அதியன் அல்லது அதிகன் என்ற பெயர் அக்குலத்து உதித்த தனியொருவனையும் குறிக்கிறது. அவ்விடங்களில் எல்லாம் இயற்பெயர் போன்ற தோற்றத்தை அளிப்பினும், அது குலப்பெயரே ஆகும். திரு. மொ.அ.துரையரங்கனார் இதுபற்றிக் கூறுமிடத்து 'அர்' என்ற விகுதி ஏற்காது அதிகன், அதியன் என

20. S. Singaravelu, Social Life of the Tamils - The Classical period, Kualalumpur: University of Malaya, 1966, p. 141 (F.N.).

21. K.N. Sivaraja Pillai, The Chronology of the early Tamils, New Delhi : Asian Educational Services, 1984, Appendix II.

'அன்' விகுதி பெறும் இடங்களில் அது குறிப்பிட்ட ஒரு தலைவனைக் குறிப்பதாகவும், 'அர்' விகுதி பெறுமிடத்துப் பொதுவாகக் குலமரபினைக் குறிப்பதாகவும் கருத்துரைக்கிறார்.[22]

மேலே குறித்தவாறு நெடுமான், கோமான், நெடுந்தேர், கூர்வேல், பல்வேல் ஆகிய சொற்கள் அஞ்சிக்கு அடை மொழியாக வருகின்றன. 'அதியமான் நெடுமான் அஞ்சி' என்ற தொடர் வழக்கு சங்கப்பாடல்கள் எதிலும் இல்லை. ஆனால் கொளு இப்பெயரினைச் சுட்டுகிறது. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள ஜம்பைக் கல்வெட்டில் 'அதியன் நெடுமான் அஞ்சி' என்ற வழக்கு இடம்பெறுகிறது. புறப்பாடல் (91) அதியர் கோமான் அஞ்சி என்கிறது. இவை அனைத்திலிருந்தும் 'அஞ்சி' என்பது இயற்பெயரே என்பது தெளிவாகிறது.

அஞ்சி என்ற சொல்லுக்குப் பொருள்காண விழையின் இன்றைய நிலையில் அது இயலாததாகவே உள்ளது. சங்ககால முதலே 'அஞ்சி' வினையெச்சமாகவே தமிழில் பயின்று வருகிறது. இருப்பினும் பாவாணர் அகரமுதலி அத்தன் – அச்சன் – அஞ்சி என்று இச்சொல் திரிந்திருக்கக் கூடும் என்கிறது.[23] இதனை ஏற்போமாயின், அஞ்சி எனும் சொல் தலைவன் என்ற பொருள் தந்து நிற்கக் காண்கிறோம். ஓர் அறிஞர், அழகுக்கும் இம்மரபினருக்கும் தொடர்புண்டு என்ற கருத்தினை முன்வைத்து அம், எழில் என்ற சொற்களின் அடிப்படையில் எழுந்த அஞ்சி, எழினி எனும் சிறப்புப் பெயர்களை இம்மரபினர் ஏற்றிருந்தனர் என்று கூறுகிறார்.[24]

சதியபுதோ - விளக்கம்

'சதியபுதோ அதியன் நெடுமான் அஞ்சி' என்பது ஜம்பைக் கல்வெட்டுத் தொடர். அசோகன் கல்வெட்டுகளிலும் 'சதியபுதோ' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அச்சொல்லையும், பொருளையும் குறித்த ஆய்வில் பெரிதும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இவற்றைச் சீர்தூக்கி முடிவுக்கு வருதல் அதியர் வரலாற்றிற்கு இன்றியமையாதது.

சிந்து நதிக்கரையில் பெஷாவருக்கருகில் சூடாம் பள்ளத்தாக்கில் உள்ள சபாஸ்கார்கி என்ற இடத்திலும், யமுனை நதிக்கரையில் கியார்தா மற்றும் டெஹ்ரா பள்ளத்தாக்குகளுக்கிடையே உள்ள கால்சி என்ற இடத்திலும், சோமநாதபுரிக்கு வடக்கே கத்யவாரில் சுனாகத்துக்கு அருகில் உள்ள கிர்நார் என்ற இடத்திலும், பெர்ஹாம்பூருக்கு வடக்கே கஞ்சம் மாவட்டத்தில் உள்ள ஜௌகதா என்ற இடத்திலும் ஆக நான்கு

22. M.A. Dorai Rangasamy, p.114
23. ஞா தேவநேயப் பாவாணர் ப 95
24. செ இராசு, தகடூர் நாட்டுக் கருத்தரங்கு, 'அதியரது தகடூர்', தருமபுரி, வெளியிடப்படாத கட்டுரை, 1990 ப 1

இடங்களிலும் பொறிக்கப்பட்டுள்ள. அசோகனின் இரண்டாம் பாறைக் கல்வெட்டு[25] என்று அறிஞர்களால் வழங்கப் பெறும் கல்வெட்டுகளில் தமிழகத்து அரசு மரபுகள் சில குறிக்கப்படுகின்றன. இவையனைத்தும் ஒரே கல்வெட்டின் படிகள் ஆகும்.

இக்கல்வெட்டில் மக்களுக்கும், விலங்குகளுக்கும் பயன்படத்தக்க வகையில் மருத்துவச் சாலைகள் அமைத்தல், மருந்து மரங்களும் செடிகளும் எங்கெங்கெல்லாம் இல்லையோ அங்கெங்கெல்லாம் நட்டு வளர்த்தல் ஆகிய பணிகள் செய்யப்பட வேண்டும் என்பவை அசோகனின் கொள்கைகளாகக் கூறப்பட்டுள்ளன. அவை நிறைவேற்றப்பட வேண்டிய இடங்கள் எவை என்ற வகையில் அசோகனின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் மட்டும் அல்லாமல் அவனது ஆட்சிக்கு அப்பாற்பட்ட சோழர், பாண்டியர், சத்யபுத்ரர், கேரளபுத்ரர் ஆகியோரின் ஆட்சிப்பகுதிகளும் குறிக்கப்படுகின்றன. இறுதியாகக் குறிக்கப்பட்ட ஜௌகதாக் கல்வெட்டில் கேரளபுத்ரர் என்ற பெயர் மட்டும் இல்லை. இக்கல்வெட்டுகள் அனைத்தும் பாலி மொழியில் எழுதப்பட்டவை. சபாஸ்கார்கி கல்வெட்டு வடமேற்கு இந்தியாவில் வழங்கப்பெற்ற பஞ்சாபி வகையிலும், கிர்நார் கல்வெட்டு மத்திய இந்தியாவில் வழங்கப்பெற்ற உஜ்ஜயினி வகையிலும், கால்சி மற்றும் ஜௌகதாக் கல்வெட்டுகள் கிழக்கு இந்தியாவில் வழங்கப்பட்ட மாகதி வகையிலும் எழுதப்பட்டவை. எனவே கல்வெட்டின் வாசகம் ஒன்றாக இருப்பினும் அவ்வப்பகுதிக்கு உரிய சிறிய ஒலி வேறுபாடுகளை இக்கல்வெட்டுகளில் காண்கிறோம்.

கல்வெட்டு வருமாறு

சபாஸ் : யி ..... பாண்டிய சதியபுத்ர கேதலபுத்ர
கால்சி : யதா சோடா பாண்டிய சதியபுதோ கேதலபுதோ
கிர்நார் : யதா சோடா பண்டா சதியபுதோ கேதலபுதோ
ஜௌகதா : அதி சோடா பாண்டிய சதியபுத

மேற்குறித்த சபாஸ்கார்கி கல்வெட்டின் மொழி ஆரினோ – பாலி ஆகும். இது சமஸ்கிருத மொழியொலிப்புக்கு மிக நெருங்கிய தன்மையுடையது. பிற கல்வெட்டு மொழிகள் இந்தோ – பாலி மொழிவகையைச் சார்ந்தவை. எனவே இந்தச் சிறுவேறுபாடும் இக்கல்வெட்டுத் தொடர்களில் இடம்பெறக் காண்கிறோம்.

இக்கல்வெட்டு குறிக்கும் தென்னகத்துக் குலமரபுகளைப் பற்றிக் குறிக்குமிடத்து, திரு. ஹூல்ஷ் அவர்களும், திரு. வில்சன் அவர்களும் எல்லைப் பகுதிகள் (Those who are his borderers) என்றும், நம்பிக்கைக்குரியவர்கள் வாழும் பகுதி எனத் திரு. பிரின்செப் அவர்களும் (the parts occupied by the faithful) மொழி பெயர்க்

25 A.K. Narain (ed). Corpus Inscriptionum Indicrum, Vol I. Varanası: Indological Book House, 1961. p.66.

கின்றனர்.[26] எப்படி எடுத்துக் கொண்டாலும் அசோகரின் ஆட்சிக்குட்படாதவர்கள் என்ற கருத்து வேற்றுமையின்றிப் பெறப்படுகின்றது.

சோழர், பாண்டியர், சத்யபுத்திரர், கேரளபுத்திரர் என்ற வரிசையில் இவ்வரச மரபுகளைக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவர்களில், சோழர், பாண்டியர், கேரளபுத்ரர் ஆகியோர் யார் என்பது தெளிவாகிவிட, சத்யபுத்ரர் என்ற பெயர் மட்டும் பெரிதும் ஆய்வுக்குரிய ஒன்றாகி விட்டது. சத்யபுத்ரர் யார் என்பது குறித்துப் பல்வேறு கருத்துகள் பல்வேறு அறிஞர்களால் முன் வைக்கப்பட்டுள்ளன.

திரு.ஆர்.ஜி. பந்தார்கர் அவர்கள் கிழக்குக் கணவாய்களுக்கும், கொண்கானக் கடற்கறைக்கும் இடையே வாழும் 'சத்புத்ர' என்ற மரபினரை இது குறிப்பதாகலாம் என்று கருத்துத் தெரிவித்தார்.[27] துளுநாட்டுப் பகுதியிலோ அல்லது சத்தியமங்கலத்தைச் சுற்றியோ உள்ள பகுதியே இது என்று திரு. வி. ஸ்மித் அவர்கள் கருதினார்.[28] கொச்சிக்கு வடக்கேயுள்ள பகுதியே சத்யபுத்ரரின் பகுதி என்று திரு.எஸ். கே. ஐயங்கார் தென்னிந்திய வரலாற்றுத் தொடக்கம் என்ற நூலில் குறிப்பிட்டார்.[29] மலையாள இலக்கியமான கேரளோர்ப் பத்தி குறிப்பிடும் சத்தியபூமியே சத்ய புத்திரரின் நாடு என்பது திரு.இ.ஜெ. தாமஸ் அவர்களின் கருத்து.[30] கோசர் என்ற இனத்தவர் வாழும் பகுதியே இந்த சத்தியபூமி ஆகும் என்றும், இது கொங்குநாட்டில் உள்ளது என்னும் ஒரு கருத்து கூறப்பட்டது. திரு. ஆர். சத்தியநாதய்யர் அவர்கள் பாண்டியருக்கும் சேரநாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியாக இதனைக் கொண்டு, கொங்கு தேசமே இங்குக் குறிக்கப்படும் பகுதி என்று வரையறுத்துக் கூறுகிறார்.[31] காஞ்சிப்பகுதியே அது என்பது திரு.எஸ்.வி. வெங்கடேஸ்வரர் அவர்களின் கருத்து.[32] கி.பி.2–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று ஏற்றுக்கொள்ளப்படும் பதஞ்சலி, சேர, சோழ, பாண்டியருடன் காஞ்சிபுரத்தையும் கூறுவதை இவர் தம் கருத்துக்கு அரணாகக் காட்டுகிறார். மேலும் பிற்காலச் செப்பேடுகளில் 'சத்யவரதக்ஷேத்திரம்' என்று காஞ்சிபுரம் வழங்கப்படுகிறது என்னும் கூறித் தம் கருத்தை வலியுறுத்துகிறார்.

---

26. A.K. Narain.p.165
27. Indian Archaeology - A Review. 1909. p.139.
28. Vincent.A. Smith. Asoka. p.161.
29. Beginnings of South Indian History. pp.87-90.
30 J.R.A.S. 1923. pp. 411-14.
31. *Studies in the Ancient History of Tondaimandalam.* Madras. Prof. R. Sathianatha Iyer. Commemoration Committee, 1986. pp.4-8.
32. I.A. 1919. p.24.

சங்கப் பாடல்களில் குறிப்பிடப்படும் கோசர்களே சத்யபுத்ரர் என்றும், அவர்கள் ஒன்றுமொழிக் கோசர் என்று குறிப்பிடப்படுவதால் அவர்கள் வாய்மைப்புகழ் அசோகன் ஆட்சிப்பகுதி வரை பரவியதாக இருந்தமையின் அவர்களையே சத்யபுத்ரர் என்ற சொல்லால் அசோகன் குறித்தான் என்பதும் அறிஞர் ஒருவர் தம் கருத்து.[33] சிலப்பதிகாரம் குறிக்கும் கொங்குநாடும், கோசநாடும் துளுநாடே ஆகும்; தொல்காப்பியருக்குப் பின்னும் அசோகருக்கு முன்னும் இப்பகுதி தனியாட்சி உடையதாகிச் சிலப்பதிகாரக் காலமான கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதும் அவர் கருத்து. பலரும் இவ்வாறு கருதியிருக்க, மொழியடிப்படையில் முதலில் சேஷ ஐயரும். பின்னர் திரு. பர்ரோ அவர்களும் இது அதியமானையே குறிக்கும் என்றும். 'அதிய' என்ற சொல்லின் தொல் திராவிடவடிவமே சதிய என்பதாகும் என்றும் கருத்துரைத்துள்ளனர்.[34]

மேற்குறித்த ஒவ்வொரு கருத்தினையும் நுணுகி ஆராய்ந்து, வன்மை மென்மைகளை உணர்ந்து முடிவுக்கு வருவதன் மூலம் – அதியரின் வரலாற்றுப் பெயருண்மையில் ஒரு முடிவினைப் பெறுதல் வேண்டும்.

இவ்வாய்வுகளை இரண்டு வகையாகப் பகுத்துக் கொள்ளலாம்.

1. சத்யபுத்திரர் என்று குறிக்கப்படும் மரபுப்பெயர் பற்றியது.

2. அவர்களால் ஆட்சி செய்யப்பட்டதாகக் குறிக்கப்படும் பகுதி பற்றியது.

இவ்வாராய்ச்சி மேற்கொண்டோரில் பெரும்பாலானோர் 'சத்ய' என்ற சொல்லை நிலப்பகுதிக்கோ அல்லது குலத்திற்கோ அடைமொழியாக்கியுள்ளனர். நிலப்பகுதியாகக் கொண்ட இடத்து சத்ய விரதக்ஷேத்திரமான காஞ்சி என்று கூறுவதன் மூலம் தொண்டை மண்டலம் என்றும், சத்தியமங்கலப் பகுதி என்று கூறுவதன் மூலம் கோவை மாவட்டப் பகுதி என்றும், கேரளோர்ப்பத்தி கூறும் சத்தியபூமி என்று கூறுவதன் மூலம் கேரளநாட்டுப் பகுதி என்றும், வேறு சிலர் இப்பொருட்பெயரைக் குறிக்காது துளுநாடு என்றும், கொங்கு நாடு என்றும், கொச்சிக்கு வடக்கு என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

குலப் பெயராகக் கொண்டபோது, கிழக்குக் கடற்கரைக்கும், கொண்கானக் கடற்கரைக்கும் இடையே வாழும் சத்யபுத்ரரும், 'ஒன்றுமொழிக் கோசர்' அல்லது 'வாய்மொழிக் கோசர்' என்று சங்கப்பாடல்களால் அறியப்பட்ட கோசரும் ஆக இருவரும்

33. T.N. Vasudeva Rao. Buddhism in Tamil Country. Annamalai Nagar: Annamalai University, 1979. p.20.

34. T. Burrow. collected papers on Dravidian Linguistics, Annamalai Nagar: Annamalai University, 1968. p.158-159.

சத்யபுத்ரராக இருக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இவைகளைப் பின்வருமாறு ஆராய்ந்து முடிவு செய்யலாம்

1. 'சத்யவிரதக்ஷேத்திரம்' என்ற பெயர் வழக்கு கி.பி.இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னரே வந்துள்ளமையின் அதனைத் தவிர்க்கலாம்.

2. சத்தியமங்கலம் என்ற பெயர் வழக்கிற்கும் இது பொருந்தும்.

3. கேரளோர்ப்பத்தி மிகமிகப் பிற்கால நூல். அதனையும் ஆதாரமாக்குதல் ஏற்புடையதல்ல.

இறுதியாகத் துளுநாடென்றும், கொங்கு நாடென்றும் கூறியோர் பொதுவான அன்றைய அரசியற்பகுதிகளை ஆராய்ந்து, சேர, சோழ, பாண்டியப் பகுதிகளை விடுத்து எஞ்சியுள்ளது கொங்கு நாட்டுப் பகுதியே என்ற முடிவுக்கும், அக்காலத்தே துளுநாடும் தமிழகத்தின் ஒருபகுதியாகக் கருதப்பட்டமையால் துளுநாட்டுப் பகுதியே என்ற முடிவுக்கும் வந்துள்ளனர்.

இவ்விருநாட்டுப் பகுதிகளிலும் அரசோச்சியவர்கள் யாரென அறிவது மிக இன்றியமையாதது. கொண்கான நாடே துளுநாடு என்றும், இந்நாட்டின் தலைவன் நன்னன் என்றும் அவன் கொண்கானங் கிழான் என்று சுட்டப்பெற்றான் என்றும் அறிகிறோம். யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் இயன்ற அளவு எடுத்துக் கொள்ளுதற்குரிய காட்டுப்பகுதியாக அது விளங்கியது. அதில் கோசர் பெற்ற வெற்றியும் குறிப்பிடப்பெறுகின்றது. இந்நிலையில் அது சத்யபுத்திரர்களுக்குரிய பகுதியாக இருக்க வேண்டும் என்ற கருத்து ஐயத்திற்கிடமாகின்றது. மாறாக, 'சத்யபுத்ர' என்று அசோகன் கல்வெட்டில் குறிக்கப்படும் சொல் குலமரபையே குறித்து வந்துள்ளது. இதனை அச்சொல்லோடு இணைந்து வரும் பிற குலமரபுப் பெயர்களைக் கொண்டு தெளியலாம். எவருக்கும் உரிய நாட்டுப்பகுதியினை உணர்த்தும் சொல் ஏதும் கல்வெட்டில் இடம் பெறவில்லை. ஆனால் அசோகனின் ஆட்சிக்குட்படாத ஆட்சியாளர்களின் பகுதி என்ற குறிப்பு உள்ளது. இந்நிலையில் அசோகனின் ஆட்சிப்பரப்பு எதுவரை இருந்தது என்ற வினாவிற்கு விடை காண்பது தெளிவுக்கு வழிவகுக்கும்.

அசோகனின் கல்வெட்டுகளுள் தென்கோடி எல்லையில் அமைந்தது ஆந்திரநாட்டுப் பிரம்மகிரியில் உள்ள கல்வெட்டே ஆகும். இதற்குத் தெற்கில் அவனது கல்வெட்டுகளாக எவையும் கிடைக்கவில்லை. பௌத்த சமயக்கோட்பாடுகளின்படி அறப்பணிகள் பலவும் தன்னாட்சிக்குட்பட்டபகுதி வேற்று நாட்டுப்பகுதி என்ற வேறுபாடு இன்றிச் செயற்படுத்தப்படவேண்டும் என்ற பெருநோக்கு இக்கல்வெட்டில் எதிரொலிக்கக் காண்கிறோம். தமிழகத்தை வெற்றி கொண்டதாக அசோகன் எங்கும் கூறவில்லை. மௌரியர் படையெடுப்பு பற்றிச் சில பாடல்கள் சங்கத் தொகுப்பினுள்

இருப்பினும், எதிலும் அவன் தமிழகத்தை வெற்றிகொண்ட குறிப்பு இல்லை. வடக்கிலுள்ள மலைகளினூடே வழியமைத்துத் தமிழகத்திற்குள் வர அவர்கள் முயற்சி செய்தமையை இப்பாடல்கள் வலியுறுத்துகின்றன.

தமிழகத்தின் வடவெல்லையில் இருந்த மன்னன் ஆந்திரப் பகுதியில் உள்ள வேங்கடத்துப் புல்லியாவான். அவனது வேங்கடத்தினைத் தொடர்ந்து வடக்கில் நெடுந்தொலைவு பெருங்காடு இருந்தது. ஆனால் தமிழகத்தின் வடமேற்கில் அன்றிருந்த ஆளும் குலம் அதியர்குலமே ஆகும். சங்கப் பாடல்களும், மோரியர் காட்டினைக் கடந்து வந்ததாகக் கூறவில்லை. மாறாக மலைகளைக் கடந்து அறைவாய்களில் வழியமைத்தனர் என்று கூறுகிறது. எனவே தலைவாயிலில் இருந்த குலம் அதியர்குலமே ஆகும். எனவேதான் அசோகனின் கல்வெட்டில் அதியமான் என்ற சொல்லின் பிராகிருத மற்றும் சமஸ்கிருத மொழிபெயர்ப்பான சதியபுதோ, சத்யபுத்ர என்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன.

முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளில் சத்யபுத்ரர் என்ற சமஸ்கிருத வடிவத்திற்கே பெரிதும் சிறப்புத் தரப்பட்டது. எனவே 'உண்மை' என்று பொருள் கொள்ளப்பட்டு, அப்பொருள் குறித்த சொற்களுடன் கூடிய நகரங்கள், நாட்டுப்பகுதிகள் அல்லது இனங்கள் (வாய்மொழிக் கோசர் போல) ஆகியவற்றுடன் இணைத்து இவ்வாய்வுகள் பெரிதும் நடைபெற்றன. ஆனால் உண்மை அதுவல்ல. இக்கல்வெட்டில் உள்ளது 'சதியபுத' என்ற பிராகிருத வடிவமும், 'சத்யபுத்ர' என்ற சமஸ்கிருத வடிவமுமே ஆகும். முந்தைய ஆய்வுகள் பிராகிருதச் சொல்லினை அடிப்படையாகக் கொண்டெழுந்திருக்கு மானால் இவ்வளவு குழப்பங்களும் நேர்ந்திருக்காது. 'சதியபுத' என்ற பிராகிருத வடிவம் அதியமான் என்பதன் மொழிபெயர்ப்பே ஆகும். திரு. பர்ரோ அவர்கள்.

"The Identification of Atiyaman with Satiyaputo is proposed by K.G. Sesha Iyer and is evidently correct, though his opinion that the-s-of Satiyaputo is a secondary development is naturally the reverse of the truth Atiya (<Satiya - Catiya) must of course be a native name and cannot be connected with skt.satya - True."[35] என்று கூறுகிறார். தொல்திராவிட வடிவமான 'சதிய' என்பதே பிராகிருதத்திற்கும் அடிப்படையாக இருந்திருத்தல் வேண்டும்.

தென்னார்க்காடு மாவட்டத்து ஜம்பையில் உள்ள கல்வெட்டில், 'சதியபுதோ அதியன் நெடுமான் அஞ்சி ஈத்த பாளிய்' என்றுளது. பொதுவாகச் சமண முனிவர்கள் வடக்கிலிருந்து தென்னகம் வந்து குடியேறியவர்கள். மௌரிய மன்னன் சந்திரகுப்தன் சமணத்தைத் தெற்கில் பரவ வழியேற்படுத்தியவன் என்ற வரலாறு உண்டு. இந்நிலையில் தாம்பெற்ற கொடையினைப் பொறித்து வைத்துக்

35. T. Burrow, p.158-59.

கொண்ட முனிவர்கள் தமக்கு ஏற்கனவே அறிமுகமான சதியபுதோ என்றபெயரை இக்கல்வெட்டிலும் பொறித்துள்ளனர். எனவே அசோகன் கல்வெட்டில் இடம்பெறும் 'சதியபுதோ' என்ற பெயர் தமிழகக் குலமரபினராகிய அதியமான்களையே குறித்தது என்பதில் இனியும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

அதியர் எத்தனை பேர் ?

பண்டைத் தமிழரசர்களின் கால அடைவு பற்றி ஆய்வு மேற்கொண்டெழுதிய திரு.கே.என். சிவராஜபிள்ளை அவர்கள், சங்க இலக்கியப் பாடல்களின் பாட்டுடைத்தலைவர்களையும், அவர்களைப் பாடினோரைப் பற்றிய குறிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு, பாடல்பெற்றோரைப் பத்துத் தலைமுறையினராக வகைப்படுத்தி, ஒவ்வொரு தலைமுறைக்கும் காலத்தையும் கணிக்கிறார்.

அவரது ஆய்வில் இரண்டாம் தலை முறையில் (கி.மு 25 முதல் கி.பி 1 வரை) மிஞிலியுடன் போரிட்டு இறந்த அதிகனும் (அகம்:142), மத்தியால் வெல்லப்பட்ட எழினியும் (அகம்:211) இடம் பெறுகின்றனர். நான்காம் தலைமுறையில் (கி.பி 25 முதல் கி.பி 50 வரை), குதிரைமலைத் தலைவனான அஞ்சியும் (அகம்:372), ஐந்தாம் தலைமுறையில் (கி.பி.50 முதல் கி.பி 75 வரை) தகடூர்ப் போரில் இறந்த அதியமான் எழினியும் (புறம்:230), ஏழாம் தலைமுறையில் (கி.பி 100 முதல் 125 வரை) தலையாலங்கானப் போரில் பங்கேற்ற எழினியும் (அகம்:36), ஒன்பதாந் தலைமுறையில் (கி.பி 150 முதல் 175 வரை) ஔவைக்கு நெல்லிக் கனி ஈந்த அதியமான் நெடுமான் அஞ்சியும் (புறம் 91,92), பத்தாம் தலைமுறையில் (கி.பி 175 முதல் கி.பி 200 வரை) அதியமான் பொகுட்டு எழினியும் இடம் பெறுகின்றனர். இதன்படி ஓர் அதிகனும், இரண்டு அஞ்சியும், நான்கு எழினியும் ஆக எழுவர் இக்குலமரபினராக வகைப்படுத்தப் பட்டுள்ளனர்.[36]

தமிழ்நாட்டு வரலாற்றில் குறுநில மன்னர்களைப் பற்றி எழுதிய திரு.க.த. திருநாவுக்கரசு அவர்கள் சங்கப் பாடல்களின் பாட்டுடைத் தலைவர்களின் காலத்தை இருவகையாகப் பாகுபடுத்துகிறார். முதலில் பெரிப்புளூஸ் சுட்டுகிற காவிரிப் பூம்பட்டினத்துத் தலைவனான கரிகாலனின் காலத்தை அந்நூற்காலமான கி.பி. 72 என்று ஏற்றுக் கொண்டு, அவனுக்கு முன்னும் பின்னும் ஐந்து தலைமுறைகளில் சில பாட்டுடைத் தலைவர்களைப் பாகுபடுத்துகிறார். ஏனையோரைப் பாடிய புலவர்களின் வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு மேலும் ஐந்து தலைமுறையினராக வகைப்படுத்துகிறார். இவ்வாறு இரு தொகுதிகளாகப் பிரிக்கும்போது முதல் தொகுதியின் மூன்றாம் தலைமுறையில், பரணரால் பாடப்பெற்ற அதிகனும் (அதியர் I), நான்காம் தலைமுறையில் காப்பியாற்றுக் காப்பியனாரால் பாடப்பெற்ற நெடுமிடலும் இடம் பெறுகின்றனர். அடுத்த தொகுதியில் ஔவையார்,

36. K.N. Sivaraja Pillai, p. 185.

அரிசில்கிழார் ஆகியோரால் பாடப்பெற்ற அதிகனும் (அதியன் II), இவர்கள் காலத்திலேயே வாழ்ந்த எழினி ஆன மற்றொரு அதிகனும் (அதியன் III) ஆக அதியர் மூவரும், நெடுமிடல் ஒருவரும் ஆக நால்வர் இருந்தனர் என்கிறார்.[37] ஆக இரண்டு அதியமான்கள் ஒருநெடுமிடல், ஒரு எழினி என்று நால்வர் கி.பி 56 முதல் கி.பி 159 வரை வாழ்ந்தனர் என்று காலத்தைக் கணிக்கின்றார். இவரது கருத்துப்படி இந்நால்வரும் தொடர்ந்து வாழ்ந்த குலமுறையினர் ஆகின்றனர்.

கொங்கு நாட்டு வரலாறு எழுதிய திரு மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், நெடுமிடல் அஞ்சி, அதியமான் நெடுமானஞ்சி, அதியமான் பொகுட்டெழினி என்ற மூவரை இக்குலத்தைச் சேர்ந்தவர்களாகக் குறிக்கிறார்.[38] அகநானூற்றின் வரலாற்றுக் கூறுகளை ஆராய்ந்த திரு சி.இ. இராமச்சந்திரன் அவர்கள், பசும்பூட்பாண்டியன் சார்பில் போரிட்ட அதியனும், பெருஞ்சேரல் இரும்பொறையால் வெல்லப்பட்ட அதியனும் ஒருவரே என்று கொண்டுள்ளார். ஆனால் எழினி ஐவர் என்கிறார். அவர்கள் வருமாறு. ஔவையாரால் பாடப்பெற்ற எழினி ஒருவன் (புறம் : 392); தலையாலங்கானப் போரில் பங்கேற்ற எழினி ஒருவன் (அகம் : 36); மத்தியால் வெல்லப்பட்ட எழினி ஒருவன் (அகம் : 211); ஆதன் எழினி என்னும் செல்லூர்க் கோமான் ஒருவன் (அகம் : 216); முதுகுன்றக் காவலன் ஆன கண்ணன் எழினி ஒருவன் (அகம் : 197);[39] இவ்விரு ஆய்வாளர்களும் அதியரது காலம் பற்றி ஏதும் கூறவில்லை. (அட்டவணை II).

மேற்குறித்த ஆய்வுகளை ஊன்றி நோக்கும் போது, முதலாம் அதிகன் மற்றும் நெடுமிடலை இருவராகவும், ஒருவராகவும் கொண்ட கருத்தில் வேறுபாடு உள்ளது. தலையாலங்கானத்தில் இறந்தவன் அதியமான் நெடுமானஞ்சியா அல்லது எழினியா என்பதிலும் ஐயம் ஏற்படுகின்றது. அதியமான் நெடுமானஞ்சியினையும், பொகுட்டெழினியையும் முன்னவராகவும், பின்னவராகவும் கொள்வதில் அனைவருமே ஒன்றுபடுகின்றனர்.

இவ்வாறு பலரும் பலவிதமாகக் கூறியிருப்பினும் அடிப்படைச் சான்றுகளை மறுஆய்வு செய்த நிலையில் மூன்று அதியர் மரபின் தலைவர்களை மட்டும் தெளிவாக அடையாளம் காணமுடிகிறது. பசும் பூண் பாண்டியனுக்கு வினைவல்லோனாக வரும் அதிகன் ஒருவன்.

---

37 க.த. திருநாவுக்கரசு, 'குறுநில மன்னர்கள்', தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம் அரசியல், சென்னை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983, பக். 506–509

38. மயிலை சீனி வேங்கடசாமி, கொங்கு நாட்டு வரலாறு, சென்னை நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 1974 ப.51.

39. C.E. Ramachandran, Ahananuru in its Historical Settings, Madras : University of Madras, 1974. pp 43-45.

அட்டவணை -2

அதியர் காலம் - பல்வேறு அறிஞர் கருத்து

வகைப்படுத்தியோர்	அதியர் மரபுத் தலைவர்கள்	காலம்
1. கே.என். சிவராஜபிள்ளை	1. மிஞிலியால் கொல்லப்பட்ட அதியன் I 2. மத்தியால் வெல்லப்பட்ட எழினி I	கி.மு. 25 முதல் கி.பி. 1 வரை
	3. குதிரைமலைத் தலைவன் அஞ்சி I	கி.பி. 25 முதல் கி.பி. 50 வரை
	4. தகடூர்ப் போரில் இறந்த எழினி II	கி.பி. 50 முதல் கி.பி. 75 வரை
	5. தலையாலங்கானப் போரில் பங்கேற்ற எழினி III	கி.பி. 100 முதல் கி.பி. 125 வரை
	6. அதியமான் நெடுமான் அஞ்சி II	கி.பி. 150 முதல் கி.பி. 175 வரை
	7. பொகுட்டெழினி எழினி IV	கி.பி. 175 முதல் கி.பி. 200 வரை
2. மயிலை சீனி. வேங்கடசாமி	1. நெடுமிடல் அஞ்சி	
	2. அதியமான் நெடுமான் அஞ்சி	
	3. அதியமான் பொகுட்டெழினி	
3. சி.இ. இராமச்சந்திரன்	1. அதியன்	
	2. ஔவையால் பாடல்பெற்ற எழினி I	
	3. தலையாலங்கானப் போரில் பங்கேற்ற எழினி II	
	4. மத்தியிடம் தோற்ற எழினி III	
	5. செல்லூர்க் கோமான் எழினி IV	
	6. முதுகுன்றக் காவலன் எழினி V	
4. க.த. திருநாவுக்கரசு	1. பரணரால் பாடப்பெற்ற அதியன் I	கி.பி.56 முதல் கி.பி. 80 வரை
	2. நெடுமிடல்	கி.பி. 81 முதல் கி.பி. 105 வரை
	3. அதியமான் நெடுமான் அஞ்சி அதியன் II 4. பொகுட்டெழினி அதியன் III	கி.பி.105 முதல் கி.பி. 159 வரை

அவன் பாண்டிய மன்னனுடன் இரு பாடல்களிலும் இணைத்துப் பேசப்பெறுகின்றான். பசும்பூண் பாண்டியனின் கொடி, வேங்கை மரங்கள் நிறைந்த தன் மலையின் மீது அசைய வீற்றிருந்த அதிகன் என்றும் (அகம் : 162); வாகைப் பறந்தலையில் பசும்பூண் பாண்டியனுக்காகப் போரிட்டுக் களிறோடு அவன் இறந்தான் என்றும், அப்போது கொங்கர் ஆரவாரம் செய்தனர் என்றும் (குறுந் : 393) கூறப்படுகிறான், இவனே முதலாமவன் ஆக இருத்தல் வேண்டும்.

இரண்டாமவன், ஔவையாரின் அன்புக்கு உகந்தவனாக விளங்கியவன்; அவருக்கு நெல்லிக்கனி ஈந்தவன்; அவரைத் தொண்டைமானிடம் தூது அனுப்பியவன்; மலையமான் திருமுடிக்காரியின் கோவலூரைத் தாக்கித் துகளாக்கியவன்; இளவயதிலேயே அரசுக்கட்டில் ஏறியவன் என்று ஊகிக்க முடிகிறது. எழுவரொடு முரணி வெற்றி கொண்டவன். இவனே அதியமான் நெடுமான் அஞ்சியெனப் புகழப்படுபவன்.

மூன்றாமவன் பொகுட்டெழினி. ஔவையாரே இவனை 'என்ஐ இளையோன்' என்று குறிப்பிடுகிறார். இதற்கு இளையவன் – அதாவது தம்பி என்று பொருள் கொள்ளலாம். எனினும், அப்பாடலின் கொளு மூலம் அவன் மகனே என்று அறிகிறோம். இவன் தந்தை இவன் பிறந்த போது பசும் புண்ணோடும், சிவந்த கண்ணோடும் வந்து கண்டான் என்று கூறுகிறது ஒரு பாடல் (புறம் : 100). ஆலங்கானத்துப் போரில் தோற்றவர்களில் எழினியும் ஒருவனெனத் தெரிகிறது. எனினும் அவ்வெழினியும், இங்குக் கூறப்பெறும் பொகுட்டெழினியும் ஒருவரா என்றறியச் சான்று இல்லை.

மேற்கண்டவாறு கிடைத்துள்ள வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டு ஆய்வுசெய்யும் போது, அதியர் குடியில் தலைமை நிலையில் மூவர் இருந்திருக்கின்றனர் என்று அறுதியிட்டுக் கூறமுடிகின்றது. இருப்பினும் அஞ்சி, எழினி என்ற பெயரினைச் சுட்டும் பலபாடல்கள் இம்மூவருள் எந்த அதியனைக் குறிக்கின்றன என்று வரையறுத்துக் கூறவியலாத நிலையில் உள்ளன. பெரும்பாலும் அவை அவனுக்கு மேலேயுள்ள ஒரு தலைவனுக்காகவோ, தானே குழுத்தலைவனாக நின்று போரில் ஈடுபட்டு வீரம் காட்டிய நிலையினையோ குறிக்கின்றன. பின்வரும்,

> 'அதியர் கோமான் கொடும்பூண் எழினி ....
> கோண்முறை விருந்திறை நல்கியோன்' (புறம் : 392)

> ''பல்வேல் எழினி
> கெடலருந் துப்பின் விடுதொழின் முடிமார்
> .... வேற்றினந் தரூஉம்'' (அகம் : 105)

"கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ் சேணாட்டிற் தலைத்தார் பட்ட
கல்லா எழினி" (அகம் : 211)

ஆகிய பாடல்கள், தலைவன் ஒருவனுக்காகப் பூசல் விளைத்த நிலையில் அதியரைக் காட்டுகின்றன.

தானே தலைவனாக நின்று போரிட்ட நிலையினைப் பின்வரும் பாடல்களில் காண்கிறோம்.

"விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்
வையகம் புகழ்ந்த வயங்குவிளை யொன்வாட்
பொய்யா எழினி" (புறம் : 230)

"நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி
கடுமுனை அலைத்த கொடுவில் ஆடவர்
ஆடுகொள் பூசல்" (அகம் : 372)

"கடும்பரிப் புரவி நெடுந்தேரஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரு பனுவல்" (அகம் : 352)

"கடும்பகட்டு யானை நெடுந்தேரஞ்சி
கொன்முனை இரவூர்" (குறுந் : 91)

எனவே சில இடங்களில் தானே குடியின் காவலனாகவும், சில இடங்களில் பெருங்குடித் (குழு) தலைவர்களான வேந்தர்க்கு ஆதரவாக ஆநிரை கோடல், மீட்டல் ஆகிய வெட்சி, கரந்தைப் போர் வீரர்களாகவும் இக்குலத்தோன்றல்கள் சுட்டப் பெறுகின்றனர். இத்தகைய குறிப்புகளிலிருந்து இவர்கள் எல்லாம் அக்குடியில் பிறந்த தொடக்ககால 'குடித்தலைவர்கள்' என்ற முடிவுக்கு வருதல் பொருத்தமானதாக அமையும்.

மேற்குறித்த வகையில் விளக்கம் பெற்றவர்களில் முதலாமவனாகக் குறிக்கப்படும் அதியமானே, நெடுமிடலாக இருத்தல் வேண்டும். பசும்பூண் பாண்டியனின் பகைவர் நெடுமிடலைச் சாய்த்தனர் என்ற வரலாற்றுக் குறிப்பு இம்முடிவுக்கு அரண் சேர்க்கிறது. இவனையே களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் வெற்றி கொண்டிருக்கிறான் என்பதைப் பதிற்றுப்பத்து (32) வலியுறுத்துகின்றது. இந்த நெடுமிடலைப் பரணர் பாடியுள்ளார் (அகம் : 266).

அதிகமான்களின் காலம்

கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை சங்ககாலப் பகுதியென்று பொதுவாக அறிஞருலகம் கருதுகின்றது.[40] எனினும் கலாநிதி கைலாசபதி அவர்கள் சங்கப்

40. K.A. Nilakanta Sastri, 'The Colas', Reprint, Madras : University of Madras, 1984, p.30.


பாடல்கள் தோன்றிய காலத்தின் மேலெல்லை அதினினும் அதிகமாக இருக்கலாம் என்று கருதுகிறார்.[41]

அதியமான் நெடுமானஞ்சியைப் பாடும் ஔவையார் 'தொன்னிலை மரபின் நின் முன்னோர் போல' (புறம்:99) என்கிறார். இதன்படி முன்னோர் பலர் இருந்தனர் என்பது வெளிப்படை.

அசோகனின் கல்வெட்டு சதியபுத்ரரைக் குறிக்கிறது. எனவே அக்கல்வெட்டின் காலமான கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே நிலைபெற்ற ஆளும் குடியாக அதியர் குடி ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்பது தெளிவு. 'புத்ர' என்பதற்கு இங்கு மகன் என்ற உறவுப் பொருள் கொள்ளப்படுகிறது. மகன் என்ற சொல்லிற்குத் தலைவன், குடிப்பெருமகன் என்ற பொருளே முதலில் இருந்தது. குலமரபுச் சமுதாயத்தில் வாரிசு நிலைநிறுத்தப்பட்ட பின்னரே இச்சொல்லுக்குத் தந்தை–மகன் என்ற உறவுப் பொருள் வந்திருத்தல் வேண்டும்.[42] எனவே அசோகன் கல்வெட்டுக் காலமான கி.மு. மூன்றாம் நூற்றாண்டு, தமிழகத்துக் குலமரபுச் சமுதாயத்தில் வாரிசுரிமை வேரூன்றிவிட்ட காலமே ஆகும். இவ்வடிப்படையில் காணும்போது, அசோகனுக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே இவ்வதியர்குடி நிலைத்திருந்த தன்மை உறுதிப்படுகின்றது.

சங்க இலக்கியங்களை மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்குக் கூட, சேர, சோழ, பாண்டியரான அரசமரபுகளைத் தவிர, ஓவியர், ஆவியர், எயினர், கள்வர், கோசர், திரையர், தொண்டையர், பரதவர், வாணர் எனப்பல குடிகள் இருந்தனவென்பது தெரியவரும். இவர்களுக்குள்ளும் 'வேளிர்' என்ற தொகுதிப்பெயர் கொண்டோர், மன்னர்க்கு அடுத்த அரசியல் தகுதி (Political Status) பெற்றவராய் விளங்கினர். இவ்வகையில் அதியரும் அமைகின்றனர். பெருந்தலைமை என்பதே வேந்தரும் வேளிரும் வந்து பணியும் நிலைதான். ஆலங்கானத்து அமரில் வெற்றி கொள்ளப்பட்டோரில் (எழினியும்) அதியர் குடியும் ஒன்று. எனவே தமிழகத்தின் தொல்குடிகளுள் ஒன்றான அதியர்குடி உறுதியாகக் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரே ஆளும் குடியாகிவிட்டது என்பது தெளிவு.

இந்தப் பின்னணியில் மேலே குறிப்பிட்ட மூன்று அதியர் குலத்துத் தலைவர்களுக்கும் காலத்தினைக் கணிக்க இலக்கியங்கள் மட்டும் இன்றி இருகல்வெட்டுகளும் துணைபுரிகின்றன. ஒன்று தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள ஜம்பைக் கல்வெட்டு.



'ஸதியபுதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பாளிய்' - ஜம்பைக் கல்வெட்டு

41. K. Kailasapathy, intro.
42. K.N. Sivarajapillai, p. 229.

எழுத்தமைதியின் அடிப்படையில் இது கி.பி. முதல் நூற்றாண்டுக்கு உரியது எனத் திரு. நாகசாமி கருதுகிறார்.[43] இக்கல்வெட்டில் 'அதியமான்', 'நெடுமான்' ஆகிய இரு சொற்களிலும் வரும் எழுத்துகள் தந்நகரம் ஆகும். இவ்வாறு றன்னகரம் வருமிடங்களில் தந்நகரத்தினை எழுதும் பழமைத் தன்மையது என்ற திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களின் கருத்தை எடுத்துக்கூறி, அதனால் இக்கல்வெட்டும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டினைச் சார்ந்தது ஆதல் வேண்டும் என்கிறார் புலவர். இராசு அவர்கள்.[44]

மேலும், திருச்சி மாவட்டத்துப் புகளூரில் கிடைத்த ஒரு கல்வெட்டு, கோஆதன் செல்லிரும் பொறையைக் குறிக்கிறது. இவன் மகன், பெயரன் ஆகியோரையும் குறிப்பிடும் இக்கல்வெட்டு இவன் பெயரன் இளங்கடுங்கோவின் காலத்தது. இதில் குறிக்கப்படும் இரும்பொறை, தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையாக இருத்தல் வேண்டும் என அறிஞர் கருதுகின்றனர்.இந்நிலையில் தகடூர்ப் போரில் பொருது வீழ்ந்த எழினியின் காலமும் இக்கல்வெட்டு சுட்டும் செல்லிரும்பொறை காலமும் ஒன்றாகிறது. இக்கல்வெட்டினையும் எழுத்தமைதியின் அடிப்படையில் கி.பி.முதல் நூற்றாண்டைச் சார்ந்ததாகவே கருதுவர்.[45]அவ்வாறாயின் இருதலைமுறைகளுக்கு முற்பட்ட செல்லிரும் பொறையின் காலத்தினை மேலும் சுமார் 50 ஆண்டுகளேனும் முன்னரெனக் கொள்ளுதல் வேண்டும். எனவே கிருத்துவ அப்தத்தின் தொடக்க காலத்தில், அதியமான் நெடுமான் அஞ்சியும், அவன் மகன் பொகுட்டெழினியும் வாழ்ந்தவர்கள் ஆதல் வேண்டும்.

ஜம்பைக் கல்வெட்டில் வரும் 'சதியபுதோ' என்ற சொல்லை நோக்கி, இத்தகைய வடசொற் கலப்பினைக் கொண்ட இக்கல்வெட்டு, பழமையுடையதாக இருத்தல் இயலாது என்றும், இதன் காலம் கி.பி.எட்டாம் நூற்றாண்டாகும் என்றும் கூறுகிறார் திரு.மதிவாணன் அவர்கள்.[46] கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதலே தமிழ்க் கல்வெட்டுகள் பலவற்றிலும் 'தம்மம்', 'அதிட்டானம்' போன்ற பல வடசொற்கள் இடம்பெறுகின்றன. சங்க இலக்கியங்களிலேயே வடசொற்கள் பல விரவி வருகின்றன. எனவே அக்காரணத்தைக் காட்டிக் காலத்தினைப் பின்னோக்கிக் காட்டுதல் வரலாற்றுக்கு முரணானதாகிவிடும்.

---

43. இரா நாகசாமி, 'ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான் கல்வெட்டு' 'தினமணி' நாள் 12·10 1981

44. செ. இராசு, 'அதியமான் மரபு – சங்ககாலம்' Salem: Institute of Kongu studies, n.p.

45. Iravatham Mahadevan,Tamil-Brahmi Inscriptions, Seminor on Archaeology, Madras: State Department of Archaeology 1970, p.2.

46. செந்தமிழ்ச்செல்வி, 'அதியமான் சத்தியபுத்ரனா?', சென்னை.கழகம் 1981, பக் 122–123.

திருக்கோவலூரில் பெருவெற்றி பெற்ற மன்னனான அதியமான் நெடுமான் அஞ்சி அருகில் உள்ள சமணத் துறவிகளின் இருப்பிடமான ஜம்பையில் கல்வெட்டுப் பொறித்திருப்பதும், சமணர்க்குப் படுக்கையமைத்துக் கொடுத்திருப்பதும் எவ்வாற்றானும் பொருந்துவதே. திருக்கோவலூரில் இருந்து தகடூருக்குச் செல்லும் பெருவழி (இன்று மண்வழி) யொன்று இன்றும் இருப்பதும், அதில் ஜம்பை அமைந்திருப்பதும், வெற்றி பெற்ற பகுதியில் சமயத் தலைவர்கள் தன்னைப் பாராட்டும் வகையில் அவர்களுக்குப் படுக்கையமைத்துக் கொடுத்து ஆதரிப்பதும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த செய்திகள் ஆகும்.

எனவே அதியமான்கள் குலமரபுத் தலைவர்களாக ஆளும் பொறுப்புடைய குடிமகன்களாகச் சிறப்புப் பெற்ற காலம், அசோகன் கல்வெட்டுக் காலமான கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் முற்பட்டது என்பதையும், அம்மரபில் தோன்றிய வரையறுத்துக் கூறத்தக்க மூன்று பெருமகன்களும் வாழ்ந்த காலம் கிறித்து அப்தத்தின் தொடக்ககாலம் ஆகும் என்பதையும் முடிவாகக் கூறலாம்.

அதியர் பங்கேற்ற போர்கள்

குலமரபுச் சமுதாயத்தில் தலைமைப் பொறுப்பினை ஏற்றிருந்த மூன்று அதியமான்களும் ஈடுபட்ட போர்கள் பலவற்றைச் சங்கப் பாடல்கள் மூலம் அறிகிறோம். மூன்று அதியர்களும், ஈடுபட்ட போர்கள், அவை நடந்த இடங்கள், எதிர்த்துப் போரிட்டோர், போரின் முடிவு ஆகியவற்றை ஆராய்வதன் மூலம், அதியர் வரலாற்றின் ஒரு பகுதி தெளிவாகிறது.

அ. நெடுமிடல் என்னும் முதலாம் அதிகன்

1. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலுடன் நடந்த போர்

பதிற்றுப்பத்தின் நான்காம் பத்திலிருந்து, களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலுக்கும் நெடுமிடலுக்கும் இடையே ஒரு போர் நடைபெற்றதாக அறிகிறோம் (பாடல்.32). இப்போரில் நார்முடிச்சேரல், நெடுமிடலைத் தோல்வியடையச் செய்தான். சேரலன், நெடுமிடலின் நாட்டினையும், அவனது யானைப் படையினையும் அழித்தான் என்றும், பிழையாத விளைச்சலையுடைய அதியனின் நாட்டினை அகப்படுத்தினான் என்றும்,

'நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
பெருமலை யானையொடு புலங்கெட இறுத்து
....,
பிழையா விளையுள் நாடகப்படுத்து'

எனவரும் பதிற்றுப்பத்து அடிகள் தெரிவிக்கின்றன. இப்போர் எங்கு நடந்தது என்பது நேரடியாகப் பாடலில் சுட்டப்பெறவில்லை எனினும்

அதியனது தகடூர்ப் பகுதியில்தான் நடந்திருக்கவேண்டும் என்பதை 'அவன் நாடழிக்கப்பட்டது' என்ற தொடரிலிருந்தும், போரில் நெடுமிடல் தோல்வியுற்றான் என்பதை 'நெடுமிடல் சாய' என்ற தொடரிலிருந்தும் தெரிந்து கொள்ள இயலுகிறது.

2. வாகைப் பறந்தலைப் போர்

நெடுமிடலுக்கும் மிஞிலிக்கும் ஒரு போர் நடந்தது என்பதை,

'வாய்மொழி மிஞிலி
புள்ளிற் கேமமாகிய பெரும்பெயர்
வெள்ளத்தானை அதிகற் கொன்று வந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பு'

என்ற அகநானூற்றுப் பாடல் (142) மூலம் அறிகிறோம். இப்போரில் நன்னனின் சார்பில் மிஞிலி போரிட்டான் என்ற செய்தியினை அதே பாடலின்,

'கறையடி யானை நன்னன் பாழி
ஊட்டரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி'

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. இப்போரில் அதியன் கொல்லப்பட்டான் என்பது தெளிவாக உள்ளது.

இப்போரில் பசும்பூண்பாண்டியனின் சார்பில் அதியன் போரிட்டான் என்றும், போர் வாகைப்பறந்தலையில் நடந்தது என்றும், போரில் அதியமான் இறந்தவுடன் கொங்கர் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர் என்றும் பின்வரும் குறுந்தொகைப் பாடல் (393) மூலம் அறிகிறோம்.

'கூகைக்கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பு'

இவ்வாறு கொங்கர் ஆரவாரம் செய்தமைக்கு, அவர்கள் முன்னர்ப் பசும்பூண் பாண்டியனிடம் பெருந்தோல்வி அடைந்ததே காரணம் என்ற குறிப்பினைப் பின்வரும் அகநானூற்றுப் பாடல்(252) தெரிவிக்கின்றது.

'வாடாப் பூவின் கொங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடல் ஆடிய
இன்னிசை ஆர்ப்பு'

என்ற அடிகளில் கொங்கர் பசும்பூண் பாண்டியனால் விரட்டப் பட்டனர் என்ற செய்தி காணப்படுகிறது. இதன் காரணமாகவே பசும்பூண் பாண்டியனின் வினைவல்லோன் ஆகிய அதியன்

இறந்தபோது, கொங்கர் ஆரவாரம் செய்தனர் என்று ஊகிக்க முடிகிறது எனவே வாகைப்பறந்தலையில் மிஞிலியுடன் இணைந்து கொங்கரும் அதியரை எதிர்த்துப் போரிட்டனர்.

ஆ. அதியமான் நெடுமானஞ்சி என்னும் இரண்டாம் அதிகன்

1. திருக்கோவலூர்ப் போர்

இப்போர் மலையமான் திருமுடிக்காரிக்கும், அதியனுக்கும் இடையே நடைபெற்றது. அதியன் தன் நண்பனான ஓரியைக் காரி கொன்றதற்காக வஞ்சம் தீர்த்தற் பொருட்டே இப்போர் புரிந்தான் என்பது கி.வா. ஜகந்நாதன் அவர்கள் கருத்து. எனினும் இக்காரணம் பொருந்துவதாக இல்லை. ஏனெனில் இக்காலகட்டத்தில் குலமரபுகளுக்கிடையே பல்வேறு காரணங்களுக்காகப் போர்கள் நடைபெற்றன. நிரந்தரமான பகைமையோ, நிரந்தரமான நட்போ எந்தக் குலங்கட்கிடையேயும் இருக்கவில்லை. எனவே குலமரபுப் போர்களுள். ஒன்றாகவே இதனையும் கருதுதல் வேண்டும். தருமபுரியிலிருந்து தமிழகத்தின் உட்பகுதிக்குச் செல்லும் ஒரு பெருவழியில் திருக்கோவலூர் அமைந்துள்ளது. எனவே வணிகவழியினைக் கைப்பற்றும் காரணமாகவே இப்போர் நிகழ்ந்திருக்கவேண்டும் என்ற கருத்து[47] ஏற்கத்தக்கது. இப்போரில் திருமுடிக்காரியின் திருக்கோவலூர் துகளாக்கப்பட்டது. எனினும் அவன் கொல்லப்பட்டதாகக் குறிப்பில்லை. திருக்கோவலூர் வெற்றியை ஔவையார் பெரிதும் புகழ்ந்து பாடியுள்ளார் (புறம் : 49). அவ்வெற்றியினைப் புகழ்ந்து பரணரும் பாடியதாகப் பின்வரும் ஔவையின் கூற்று உள்ளது.

'இன்றும்
பரணன் பாடினன் மன்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறி நின்
அரணடு திகிரி ஏந்திய தோளே'

எனினும் பரணர் இவ்வெற்றி குறித்து பாடிய பாடல் தற்போதைய சங்கத் தொகுப்பில் காணப்படவில்லை.

2. எழுவருடன் போர்

திருக்கோவலூரில் அதியமான் பெற்ற வெற்றியைப் பாராட்டும் அதே பாடலில் (புறம் 99) அதியனின் மற்றொரு வெற்றியும் குறிக்கப்படுகிறது.

'எழுபொறி நாட்டத்து எழாஅத் தாயம்
வழுவின்றி எய்தியும் அமையாய் செருவேட்டு
இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை'

47. ஆர். பூங்குன்றன், 'தொல்குடிகள்' ஆராய்ச்சி இதழ் வெளியீட்டு விழாக் கருத்தரங்கில் படித்த கட்டுரை 1993. ப 4

என வரும் அடிகள், அதியமான் எழுவருடன் போரிட்டு வெற்றி பெற்றான் என்ற செய்தியினைத் தருகின்றன. இங்குக் குறிக்கப்படும் எழுவர் யாரென அறிவதற்கில்லை. ஆனால் இவ்வெற்றி குறித்தும், இப்பாடற் பகுதியைக் குறித்துப் பழைய உரைகாரர் எழுதியிருப்பது ஆய்வுக்குரியது. உ.வே.சா அவர்கள், புறநானூற்றுப் பதிப்பு முன்னுரையில் பாடப்பட்டோர் வரலாறு கூறுமிடத்து 'அரசர் எழுவர்க்குரிய ஏழு இலாஞ்சனையும் நாடும் அரச உரிமையும் உடையோன்' என்று எழுதுகிறார்.[48] அவரே அப்பாடலுக்கு உரையெழுதுகையில், எழுபொறி என்பதற்கு, 'ஏழு இலாஞ்சனை; இவை ஏழரசர்க்குரியன. இது கேழல், மேழி, கலை, யாழி, வீணை, சிலை, கெண்டை என்றினைய பல்கொடி' என்ற கலிங்கத்துப் பரணிக் கடவுள் வாழ்த்தினைச் சான்றாக்கித் தெளிவுபடுத்துகிறார். இப்பாடலுக்குப் பழைய உரைகாரர், 'ஏழரசர்களோடும் கூடி, பொறியோடு கூடிநின்று நன்மையும் தீமையும் ஆராய்தலெனினும் அமையும்' என்றெழுதியுள்ளார்.[49] இப்பாடற்பகுதியினை ஆய்வுசெய்த திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் அதியனை வடமொழி நூல்களில் குறிக்கப்பெறும் 'மகாராசன்' என்ற தகுதிக்குரியவன் என்று விளக்கம் அளிக்கிறார்.[50] இவ்விளக்கங்கள் எல்லாம் அதியன் ஏழு அரசர்களுடன் போரிட்டு வெற்றிபெற்றான் என்ற உண்மையை உணர்த்துகின்றன.

இப்பாடலில் நேரடியாக நமக்குக் கிடைக்கும் ஒரேயொரு குறிப்பு, அதியனை எதிர்த்தவர்கள் இமிழ்குரல் முரசினை உடையவர்கள் என்பது மட்டுமே. சங்க இலக்கியத்துள், முரசுகெழு வேந்தர் (புறம்:75), முரசு முழங்கு தானை (புறம்:301), முரசு முழங்கு பாசறை (முல்லை.அடி:79), முரசுடைப் பெருஞ்சமம் (பதிற்று:34) முரசுகெழு நெடுநகர் (பதிற்று:72) முரசுகெழு செல்வர் (புறம்:127) முரசுகெழு முதுகுடி (கலித்:105) போன்ற தொடர்கள் இடம் பெறுகின்றன. இவற்றை நோக்க முரசு மூவேந்தருக்கு மட்டுமே உரியதல்ல. செல்வர்க்கும், முதுகுடியினர்க்கும் உரியது என்பது தெளிவாகின்றது. எனவே முரசினை உடைய எழுவரை எதிர்த்து அதியன் வெற்றி சூடியதையே இப்பாடல் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

இந்நிலையில் இப்பாடலில் வரும் எழுவர் என்ற சொல் ஏழு குலமரபுத் தலைவர்களைக் குறிப்பதாகவும், அவர்களை வென்று அடக்கியதன் மூலம், அனைத்துக் குலங்களுக்கும் அதியன் தலைவனாக விளங்கினான் என்பதையும் இவ்வடிகள் உணர்த்துகின்றன என்பதை இவ்வியலில் முதலிலேயே சுட்டியுள்ளோம்.

48. புறநானூறு மூலமும உரையும – ப 62

49. புறநானூறு மூலமும உரையும் – ப.210

50. எஸ் வையாபுரிப்பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள், அதியமான் நெடுமான் அஞ்சி சென்னை வையாபுரிப்பிள்ளை நினைவு மன்ற நூற்றாண்டு நினைவு வெளியீடு, 1989, பக். 322–23

3. தொண்டைமானுடன் போர்முயற்சி

தொண்டைமானுக்கும் அதியமானுக்கும் இடையே ஒரு போர் நடைபெறும் சூழ்நிலை ஏற்பட்டது. அதனை ஔவையார் தவிர்த்தார் என்பதைப் புறநானூற்றுப் பாடலில் இருந்தும், அப்பாடலுக்குரிய (95) கொளுவில் இருந்தும் அறிகிறோம். கொளு, 'அவன் (அதியமான்) தூதுவிடத் தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட அவர் (ஔவையார்) பாடியது' என்றுள்ளது. இப்பாடலில் ஔவையார் தொண்டைமானின் படைக்கலன்கள் நெய்பூசி, மயிற்பீலி அணிவிக்கப் பெற்றுப் புதுக்கருக்கு அழியாமல் இருப்பதாகவும், மாறாக அதியனின் படைக்கலன்கள் ஒடிந்தும் சிதைந்தும் கொல்லனது உலைக்களத்தில் கிடப்பதாகவும் கூறுகிறார். இதன்மூலம் அதியனின் ஓயாதபோர் வெற்றியினைத் தொண்டைமானுக்குத் தெரிவிக்கிறார் ஔவையார். எனவே ஒருபோர் நடைபெற இருந்த நிலையில் அது தவிர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இ. எழினி என்னும் மூன்றாம் அதிகன்

1. தலையாலங்கானப் போர்

தலையாலங்கானத்தில் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும், அவனை எதிர்த்த சேரலன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கா வேண்மான், பொருநன் ஆகிய எழுவருக்கும் போர் நடந்தது. அப்போரில் இவ்வெழுவரின் முரசொடு வெண்குடைகளையும் நெடுஞ்செழியன் அகப்படுத்தினான். போர்முடிவில் கொன்று களவேள்வியும் செய்தான் என்று பின்வரும் அகநானூற்றுப் பாடல் (36) கூறுகிறது.

> 'கொய்சுவற் புரவிக் கொடித்தேர் செழியன்
> ....
> எழுவர் நன்வலம் அடங்க ஒருபகல்
> முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
> கொன்று களம் வேட்ட ஞான்று'

என்ற அடிகளில் வரும் 'கொன்று' என்ற சொல், எதிர்த்தவர்களில் சிலரையேனும் செழியன் கொன்றிருக்க வேண்டும் என்ற குறிப்பினைத் தருகிறது. எழினியின் நிலையினைத் தெளிவாக அறிதற்கில்லை. எனினும் பின்நடந்த தகடூர்ப் போரில் எழினி இறந்தான் என்பது உறுதியாகத் தெரிவதால், இப்போரில் தோல்வியினைத் தழுவி, உயிர்தப்பினான் என்று கொள்ளலாம்.

2. கொல்லிப் போர்

பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தின் பதிகத்தின்வழி அதியமானுக்கும் பெருஞ்சேரல் இரும்பொறைக்கும்,

கொல்லிப்பகுதியில் போர் ஒன்று நடந்ததெனஅறிகிறோம். இப்போரில் இருபெருவேந்தர்களும் அதிகமானும் பெருஞ்சேரலுடன் பொருதனர். இப்போரிலும் அதிகமான் தோல்வியே அடைந்தான். பெருஞ்சேரல் இரும்பொறை, இம்மூவரையும் வென்று அவர்தம் முரசு, குடை, கலன் ஆகியவற்றைக் கைப்பற்றினான் என்னும் செய்திகளைக்

> 'கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
> பல்வேல் தானை அதிகமானோடு
> இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
> முரசுங் குடையுங் கலனுங் கொண்டு' (பதிற்று.பதி:8)

எனவரும் பாடற்பகுதி தெளிவாக்குகிறது.

3. தகடூர்ப் போர்

அதியமான்களின் தலைநகரமான தகடூரிலேயே ஒருபோர் நடந்திருக்கிறது. பெருஞ்சேரல் இரும்பொறை தகடூரை முற்றுகையிட்டு வெற்றியும் பெற்றான் (புறத்திரட்டு. பாடல்:786). பொதுவாகப் பெருமன்னர்கள் பெரும்படையுடன் வரும்போது தாக்கப்படுவோர் தம் கோட்டையினுள் இருந்து பின் போரிடுவதே வழக்கம் போலும்! பாரியின் பறம்புமலை முற்றுகையும் இத்தகையதே. தகடூர்ப் போரில் பொருதுவீழ்ந்த எழினியைக் கண்டு அரிசில் கிழார் கையறுநிலைப் பாடல் பாடுகிறார் (புறம்:230). இப்போரில் பெருஞ்சேரல் இரும்பொறை பெற்ற வெற்றியைச் சிறப்பித்துப் பாடியவரும் அரிசில்கிழாரே ஆவார். பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தின் பதிகம் இரும்பொறையின் வெற்றியைத் 'தகடூர் எறிந்து நொச்சி தந்தெய்தி' என்று கூறுகிறது. இந்நூலின் 78 ஆம் பாடல் இப்போரினை.

> 'வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
> வில்பயில் இறும்பிற் தகடூர் நூறி'

என்று விவரிக்கிறது. இப்போரில் எழினி கொல்லப்பட்டான் என்பதைப் புறம்:230-ஆம் பாடலின் கொளு உறுதிப்படுத்துகின்றது. தகடூர்ப் போரில் அதியனுக்குத் துணையாகப் பெரும்பாக்கன் என்ற தலைவன் போர் முகத்திற் சேரனை எதிர்த்து நின்றான் என்பதையும், போரின் முதல்நாள் அதியனின் காவற்காட்டினை இரும்பொறையின் படை அழித்தது என்றும் அறிகிறோம் (பெருந்தொகை : 1426, 27, 30). எனவே இப்போர் பலநாட்கள் நடந்தது என்றும் தெரிகிறது. இப்போர் குறித்து எழுந்ததே 'தகடூர் யாத்திரை' என்னும் நூலாதல் வேண்டும்.[51]

ஈ. பிற போர்கள்

இதுவரை விளக்கப் பெற்ற போர்கள் எல்லாம் குலமரபில் தலைமைப் பொறுப்பேற்றிருந்த அதியர் மூவருள் யாரேனும் ஒருவர்

51. இந்நூலின் இரண்டாம பகுதியில 'தகடூா யாத்திரை' குறிதத விரிவான ஆயவு இடம்பெறுகிறது

பங்குபெற்ற போர்கள் ஆகும். இவையன்றி எந்த அதியன் என்று அறுதியிட்டுக் கூறவியலாத நிலையில், தொடக்ககாலக் குடித்தலைவர்களாக விளங்கிய அதியமான்கள் செய்த சிறுபூசல்களைக் குறிக்கும் பாடல்களும் சங்கத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அவை வருமாறு :

மத்தியுடன் நடந்த போர்

எழினிக்கும், கழாஅரின் தலைவனான மத்திக்கும் இடையே ஒரு பூசல் நடந்ததைக்

‘குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தா தொழியக்
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ் சேணாட்டிற் தலைத்தார்ப்பட்ட
கல்லா எழினி பல்லெறிந்து அழுத்திய
வன்கட் கதவின் வெண்மணி வாயில்
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை’

என்ற அகநானூற்றுப் பாடல் தெரிவிக்கின்றது. இப்பாடலில் இருந்து, வேந்தன் ஒருவனின் ஏவலை முடித்தற் பொருட்டு, ஆநிரை கவரும் பூசலை எழினி மேற்கொண்டான் என்பதும், அப்பூசலில் எழினியின் பல்லைப் பிடுங்கிச் சென்று வெண்மணி என்னும் ஊரின் வாயிற் கதவில் மத்தி பதித்தான் என்றும் அறிகிறோம். இம்மத்தி சோழ நாட்டில் உள்ள கழாஅர் என்ற ஊரினன், பரதவர் குடியின் தலைவன் (அகம் 226). இப்பூசல் நடந்த இடம்பற்றி அறிய இயலவில்லை.

அள்ளனுடன் போர்

அள்ளனுக்கும் அதியனுக்கும் நடந்த போரொன்றினை அகநானூற்றின் (325) பின்வரும் பாடல் அடிகள் தெரிவிக்கின்றன.

‘ஆடுநடைப் பொலிந்த புகற்சியின் நாடுகோள்
அள்ளனைப் பணித்த அதியன் பின்றை
வள்ளுயிர் மாக்கிணை கண்ணவிந்தாங்கு’

இதன்வழி, அள்ளனை அதியன் வெற்றிகொண்டான் என அறிகிறோம். இப்போர் நடந்த இடமும் தெரியவில்லை.

இவ்விரு போர்களிலும் எதிர்த்தவர் பெயர் தெரிகின்றது. இவையன்றி அதியர் ஈடுபட்ட ஆநிரைகவரும் பூசலைக் குறிக்கும் பாடற்பகுதிகள் பல சங்கத்தொகுப்பில் உள்ளன.

‘சில்பரிக் குதிரைப் பல்வேல் எழினி
கெடலருந் துப்பின் விடுதொழின் முடிமார்
கனையெரி கடந்த கல்காய் கானத்து
வினைவல் அம்பின் விழுத்தொடை மறவர்

தேம்பிழி நறுங்கள் மகிழின் முனை கடந்து
வீங்குமென் சுறைய வேற்றினந் தரூஉம்
மூகைதலைத் திறந்த வேனில்
பகைதலை மணந்த பல்லதர் பலவே' (அகம்:105)

இப்பாடலில் தாயங்கண்ணனார், எழினி வேந்தன் ஏவிவிட்ட தொழிலான ஆநிரை கொள்ளும் பணியினைச் சிறப்பாகச் செய்து, வேற்றுநாட்டு ஆநிரைகளைக் கவர்ந்து வரும் பெருவழிகள் பல என்று குறிப்பிடுகின்றார். பரணரும், அதியமான் பல பூசல்களில் ஈடுபட்டு ஆநிரை கவர்ந்து வரும் நெடுநெறிகளைப் பின்வருமாறு

'நெடுநெறிக் குதிரைக் கூர்வேலஞ்சி
கடுமுனை அலைத்த கொடுவில் ஆடவர்
ஆடுகொள் பூசலின் பாடுசிறந் தெறியும்' (அகம்:372)

என்று பாடுகிறார். எனவே ஆநிரை கொள்ளும் பூசலில் தானாகவும், பிறவேந்தர்க்காகவும் அதியர் மரபினர் செய்த பூசல்கள் மிகப்பலவாய் இருந்தன என்று அறிகிறோம்.

இவ்வாறு அதியர் பங்கேற்ற போர்களையெல்லாம் வகைப்படுத்தி நோக்கினால், ஆநிரைகளைக் கொள்ளும் பூசலில் ஈடுபட்டு அதிற் சிறந்து விளங்கிய தொடக்ககாலக் குடிமுதல்வராக இருந்த நிலை; பெருவேந்தனின் உதவிக்கெனச் சென்று போரில் வெற்றி பெற்ற நிலை; தாமே மன்னராகி வேளிரோடு இணைந்தும், தனித்தும் பெருவேந்தரையும் எதிர்த்த நிலை ஆகிய மூன்று நிலைகளிலும், மிக நீண்ட கால வரலாற்றினை இக்குடிமரபு கொண்டு விளங்கியதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

அதியமான்களின் நகரம், மலை, நாடு

I. நகரம்

தமிழகத்தின் வடமேற்கு எல்லையில் அமைந்த தகடூர் அதியரின் நகராகச் சங்க இலக்கியங்களில் குறிக்கப்படுகிறது. இவ்வூர் பற்றித் திரு. சதாசிவப் பண்டாரத்தார் அதியனின் தலைமை நகராகிய தகடூர் மைசூர் இராச்சியத்தில் உள்ளது என்றும், கேரள தேசத்து எழினி வம்சத்தில் வந்த விடுகாதழகிய பெருமாள் ஆண்டதாகக் கூறப்படும் தகடா என்ற வடமொழிப் பெயரே தமிழில் தகடூர் என வழங்கலாயிற்று என்றும் கருத்துரைத்துள்ளார். அறிஞர் கூறுவதுபோலத் தகடூர் தென்கன்னட நாட்டில் இல்லை. கன்னட நாட்டிற்குத் தெற்கே தமிழக நிலப்பரப்பினுள்ளேதான் இவ்வூர் உள்ளது. அறிஞர் குறிப்பிடும் கல்வெட்டு வடார்க்காடு மாவட்டம் போளூருக்கருகில் உள்ள திருமலையில் உள்ளது. அது கி.பி 13–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அதியமான் குலமரபில் வந்த விடுகாதழகிய பெருமாளின் கல்வெட்டாகும். அதியருக்கும், சேரருக்கும் உள்ள தொடர்பு கி.பி 13–ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து அக்குலத்தவரால்

நினைவிலிருத்தப்பட்டு வந்ததை இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. மேலும் திருமலைக் கல்வெட்டு வடமொழியில் எழுதப்பட்டுள்ளது. ஆதலின் தகடூர், 'தகடா' என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. எனவே தகடூர் என்ற தமிழ் வடிவமே கல்வெட்டில் 'தகடா' என்று வடமொழியில் குறிக்கப்பட்டது என்பது தெளிவு. இன்றைய தருமபுரியிலும், பிற ஊர்களிலும் கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டுகளில், பல்லவர் காலம் தொடங்கி கி.பி.15–ஆம் நூற்றாண்டு வரையிலும் இவ்வூர் தகடூர் என்றே வழங்கப் பெறுகின்றது. இவ்வூரில் கிடைத்துள்ள கி.பி 878 ஆம் ஆண்டைச் சேர்ந்த பழைய கன்னடக் கல்வெட்டிலும் இவ்வூர் 'தகடூரு' என்றுதான் குறிப்பிடப்படுகின்றது. எனவே இன்றைய தருமபுரியே பண்டைய தகடூர் என்றும், அதுவே அதியனின் நகரம் என்பதும் தெளிவு.

தகடூர் புதிய ஊரல்ல, தொன்மையானது என்பதை மூதூர் (புறம் 97) என்ற சொல்லும், பெரிய ஊர் என்பதை வியன்நகர் (புறம் 390) என்ற சொல்லும் உணர்த்துகின்றன. சிறந்த அரண் உடைய நகர் என்பதையும், சிறந்த வீரர்களால் காக்கப்பட்டது என்பதையும்,

'வெல்போர் ஆடவர் மறம் புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின் தகடூர்'

என்ற அடிகள் (பதிற்று:78) உணர்த்தும். புறத்திரட்டில் இடம்பெறும் தகடூர் யாத்திரையில் பயிலும் 'மொய்வேற்கையர்', 'திண்கடர் எஃகின் வயவர்', மைந்துமலி தடக்கை ஆண்டகை மறவர்', 'கருங்கண் ஆடவர்' என்ற தொடர்கள், தகடூரைக் காத்து நிற்கும் வீரர்களைக் குறித்து வருவன. (புறத்: 1428, 1430). கோட்டைவாயில் பெரிதாக அமைந்திருந்ததைப் புறநானூறு 'நெடுங்கடை' என உரைக்கிறது.

அதியரது கோட்டையில் எதிர்ப்படை ஏறஇயலாத வகையில் வெளிப்புறம் எண்ணையும், வெண்சிறுகடுகும் பூசப் பெற்றிருந்தன; எதிர்த்துத் தாக்கும் வகையில் எந்திரங்கள் பல அமைக்கப்பெற்றிருந்தன; அவை பறவைபோலும், பந்துபோலும், பாவைபோலும், உருவிலமைந்தவை. அவை கல், மண் ஆகியவற்றை எறியும் தன்மையன; வில்லும் அம்பும் மதிற்சுவரில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. இவற்றைத் 'தொல் எயிற்கு இவர்தல்' என்ற துறைக்கு எடுத்துக் காட்டாக நச்சினார்க்கினியார் கூறும் புறத்திரட்டுப் பாடலால் (1429) அறிகிறோம். இவ்வூரைச் சுற்றிலும் அரிய காவற்காடுகள் (மிளை) இருந்ததை மற்றொரு புறத்திரட்டுப் பாடல் (1430) சுட்டுகிறது.

தகடூரில் படைக்கலன்களைப் பழுதுபார்க்கும் கொல்லன் உலைக்களன்கள் இருந்ததைப் புறம்(95)சுட்டும். கோடியர் பாடியாடி விழவு கொள்ளும் ஊராகத் தகடூர் விளங்கியதை.

'பாடிமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடுமயின் முன்னதாகக் கோடியர்

விழவு கொண்ட மூதூர்'

எனவரும் அகநானூற்று (352) அடிகள் காட்டும்.

அகத்தின் மற்றொரு பாடல் (212) தகடூரினை 'விரவுமொழித் தகடூர்' என அடைமொழியிட்டுச் சுட்டுகிறது. இவ்வடைமொழி 'பல்வேறு மொழிகள் வழங்கும் ஊர்' எனப் பொருள் தருகின்றது. காவிரிப் பூம்பட்டினத்தைப் பாடும் கடியலூர் உருத்திரங் கண்ணனார்,

'மொழிபல பெருகிய பழிதீர் தேயத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்' (பட்டினப் 216–218)

என்று கூறுவார். வணிக நகரங்களிலும், எல்லைப்புற ஊர்களிலும் இவ்வாறு பல மொழி பேசும் மக்கள் இணைந்து வாழ்வது இயல்பு. மேலும் இவ்வூர் தமிழகத்தின் எல்லைப்புறத்தது ஆதலின் அண்டைநாட்டு வேற்று மொழிபேசுவோரும் இருந்திருக்க வாய்ப்புள்ளது.

அகழாய்வின் மூலம் தகடூர்

தகடூரின் தொன்மையினையும், பிற தொல்லியல் எச்சங்களையும் அறிந்து கொள்ளும் வகையில் அகழாய்வொன்று மேற்கொள்ளப் பெற்றது. இவ்வகழாய்வு, வழிவழியாக அதியமான் கோட்டை இருந்த இடமாகக் கூறப்பட்டுவரும் 'அதமன் கோட்டை' என்ற இடத்தில் 1981, 1982, ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றது. அவ்வகழாய்வில், சங்க காலத்ததாகக் கருதத்தகும் கருப்பு–சிவப்புப் பானை ஓடுகள் (Black and red ware), வண்ணம் பூசப் பெற்ற பானை ஓடுகள் (Russet coated ware), கருப்புப் பானை ஓடுகள் ஆகியனவும், வில்–அம்பு மற்றும் பல்வேறு கீறல் குறிகள் (Graffite), உடைய பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. மேலும் சுடுமண்ணால் ஆகிய மணிகள், இரும்பால் ஆன ஆணிகள், கத்திகள் ஆகியனவும், ஒரு மேடையுடன் கூடிய கெட்டியான களிமண்ணால் புனையப் பெற்ற தரைப்பகுதியும் கிடைத்துள்ளன, இவை கி.மு. 100 முதல் கி.பி. 300 வரையிலான காலத்தைச் சார்ந்தவை எனக் கருதுகின்றனர், தொல்லியல் அறிஞர்கள்.[52] இருப்பினும் பழைய தருமபுரி என்று வழங்கப்படும் பகுதியே சங்ககாலத் தகடூர் இருந்த இடம் என்ற கருத்தும் உள்ளது. அங்கு அகழாய்வு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இன்றைய தகடூர். அல்லது அதையொட்டிய எந்தப் பகுதியில் சங்க இலக்கியங்கள் சுட்டும் நெடுங்கடை வாயிலுடனும், காப்பமைந்த அரணுடனும் கூடிய அதியனின் இருப்பிடம் இருந்தது என அறிய இயலவில்லை.

---

52 Indian Archaeology - A Review 81-82. pp.61-62.

தகடூர்-பெயர்க் காரணம்

தகடு என்பது பொதுவாகப் பூவின் புற இதழையும், குறிப்பாகத் தாமரை மலரின் புறஇதழையும் குறிக்கும். தாமரை வடிவில் அமைக்கப்பட்ட ஊராதலின் இப்பெயர் பெற்றது எனவும், பிற்காலக் கல்வெட்டு ஒன்றில் 'தடங்கமலத் தகடை' என்று குறிக்கப்படுவது இப்பொருளில்தான் எனவும் கூறுவர்.[53] ஆனால் நகரமைப்பு போன்ற முன்னேற்றங்கள் தோன்றாத காலத்திலேயே வழக்கத்தில் இருந்த இப்பெயருக்கு இயற்கையமைதியில் பொருள் கொள்வதே சரியானதாக இருக்கும்.

தகடு என்பதற்கு 'மென்மையும் தட்டையும் ஆன வடிவு' என்பது பொருள். நிலவியல் அமைப்பில் சுற்றிலும் பெரும்பாலும் மலைகளாயிருக்க, நடுவில் அமைந்த சமவெளிப்பகுதியில் தகடூர் அமைந்திருக்கக் காணலாம். எனவே மலைகளுக்கு நடுவே அமைந்த தட்டையான மென்மையான சமவெளிப் பகுதியில் உள்ள ஊராதலின் தகடூர் எனப் பெயர் பெற்றது என்று கருதுவதே சிறப்புடைத்து.

தாலமி சுட்டும் கோரியூர்

கிரேக்க நாட்டு வரலாற்று ஆசிரியர் தாலமி, 'அதரிமா கோரியூர்' என்ற ஓர் ஊரினைக் குறிப்பிடுகிறார். இங்குக் குறிக்கப்படும் 'அதரிமா' வினை அதியமான் என்றும், 'கோரியூரை'க் கோழியூர் என்றும் கூறி அதியனின் மற்றொரு நகராகக் கோரியூர் விளங்கியதெனக் கருத்துரைக்கிறார் திரு. சிவராஜபிள்ளை. ஆனால் பெயரொலிப்பு மட்டுமே கொண்டு கூறும் இவர் வேறெந்த வரலாற்றுச் சான்றுகளையும் குறிப்பிடவில்லை. திரு. துரை அரங்கனாரும் இக்கூற்றின் முற்பாதியான 'அதிரிமா' என்பது அதியமான் ஆகலாம் என்ற கருத்தினை ஏற்றுக்கொண்டுள்ள போதிலும், கோழியூர் என்பது அதியர் தகடூருக்கு வரும்முன்னர் இருந்த ஊராகலாம்' என்கிறார். இவை எதற்கும் வேறு சான்றுகளும் இல்லாத நிலையில் இதற்குமேல் இதனை ஆராய வழியில்லை.

II. மலை

அதியருக்குரியதாகக் குதிரைமலை இருந்தது என்பதை,

'ஊராதேந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங்கண்ணிக் கொடும்பூண் எழினி'

என்ற பாடல் (புறம் 158) சுட்டும். ஆனால் அதே இலக்கியத்தின் 168–ஆம் பாடல், சேரர் படைத்தலைவன் பிட்டங்கொற்றனுக்குரியது குதிரைமலை என்ற பொருளில் 'ஊராக் குதிரைக் கிழவ' என்றழைக்கிறது.

---

53. புலவா செ இராசு, 'அதியரது தகடூர்' தருமபுரி மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு வெளியிடப்படாத கட்டுரை

தகடூரைப் போலவே இக்குதிரை மலையும், எங்குளது என்பதில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. திரு. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள், தென்கன்னட நாட்டில் உள்ள குதிரை மூக்கு மலையே இது என்றும், திரு.கே.கே. பிள்ளையவர்கள், குதிரைமலை இலங்கையில் இருப்பதாகத் தெரிகிறது; எனவே இம்மலைக்குரியோர் இருவரும் இலங்கை மன்னர்கள் என்றும் கருத்துரைக்கின்றனர். உடுமலைப்பேட்டை வட்டத்தில் ஒரு குதிரைமலை இருப்பதாகத் தெரிகிறது என்று திரு.க.த. திருநாவுக்கரசு அவர்கள் கூற, தருமபுரி மாவட்டம் கடத்தூருக்குப் புறத்தேயுள்ள இராணிமூக்கு மலையே குதிரைமலையாகும் என்று திரு.சொ.சாந்தலிங்கம் கூறுகிறார்.

வடமேற்கு எல்லைப் புறத்திலுள்ள அடுக்கடுக்கான பல மலைகளுள் ஒன்றாகவே குதிரைமலை இருத்தல் வேண்டும். இன்னும் எண்ணிலடங்காப் பல மலைகளைக் கொண்டுள்ள பகுதி இது. குதிரைமலை என்ற பெயர் வழக்கு மறைந்துவிட்டதால், இன்றைய நிலையில் இம்மலை எதுவென முடிவாகக் கூறுதற்கில்லை. ஆனால், இம்மலை பிட்டங்கொற்றனுக்கு உரியதாகவும், அதியனுக்கு உரியதாகவும் கூறப்படுதலின், இருவேறு காலங்களில் இருவருக்கும் உரியதாக இருந்தது. அக்கால வரலாற்றமைதியில் இவ்வாறு ஒரே இடம், இருவருக்குரியதாகக் கூறப்படுவது இயல்பான ஒன்றேயாகும்.

III நாடு (ஆட்சிப்பரப்பு)

சங்க காலத்தில் இருந்த சேர, சோழ, பாண்டிய வேந்தர்களின் ஆட்சிப் பரப்பினையோ, அக்காலத்தைச் சேர்ந்த பிற குலமரபுத் தலைவர்களின் ஆட்சிப் பரப்பினையோ அறிந்து கொள்ள உதவும் சான்றுகள் ஏதும் இல்லை. ஏனெனில் போரிட்டுத் தம் ஆட்சிப்பரப்பினை விரிவுபடுத்துவதில் பேரார்வம் காட்டும் தொடக்க நிலையில்தான் அவர்கள் அனைவரும் இருந்தனர். சங்க இலக்கியம் முழுவதையும் ஆராய்ந்தபோதும் எல்லை கூறும் குறிப்பினை எங்குமே காண்பதற்கில்லை. இந்தத் தலைவனுக்குரியது இந்த ஊர் அல்லது இந்தமலை என்ற குறிப்பினை மட்டுமே பெறுகிறோம். எனினும் தமிழகம் என்ற பரப்பும், 'மொழி பெயர் தேயம்' என்ற பாகுபாடும் இருந்தமை தெளிவாகிறது. சேர, சோழ, பாண்டியருக்கு எல்லைகூறும் அறிஞர்கள், பிற்காலத்தெழுந்த தனிப்பாடல்களையே அடிப்படையாகக் கொள்ளுகின்றனர்.

பெரும்பாலும் மன்னர்கள் தலைநகரங்களின் பெயருடனோ அல்லது ஆறு, மலை, துறைமுகம் ஆகியவற்றின் பெயருடனோ இணைத்துப் பேசப்படுகின்றனர். கொற்கைக் கோமான், கூடல்வழுதி, கோழியூரன், காவிரி நாடன், பொன்னி நாடன், பொதியிற்செல்வன், முதிரத்துக்கிழவன், தான்றிக்கோன், விச்சிக்கோ ஆகியவற்றை எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம். எனவேதான் ஆட்சிப் பரப்பினைப் பற்றிய குறிப்புகளே சங்க இலக்கியத்தில் இல்லை.

ஆனால் சங்க இலக்கியங்களில் நாடு என்ற பிரிவுப்பெயர் குறிப்பிடப்படுகிறது. துளுநாடு (அகம்:15), காட்டுநாடு (நற்:89), பாழ்நாடு (நற்:126), மிளைநாடு (அகம்:133) கொண்கானநாடு (நற்:391), பறம்புநாடு (புறம்:109) என மிகச்சில நாடுகளின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. அக்காலத்தின் நாடு என்பது பழங்குடி நிலத்தையே குறித்தது என்பது திரு. சொ. சிங்காரவேலு அவர்கள் கருத்து. குறிஞ்சி, முல்லை நிலப்பகுதிகளின் வாழ்விடங்களை முறையே நாடு, ஊர் என்னும் சொற்கள் குறித்தன என்பதைப் புறப்பாடல் ஒன்றால் (49). அறிகிறோம் 'காடு கொன்று நாடாக்கி' எனும் தொடரில் நாடு வாழ்விடம் என்னும் பொதுப்பொருள் தருகின்றது. எனவே நாடு, ஊர் என்னும் சொற்களுக்கு' வாழ்விடம்' என்று பொதுப்பொருள் கொள்வதே பொருத்தமாகின்றது. 'முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நாடு' என்ற அடி (புறம்:110) குறிப்பிடத்தக்கது. பறம்புநாட்டில் முந்நூறு ஊர்கள் இருந்தன என்னும் போது, ஊர், நாடு என்பவை இன்று வழங்கும் சிறிய, பெரிய நிலப்பிரிவுகளைக் குறித்ததென்பது தெளிவாகிறது. ஒரு வேள் என்பவன், ஏறத்தாழ முந்நூறு குடியிருப்புகளைக் கொண்டவன் ஆகலாம் என்று உய்த்துணர இப்பாடலடி இடந்தருகிறது.

இந்தப் பின்னணியில் நோக்கினால், சேர,சோழ,பாண்டிய வேந்தர் ஓரளவு பரந்த நிலப்பரப்பினைக் கொண்டிருந்திருக்க வேண்டும். இவர்கள் பகுதிகளுக்கு இடைப்பட்ட நிலைப்பரப்பிலும், இவர்கள் ஆட்சியினின்று தொலைதூரத்தே அமைந்திருந்த வடமேற்கு எல்லைப்புறங்களிலுமே குலமரபுத் தலைவர்கள் விளங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலவர். குழந்தையவர்கள் கருத்துப்படி, கொங்கு நாட்டின் வடவெல்லையில் அதியமான் நாடு இருந்தது. திரு. கே.வி. சுப்பிரமணிய ஐயர் தொப்பை ஆறு அல்லது வேப்பாடி ஆறு கொங்கு நாட்டின் வடவெல்லையாக அமைய, அவ்வாற்றின் வடக்கே அதியமானின் தகடூர் இருந்தது என்கிறார். கொங்கு மண்டல சதகம் பெரும்பாலையைக் கொங்குநாட்டின் வடவெல்லையென உரைக்கின்றது. பழம்பாடல்கள் தலைமலையினைக் கொங்கு நாட்டின் வடவெல்லையென்கின்றன. இவ்விரண்டுமே ஒரே மலையின் வெவ்வேறு பகுதிகளே. தற்போதைய தருமபுரி மாவட்டத்தில் தோப்பூரை அடுத்துள்ள பெரும்பாலையே இது எனலாம். எனவே இம்மலைக்கு வடக்கிலுள்ள பகுதி அதியனின் பரப்பு எனக் கருதலாம். எனவே தொப்பை ஆறு அல்லது வேப்பாடி ஆற்றுக்கும் பெரும்பாலை மலைக்கும் வடக்கேயுள்ள பகுதியில் அதியன் ஆண்டிருத்தல் வேண்டும். இருப்பினும் தகடூர் நாடு என்ற வழக்கினைப் பல்லவர் காலத்திலிருந்துதான் பெறுகிறோம்.

திருக்கோவலூரை அதியமான் வெற்றிகொண்டான் என்ற குறிப்பு இருப்பினும், அதனை அவனாட்சிப் பரப்பினுள் கொண்டு

வந்தான் என்று கூறுவதற்கில்லை. அன்றைய நிலையில் அதியமான் ஒரு நிலப்பரப்பிற்கு ஆட்சியாளன் என்பதைவிட, பலபடைகளுடைய பெருவீரன் என்பதே சரியான விளக்கமாக அமைய முடியும். குலமரபுக் காலப் பொதுத்தன்மையிலிருந்து மாறுபடாத நிலையில், அதியனின் ஆட்சிப் பரப்பினை வரையறை செய்யப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று கூறுவதைவிட, உண்மையில் ஆட்சிப்பரப்பு என்ற ஒன்று இல்லை என்பதே சரியான முடிவாக இருக்கும்.

அதியனுக்கு நடுகல்

குலமரபுச் சமுதாயத்தில் நீத்தோர் வழிபாடான நடுகல் வழிபாடு மிகச் சிறந்ததோர் இடத்தினைப் பெற்றிருந்தது. குறிப்பாக ஆநிரை கவரும் பூசலில் ஈடுபட்டு இறந்த தலைவர்களுக்கு நடுகல் எடுத்து வழிபடும் வழக்கத்தினைச் சங்க இலக்கியங்கள் பல இடங்களில் சுட்டுகிறது.

'முனையாத் தந்து முரம்பின் வீழ்ந்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலிசூட்டித் துடிப்படுத்து
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்' (அகம்:35)

'கன்றின்
கடைமணி யுகுநீர் துடைத்த ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்,
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்' (அகம்:67)

'நிரையிவண் தந்து நடுகல் ஆகிய
வெள்வேல் விடலை' (புறம்:261)

போன்ற பல பாடல்களில் இருந்து இம்முடிவுக்கு வரலாம். விழுத்தொடை மறவர்க்கும், நல்லமர் கடந்த நாணுடை மறவர்க்கும், நல்லிசை நிறுத்த மறவர்க்கும் நடுகல் நடப்பட்டது. மூதின் முல்லைத் துறையிலமைந்த புறப்பாடல் (335)

'ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளியேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளும் இலவே'

என்று கூறுவதை நோக்க, மறக்குடியினரின் தலையாய தெய்வமாய் நடுகல் விளங்கியமை பெறப்படுகின்றது.

பொதுவாகத் தமிழகத்தில் மிகுந்த அளவில் நடுகற்கள் கிடைத்துள்ள பகுதி செங்கம், தருமபுரிப் பகுதிகள் ஆகும். அவற்றுள் பெரும்பாலான நடுகற்கள் தொறுக்கொண்ட பூசலிலும், தொறுமீட்ட பூசலிலும், ஊர் எறிந்த போதும், விலங்கு பகை கடிந்த போதும்

உயிர் நீத்தவர்கட்கு எடுக்கப்பட்டவை. சங்க காலத்தைச் சார்ந்தனவாகக் கருதத்தகும் நடுகற்கள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் தலைமைப் பொறுப்பில் இருந்த இருவர்க்கு நடுகல் எடுக்கப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. தன் மக்களின்பால் மனம் வேறுபட்டு வடக்கிருந்து உயிர்நீத்த கோப்பெருஞ்சோழனுக்கும் (புறம்:221), அதியனுக்கும் (புறம்:232) நடுகல் எடுக்கப் பட்டிருக்கின்றது. குலமரபுக்கே உரிய பண்பாடு இதுவாயினும், பிற தலைவர்கள் எவருக்கும் கிடைக்காத குறிப்பு அதியனுக்குக் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதியமான் இறந்துவிட்ட பின்னர், அவனுக்கு நடுகல்நட்டு, அக்கல்லுக்குக் கள்ளினைப் படைத்து வணங்குவதைக் கண்ட ஔவையார்,

> 'நடுகற் பீலி சூட்டி நாரறி
> சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ'

என்று அரற்றிப் பாடுகிறார். ஆனால் அவரே மற்றொரு பாடலில் அதியனுக்கு இட்ட ஈம ஒள்ளழலையும் பாடுகின்றார் (புறம்;231). இந்நிலையில் அதியனை எரித்தார்களா, அல்லது புதைத்து நடுகல் நாட்டினார்களா என்றறிய வாய்ப்பு இல்லை. இதனைக் கருத்திற்கொண்ட ஆய்வாளர் திருமதி. சோதிபாய், இவனது இறுதிச் சடங்கு குறித்து ஒரு வேறுபாடு எழுந்திருக்கின்றது; சுடவேண்டும் என்பாரும், நடவேண்டும் என்பாரும் இருந்திருக்கின்றனர். எனவேதான் ஔவையாருக்கு இரண்டையும் பாடும் தேவை ஏற்பட்டது என்கிறார்.

சங்க காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் இடங்களில் பெருங்கற்களை நட்டு வைத்தல், கற்குவைகளை இடுதல் ஆகிய வழக்கங்கள் இருந்தன (அகம்:269). இறந்தோரை எரிக்கும் வழக்கமும் இருந்தது (புறம்:231,246). ஆனால் நடுகல் நடுவதற்கும், இறுதிச் சடங்கிற்கும் இருந்த தொடர்பினைத் தெளிவாக அறிய இயலவில்லை. ஏனெனில் நடுகல் நினைவாக நடப்படும் கல். இறுதிச் சடங்கு எப்படி நடந்திருப்பினும், வணங்குவதற்காக நடுகல் நடப்பட்டது. இதுவரை நடுகல் நின்ற இடங்களில் செய்த அகழ்வாய்வுகளிலும், இறந்தவரின் எலும்புகளோ, அவர்கள் பயன்படுத்திய பொருட்களோ கிடைக்கவில்லை. எனவே எரித்ததன் பின்னர் நடுகல் நடப்பட்டிருக்கலாம்.

அண்மைக்கால ஆய்வுகள் கால்நடைகளை வளர்த்துப் பாதுகாக்கும் – ஆநிரை கவர்ந்து பெருக்கும் வீரர்களுக்கே நடுகற்கள் பெரும்பாலும் எடுக்கப்பட்டன என்று தெளிவாக்குகின்றன (திரு.ஆர். பூங்குன்றன்) அதியர் குலத்தலைவர்கள் பலரை மாற்றரசரோடு புரிந்த போர்களில் அல்லாமல், பல இடங்களில் ஆநிரை காவலர்களாக –தொறுக்கோடலைப் பணியாகக் கொண்டவர்களாக – அது குறித்த

பூசலில் ஈடுபட்டு வீரம் விளைத்தவர்களாகக் காண்கிறோம். கால்நடை வளர்ப்புச் சமுதாயத்தின் சிறந்த தலைவர் ஆயினும், அதியமான் நெடுமானஞ்சி எந்தப் போரில் இறந்தான் என்பதைத் தெளிவாக அறியச் சான்றில்லை. இருப்பினும் அவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டது என்பது மட்டும் உண்மை.

அதியரைச் சுற்றிய தொன்மக் கதைகள்

குலமரபுச் சமுதாயத்தின் மற்றொரு பண்பாட்டுக்கூறு பல செயற்கரிய செயல்களை, குலத்தலைவர்களும், அவர்தம் பரம்பரையில் முன்னோர்களும் செய்ததாகக் கூறுவதாகும். இவ்வாறு கூறுவதன் மூலம், அத்தலைவனுக்குப் புகழினை மிகுவிப்பதோடு, அக்குலத்திற்கும் பெருமை சேர்க்கப்பட்டது.[54] இவ்வகையில் சங்கப் பாடல்களிலும் ஆளும் தலைமையில் உள்ள குடியினர் சிலருக்கு அத்தகைய கதைகள் கூறப்பட்டிருப்பது கவனத்திற்குரியது.

சோழ மரபின் முன்னோன் ஒருவன், புறவின் துயர் துடைப்பதற்காகத் துலாம் புகுந்தவன் என்றும், செம்பியன் என்பான் தூங்கெயில் எறிந்தவன் என்றும் (புறம்:39), தொன்மக் கதைகளைக் கொண்டு விளங்குகின்றனர். இதுபோலக் கபிலர் இருங்கோவேளைப் பாடும்போது.

‘குடபால் முனிவன் தடவினுட் தோன்றி
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே’

என்று பாடுகிறார் (புறம்:201). இதுபோன்ற தொன்மக் கதைகள் அருகியே சங்கத் தொகுப்பில் உள்ளன. எனினும் அதியரைப் பொறுத்தவரை பல தொன்மக் கதைகள் இக்குலத்துக்குரியவையாகக் கூறப்பட்டுள்ளன. இவையனைத்தையும் பட்டியல் இட்டதுபோல ஒருபாடலில் (புறம்:99) ஒளவையார் கூறுகிறார். அதியர்குல முன்னவர்கள்

1) கேள்வி வேட்டு அமரரை விரும்பி அழைத்துப்பேணினர்.

2) கிடைத்தற்கரியதாகிய கரும்பினைத் தேவருலகத்திலிருந்து இவ்வுலகிற்குக் கொண்டு வந்தனர்.

3) நீரின் நடுவே இருந்து ஆட்சி செய்தனர்.

ஆகிய செயற்கரிய செயல்கள் கூறப்பெறுகின்றன. மேலும் இப்பாடல் இவரது நாட்டில் ‘பூவார் கா’ வொன்று இருந்ததையும் சுட்டுகிறது. இவ்வடிக்கு உரையெழுதிய உரைகாரர், ‘வானோர் இவன் முன்னோர்க்கு வரங் கொடுத்தற்கு வந்திருந்த தொரு கா’ என்று பொருள் எழுதுகிறார். எனவே இதுவும் இக்குடிக்குரிய ஒரு தொன்மக் கதையாகவே தெரிகிறது. இவ்வகையில் அதியர் குடியும் ஆளும்

54. Romila Thapar pp. 294-325.

உயர்நிலையினின்று மாறாதிருக்கும் சிறப்பினைப் பெற்றது.

அதியரும் பிறசில குலமரபுகளும்

ஆளும் தலைமைக்குடியாக விளங்கிய அதியர் குடி, உதியர் குடியுடனும், மழவர் குடியுடனும் இணைத்துச் சில இடங்களில் பேசப்படுகின்றது. அன்றியும் சங்கத் தொகுப்பில் இடம்பெறும் ஆளும் தலைமையுடையோர் சிலரது பெயர்களும், பாடல்களைப் பாடிய புலவர் சிலரது பெயர்களும் அவர்களை அதியர் குடியோடு தொடர்புடையோராகக் ஊகிக்கச் செய்கின்றன.

அதியரும் உதியரும்

அதியர் மரபுக்கும் உதியர் மரபுக்கும் தொடர்பு இருந்தது என்று ஊகிக்கும் வகையில், 'ஈகையங்கழற்கால் இரும்பனம் புடையல்' என்ற புறப்பாடல் (99) அடி அமைந்துள்ளது. அதியன் பனமாலைக் குரியவன் என்று இப்பாடல் கூறுகிறது. தோல்வியுற்ற குடியின் மாலையினை வெற்றி பெற்றவர் அணிந்து கொள்வது வரலாற்றில் வழக்கம்தான். எனினும் அதியர் சேரரை வென்று மாலைசூடியதாகச் சங்கத் தொகுப்பில் பாடல்கள் எதிலும் சான்று கிடைக்காத நிலையில் இவரும் சேரர் குடிக்குரியவரே என்று கொள்ளல் சாலவும் பொருந்துவதே. இப்பாடலுக்கு உரைசெய்தோர் 'இவனுக்குப் பனந்தார் கூறியது சேரமாற்கு உறவாதலின்' என்றும், அல்லது 'உதிய வேந்தாதலின் என்றும் கூறும் விளக்கமும் இம்முடிவுக்கு அரண் சேர்க்கின்றது, மேலும் இப்பாடலில் வரும்,

'நீரக விருக்கை ஆழிசூட்டிய
தொன்னிலை மரபின் நின் முன்னோர்'

என்ற அடிகளுக்குக் 'கடல் சூழ்ந்த பகுதியின் தலைவர்' என்று பொருள் கொள்ளுவோமாயின், அதுவும் இக்கருத்தினை வலியுறுத்துவதாக அமையும். மேலும் தகடூர் யாத்திரைப் பாடல்களை ஆராய்ந்த அறிஞர்கள் 'ஒரு குலத்து உதித்த அரசர் இருவருக்குள் தாய வழக்குப்பற்றி நிகழ்ந்த போரினை விரித்துக் கூறுவது' என்ற முடிவுக்கு வருகின்றனர்.[55] அவ்விருவர், சேரரும் அதியருமே ஆவர். எனவே இவ்விருவரும் தாயமுறையினர் என்பது பெறப்படுகின்றது. இவ்வாறு இவ்விருவரும் தாயமுறையினர் என்று கருதும் மரபுரிமை கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையிலும் கூடத் தொடர்ந்து அதியரால் ஏற்கப்பட்டு வந்தது என்பதனை அக்குலமரபில் வந்தவனாகிய விடுகாதழகிய பெருமாளின் திருமலை மற்றும் லட்டிகம் கல்வெட்டுகளில் இடம்பெறும் 'வஞ்சியர் குலபதி', 'சேரனதிகன்' என்ற தொடர்கள் வலியுறுத்தும். இதுகாறும் கூறியவற்றால், அதியரும் உதியரும் அதாவது சேரரும் ஒருகுலத்தின் கிளைக்குடியினரே எனக் கொள்வதில் தவறேதும் இல்லை.

---

55. வையாபுரிப்பிள்ளை மற்றும் பலர்.

அதியரும் மழவரும்

புறநானூற்றுப் பாடல்கள் இரண்டில் அதியன் 'மழவர் பெருமகன்' என்று குறிப்பிடப் பெறுகின்றான் (88,90). மழவர் என்போர் தமிழகம் முழுவதும் பரவியிருந்த, ஓரிடத்தில் நிலையாகத் தங்காத போர்ப் பயிற்சியுடைய வீரர்கள்.[56] இவர்கள் கால்நடை வளர்ப்பு இனக்குழு மக்களிடையே தோன்றியவராதல் வேண்டும்.[57] ஒரே போரில் ஆநிரைகொள்ளும் வெட்சியராகவும், ஆநிரை மீட்கும் கரந்தையராகவும் மழவரே போரிட்டதை அகநானூற்றுப் பாடல் (35) காட்டும். நச்சினார்க்கினியர் 'மழவர் என்பார் சிலவீரர்' (மதுரைக்:அடி:395) என்று உரை கூறுகிறார். தொல்காப்பியம் 'மழவும் குழவும் இளமைப் பொருள' (தொல்:சொல்:311) என்கிறது. பொதுவாக 'நெடுவேற்குறும்படை மழவர்' (அகம்:35) என்றும், 'பெருந்தோள் மழவர்' (மதுரைக்:அடி:687) என்றும், 'உருவக்குதிரை மழவர்' (அகம்:11) என்றும், பலவாறாக மழவர் புகழப் பெறுகின்றனர். அனைத்திலும் மழவரின் வீரமே பெருஞ்சிறப்புப் பெறுகின்றது. பிற திராவிட மொழிகளிலும், 'மழ' என்ற சொல் வீரம் என்ற பொருள் தருவதாக அகராதி சுட்டுகிறது.[58] எனவே இளமையும், வலிமையும் பொருந்திய வீரர்களே மழவர் எனப்பட்டனர் எனத் துணியலாம். தனியொரு குலப்பெயராகக் கருதத்தக்க சான்று ஏதும் இல்லை. எனினும் வேங்கடத்துப்புல்லி, மழபுலம் வணக்கிய வீரனாகக் குறிக்கப்படுகிறான். இது மழவர்க்கெனத் தனிநிலப்பகுதி இருந்திருக்கக் கூடுமோ என்று ஐயுறச் செய்கிறது. சேரருள் பல்யானைச் செல்கெழு குட்டுவனும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் பதிற்றுப்பத்தில் மழவர் மெய்ம்மறை (பதிற்று:21,55) எனப் புகழப் பெறுகின்றனர். இது போர்ப்பயிற்சியுடைய வீரர்களைச் சேரர் கொண்டிருந்தனர் என்பதையே காட்டுவதாகக் கொள்ளலாம். ஏனெனில் 'பூழியர் மெய்ம்மறை' (பதிற்று:73) என்றும், 'சான்றோர் மெய்ம்மறை' (பதிற்று:14) என்றும் வரும் தொடர்கள் இத்தகைய பொருளுடையதாய் இருக்கக் காண்கிறோம். குலமரபுத் தலைவர்களில் ஓரியும் அதியரும் மழவர் பெருமக்களாகப் பாராட்டுப்பெறுகின்றனர். பதிற்றுப் பத்தின் ஆறாம் பத்தின் பதிகம் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 'ஏனை மழவரைச் செருவிற் சுருக்கினான்' என்று கூறுகிறது. எனவே மழவர் குலத்தின் தலைவன் அதியன் என்று பொருள் கொள்ளாது, இளைய, வலிய வீரர்களுக்குத் தலைமையானவன் என்ற பொருளிலேயே அதியன் 'மழவர் பெருமகன்' என்றழைக்கப்பட்டான் என்று கருதுவது பொருத்தமாகும்.

56. M.A. Dorai Rangasamy. p.119.

57. ஆர் பூங்குன்றன் ப 119

58. T. Burrow M.B. Emearaeaw, A. Dravidian Etymological Dictionary. p.315.

பெயரொற்றுமை

பெயரொற்றுமை கருதித் தொடர்புடையோராகச் சிலர் விளங்குகின்றனர். இவர்களும் ஏதோ ஒருவகையில் அதியர் மரபுக்குத் தொடர்புடையோராதல் வேண்டும்.

ஆதன் எழினி: ஆதன் என்ற பெயர் சேரருக்கு உரியது என்பதைச் செல்வக் கடுங்கோ வாழியாதன், சேரலாதன் போன்ற பெயர்களில் இருந்து அறிகிறோம். இதே ஆதன் என்ற பெயர் அவினி, அழினி, எழினி, நுங்கன், ஓரி ஆகிய பெயர்களுக்கு முன்னொட்டாக வருகின்றது. எழினி என்ற பெயர் அதியமான் நெடுமானஞ்சியின் மகனான பொகுட்டெழினியிலும், வேறுபல இடங்களில் தனித்தும் சங்கத் தொகுப்பில் இடம் பெறுகின்றது. எனவே இவ்வாதன் எழினி சேரர் வழியிலும், அதியர் வழியிலும் தொடர்புடைய ஒரு குடியினன் ஆதல் வேண்டும். இவன் நீர்வளம் உடைய செல்லூர் என்னும் ஊருக்குத் தலைவனாகக் கூறப்படுகிறான். இச்செல்லூரைச் சோழமண்டலத்து உள்ளதாக அறிஞர் கூறுவர்.

கண்ணன் எழினி: எழினி என்ற பெயரினைப் பெற்றிருத்தலின் இவனையும் அதியர் குடிக்குரியவனாகக் கருதலாம். முதுகுன்றத்தின் தலைவனாக இவன் குறிக்கப்படுகிறான் (அகம் : 197). இவன் 'முன்னுவர்' என்ற குலத்தினை வெற்றி கண்டவன் என்று புகழப்படுகின்றான். தற்காலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள விருத்தாசலம், முதுகுன்றம் எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது.

வாட்டாற்று எழினி ஆதன்: இவனது நீர்வளம் மிக்க நாட்டினை மாங்குடி மருதனார் புகழ்ந்து பாடுகின்றார் (புறம் : 396). கடற்கரையை ஒட்டிய இவனது ஊரில் புள்ளொலியும், பறையொலியும் நிறைந்திருக்கக் கோசர் நறவுண்டு குரவையாட, அனைவர்க்கும் கேளாக இருக்கும் இவன் தந்த சுவையுடை அடிசிலைப் புகழ்ந்து பாடுகிறார் அவர். தானும் பிறரும் வாழ்ந்த நாளனைத்தும் பெற்று அவன் வாழவேண்டுமென வாழ்த்துகிறார் புலவர். வாட்டாறு தற்போதும் அதேபெயரில் கேரளத்தின் தென்கோடியில் உள்ளது. சேரரோடும் அதியரோடும் உள்ள பொதுத் தொடர்பினை இவன் பெயரும் சுட்டி நிற்கிறது.

இனி பெயரால் அதியருடன் தொடர்புபடுத்தத் தக்க புலவர் இருவர் இருந்தனர் என்றும் அறிகிறோம்.

அஞ்சியத்தை மகள் நாகையார்: அகநானூற்றின் ஒருபாடலை (352) இவர் பாடியுள்ளார். இவரைப் புகழுக்குரிய மன்னனான அதியமான் நெடுமானஞ்சியின் அத்தைமகள் என்று கருதலாம். அகுதை என்பதே அத்தையென பிற்காலத்தே மருவியிருக்கலாம் என்று தோன்றுகிறது. எனவே 'அத்தைமகள்' நாகையார் என்பதை

அகுதைமகள் நாகையார் என்றும் கொள்ளலாம். அதிலும் அஞ்சி என்பதில் எந்த மாற்றமும் இல்லை. எனவே எவ்வாறு எடுத்துக் கொண்டாலும் இவரை அதியருக்கு உறவுடையோராகவே கருதலாம்.

அதியன் விண்ணத்தனார் : அதியன் என்ற அடைமொழி கொண்ட இவரது பெயரிலிருந்து இவரும் அதியர் குடிக்குரியவர் என்று கருத இடம் உள்ளது. இவரது பாடல் ஒன்று அகநானூற்றில் ***(301)*** இடம்பெற்றுள்ளது.

இயல் II

குலமரபுச் சமுதாய வீழ்ச்சிக் காலத்தில் அதியர் நிலை
(கி.பி. 4–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.985 வரை)

பொருளாதார உற்பத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லாததால் குலமரபுச் சமுதாயம் வீழ்ந்துபட்டது. இதே காலத்தில் விவசாயப் பொருளாதாரத்தின் அடிப்படையில் புதிய தலைவர்கள் உருவாகத் தொடங்கினர். அந்தப்புதிய வளர்ச்சியில், குலமரபுச் சமுதாய காலத்திலிருந்த ஆளும் குடிகள் சில தொடர்ந்து வரலாற்றில் இடம் பெற்றன. இவ்வகையில் அதியர்குடி இருகிளைகளாகி, ஒன்று தொல்குடியாகத் தகடூர்ப்பகுதியிலும், மற்றொன்று வளமிக்க மழவர்குடியாகச் சேலம், நாமக்கல் பகுதிகளிலும் உருப்பெற்றது. இவ்விரு கிளைகளையும் சார்ந்த அதியர்குலத் தோன்றல்கள் சிலர் வரலாற்றில் இடம் பெறுகின்றனர்.

சமுதாய மாற்றம்

குலமரபுச் சமுதாய காலத்தில் சிறுசிறு பகுதிகள் பலவற்றிற்குத் தலைவர்களாகப் பல குடித்தலைவர்கள், சீறூர் மன்னர்கள், வேளிர்கள் போன்றோர் விளங்கினர். அவர்களுக்குள் முதன்மை பெற்றவர்களாக வேந்தர் சிலர் விளங்கினர். அவர்கள் ஆற்றங்கரைப் பகுதிகளில் ஓரளவு விவசாய நிலம் உடையவர்கள்; இயற்கை வளங்களை முறைப்படுத்தி அவற்றின் வழி பொருளீட்டும் வணிகச் சிறப்புடையவர்கள்; எனவே இவ்விரு வகைகளிலும் இவர்கள் செல்வர்களாயினர். இவ்விரு வகையி னருமே ஆளும் தகுதி படைத்த தொல்குடியினர் ஆவர். எனினும் இவர்கள் அடிப்படைப் பொருளாதாரத்தில் பெரும் முன்னேற்றம் எதையும் அடையவில்லை. வணிகக் குறிக்கோளுடன் கூடிய உற்பத்தியையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. எனவே ஓரளவு செல்வர்களாக விளங்கிய அவர்தம் நிலையில் சரிவு ஏற்படுவது தவிர்க்க இயலாததாகிவிட்டது. தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்த மேலை நாடுகளிலும் வணிகத் தொய்வு இக்கால கட்டத்தில் ஏற்பட்டது.

இந்நிலையில் வேளாண்மையிற் சிறந்து தத்தம் பகுதிகளில் உபரியாக நெல் விளைக்கும் ஆற்றல் கொண்டோர் மீண்டும் புதிய தலைவர்களாக உருவாயினர். புறநானூற்றுத் தொகுப்பின் இறுதியில் வரும் பாடல்கள் (383,385,388,390,391,399), இத்தகு தலைவர்கள் பலரை அடையாளம் காட்டுகின்றன. அவியனைப் பாடும் மாறோக்கத்து நப்பசலையார்

> 'நெடுங்கடை நின்று பகடுபல வாழ்த்தி
> தன்புகழ் ஏத்தினேனாக'

என்று அவியனின் காளைச் செல்வத்தினைப் புகழ்கிறார்.

அவன்,

'கன்றுபல கெழீஇய கான்கெழு நாடன்'

என்றும் கூறுகிறார் (புறம்:383). அம்பர்கிழான் அருவந்தையைப் பாடும் கல்லாடனார்,

'வெள்ளி தோன்ற புள்ளுக்குரல் இயம்ப
புலரி விடியல் **பகடுபல** வாழ்த்தி'

னேன் என்றும்

'காவிரி அணையும் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன்'

என்று அவன் நெல்விளையும் நிலவளத்தை உடையவன் என்றும், கூறுகிறார் (புறம்:355). சிறுகுடிக்கிழான் பண்ணனை,

'வினைப்பகடு ஏற்ற மேழி இணைத் தொடர
நாள்தொறும் பாடேன் ஆயின்'....
'கண்மாறிலியர் என் பெருங்கிளைப் புரவே'

என்று சிறப்பிக்கிறார், அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் (புறம்:388). பொறையாற்றுக் கிழானைப் பாடும் கல்லாடனார்,

'தண்துளி பல பொழிந்து எழினி இசைக்கும்
விண்டனைய விண்தோய் பிறங்கல்
முகடுற உயர்ந்த நெல்லின் மகிழ்வர
பகடுதரு பெருவளம் வாழ்த்தி....
துளிபதன் அறிந்து பொழிய
வேலி ஆயிரம் விளைய நின் வயலே'

என்று அவனது நெல் மிகுதியைப் பாராட்டுகிறார் (புறம்:391). தாமான் தான்றிக் கோனைப் பாடும் ஐயூர் முடவனார், தானொரு பகடு கேட்க, அவனோ விண்மீன் கூட்டத்தினைப் போல நிறைந்த ஆநிரைகளைக் கொடுத்தான் என்னும் செய்தியை,

'பகடே அத்தை யான் வேண்டி வந்தது என
ஒன்று யான் பெட்டா அளவை, அன்றே
ஆன்று விட்டனன் அத்தை விசும்பின்
மீன்பூத்தன்ன உருவப் பல்நிரை
ஊர்தியொடு நல்கியோனே'

என்னும் புறப்பாடலில் (399) தெரிவிக்கிறார். இவ்வாறு வேளாண் மையினை அடிப்படையாகக் கொண்ட தலைவர்கள் – கிழார்கள் தோன்றிய புதிய சூழ்நிலையை இப்பாடல்கள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

புறம் 357–ஆம் பாடல் முப்பெரும் தொல்குடியினரும் கூட மறைந்துவிட்டனர் என்ற செய்தியைக்

> 'குன்று தலைமணந்த மலை பிணித்து யாத்த மண்
> பொதுமை சுட்டிய மூவர் உலகமும்
> பொதுமை இன்றி ஆண்டிசினோர்க்கும்
> மாண்ட அன்றே, யாண்டுகள்'

என்று கூறுகிறது. இதனை நிலையாமைத் தத்துவத்திற்காகப் பாடிய பாடல் என்று கொள்வதைவிட, தமிழ்கூறு நல்லுலகின் பொதுமை பொறாது ஆண்ட மூன்று பெரும் குடிகளும் கூட மறைந்துவிட்டன என்ற வரலாற்றுக் குறிப்பினைத் தருவதாகக் கொள்ளுதல் பொருத்தமாகத் தோன்றுகிறது. பத்துப்பாட்டுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படைத் தலைவன் ஓய்மாநாட்டு நல்லியக்கோடனைப் பாடும் நல்லூர் நத்தத்தனார்,

> 'குடபுலங் காவலர் மருமான் ஒன்னார்
> வடபுல இமயத்து வாங்குவிற் பொறித்த
> எழுவுறழ் திணிதோள் இயல்தேர்க் குட்டுவன்
> வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே' (அடி 47–50)

என்றும்,

> 'செழியன் தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
> மகிழ்நனை மருகின் மதுரையும் வறிதே' (அடி 66–67)

என்றும்,

> 'நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்
> ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே' (82–83)

என்றும், ஈகைச் செந்நுகம் பூண்ட வள்ளல் எழுவரும் மாய்ந்தனர் என்றும் கூறி, இவர்கள் அனைவரின் கொடைத் திறத்தினையும், தானே ஒருவனாகித் தாங்கும் திறனுடையவன் என்ற பொருளில்,

> 'எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
> விரிகடல் வேலி வியலகம் விளங்க
> ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்' (113–115)

என்று பாராட்டுகிறார். இவ்வாறு பாராட்டியதன் மூலம், முதுபெரும் முக்குடி வேந்தரும், வேளிர் எழுவரும் மாய்ந்துவிட்டனர் என்பதை நல்லியக் கோடனுக்கு அளித்த பாராட்டாக மட்டும் எடுத்துக் கொள்வதைவிட, உண்மையில் பெரும் பெயருடன் ஆளும் குடியாக விளங்கிய பலரும் தாழ்ந்துவிட்டனர் என்ற வரலாற்றுக் குறிப்பினைத் தருவதாகக் கொள்ளுதல் பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

சங்ககாலக் குலமரபுச் சமுதாயத்தின் இறுதிக்கட்டத்தில், அச்சமுதாயத்திற்கேயுரிய சிறப்புகள் பலவும் குன்றின. இரப்போர்க்கு ஈயா இன்மையைத்தான் உறுவதை மிகப் பெரும் இழிவாகக் கருதிய மன்னர் வாழ்ந்த காலம் மாறி,

'பெரிய ஓதினும் சிறிய உணராப்
பீடின்று பெருகிய திருவின்
பாடில் மன்னர்'

இருந்ததை ஏணிச்சேரி முடமோசியார் காட்டுகிறார் (புறம்:375).

'பயம்பகவு அறியா மயங்கரில் முதுபாழ்
பெயல் பெய்தன்ன செல்வத்து ஆங்கண்
ஈயா மன்னர் புறங்கடை' என்று

செல்வம் பெற்றிருந்தும் ஈயாத மன்னரைக் குறிப்பிடுகின்றார் நன்னாகனார் (புறம்:381). எனவே சமுதாய நிலையில், பொருளாதாரத்திலும், அதையொட்டிய பண்பாட்டிலும் சரிவு ஏற்பட்டது என்பதைப் புறநானூற்றுத் தொகுதியின் இறுதியிலுள்ள பாடல்களே நமக்குணர்த்துகின்றன.

இந்நிலையில் முன்னர்க் குறிப்பிட்டதுபோல, வளமான பகுதிகளில் தோற்றம் பெற்றுப் புதியவர்களாக நிலைபெறத் தொடங்கிய தலைவர்கள், வீரமிக்க தொல்குடிகளைத் தம்மோடு இணைத்துக் கொள்வதன் மூலம் பெரிய அரசர்களாக மாறமுயற்சி செய்திருத்தல் வேண்டும். அம்முயற்சியில் பெரும் இக்கட்டான சூழலை அவர்கள் சந்தித்தார்கள் என்றே நாம் கருத வேண்டியுள்ளது. இவ்வகையில் புறநானூற்றில் 336 முதல் 355 வரையுள்ள 20 மகட்பால் காஞ்சித்துறைப் பாடல்கள் நமக்குப் பெருந்துணை புரிகின்றன. மகள் கேட்டு வந்தவர்களை 'வம்பவேந்தர்' என்று சுட்டுகிறது பாடல் (புறம்:345). மகட்கொடைக்குரிய தொல்குடிகளும் வளமான மருத நிலத்தலைவர்களாகவும் விளங்கியிருக்கின்றனர் (புறம்:342). அவர்கள் பலகாலமாக முப்பெரும் குடியினருக்குப் போர்த்தொழில் செய்யும் மறவர்களாக விளங்கியவர்கள்.

'கொற்ற வேந்தர் வரினும் தன்தக
வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்' (புறம்:339)

'வேந்து குறையுறவும் கொடாஅன்' (புறம்:341)

'நலம் சால் விழுப்பொருள் பணிந்து வந்து
கொடுப்பினும்
புரையர் அல்லோர் வரையலன் இவ எனத்
தந்தையும் கொடாஅன்' (புறம்:343)

'துறை நணி மருதத்து இறுக்கும் ஊரொடு
நிறைசால் விழுப்பொருள் தருதல் ஒன்றோ
....
செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
நிரல் அல்லோர்க்குத் தரலோ இல்' (புறம்:345)

ஆகிய பாடலடிகள், எதிர்த்துப் போர் புரியும் நிலையிலும், வேந்தர்கள்

குறையிறந்து மகட் கேட்கும் நிலையிலும் மிகுந்த செல்வத்தையும், மருதநிலத்து ஊர்களையும் தந்து மகள் கேட்கும் நிலையிலும், 'நிரல்' என்னும் தொல்குடிப் பண்பு இல்லாதோர்க்கு மகளை மணம் புரிந்து கொடுக்க விரும்பாத நிலையினைத் தெளிவாகக் காட்டுகின்றன. கடுமான் வேந்தர் காலை வந்து தொல் குடியினரின் நெடுநிலை வாயில் நின்று கேட்கும் நிலையிலும், அரைசு தலைவரினும், வளைந்து கொடுக்காத தொல்குடிகளாக அவர்கள் சுட்டப்பெறுகின்றனர். எனவே புதிய வேந்தர்கள் மணவுறவு கொள்வதன் மூலம் தொல்குடிகளை இணைத்துக் கொள்ளச் செய்த முயற்சியில்[1] மிகுந்த அக்கறை காட்டினர் என்று தெரிகிறது.

இத்தகைய புதிய சூழ்நிலையில், வடபுலத்துப் புதிய பண்பாடும், சாதவாகன பேரரசின் சரிவுக்குப் பின்வந்த பல்லவர்களும் தமிழகத்தின் வடபகுதியை அடைந்திருத்தல் வேண்டும். குலமரபுக் காலப் பண்பாட்டுச் சரிவுக்குப் பின்னர், தமிழகத்தில் பெருந்தலைவர்களோ, அரசுகளோ இல்லாத சூழ்நிலையில்தான் பல்வேறு சிறுசிறு தலைவர்கள் பெயர் தெரியாதவர்களாய்த் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவியிருந்திருக்கின்றனர். ஆணித்தரமான, கட்டுக்கோப்பான பொருளாதார அடிப்படை இல்லாத நிலையில் பண்பாடும், நாகரிகமும் செழித்த நிலையும் அங்கில்லை. குலமரபுச் சமுதாயத்தின் இறுதியில்,

'ஏற்றபார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி'

நல்வினையினை தாம் வாழும் காலத்திலேயே தேடிக் கொள்ளுமாறு அறிவுறுத்தும் நிலை வந்துவிட்டது.

'அவி உணவினோர் புறங்காப்ப
அற நெஞ்சத்தோன் வாழ நாள்'

என்று வாழ்த்துகிறார் உலோச்சனார் (புறம்:377). வால்மீகியாரோ,

'வையமும் தவமும் தூக்கின் தவத்துக்கு
ஐயவி அனைத்தும் ஆற்றாது'

என்று தவத்துக்கு முன்னுரிமை தரும் கருத்தினைப் புகல்கிறார் (புறம்:358). 'இவ்வையக வாழ்விற்கு ஐயவி புகைத்துச் செய்யும் வேள்விகள் அவசியம்' என்று கருதும் நிலையும் ஏற்பட்டது. சிறுவெண்தேரையார்,

'உடையிலை நடுவணது இடைபிறர்க் கின்றி
தாமே ஆண்ட ஏமாங் காவலர்
இடுதிறை மணலினும் பலரே, சுடுபிணக்
காடுபதியாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்று மாய்ந்தனரே

1. K. Kailasapathy, p. 251.

....

உடம்பொடு நின்ற உயிரும் இல்லை'

எனவே,

'இன்னா வைகல் வாரா முன்னம்
செய்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே' (புறம்:363)

என்று பாடுகிறார்.

இத்தகைய புதிய சித்தாந்தங்கள் பல்கிப் பெருகிப் பரவத் தொடங்கிய நிலையில், குலமரபுத் தலைவர்கள் மறைந்து விட்டனர். புதிய மாறுபட்ட சமுதாயம் மலர்ந்துவிட்டது. இந்தநிலை தமிழகத்தில் மட்டுமல்லாமல் அண்டை நாட்டுப் பகுதிகளிலும் பரவி இருந்தது. எனவேதான் இடைப்பட்ட சுமார் 200 ஆண்டுக்காலத்தில் எந்தவிதமான வரையறுத்துக் கூறத்தக்க அல்லது குறிப்பிடத்தக்க பண்பாட்டு எச்சங்களையும் காணமுடியாத அளவிற்கு தமிழக வரலாறு அமைந்துள்ளது.

இதனை அடுத்து கி.பி.4–5–ஆம் நூற்றாண்டளவில் கிடைக்கின்ற நடுகற்கள், பூலாங்குறிச்சிக் கல்வெட்டு, மற்றும் 7–ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் எழுதப்பட்ட பல்லவ பாண்டியர்தம் செப்பேடுகள் ஆகியவற்றின் துணைகொண்டு, இவ்விடை காலத்தினை ஊடுருவி நோக்கித் தெரிந்து கொள்ளும் நிலையில்தான் நாமிருக்கிறோம். அதன்வழி நோக்கினால், இடைக்காலத்தில் சமண, பௌத்த நூல்கள், வைதிகப் பூச்சுகளுடன் கூடியதும், அன்றைய அரசியல் சட்ட நூலாகக் கருதப்பட்டதுமான அர்த்த சாஸ்திரம், பாரதம் மற்றும் புராணநூல்கள், மனுவின் சமுதாயச்சட்டம் இவைகளை ஏற்றுக் கொண்டதுமான அரசும், சமுதாயமும் வளர்ந்துவிட்டநிலை காணப்படுகிறது. பண்டைய தமிழ்ச் சமுதாயத்தின் எச்சங்களை நடுகற் கல்வெட்டுகளின் மூலம் மட்டுமே நாம் காணமுடிகிறது. ஏனெனில் நடுகற்கள் காணப்படும் பகுதி மேலே குறிக்கப்பட்ட கலாச்சார பண்பாட்டுத் தாக்கங்கள் ஏதும் நுழையத் தேவையில்லாத, பொருளாதார முன்னேற்றம் பெறாத தொல்குடியினத்தவர் வாழ்ந்த பகுதிகள் ஆகும்.

தமிழகத்தில் மட்டுமின்றி, இந்திய அளவிலும் இக்காலகட்டத்தில்தான் பெரிய அரசுகள் தோற்றம் பெற்றன. அரசுகள் தோற்றம் பெற்றதும் அவை அரசுக்குரிய அங்கங்களாக மேலே குறிப்பிட்ட அரசியல் நூல்களில் கூறப்பட்ட படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகியவற்றையும் முறைப்படி தோற்றுவித்துக்கொண்டு செயல்படத் தொடங்கின. இக்காலகட்டத்தில் தமிழகத்திலும் குலமரபுச் சமுதாயம் முழுவதுமாகச் சிதறி, அரசுகள் தோற்றம் பெற்றன; தலைநகரங்கள் உருவாக்கப் பெற்றன; முதன்முதலாக அமாத்யர்களையும், அமைச்சர்களையும் காண்கிறோம், ஐம்பெருங்குழுவையும், சேனாதிபதிகளையும் பார்க்கிறோம்;

பூலாங்குறிச்சிக் கல்வெட்டு சமண, பௌத்தப்பள்ளிகளைக் கூறுவதோடு, பிரம்மதாயக் கிழவர்களையும், பல்வேறு அரசியல் அதிகாரிகளையும் குறிக்கிறது. சைவ, சமண, பௌத்தக் கோயில்களையும் சுட்டுகிறது.

இவ்வாறு ஒவ்வொரு அரசமரபும் அரசுகளைத் தோற்றுவித்த நிலையில் ஒன்றுக்கொன்று தகுதியினை (Status) ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலும், அரசர்களின் உயர்வினை நிலைநிறுத்தும் வகையிலும் சில மதச் சடங்குகளைச் (அரசியற் சடங்குகளாகவும் அவை கருதப் பட்டன) செய்வதைக் கடமையாகக் கொண்டன. இவை பெரும்பாலும் வேதங்களை அடியொற்றி அமைந்ததால், அப்பணியினைச் செய்ய புரோகிதர்கள் உரியவர்களாயினர். எனவே அரசுத் தகுதியினை நிலையிடுதல், அதற்குரிய வேள்விகளைச் செய்தல் ஆகிய பணிகள் அவர்கட்கே வரையறுக்கப்பட்டன. அரசியலுக்குத் தேவையானதாகக் கருதப்பட்ட வேதச் சடங்குகளோடு, கணிதம், மருத்துவம், சண்டைப் பயிற்சி ஆகியவற்றுக்கும், அவற்றுக்கென வரையறுக்கப்பட்ட நூல்களைக் கற்றல், பயிற்றுவித்தல் ஆகியவற்றுக்கும் இப்புரோகிதர்கள் பொறுப்பேற்று நடத்திவரலாயினர். இவற்றுக்கெல்லாம் கைம்மாறாக மன்னர்கள் பெரும்பொருளை அவர்களுக்கு வாரி வழங்கினர். இரண்ய கருப்பமும், துலாபாரமும், கோசகஸ்ரமும் செய்த மன்னர்கள் பலர். அசுவமேத யாகம் செய்தோரும்[2] உண்டு. அவ்வாறு செய்தவர்களே பெருவேந்தர்கள் (ராஜாதிராஜர்கள்) ஆனார்கள்.

இக்காலகட்டத்தில் அரசர்களின் ஆட்சிப்பரப்பு முன்னை விடப் பெருகுகின்றது. வேளாண்மை நிலங்கள் அதிகரித்தன. அதற்கேற்ற வகையில் பாசனவசதிகள் செய்வதில் பெரும் அக்கறையினை முற்காலப்பல்லவரும் பாண்டியரும் காட்டினர். அரசர்தம் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும், வேளாண்மை மற்றும் பாசனமுறைகள் பற்றியும், பிராம்மணருக்கு அளித்த நிலக்கொடையான பிரம்மதேயம், கோயில்களுக்களித்த நிலக்கொடைகளான தேவதானம், சமண, பௌத்தப் பள்ளிகளுக்களித்த பள்ளிச் சந்தம், ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் நிறைந்த அளவில் காணப்படுகின்றன. குளங்கல்லியும், தூம்பு செய்தும், குமிழியிட்டும், கரைகள் இட்டும்,

2. (அ) ஹிரண்ய கர்ப்பமும துலாபாரமும் தரணிமிசைப் பலசெய்தும் அந்தணாக்கும் அசக்தாக்கும் வந்தணைகென்று ாத்தளித்து அரிகேசரி மாறவர்மன், எண்ணிறைந்த கோசகஸ்ரமும் ஹிரண்ய காப்பமும் துலாபாரமும மண்ணின் மிசைப் பலசெய்து மறை நாவினோா குறை தீாத்தும் . தோ மாறன் (வேள்விக்குடிச் சாசனம)

(ஆ) சாஸ்திரங்களில் மதிக்கபபடட எல்லா மரியாதைகளையும் உடையவனும், குறைவற்ற ஞானத்தை உடையவனும் அசுவமேதம் முதலிய அநேக யாகங்களைச் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட முறைப்படி முற்றுவித்தவனும், தா்மத்தையே உடலாக உடையவனும் ஆன . பரமேஸ்வரவா்மன் (ரேயூரு செப்பேடுகள்) பல்லவ அரசர்களில் தொடக்ககால மன்னர்களான சிவஸ்கந்த வா்மன், குமாரவிஷ்ணு ஆகியோரும், அசுவமேத யாகம் செய்துள்ளனா் பல்லவ சிம்மவா்மன் பத்து அஸ்வமேத யாகங்களைச் (தசாஸ்வமேதம்) செய்துள்ளான

நீர்நிலை வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டதோடு, நீர்ப்பாசன மற்றும் உழவுக் கருவிகளின் முன்னேற்றத்திலும் பெருங்கவனம் செலுத்தப்பட்டது. இவ்வகையில் ஆங்காங்கே குறிப்பிட்ட நிலப்பகுதியில் பாசன வளத்தைப் பெருக்கி, பயிர்நிலத்தினைப் பரப்பியோர் பெருங்குடிமக்களாக உயர்ந்தனர். முன்னைவிட உரிமைப் பரப்பு விரிவடைந்ததால், அந்த பரப்பின் எல்லைப்பகுதிகள் மிகுந்த காவலுக்குரியவையாகக் கருதப்பட்டன. பண்டைக்காலத்திலிருந்தே குலமரபுத் தலைவர்களாக விளங்கித் தற்போது விவசாயப் பெருங்குடிகளின் தலைவர்களாகத் திகழ்ந்த சில தலைவர்களிடம் அக்காவற்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. எல்லையற்ற உடல் வலிமையோடு, காவலின்பொருட்டு அரசர்களால் வழங்கப்பெறும் நில உடைமையும், அந்நிலப்பகுதிகளில் வரிகளை அரசிற்காகப் பெறும் உரிமையும் அப்பெருங்குடி மக்களின் சொத்தாகியது. எனவே அரசர்களுக்கு அடுத்தநிலையில் உரிமையும், உடைமையும் பெற்றிருந்த சமூதாயத்தின் மேட்டுக்குடியினராக அவர்கள் விளங்கினர். உடல் வலிமையாலும், உரிமையாலும் மட்டுமே காவலர்களாக இருப்பதைவிட, மணவுறவின் மூலம் அதாவது இரத்தக் கலப்புடையவர்களாக அவர்களை ஆக்குவதன் மூலம் நம்பகத்தன்மை (faithfulness) உறுதி செய்யப்படும் என்று கருதிய மன்னர்கள், அத்தகைய மேட்டுக்குடியினருடன் மணவுறவும் கொண்டனர். இவ்வகையில் சங்ககாலந்தொட்டு விளங்கிய வேளிர் மரபுகளுள் சில, தம் அனுபவத்தினாலும், வேளாண்மை மற்றும் பெருவழிகள் செல்லும் பகுதியின் உரிமை ஆகியவற்றின் காரணமாகவும் தமக்கெனத் தனியொரு இடம் பெற்றது மட்டும் இன்றி, அரச மரபுகளுடன் மணவுறவும் ஏற்படுத்திக் கொண்டு நெருக்கமான, அதே நேரத்தில் மதிப்பிற்குரிய நிலையினை அடைந்தனர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இவ்வாறு சிறப்பிடம் பெற்ற அரச மரபுகளையும், குறுநில மரபுகளையும், அவற்றுக்கிடையே இருந்த உறவினையும் ஆராய்வதன் மூலம் அவர்களுள் ஒருமரபான அதியமான் மரபினையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. தமிழகத்தில் இக்காலகட்டத்தில் வடக்கில் கங்கரும், பல்லவரும், தெற்கில் பாண்டியரும் ஆகிய அரச மரபுகள் ஆண்டுவந்துள்ளன. இவர்களுக்கு அடங்கியும், அவ்வப்போது வாய்ப்புக் கிடைத்தபோது தனியாகவும், ஆண்டுவந்த குறுநிலத் தலைவர்களாகப் பாணர், முத்தரையர், கொடும்பாளூர் வேளிர், உறந்தைச் சோழர், மேலைக்கங்கர், அதியமான், ஆய்வேள், வஞ்சிவேள் ஆகியோரைக் குறிப்பிட்டுக் கூறலாம். பாண்டியராட்சிப் பகுதியில் பண்டைய குலமரபுத் தலைவர்களாக விளங்கிய குலத்தவரான ஆய்வேளிர் மிகச்சிறந்த குறுநில மன்னராக விளங்கினர்.[3] பாணர், கங்கர் போன்றோர் வட பகுதியில் சிறந்து

3. கோக்கருநந்தடக்கன் என்ற ஆய்குலமன்னன், பார்த்திவசேகரபுரம், திருப்பறப்பு, பாலியம், மற்றும் திருநந்திக்கரைச் செப்பேடுகளை வழங்கி, இடைக்காலத்தில் பாண்டியருடன் மணவுறவு கொண்டு சிறந்து விளங்கியுள்ளான்

விளங்கியிருக்கின்றனர். மகேந்திரவர்மனின் காலத்தில் சிற்றரசனாக வல்லத்தில் கந்தசேனன் விளங்கியதையும்,[4] சந்திராதித்தன் என்ற மற்றொருவன் இருந்ததையும்[5] அறிகிறோம். எனவே பல்லவர், பாண்டியர் காலத்தில் பல சிற்றரசுகள் விளங்கியதை வரலாறு காட்டுகிறது. அவர்களுள் ஒருவராகவே அதியர் விளங்கினர்.

காஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்ட பல்லவர்களின் மற்றொரு கிளையினரான காடுவெட்டிகள்தான் தமிழகத்தின் வடபகுதி நடுகற் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் அரசர்கள் என்ற திரு. இராமமூர்த்தி அவர்களின் கருத்து குறிப்பிடத்தக்கது. பல்லவர்களுக்கு ஓயாததொல்லையாக மேலைச்சாளுக்கியர், கங்கர் ஆகியோரும் திகழ்ந்தனர். எனவே இக்காலகட்டத்தில் பல்லவர்கள் அரசு நிறுவியுங்கூட, பல்வேறு பகுதிகளில் இவர்களது நேரடி ஆட்சியில்லாமல்தான் இருந்தது. அதிலும் குறிப்பாகப் பொருளாதார முன்னேற்றம் இல்லாத வடஆர்க்காடு, தர்மபுரிப் பகுதிகள் தொடர்ந்து வந்த குலமரபுத் தலைவர்களாலேயே ஆளப்பட்டு வந்தன. பாணதியரையர், வேட்டுவதியரையர், காடகதியரையர், கங்கதியரையர் என்று பல்வேறு அதியரையர்கள் கல்வெட்டுகளில் குறிக்கப் படுகின்றனர். காடவ, கங்க, பல்லவ அரசர்களின் கல்வெட்டுகளில் இவர்கள் இடம்பெறுகின்றனர். எல்லைப் பகுதியாதலின் ஆளுவோர் மாறிமாறி இருந்தும் அதில்வரும் அதியரையர்களே நாடாளு வோராகவும், பூசல்களிலும், போர்களிலும் பங்குபற்றிய ஊராண்ட தலைவர்களாகவும் விளங்கியிருக்கின்றனர்.

பல்லவ அரசமரபு ஆண்ட காலத்தில்தான் அதியமான்களும், அப்பகுதியிலேயே தம் ஆட்சியினைச் செலுத்தும் குறுநில மன்னராகவும், ஊராளும் தலைவர்களாகவும் விளங்கியிருக்கின்றனர். தமிழகத்தின் வடமேற்கில் கொங்குநாடு, மழநாடு, தகடூர்நாடு என்று பல்வேறு நாட்டுப்பிரிவுகள் இருந்திருக்கின்றன. அதியர் வரலாற்றில் இவை சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றில் சில நாட்டுப் பகுதிகளின் வரலாறு இதுவரை தெளிவு பெறாத நிலையில் இருப்பதால் அவற்றில் தெளிவு பெறுவதன் மூலம், அதியர் வரலாற்றிலும் தெளிவு பெறமுடியும்.

கொங்கு நாடும் அதியரும்

தற்காலத்தில் கொங்குநாடு என்பது கோவை மாவட்டம் முழுவதும், சேலம் மாவட்டத்தில் ஓமலூர், திருச்செங்கோடு, சேலம், நாமக்கல் ஆகிய வட்டங்களும், மதுரை மாவட்டத்தில் பழனி, திண்டுக்கல் ஆகிய இருவட்டங்களும் உள்ளடங்கியதாகக் கூறப்படுகிறது. எனினும் இக்கொங்குநாடு என்பது சங்ககாலம் முதலே ஒரே பகுதியினைக் குறித்ததா ? இடைக்காலத்தில் கொங்கு நாடென்பது எதனைக் குறித்தது?

4. மு. இராசமாணிக்கனார், பல்லவர் வரலாறு ப.91.

5. S.I.I. Vol.XII ; No:115.

அதற்கும் அதியருக்குமுள்ள தொடர்பென்ன ? என்னும் வினாக்கள் எழுகின்றன.

பசும்பூட்பாண்டியன் கொங்கரை வென்றதையும் (அகம்:253), வாகைப்பறந்தலையில் அதிகன் இறந்தபோது கொங்கர் ஆரவாரித்ததையும் முன்பே கண்டோம். பல்யானைச் செல்கெழுகுட்டுவன், ஆகெழு கொங்கர் நாட்டினை அகப் படுத்தியதைப் பாலைக் கௌதமனாரும் (பதிற்று:22.அடி:15), 'கொங்கர் கோ' என்று இளஞ்சேறல் இரும்பொறை பெயர் பெற்றிருந்ததைப் பெருங்குன்றூர் கிழாரும் (பதிற்று 88–19; 90–25) பாடுகின்றனர். சோழருக்காகக் கொங்கரைப் பணியவைக்கும் பொருட்டுப் 'போர்' என்னும் ஊரின் தலைவன் பழையன் போரிட்டதை நற்றிணை பத்தாம் பாடல் காட்டும். உள்ளி விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடும் கொங்கரை மருதனிளநாகனார் பாடுகிறார் (அகம்:368). 'கொங்கரின் படுமணி ஆயம்' (அகம்:73), 'ஆகெழு கொங்கர்' (பதிற்று:22), 'கொங்கர் ஆபரந்தன்ன' (பதிற்று 77) ஆகிய தொடர்கள், கொங்கரின் கால்நடை வளர்ப்பினைச் சிறப்பித்துக் காட்டுவன. மேற்கண்ட குறிப்புகளிலிருந்து கொங்கு ஒரு தனிநாட்டுப் பிரிவாகவும், கொங்கர் ஓர் இனக்குழு மக்களாகவும் நிலை பெற்றிருந்தனர் என்பது வெளிப்படை.

இவ்வினக்குழு மக்களை அடக்கவும், தமக்கு உதவியாளர்களாகப் பயன்படுத்தவும் பல அரசமரபுகளும் விரும்பியுள்ளன. சேரர்கள் பெரும்பாலும் தம் ஆளுகையில் இவர்களை வைத்திருந்தனர். மிகச்சில வேளைகளில், பாண்டியரும், சோழரும் அதைப்பெற முயற்சி செய்திருக்கின்றனர். சோழன் முயன்ற போது 'போர்' தலைவன் பழையன் உதவியிருக்கின்றான். பாண்டியர் முயன்றபோது அதியன் உதவியிருக்கின்றான். எனவே அதியரும், போர் ஊரும் கொங்கிற்கருகில் அமைந்திருத்தல் வேண்டும். இவ்வளவு குறிப்புகள் இருப்பினும், இன்றைய கொங்குப் பகுதியென அறிஞர்களால் வரையறுக்கப்படும் அளவு அன்றைய கொங்குநாடு இருந்திருக்க வாய்ப்பு இல்லை. அதியமான் /கொங்கு நாட்டின் தலைவனாக விளங்கினான் என்றும், கொல்லிமலைத் தலைவர்களான வேளிர் (மழவர்) அதியருக்கடங்கிய சிற்றரசர்களாக விளங்கினர் என்றும், பண்டைக்காலத்தே கொங்குப்பகுதி தனியொரு பேரரசாக விளங்கியது என்றும், அதனுள் அடங்கியதாகப் பல சிற்றரசுகள் இருந்தன என்றும், இவையனைத்தையும் உள்ளடக்கிய பேரரசின் தலைநகராகத் தகடூர் விளங்கியது என்றும் அறிஞர் கூறுவது மீண்டும் சிந்திக்கத்தக்கது.[6] உண்மையில் இப்பகுதியின் வரலாறு மாறுபட்டதாக இருப்பதையே சங்க நூல்களும், பிற்காலச் சான்றுகளும் மெய்ப்பிக்கின்றன.

குலமரபுச் சமுதாய காலத்திலேயே இப்பகுதியில் நன்னன், அதியன், ஓரி ஆகிய தலைவர்களும், கங்கர், கட்டி, ஏற்றை, பாணர்,

6. K.V. Subramanya Iyer, Historical sketches of ancient deccan, p.131.

மழவர், கள்வர், ஓவியர் ஆகிய பல்வேறு இனக்குழு மக்களும் வாழ்ந்திருக்கின்றனர். இவர்கள் அனைவரும் தத்தமக்குள் போரிட்டுக்கொண்டும், மூவரசர்களுக்காகப் போரிட்டுக் கொண்டும் வாழ்ந்ததோடு, எல்லைப்புறக் குடிகளுக்கேயுரிய வீரமும் தனித்தன்மையும் கொண்டு வாழ்ந்து வந்தனர். இவர்கள் வாழ்ந்த பகுதி அனைத்தையும் ஒன்றாக்கிக் கொங்கு நாடு எனக் கூறுவதோ, அதனைப் பேரரசாக்கி அதற்குத் தலைவனாக அதியனையும், தலைநகராகத் தகடூரையும் கூறுவதோ வரலாற்றுக்குப் பொருந்துமாறு இல்லை. அனைத்தும் சிறுசிறு பகுதிகள், பல்வேறு தலைவர்கள் அப்பகுதியில் காவற்பொறுப்பையும், இனக்குழுவின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருந்தனர். அவைகளில் அதியர்குடியும் ஒன்று என்று மட்டுமே தெளிவாகக் கூறமுடிகிறது.

மழநாடும் அதியரும்

மழவர் என்பதற்குப் போர்த்திறம்மிக்க வீரர்கள் என்பதே வரலாற்றுத் தொடக்ககாலத்தில் இருந்த பொருள். சங்கத்தில் ஓரி, அதியர், சேரர் ஆகியோர் 'மழவர் மெய்ம்மறை' என்று பாராட்டப்பெறுகின்றனர். வேங்கடத்துத் தலைவனான புல்லி, மழபுலம் வணக்கிய வீரனாகக் குறிக்கப்பெறுகிறான் (அகம்:61), இக்குறிப்புகளில் இருந்து மழபுலம் என்ற ஒரு இடப்பெயர் சங்ககாலத்தில் வழக்கில் இருந்திருக்கிறது என்ற முடிவுக்கு வரலாம். ஆனால் மழபுலத்தின் தலைவராக யாரும் குறிக்கப்பெறவில்லை. எனவே வீரர்கள் வாழ்ந்த பகுதியைத் தன் ஆட்சிப் பரப்பினுள் புல்லி கொண்டு வந்தான் என்று பொதுவாகப் பொருள் கொள்ளலாம்.

ஓரி, 'மழவர் பெருமகன்' என்று பாராட்டப்படுவதோடு, கொல்லியாண்டவன் என்ற செய்தியையும் அவ்விலக்கியங்கள் தருகின்றன. இதைக்கொண்டு மழபுலம் என்பது கொல்லிமலைப் பகுதி ஆகலாம் என்று கருத இடமுள்ளது. இரண்டாம் நந்திவர்மனின் காசாக்குடிப் பட்டயம், பல்லவ சிம்மவிஷ்ணு மழவரசனை வென்றான் என்று குறிப்பிடுகிறது. பாண்டிய மாறவர்மன் இராஜசிம்மன் (கி.பி.725–768) காவிரியைக் கடந்து சென்று மழகொங்கத்தை அடிப்படுத்தினான் என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகின்றது. அவன் மழவர் கோனான மழவேந்திரனின் மகளை மணந்திருந்தான் என்றும் அறிகிறோம். இக்குறிப்புகள், 'மழவர்' என்னும் பெயர் முற்காலத்து வீரமிக்க குடியைக் குறிக்கும் பொதுச்சொல்லாக இருந்து, பிற்காலத்தில் ஒரு குறிப்பிட்ட குலத்தினையும் குறிக்கத் தொடங்கியது. அக்குலத்தைச் சேர்ந்தோர் தொடர்ந்து கொல்லிமலைப் பகுதியினை ஆண்டிருத்தல் வேண்டும் என்ற ஊகத்திற்கு இச்சான்றுகள் துணைநிற்கின்றன.

பெரிய புராணத்தின் மூலம், ஆனாயநாயனார் மழநாட்டு மங்கலஊரினர் என்றும், திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற பாச்சில்

மழநாட்டில் இருந்தது என்றும் அறிகிறோம். எனவே பல்லவர் காலத்தில் மழநாடு என்னும் பிரிவு இருந்திருக்கின்றது. பல்லவ பாண்டிய அரசுகள் நிலைகொண்டபோது காவிரியைக் கடந்தால் வரும் பகுதிகள் மழநாடு என்றும், கொங்குநாடு என்றும் பெயர் பெற்றிருந்தன. கொங்குநாடு வட கொங்கு, தென்கொங்கு என்னும் பிரிவுகளுடன் விளங்கியது. ஆனால் மழநாட்டுப் பரப்பினைத் தெரிந்து கொள்ள இயலவில்லை கொங்கின் ஒருபகுதியாக மழநாடு விளங்கியிருக்கலாம் என்ற குறிப்பினை 'மழகொங்கம்' என்ற தொடர் தருகின்றது. பல்லவர் காலக் கல்வெட்டுகள் எதிலும் மழநாடு குறிக்கப்பெறவில்லை. மூவர் முதலிகள் தேவாரத்திலும் மழநாடு பற்றிய குறிப்பில்லை. ஆனால் சோழப்பேரரசு தொடங்கிய காலத்து இருந்த நாட்டுப் பிரிவுகளை ஆராய்ந்த அறிஞர் மழநாடு கொல்லிமலையிலிருந்து தெற்கே பதினைந்து கற்களுக்கு மேலாகக் காவிரியின் வடகரைவரை பரவியிருந்தது எனத் துணிகிறார்.[7] எனவே தமிழகத்தில் அரசுகள் தோன்றிய காலத்தில், பல்லவர்கள் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டைமண்டலம் மற்றும் காவிரியின் வடகரைவரை (திருச்சிவரை) பரவினர். இவர்களது தொண்டைநாடு மற்றும் சோழநாட்டுப் பகுதிக்கும், தொல்குடிகளாகத் தொடர்ந்து இருந்த பாணர், கங்கர், காடவர் மற்றும் வேட்டுவர் குலத்தைச் சேர்ந்த அதியரையர்களால் காவற் பொறுப்பு மேற்கொள்ளப் பட்டிருந்த வடபகுதிக்குமிடையே மழநாடு ஓரளவு பெருகிய நிலப்பரப்பாக வளர்ந்திருக்க வாய்ப்புள்ளது. மழகொங்கு குறித்து ஆய்வு மேற்கொண்ட திரு. கே.எஸ்.வைத்தியநாதன் அவர்கள் சோழநாட்டுக்கும் கொங்குநாட்டுக்குமிடையே மழநாடு இருந்தது; அதன் ஒருபகுதியான மழகொங்கம் என்பது கொல்லிமலையை உள்ளடக்கிய பகுதியாக இருந்திருத்தல் வேண்டுமென்ற முடிவுக்கு வருகிறார். இது பொருத்தமானதாகத் தெரிகிறது. இப்பகுதியின் தலைவர்கள், கொல்லிமழவன், மழவரையன் என்று பெயர் பெற்றிருந்தனர். இக்காலகட்டத்தில்தான் நாமக்கல் பகுதியில் அதியமான் ஒரு சிற்றரசனாக உயர்ந்துள்ளான்.

தகடூரும் அதியரும்

குலமரபுச் சமுதாய காலத்தில் பெருவலியுடன் தகடூர்ப்பகுதியில் அதியர் விளங்கியதைக் கண்டோம். அதன்பின்னர் தமிழகத்தின் சமுதாய நிலை முழுவதுமாக மாறிவிட்டது. இருப்பினும் தகடூர்ப் பகுதியில் குறிப்பிடத்தக்க சமுதாய மாற்றம் ஏதும் நிகழவில்லை. பல்லவநாட்டை யொட்டியிருந்த வடமேற்குத் தமிழகத்தின் எல்லைப்புறம், கருநாடகம் மற்றும் ஆந்திர அரசுகளின் எல்லைப்புறமாகவும் திகழ்ந்தது. இப்பகுதியில் இருந்த அரசியல் நிலையினைத் தெளிவாக அறிந்து கொள்ள அப்பகுதியில் கிடைத்துள்ள நடுகற்கள் பெரிதும் துணை செய்கின்றன. தமிழகத்திலேயே மிகுந்த அளவிலும், அதே நேரத்தில் காலத்தினால் முற்பட்டவையுமான

---

7. Y. Subbarayalu, Political Geography of The Chola Country p. 75.

நடுகற்கள் தருமபுரி, வடார்க்காடு மாவட்டங்களில்தான் கிடைத்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவை அக்காலத்திய தகடூரின் நிலையினை மிகச் சரியாக அடையாளம் காட்டுகின்றன. இந்நடுகற்களில் வரும் பெரும்பாணதியரையர், கங்கதியரையர், காடவதியரையர், வேட்டுவதியரையர் போன்ற பெயர்களில் இருந்து, இப்பகுதியினைப் பண்டைய இனக்குழு மரபுகளோடு சில புதிய மரபினரும் ஆண்டுவந்தனரென அறிகிறோம். அதிகமான்களென்ற பெயர் அதியரையரில் அடங்கிவிட்டது போலும்!

இப்பகுதியில் நிலவிய பொருளாதாரச் சூழ்நிலை எந்தப் பெருமன்னரையும் கவரவில்லை. வெற்றியடைந்த மன்னர்கள் தமிழகத்தவராயினும், அல்லாதவராயினும் இப்பகுதியில் தமது நேரடி ஆட்சியை நிலைப்படுத்தவில்லை. தத்தம் எல்லைப்புறத்தைக் காக்கும் காவல்வீரர்களாக மட்டுமே இவர்களைக் கருதினர். இவர்களது அடிப்படைத் தொழில், வாழ்க்கை முறை, பொருளாதாரக் கூறுகள், ஏன் அரசியற் கூறுகளில் கூட அதாவது சட்டம், வரிவிதிப்பு போன்றவைகளில் கூட எந்தவித மாற்றத்தையும் பெருமன்னர்கள் ஏற்படுத்தவில்லை. எனவேதான் எந்தவகையான சமுதாய, மற்றும் வரலாற்றுக் குறிப்புகளையும் இப்பகுதியில் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் இருந்து அறிந்து கொள்ள முடியவில்லை. கிடைத்துள்ள அனைத்து நடுகற்களையும் ஆய்வு செய்தபோதும் அவை எந்தப் பெரிய போரையும் குறிப்பவையாகத் தெரியவில்லை. சிறுசிறு குழுக்களிடையே ஊர் காவலுக்காகவும், தொறுக்கொள்ளும் (நிரைகோடல்) பூசலிலும், நிரைமீட்கும்போதும் இறந்த வீரர்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற்களாகவே அவை பெரும்பாலும் காணப்படுகின்றன.

தமிழக வரலாற்றிலேயே இதுவரை அறியப்படாத மாந்தபருமர், சுபதொங்கவர்மன், அரிமிறை பருமர் போன்ற பல அரசர் பெயர்களையும் இந்நடுகற்கள் தாங்கியுள்ளன. இவையெல்லாம் தகடூரைச் சுற்றியுள்ளன. அன்றியும் எழுத்தமைதி கொண்டு கி.பி ஆறாம் நூற்றாண்டதாகக் கருதத்தக்க இரு கல்வெட்டுகள் தகடூர் நாட்டினைக் கங்கரசர் ஆண்டதைத் தெரிவிக்கின்றன.[8] நுளம்பருக்கு உட்பட்டு மாவலிவாணராயர் ஆட்சி செய்ததை முறையே பாப்பம்பாடி, செல்லம்பட்டி ஆகிய ஊர்களில் கிடைத்துள்ள நடுகற்கள் தெரிவிக்கின்றன. எனவே தகடூரைத் தலைநகராகக் கொண்டு அதியர்கள் ஆட்சிபுரியவில்லை என்பது தெளிவாகிறது. இருப்பினும் இப்பகுதிகளுக்குரிய இனக்குழு மக்களின் ஆட்சி முறையில் மாற்றங்கள் இல்லாத நிலையில், நடுகற்களில் காணப்பெறும் சிலபெயர்கள் அதியர் மரபினரை நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன என்றுமட்டும் உறுதியாகக் கூறலாம்.

8. தருமபுரி நடுகற்கள் (1974/61) கி.பி 898 மற்றும் 900–ஆவது ஆண்டுகளில்.

நடுகல் காட்டும் அதியர்

தருமபுரி மாவட்டம், நாதியானூர் என்ற இடத்தில் கிடைத்த பல்லவமன்னன் சிம்மவிஷ்ணுவின் 25–ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு,

'புறமலை நாட்டு மொக்க
ப்பாடியாள் தொறு
கொள காப்புறை
ஆளும் மைந்தகள் குமரச்சதியாரு
பட்டாரு கல்'

என்றமைகிறது. இதில்வரும் குமரச்சதியார் என்ற பெயர், அதியர் மரபில் ஒருவரைக் குறிப்பதாகக் கொள்ளலாம் 'சதியார்' என்பதில் உள்ள சகரம் இலக்கிய வழக்கில் கெட்ட பின்பும் கூட, நடுகற் கல்வெட்டுகளில் – அதாவது மக்கள்வழக்கில் அது நிலை பெற்றிருந்ததை இப்பெயர் சுட்டுகிறது.[9] இவ்வாறு சகரம் அகரமாக மாறுவதை வேறிடத்திலும் குறித்துள்ளோம்.[10] இதில் வரும் காப்புறை என்பது காவற்காட்டினைக் குறித்ததாதல் வேண்டும்.[11]

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மொண்டுகுழி என்ற ஊரில் கிடைத்த மகேந்திரவர்மனின் பதினான்காம் ஆட்சியாண்டைச் சேர்ந்த (கி.பி.604) கல்வெட்டு,

'கடிகாவில் அஞ்சினாரு மக்கள்
பொற்கோவுனாரு வீரவிண்ணரைசரு
மக்கள் பொன்மாதனாரோடு
நரிப்பள்ளி எறிந்து பட்டாரு'

என்றுள்ளது. இக்கல்வெட்டில் வரும் அஞ்சினாரு அதியமான் மரபில் வந்த ஒருவனாக இருத்தல் வேண்டும். இங்கும் கடிகா என்பது காவல் மிகுந்த எல்லைப்புறக் காடுகளைக் குறிக்கின்றது.

சேலம் மாவட்டம் ஒட்டபட்டி என்ற இடத்தில் கிடைத்த நடுகற் கல்வெட்டு ஒன்று கங்கமன்னன் ஸ்ரீ புருஷவர்மனின் இருபத்தியேழாம் ஆண்டில் (கி.பி. 782) தெழினியாரின் சேவகன் எருமைய நக்கனார் எருவாயிலை எறிந்தபோது இறந்துபட்டமைக்காக எடுக்கப்பட்டதென அறிகிறோம்.

இதில் குறிப்பிடப்பெறும் 'தெழினியார்' அதியரின் மரபுப் பெயரான எழினி என்பதன் மாற்று வடிவமே என்பர்.[12] ஆனால்,

---

9 ஆர்.பூங்குன்றன், ப.123.

10. பகுதி.:1 இயல்:1 பக். 30-35

11. ஆர் பூஙகுன்றன் ப 114

12. E.I. Vol. VI. p.331.

'பெயரொற்றுமை மட்டுமே கருதி இவரை அதியர் மரபினர் என்று ஏற்றுக்கொள்ள முடியாது; ஏனெனில் கி.பி. 8–ஆம் நூற்றாண்டளவில் மிகச் சிறந்த நாமக்கல் குடைவரையினை அதியர் மரபினர் எடுத்திருக்கின்றனர். அவர்களைக் கங்க அரசன் ஸ்ரீ புருஷவர்மனுக்கு அடங்கிய சிற்றரசனாகக் கருதுவது பொருந்தாது'

என்று கூறுகிறார் திரு. சொ. சாந்தலிங்கம். எனினும் அதியர் குலத்தவராகவே இருக்க வாய்ப்பு உள்ளது. தருமபுரிப் பகுதியில் தொடர்ந்து வரும் தொல்குடிகளாக இவ்வதியரின் கிளையினர் வாழ்ந்தனர் என்று கருத மேலே குறிப்பிட்ட பல நடுகற்கள் சான்றுகளாகத் திகழ்கின்றன.

விண்ணவர்மனும் அதியமானும்

தருமபுரி மாவட்டம் இருளப்பட்டியில் விண்ணபருமனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. அதே ஊரில் வாணபரும அரசன் ஆட்சியில் எழுதப்பட்ட மற்றொரு கல்வெட்டில் 'விஜயமங்கலமாண்ட விண்ணபேரன்' ஒருவரும், 'விண்ணபேரன் சேவகன் கொற்றந்தை காடன்' என்ற மற்றொருவனும் குறிக்கப்படுகின்றனர். இக்கல்வெட்டுகளைப் பதிப்பித்த திரு. நாகசாமி இக்கல்வெட்டில் குறிக்கப்படும் விண்ணபேரன் என்பான் பல்லவர் குலத்தைச் சேர்ந்த விஷ்ணுவர்மனாகவே இருக்கலாம் என்று கருதியுள்ளார். அவரே சில ஆண்டுகளுக்குப்பின் எழுதிய கட்டுரையொன்றில் கொங்குநாட்டில் பழைய கோட்டைப்பகுதியில் ஆண்ட குறுநிலமன்னனாக இவனிருக்கவும் வாய்ப்புள்ளது; இவனது ஆட்சி தகடூர்வரை பரவியிருந்தது என்று கருத்துரைக்கிறார்.[13] எழுத்தமைதியின் அடிப்படையில் இக்கல்வெட்டு கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது; அதுவே அவனது காலம் எனத் துணிகிறார்.

கொங்குநாட்டு வரலாறு எழுதிய திரு.வி.இராமமூர்த்தி அவர்கள், அகநானூற்றின் ஒருபாடலை இயற்றிய அதியன் விண்ணத்தனாரையும், யாப்பருங்கலத்தில் பழைசையின் தலைவனாகப் புகழ்ந்துரைக்கப்படும் வேள் விண்ணனையும், இக்கல்வெட்டில் குறிக்கப்படும் விண்ணபேரனையும் பெயர் ஒற்றுமை காரணமாகத் தொடர்புபடுத்தி இம்மூவரும் ஒரே குலத்தவர் என்கிறார்.

இங்கு இப்பகுதியின் வரலாற்றினை மேலே ஆய்வு செய்த அடிப்படையில் காணுவோமாயின், கோவை மாவட்டம் பழையகோட்டைப் பகுதியிலிருந்து அரூர்வரை பரவியிருந்த பெரும்பரப்பினை ஆட்சிசெய்த வேளிர் எவரும். கி.பி. 5–ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்திருக்க வாய்ப்பில்லை என்பது மனங்கொளத்

13. இரா நாகசாமி, 'தருமபுரி அருங்காட்சியகத் திறப்பு விழாமலர்'

தக்கது. நடுகல் குறிக்கும் விண்ணவர்மன் தகடூர்ப் பகுதியில் ஆண்ட பல்லவரின் கிளைக்குடியான காடவ குலத்து விஷ்ணுவர்மனாகவே இருக்கலாம். ஏனெனில் நடுகற்கள் அனைத்திலும், சிம்மவிஷ்ணு மற்றும் மகேந்திரவர்மனின் பெயர்கள் முறையே சிங்கவிண்ணபருமர் என்றும் 'மசீந்திர' அல்லது 'மயீந்திர' பருமர் என்றும் தமிழ்வழக்காற்றிலேயே எழுதப்பட்டுள்ளன. இங்குக் குறிக்கப்படும் விண்ணவர்மன், பல்லவர் குலத்துச் சிம்மவர்மன் காலத்திற்கு முன்பாண்ட ஒரு அரசனாக இருக்கலாம்.

ஆனால், யாப்பருங்கலத்தில் குறிக்கப்படும் வேள்விண்ணனைப் பல்லவ அரசனாகக் கொள்வதற்கில்லை. ஏனெனில் பல்லவர்கள் தம்மை எங்கும் வேள் என்று கூறிக்கொண்டதில்லை. நடுகற்கள் குறிக்கும் தெழினி, சதியார், அஞ்சி போன்ற அதியர் குலத்துப் பெயரொற்றுமை ஏதும் வேள் விண்ணன் என்பதில் இல்லை. சங்க கால அதியன் விண்ணத்தன் என்ற பெயரில் விண்ணத்தன் என்பது இயற்பெயராகும். இவ்வியற்பெயர் ஒற்றுமை கருதி, வேள் விண்ணனை அதியர் குலத்தவன் என்று முடிவாகக் கூறுதலும் இயலாது. இந்நிலையில் பழசைப் பகுதியில் வாழ்ந்த வேள் விண்ணன் பண்டைத் தமிழ் வேளிர் குலத்துப் பின் தோன்றலாக இருக்கலாம் என்று கொள்ள இடமுள்ளது.

ஆக, நடுகற்கள் காட்டும் அதியர் மரபுத் தலைவர்கள் பண்டைய குலமரபுச் சமுதாய வாழ்க்கை நிலையினின்றும் மாறுபடாது – இனக்குழு நிலையினின்றும் முன்னேறாது, அவ்வப்போது எல்லையினைப் பிடித்த பாணர், கங்கர், பல்லவர் போன்ற அரசர்களுக்கடங்கிய சேவகர்களாய் – வீரர்களாய்த் தொடர்ந்து தகடூர்ப் பகுதியில் வாழ்ந்தவர்கள்; மாறாக அதியர் மரபிலேயே மற்றொரு கிளைக்குடியினர் அங்கிருந்து குடிபெயர்ந்து தெற்கே வந்தனர் என்று கருதச் சான்றுகள் உள்ளன. ஆற்றுநீரால் வேளாண்மை மேற்கொள்ள வாய்ப்பான காவிரியின் வடகரைப் பகுதிகளுக்கு வந்து இவர்கள் குடியமர்ந்தனர் எனக் கருதமுடிகிறது. இவ்வாறு குடியேறிய கிளைக்குடியினர் குறிப்பிடத்தக்க சிற்றரசு நிலைக்கு வளர்ந்தனர். இவ்வகையில் சிறப்படைந்த சிற்றரசு ஒன்றினைப் பாண்டியர் செப்பேடுகள் குறிக்கின்றன. இவ்வாறு இருகிளையினராக அதியர் மரபு வளர்ந்தது என்று கொள்வது வரலாற்றிற்குப் பொருத்தமானதாக அமையும்.

இவ்வடிப்படையில் வலிமை வாய்ந்த சிற்றரசர்களாக அதியர் மரபினர் மேம்பட்டதையும், அவர்களைப் பற்றிய சான்றுகள் பரவலாகக் கிடைப்பதையும் காண்கிறோம். அவற்றைச் சற்று விரிவாக ஆராயலாம்.

பெரியபுராணம் காட்டும் அதியன்

சுந்தரரால் திருத்தொண்டத்தொகையில, 'பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க்கடியேன்' என்று பாடப்பட்ட புகழ்ச்சோழர் புராணத்தினை விரித்துரைக்கிறார் சேக்கிழார். இப்புராணத்தில் சோழனின்

ஆட்சியை ஏற்காது, திறை கொடுக்க மறுத்துப் போர்புரிந்த குறுநிலமன்னனாக ஓர் அதியன் குறிப்பிடப் பெறுகிறான். இது நடந்த காலம் கி.பி 300க்கும். கி.பி 500க்கும் இடைப்பட்டதாகலாம் என்று திரு. மா. இராசமாணிக்கனார் கருதுவார். இங்குக் குறிக்கப்பட்ட அதியன் யாரெனத் தெரிந்து கொள்ள வேறு ஆதாரங்கள் இல்லை. இருப்பினும் இப்புராணத்துள் வரும் குறிப்புகளையும், அக்காலத்தியச் சோழர் பற்றிய வேறுசில குறிப்புகளையும் கொண்டு ஆராயும்போது கீழ்க்கண்டவாறு ஓரளவு தெளிவுபெற முடிகிறது.

சோழன் கருவூரில் பாடிவீடு அமைத்து இருந்தபோது 'திறைகொடா மன்னர் எவரேனும் உளரோ' என்று கேட்க, 'அணித்தாக ஓங்கெயில் சூழ் மலை அரணத்துள்ளுறைவான் ஒருவன் உளன்; அவன் அதிகன்' என்று அமைச்சர் பதிலுரைக்கிறார். எனவே மலைசூழ்ந்த ஓரிடத்தில் அவன் தலைநகர் இருந்தது என்பது வெளிப்படை. மேலும் அந்நகரின் பெயரை' கொடிமாமதில் நீடுகுறும் பொறையூர்' என்று கூறுகிறார் சேக்கிழார். இக்குறும்பொறையூர் எது என்பது குறித்து ஆய்வுசெய்த திரு. இராமமூர்த்தி, தகடூருக்கு மேற்கே பர்கூர் மலைகளுக்கு அப்பால், இன்றைய கொள்ளேகால் வட்டத்துக் குறும்பொரஹள்ளி என்று வழங்கப்படும் ஊரே என்கிறார். மேலும் வேள்விக்குடிச் செப்பேடு கூறும் 'குறுநாட்டவர் குலங்கெடுத்தும்' என்று வரும் அரிகேசரி பராங்குச மாறவர்வனின் வெற்றி, இந்தக் குறும்பொர ஹள்ளியைத் தலைநகராகக் கொண்ட குறுநாட்டவர் மீது கொண்ட வெற்றியே ஆகும் என்கிறார். இவர் நாமக்கல் கல்வெட்டில் 'அதியான்வய குறுநா நரபதின' என்று வரும் தொடரினை ஆதாரமாக்கி அதில்வரும் 'குறுநா நரபதி' என்பது குறுநாட்டு மன்னன் என்று பொருள்படுமாதலின், இக்குறுநாட்டு வெற்றி குறும்பொரஹள்ளியான குறும் பொறையூர் மன்னன் அதியமான் மீது கொண்ட வெற்றியே ஆகும் என்ற முடிவுக்கு வருகிறார்.

சங்ககாலத்துக்குப் பின்னர்ச் சோழர்களின் நிலையினைத் தெரிந்துகொள்ளத் தமிழகத்தில் சான்றுகள் அதிகமில்லை. எனினும் கூன்பாண்டியன் என்று சைவ உலகத்தால் பாராட்டப்பெறும் அரிகேசரி பராங்குச மாறவர்மனின் மனைவி மங்கையர்க்கரசியார் 'வளவர் கோன் பாவை' என்றறிகிறோம். மேலும், மேலைக் கங்க மன்னர்களுக்கும் சோழர்களுக்கும் மணவுறவு இருந்ததையும், பாண்டிய பல்லவ பேரரசுகளின் காலத்திலும் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழர் ஆட்சிபுரிந்ததையும் கங்கரது செப்பேடுகள் தெளிவாக்குகின்றன. மேலைச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின் அய்ஹொளேக் கல்வெட்டு, அவன் சோழ, கேரள, பாண்டியருடன் இணைந்து பல்லவர்களை வென்றான் என்கிறது. பல்லவ பரமேஸ்வரவர்மனின் கூரம் செப்பேடு, அவன் சோழர்களைப் பலமுறை வென்றதைக் குறிப்பிடுகிறது. இவையெல்லாம் சோழர்கள் குறுநிலமன்னரளவில் உறையூரைத் தலைநகராகக் கொண்டு நிலைபெற்றிருந்தனர் என்பதைத் தெளிவாக்குகின்றன.

இதே காலத்தில் தகடூரை உள்ளடக்கிய வடமேற்குப் பகுதியில் கங்கர் ஆட்சி பரவியிருந்தது. இவ்விருவருக்கும் நடுவே தகடூரில் இருந்து குடிபெயர்ந்து காவிரியின் வடகரையில் சிற்றரசர்களாக விளங்கிய அதியருக்கும், உறையூரைத் தலைநகராகக் கொண்டிருந்த சோழருக்கும் இடையேதான் இப்போர் நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

அரிகேசரி மாறவர்மன் வென்ற நாடான குறுநாடு அதியர் நாடாக இருக்கலாம் என்ற கருத்து ஏற்கத்தக்கதே. பொதுவாகக் குறும்பர் என்ற சொல் சிற்றரசர்களைக் குறிக்கும். கரூருக்கு வடக்கே குறும்பொறையூர் இருந்தது. கரூரில் இருந்து மிகுந்த தொலைவில் பர்கூர் மலைகளுக்கு அப்பால் உள்ள குறும்பொறஹள்ளியே இவ்வூர் என்று கொள்ளுவதில் சில இடையூறுகள் உள்ளன. தகடூருக்கு மேற்கேயுள்ள இப்பகுதி மலைவளம் உடையது. எனினும் பொருளாதாரத்தில் முன்னேறிச் சிற்றரசாகும் நிலைக்கு வளர வாய்ப்பில்லாதது. மாறாக அதியர் தாம் குடிபெயர்ந்த பகுதியான சேலம், நாமக்கல் வட்டங்களில், சேர்வராயன்மலை, கல்ராயன்மலை, பச்சைமலை, கொல்லிமலை சூழ்ந்த பகுதியில்தான் சிற்றரசாய்ச் சிறந்தனர். குறும்பொறையூரும் இப்பகுதியில்தான் இருந்திருக்க வாய்ப்புள்ளது.

அரிகேசரியின் காலம் கி.பி.624 முதல் 674 வரையெனத் துணியப்பட்டுள்ளது. எனவே ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பெரியபுராணம் கூறும் சோழர் – அதியர் போர் நடைபெற்றிருக்க வாய்ப்புள்ளது. இப்போரில் ஈடுபட்ட அதியன், பராந்தக நெடுஞ்சடையனால் வெல்லப்பட்ட அதியனுக்கு முன்னோனாக இருக்கலாம்.

நாமக்கல் கல்வெட்டு காட்டும் அதியன்

நாமக்கல் உள்ளிட்ட பகுதியை அதியன் ஒருவன் ஆண்டிருக்கின்றான். அவனது தலைநகர் பற்றியோ, பிற வரலாறு களையோ அறிய ஆதாரம் இல்லை. கிடைத்திருப்பவை அதியனின் குடைவரைக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் மட்டுமே. கிடைத்துள்ள கல்வெட்டுகளில் இருந்து இக்குடைவரை 'அதியநாத விஷ்ணுக்கிருகம்' என்னும் 'அதியேந்திர விஷ்ணுக்கிருகம்' என்றும் அழைக்கப்பட்டது என்றும், சோமவம்சத்தைச் (சந்திரகுலம்) சேர்ந்த அதிராஜனின் மகள் வயிற்றுப் பேரன் இவன் என்றும், அதியர் குலத்தினைச் சேர்ந்தவன் என்றும், குறு (நாட்டு) அரசன் என்றும் அறிந்து கொள்கிறோம். இவையன்றி இவனுக்குரியதாக மதன விலாசன், உதாரசித்தன், விமலசரிதன், நரதேவன், நரவாகனன், நயபரன், மானசாரன், ப்ரகிருதிப் பிரியன், மனோமயன், ஸ்ரீபரன், சிலிபிருதன் அல்லது சிதிபுதன் என்னும் 12 பெயர்களும், இக்குடைவரைகளிலும், பாறையிலுமாகப் பொறிக்கப்பட்டுள்ளன.[14]

14. அ E.I. Vol. XXXVI. pp.131-138.
ஆ சிதிபுதன் அல்லது சிலிபிருதன் என்பது, பண்டைய 'சதியபுதோ' என்பதன் மரூஉ ஆதலே வேண்டும்.

நாமக்கல் கல்வெட்டில் காலத்தைப் பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. எனவே முழுவதுமாக எழுத்தமைதியினைக் கொண்டே காலத்தைக் கணிக்க வேண்டிய நிலையுள்ளது. இதே காலத்தில் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும், மாமல்லை சாளுவன்குப்பத்திலும் மிகச் சிறந்த கிரந்த எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன. எனவே காலத்தைக் கணிப்பதில் மிகுந்த கவனம் தேவைப்படுவதைத் தொல்லெழுத்து வல்லுநர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.[15] எனினும் பாண்டிய மன்னன் பராந்தக நெடுஞ்சடையனின் ஆனைமலை, திருப்பரங்குன்றம் கிரந்தக் கல்வெட்டுகளின் எழுத்தமைதியினையும் கருத்தில் கொண்டு ஆய்வு செய்து, இவ்விரண்டு கல்வெட்டுகளையும் விட நாமக்கல் கல்வெட்டுகள் காலத்தால் முந்தியன என்ற முடிவுக்கு வருகின்றனர். மேலும் இங்கு மிகத்தெளிவற்ற நிலையில் மெல்லியதாக எழுதப்பெற்ற வட்டெழுத்துக் கல்வெட்டுகள் இருப்பதையும் தமிழ்நாடு அரசு கல்வெட்டுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர். இதனைத் தச்சவு, மதுகிழ, மைவழி என்று மூன்று சொற்களாகப் படித்துள்ளனர். இவற்றின் சரியான பொருள் விளங்கவில்லை; எனினும் பண்டைய முதலாம் மகேந்திரவர்மனின் தெலுங்கு, கன்னடப் பெயர்களை இவை ஒத்துள்ளன என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அதியர், தெலுங்கு, கன்னடப் பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருத்தல் வேண்டும் எனக் கூறியுள்ளனர். மேலும் கிரந்த எழுத்துகளில் அமைந்த சமஸ்கிருதப் பெயர்களான ஸ்ரீதரன், சிதிபுதன் ஆகிய பெயர்களில் தமிழ் வழக்காறான அன் விகுதியும், வட்டெழுத்துகளும் எழுதப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர். இங்கு எல்லைப் புறத்திற்கேயுரிய கலப்பு வழக்காறுகள் மொழியிலும், எழுத்திலும் உள்ளன என்பது கவனத்திற்குரிய ஒன்றாகும்.

இக்கல்வெட்டில் அதியமான், சந்திரகுலத்தைச் சேர்ந்த அதிராஜன் ஒருவனின் மகள் வயிற்றுப்பேரன் என்று குறிக்கப்படுகிறான். தாய்வழியில் சிறந்திருந்த ஓர் அரசனின் பேரன் என்பதில் கருத்து வேற்றுமை இல்லை. இது குறித்து இந்த அதியமான் தன் தாய்வழியில் பல்லவர்க்கு உறவினனாக இருக்கலாம்; இவனது தாய் பல்லவ இராஜசிம்மனின் உடன்பிறந்தாளாக இருக்கலாம்[16] என்றும், பல்லவர்களில் நந்திவர்மன் தொடங்கி ஆண்ட காடவகுலத்திற்கே (பீமவர்மனின் கிளை:) சந்திர குலம் குறிக்கப்படுவதால், காடவகுலத் தோன்றல் ஒருவனின் உடன்பிறந்தவளாக அதியனின் தாய் இருந்திருத்தல் வேண்டும்[17] என்றும் இரு கருத்துகள் உள்ளன. கீழைச் சாளுக்கியர்களும், தம்மைச் சந்திர குலத்து உதித்தவர்களாகவே கூறிக்கொள்ளுகின்றனர். எனவே கல்யாணிச் சாளுக்கியர் குலத்து ஒருவனின் மகள் வயிற்றுப் பேரனாக அதியமான் இருப்பதற்கும் வாய்ப்பு உள்ளது.

15. Vidya Deheja - Namakkal caves. p.7.
16. Vidya Deheja. p.5.
17. Ramamurthy. pp.190-191..

காடவ குலத்து நந்திவர்மன் காஞ்சியில் அரியணை ஏறியபோது, காஞ்சிப் பல்லவாதிராஜன் பெரும்படையுடன் போரிட்டான். பட்டம் சூடிய நந்திவர்மனைத் தமிழக அரசர்கள் பலரின் துணையுடன் காஞ்சிப் பல்லவ குலத்தொருவன் நந்திபுரத்தில் சிறையிலடைத்தான். இவனுக்கு மேலைச் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் துணை நின்றான். இறுதியில் சித்ரமாயன் உள்ளிட்ட காஞ்சிப் பல்லவரை முறியடித்து, நந்திவர்மனின் தளபதியான உதய சந்திரன் அவனை அரியணையில் மீண்டும் ஏற்றினான். அன்றியும், ராயக்கோட்டைச் செப்பேடுகளை வழங்கிய கந்தசிஷ்ண விக்கிரமவர்மன் என்றொரு காடவ குல மன்னனும் இப்பகுதி வரலாற்றில் இடம் பெறுகிறான்.[18] இவர்கள் அனைவரும் சந்திர குலத்தவர்களே. இத்தகைய சூழ்நிலையில், அதியனின் தாய் எந்தச் சந்திர குலத்தவள் என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை.

பராந்தக நெடுஞ்சடையன் தனது பதினேழாவது ஆட்சியாண்டிற்கு முன்னர் அதியமான்களைத் தோல்வி அடையச் செய்துள்ளான். எனவே இக்குடைவரைகள் அப்போர் நிகழ்ந்த காலமான கி.பி 785க்கு முன்னரே குடைவிக்கப் பெற்றிருத்தல் வேண்டும். குடைவரைகளைச் செய்விக்க 20 ஆண்டுகள் என்று எடுத்துக்கொண்டாலும், அவை கி.பி. 760 வாக்கில் செய்து முடிக்கப்பெற்றிருக்க வேண்டுமாதலால், இக்குடைவரை எடுத்த மன்னனின் காலம் கி.பி. 730–760க்குள் தானிருக்க வேண்டும். இக்காலத்தில் அரசோச்சிய பாண்டியன் மாறவர்மன் இராசசிம்மன் (கி.பி.725–768) ஆவான். பல்லவன் இரண்டாம் நந்தி வர்மன் (கி.பி. 730–795) ஆவான்.

மாறவர்மன் இராசசிம்மனுக்கும், அதியருக்கும் நட்புறவு இருந்திருத்தல் வேண்டும். பல்லவருள்ளும் இராசசிம்மனின் ஆட்சி அமைதியாக நடைபெற்றது. அடுத்துவந்த பரமேஸ்வரவர்மன் இரண்டு ஆண்டுகளே ஆட்சியில் இருந்தான். அரிகேசரிக்குப் பின்னர் வளர்ந்து வந்த அதியரால் யாருடைய இடையூறும் இன்றி இத்தகைய கலைப்பணிகளைச் செய்ய முடிந்தது. எழுத்தமைதியினைக் கருத்தில் கொண்டோரும் கி.பி 770–க்கு முற்பட்டதாக இக்குடைவரையின் காலத்தினைக் கருதுவது இம்முடிவுக்கு அரண்செய்கிறது.

சீவரமங்கலச் செப்பேடு குறிக்கும் அதியன்

பாண்டியர் செப்பேடுகளுள் மிகவிரிவாகப் பாண்டியர்–அதியர் போரைக் குறிக்கும் செப்பேடு சென்னை அருங்காட்சியகச் செப்பேடு என்று வழங்கப்பெறும் சீவரமங்கலச் செப்பேடே ஆகும். இச்செப்பேடு வழங்கிய மன்னன் முதலாம் வரகுணன் என்று வரலாற்று ஆசிரியர்களால் இனங்காணப் பெற்றவன். இவனது ஆட்சிக்காலம் கி.பி 768 முதல் 811 வரை ஆகும். இவனது 17ஆம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 785–இல் இச்செப்பேடு வழங்கப்பெற்றது.

18. E.I. Vol. V. p.49.

பாண்டியர்—அதியர் போர் காவிரியின் வடகரையில் ஆயிரவேலி, அயிரூர், புகழியூர் ஆகிய ஊர்களில் நடந்தது; போர் முடிவில் அதியனின் படைகளையும், பொருட்களையும் பாண்டியன் கவர்ந்து கொண்டான். இப்போரில் கேரளரும், பல்லவரும் அதியருக்குத் துணை நின்றனர்; குடகொங்கு மன்னனை மதுரையில் பாண்டியன் சிறையிட்டான் என்ற இச்செய்திகளை,

மாயிரும் பெரும்புனற் காவிரி வடகரை
ஆயிரவேலி அயிரூர் தன்னிலும்,
புகழியூரிலும் **திகழ்வேலதியனை**
ஓடுபுறங்கண்டவன் ஒலியுடை மணித்தே
ராடல் வெம்மா அவைஉடன் கவர்ந்தும்
பல்லவனுங் கேரளனும் ஆங்கவற்குப் பாங்காகிப்
பல்படையொடு பார்ஞெளியப் பல்வம்மெனப் பரந்தெழுந்து
குணபாலும் குடபாலும் அணுகவந்து விட்டிருப்ப
வெல்படையொடு மேற்சென்று அங்
கிருவரையு மிருபாலும் இடரெய்தப் படைவிடுத்துக்
குடகொங்கத் தடல் மன்னனைக் கொல்களிற்றொடுங் கொண்டு போந்து
கொடியணி மணி நெடுமாடக் கூடல் மதிலகத்து வைத்துக்
கங்க பூமியளவுங் கடிமுறைதன்பெயரறையக்
கொங்க பூமி அடிப்படுத்து'

என்ற அடிகளில் தெளிவாகச் செப்பேடு சுட்டுகிறது.

இதில் குறிக்கப்படும் போர்கள் எல்லாம் ஒரேபோரின் படிநிலைகளா? வெவ்வேறு போர்களா என்றறிதல் வேண்டும். பாண்டியர் செப்பேடுகளைப் பதிப்பித்த தமிழ் வரலாற்றுக் கழகம், இவற்றை இரண்டு தனிப்போர்களாகக் கருதுகிறது. ஆனால் பாண்டியர் வரலாறு எழுதிய திரு.கே.வி. இராமன் அவர்கள், போரில் வென்ற அதியமானை மதுரைச் சிறையில் பாண்டியன் அடைத்தான் என்று கூறுவதன்மூலம், இவனே குடகொங்க மன்னன் என்ற முடிவுக்கு வருகிறார். இக்கருத்து முன்னர், திரு.வி. வெங்கய்யா, திரு. கே.வி. சுப்பிரமணிய ஐயர், மற்றும் திரு. சதாசிவப் பண்டாரத்தார் ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததே. ஆனால் குடகொங்க மன்னனும், அதியனும் வேறு வேறானவர் என்றும், குடகொங்க மன்னனுக்கு அடங்கிய சிற்றரசனே அதியமான் என்றும் முடிவு செய்கிறார் திரு. சாஸ்திரியார்.[19]

இச்செப்பேட்டுப் பகுதியினை நுணுகி நோக்கினால், இப்படையெடுப்பு ஒரே நேரத்தில் நிகழ்ந்தது என்பது தெளிவாகும். இப்போரில் தோற்ற மன்னர்களை வரிசைப்படுத்திக் கூறுகிறது

19. I.A. Vol. XXII. p.66.

செப்பேடு. காவிரியின் வடகரை ஊர்களில் அதியனை வென்று அவன் செல்வத்தைக் கவர்தல்; அடுத்து அவனுக்குத் துணையாய் வந்து போரிட்ட கேரளரையும் பல்லவரையும் தோல்வியடையச் செய்தல்; பின்னர்க் குடகொங்கத்து மன்னனை வென்று கூடல் மதிலில் கொண்டுவைத்தல்; கங்கபூமி வரையுள்ள கொங்க பூமியை அடிப்படுத்தல் என்று வெற்றிகளையடுக்கிப் பின் காஞ்சிவாய்ப் பேரூரில் புகுந்து திருமாலுக்குக் கோயில் எடுத்தான் என்று உரைக்கிறது செப்பேடு. ஒவ்வொரு வெற்றியினையும் எண்ணும்மை கொடுத்துத் தனித்தனியாக்குகிறது செப்பேடு. எனவே அடுத்தடுத்த நிலப்பரப்பில் ஆட்சியில் இருந்த தலைவர்களை வென்றதையே இது குறிக்கின்றது என்று கருதுவதே பொருத்தமானதாகும்.

துணை நின்ற பல்லவன்

நெடுஞ்சடையனுக்கு முன்னவன் ஆன மாறவர்மன் இராசசிம்மன், செழும்புரவிப் பல்லவனைக் குழும்பூருட் டேசழிய எண்ணிறந்த மால்களிறுங் கதிர்வேலின் கைக்கொண்டான் என்றும், அவன் மகன் நெடுஞ்சடையன்,

> கருதாது வந்தெதிர் மலைந்த காடவனைக் காடடையப்
> பூவிரியும் புனற்கழனிக் காவிரியின் தென்கரைமேல்
> தண்ணாக மலர்ச்சோலைப் பெண்ணாகடத்து
> அமர்வென்றான்

என்றும் செப்பேடு கூறுகிறது. இப்போர் இச்செப்பேடு வெளியிடப் பெற்ற இவனது மூன்றாம் ஆட்சியாண்டுக்கு முன்னரே (கி.பி 771க்கு முன்னர்) நடந்துள்ளது. எனவே இப்போரில் குறிக்கப்படும் பல்லவமன்னன் இரண்டாம் நந்திவர்மன் ஆகவே இருத்தல் வேண்டும்.

போரில் பங்கேற்ற சேரமன்னன்

திருவஞ்சைக் களத்தினைத் (மகோதயபுரம்) தலைநகராகக் கொண்டு சேரரின் இரண்டாம் பரம்பரை நிறுவப்பட்டது கி.பி 9–ஆம் நூற்றாண்டில்தான் எனக் கருதுவர். இதன்படி முதல் மன்னனாகக் கருதப்படும் குலசேகரன் (அவரே வைஷ்ண ஆச்சாரியார் ஆன குலசேகர ஆழ்வார்) 'கொல்லிக்காவலன்' என்றும், 'கொங்கர் கோமான்' என்றும் தம்மை அழைத்துக் கொள்கிறார். ஆனால் இவருக்கு முன்பிருந்தே கருவூர்ப்பகுதியில் ஆட்சிப் பொறுப்பில் சேரர் இருந்திருக்கின்றனர் என்பதை,

> 'பாரளவுந் தனிச்செங்கோல் கேரளனைப் பலமுறையும்
> உரிமைச் சுற்றமோடவர் யானையும்
> புரிசையும் மதிற்புலியூரப் பகல்
> நாழிகை யிறவாமை இகலாழியுள் வென்றுகொண்டு'

'கூடல் வஞ்சி கோழியெனும் மாடமாதில் புதுக்கியும்' ஆகிய வேள்விக்குடிச் செப்பேட்டு வரிகள் புலப்படுத்தும். எனவே சேரர்

சங்க கால முதலே கருவூர்ப் பகுதியில் தொடர்ந்து ஆட்சியில் இருந்தனர் என்பது தெளிவு. இப்பரம்பரையில் வந்த சேரன் ஒருவனே அருகில் உள்ள அதியனுக்குத் துணையாக வந்திருத்தல் வேண்டும். எனினும் அவன் பெயர் இன்னதென அறிய இயலவில்லை.

குடகொங்க மன்னன்

அதியமானைத் தவிர, மேலைக்கொங்குப் பகுதியில் (பேரூர், கோவைப்பகுதி) வேறொரு மன்னனும் இருந்தான் எனக் கருதவேண்டியுள்ளது. அவனையும் நெடுஞ்சடையன் வெற்றி கொண்டதோடு. அவனைத் தனது தலைநகரான மதுரையில் சிறையில் அடைத்தான். இக்காலகட்டத்தில் அதியரைப் போல வேளிர் குடியினர் சிலர் மீண்டும் தலையெடுத்துக் கோட்டையுடனும், படையுடனும், அரசுப் பொறுப்பேற்றிருந்தனர் ஏனலாம். யாப்பருங்கலம் ஒரு வேள் விண்ணனைக் குறிப்பதை முன்னரே கண்டோம். இவன் சமணச் சார்புடையவனாய், மிகுந்த படையுடன் விளங்கியதை அப்பாடல் காட்டும். பழைய கோட்டைப் பகுதியில் வாழ்ந்த இவனே ஒருவேளை செப்பேடு குறிக்கும் குடகொங்கத்து அடல்மன்னனாக இருக்கலாம். இவன் நெடுஞ்சடையனால் போரில் பிடிக்கப்பட்டுக் கூடற் சிறையுள் அடைக்கப்பட்டான். இவனும் அதியனின் நண்பனாகப் போரில் ஈடுபட்டிருக்கலாம்.

ஆகக் குலமரபுச் சமுதாய நிலையில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் அதன் வீழ்ச்சியில் வேளாண்மையினை அடிப்படையாகக் கொண்ட புதிய தலைவர்கள் தோன்றி ஆற்றங்கரைப் பகுதிகளில் பெரிய அரசுகளாகவும், சில குறுநில மன்னர்களாகவும் வளர்ந்தனர். இவ்வரச பரம்பரையின் தகுதி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக அவர்கள் பல வேதச் சடங்குகளை மேற்கொண்டும், அவற்றை நடத்தி வைத்த புரோகிதர்களுக்குப் பெரும்பொருளையும், நிலங்களையும், வழங்கியும் சிறந்தனர். வேளாண்மைக்குரிய ஆட்சிப்பரப்பு விரிவடைந்ததால், எல்லைப்பகுதிகள் காவலுக்குரியதாகவே, அப்பகுதிகளில் பலதொல்குடியினர் வீரத்தால் சிறப்படைந்தனர். இவ்விரண்டு அடிப்படையிலும் அதியர்குடி சிறந்து விளங்கியது. சில குறிப்பிடத்தக்க மன்னர்களும் ஆட்சிபுரிந்து இக்குடிக்குப் பெருமை சேர்த்தனர்.

இயல் III

பேரரசுக் காலத்தில் அதியரின் நிலை
(கி.பி. 985 முதல் 1070 வரை)

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் முதன்முதலாகத் தமிழகம் முழுவதும் ஒரு தலைமையின் கீழ் வந்தது சோழர் ஆட்சியில்தான். பேரரசுக்காலம் என்று அக்காலத்தைப் பொதுவாகக் குறிப்பிடலாம். எனினும் முதலாம் இராஜராஜன் காலத்தில்தான் அத்தகைய ஓர் ஒருமித்த அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. அவன் காலத்திலும், அவனது மகனும், கங்கையும் கடாரமுங்கொண்ட சோழன் என்று அழைக்கப்பட்டவனும் ஆகிய முதலாம் இராஜேந்திரன் காலத்திலும் இவ்வரசு நிலவிப் பின்னர் நெகிழ்ந்தது.

பேரரசுக் காலத்திற்கு முன்னர்க் குறுநிலப் பகுதிகளாக இருந்த நாட்டுப் பிரிவுகளும், அவற்றின் ஆட்சித்தலைவர்களும், பேரரசுக்காலத்தில் அதன் உறுப்புகளாக மாறினர். அதியர் குடியும் அதற்கு விதிவிலக்காயிருக்கவில்லை.

பல்லவ, பாண்டியர் வீழ்ச்சியும் சோழர் எழுச்சியும்

தமிழகத்தின் வடக்கில் ஆட்சிபுரிந்த பல்லவர்களில் இறுதியில் வாழ்ந்த கம்பவர்மனின் மக்களான நிருபதுங்கன், அபராஜிதன் இவர்களுக்கிடையே தாயப்போர் நிகழ்ந்தது. இளையவனான அபராஜிதனால் பதவியில் இருந்து இறக்கப்பட்ட நிருபதுங்கன் மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அரசுக்கட்டிலை மீண்டும் கைப்பற்றினான். இது தலைமையில் இருந்த பிளவினைப் புலப்படுத்தும். தெற்கில் பாண்டிய அரசில் ஸ்ரீமாறஸ்ரீவல்லபனுக்குப் பின்வந்த மக்கள் மூவருக்குள் தாயப்போர் ஏற்பட்டு, மாயாபாண்டியன் என்று மகாவம்சத்தால் குறிக்கப்பட்ட வீரபாண்டியன் சிங்களவருடன் சேர்ந்து மற்ற இருவரையும் விரட்டினான். இரண்டாம் வரகுணன் மற்றும் பராந்தக வீரநாராயணன் ஆகிய இருவரும் சேர்ந்து முன்னவனை வென்றனர். வென்ற இரண்டாம் வரகுணன் வடக்கில் பல்லவர் எல்லைவரை ஆட்சியைப் பரப்பினான். அவனை எதிர்ப்பதில் பல்லவருக்குச் சோழ விஜயாலயன் உதவினான். திருப்புறம்பியத்தில் நடைபெற்ற அப்போரின் முடிவில் பல்லவருக்கு வெற்றியும், சோழருக்கு ஆளும் வாய்ப்பும் கிடைத்தது. அதன்பின்னர்ப் பாண்டியர் பரப்பும் சுருங்கிவிட்டது.

ஆளும் வாய்ப்புப்பெற்ற சோழ விஜயாலயன் தொடங்கி முதலாம் இராஜராஜன்வரையில் சோழர்களும் பெரும்பரப்பை அரசாளவில்லை. பாண்டியர் பகுதியினை முதன்முதலாகப் பராந்தகன் கைப்பற்றினான். அவனாட்சிக் காலம் முழுவதும் ஆட்சியினைப் பரப்ப வடக்கிலும் தெற்கிலும் பல போர்கள் நிகழ்த்தினான். ஆயினும் கி.பி. 959 வரை பாண்டியர் தம்நாட்டுப் பகுதியை விட்டுக்கொடுக்கவில்லை. இத்தகைய

சூழ்நிலையில் பல்லவர், பாண்டியர், சோழர் ஆகிய மூவரும் தத்தம் தலைநகரம், மற்றும் அதைச் சுற்றிய பகுதிகளிலேயே கவனத்தைச் செலுத்தியிருக்க வேண்டும். ஆங்காங்குப் பாண்டியர், பல்லவர் காலத்திலிருந்து தொடர்ந்து வந்த குறுநிலத் தலைவர்கள் சிலர் உரம் பெற்றிருந்தனர்.

பேரரசு நிறுவப்படும் முன்னர் குறுநிலத் தலைவர்கள் நிலை

தஞ்சையை அடுத்த வல்லத்தில் பண்டைக் காலத்து மூத்த அதிகாரிகளான முத்தரையர்களும், பாண்டிநாட்டுக்கும் சோழநாட்டுக்கும் இடைப்பட்ட புதுக்கோட்டைப் பகுதியில் கொடும்பாளூர் இருக்கு வேளிரும், திருச்சியை அடுத்த பழுவூரில் பழுவேட்டரையர்களும், தென்னார்க்காட்டுப் பகுதியில் மலையமான்களும், வடமேற்கு எல்லைப்புறத்தில் அமைந்த பெரும்பாணப்பாடியில் பாணரைசர்களும், கங்கபாடியில் கங்கரைசர்களும், கொல்லிமலைப் பகுதியில் மழவரையர்களும், வடக்குத் தொண்டைமண்டலப் பகுதியில் வைதும்பர்களும் குறிப்பிடத்தக்க குறுநிலத் தலைவர்களாகப் பேரரசுத் தோற்றத்திற்கு முந்திய காலகட்டத்தில் விளங்கியிருக்கின்றனர். இவை அனைத்தும் எல்லைப்புறப்பகுதிகள் என்பது நினைவு கொள்ளத்தக்கது.

திருப்புறம்பியப் போருக்குப் பின்னர், பாணர்கள் மேலாதிக்க மன்னன் பெயரின்றியும் சக ஆண்டினைக் குறித்தும் கல்வெட்டுகளைப் பொறித்துள்ளனர்.[1] தொண்டைமண்டல முனையதரையர் திருப்புறம்பியப்போரின் போது இதேபோல மேலாதிக்க மன்னன் பெயரின்றிச் சக ஆண்டினைக் குறித்துக் கல்வெட்டுகளை எழுதியுள்ளனர்.[2] பங்களநாட்டு அத்திமல்லன் ஆன கன்னரதேவ பிருதிவி கங்கரையன் தன் பெயரிலேயே கல்வெட்டுகளைப் பொறித்துள்ளான்.[3] இவை குறுநிலத் தலைவர்கள் அக்காலகட்டத்தில் தனியுரிமை பெற்றிருந்ததைக் காட்டுவனவாம்.

பராந்தக சோழன் இரண்டு பாண அரசர்களை வென்றான் என்று உதயேந்திரம் செப்பேடு கூறுகிறது.[4] இதுபோல வைதும்ப அரசர்களையும் பராந்தகன் வெற்றிகொண்டான் என்றறிகிறோம். மேலும், சில குறுநிலத்தலைவர்கள் திருப்புறம்பியப் போரிலும், இராஷ்டிரகூடக் கன்னரதேவனுடன் பராந்தகன் நடத்திய போரிலும், பிறபோர்களிலும் உதவி இருக்கின்றனர். திருப்புறம்பியப்போரில் பல்லவருக்கு உதவிய மேலைக்கங்கமன்னன் முதலாம் பிருதிவிபதி தன்னுயிரை இழந்தான். அவனுக்குப்பின் வந்த இரண்டாம் மாறசிம்மனும், இரண்டாம்

1. S.I.I.Vol.II, No:14; E.I.Vol.XI, p.227.
2. E.I. Vol VII, No: 19 D & E.
3. Ibid, No: 26.
4. S.I.I.Vol.II, No:76.

பிருதிவிபதியும் ஆதித்த சோழனின் தொண்டைமண்டல வெற்றிக்குப் பெரிதும் உதவியிருக்கின்றனர். பராந்தகன் காலத்தில் வைதும்பரை அடக்க உதவிய இக்குலத்தைச் சேர்ந்த அரசனுக்குப் பாணாதிராசன், வீரசோழன், செம்பியன் மகாபலி பாணரைசன் ஆகிய பட்டங்களைப் பராந்தகன் வழங்கியுள்ளான்.[5] இராஷ்டிரகூட மன்னன் கிருஷ்ணனுக்கு உதவிய வைதும்பர்களுக்குத் தொண்டைமண்டலத்து மலாடு, வாண கோப்பாடி, சிங்கபுரநாடு, வெண்குன்றக் கோட்டம் ஆகியவற்றைக் கிருஷ்ணன் அளித்தான்.[6]

இங்குக் கூறப்பட்ட சிற்றரசர் அனைவரும், பேரரசு என்ற ஒன்று இல்லாத நிலையில், தாமே தனியாட்சியினை நடத்தியும், தேவையேற்படும்போது வளர்ந்துவரும் அரசுகளுக்கு உதவுவதன் மூலம் அவர்களிடம் இருந்து உதவிகளைப் பெறுவதோடு, தம் ஆட்சியினை நிலைநிறுத்திக் கொண்டும் வாழ்ந்துள்ளனர். இவர்களது வீரமும், படையும் வளர்ந்து வரும் அரசுகளுக்குத் தக்க சமயத்தில் துணை ஆயின. பெரிய அரசர்களும் இவர்களைக் கொண்டு தம் அரசுகளை விரிவும் வலிமையும் உடையதாக்கிக் கொண்டனர்.

மழவரையர்கள்

இவ்வகையில் சோழப்பேரரசு நிலைபெறுவதற்கு முன்னர் இருந்த மழவரையர்களும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். அதியமான்களின் ஒரு கிளையினர் இக்காலகட்டத்தில் குலமரபுச் சமூதாய வீழ்ச்சிக்காலத்தில், வளமான காவிரிக்கரைக்கு வந்து குடியேறினர் என்பதை இரண்டாம் இயலில் கண்டோம். இவர்கள் குடியேறிய சேலம், நாமக்கல், கொல்லிமலைப் பகுதிகள் அடங்கிய நிலப்பரப்பு மழநாடு எனப்பெயர் பெற்றிருந்தது. இப்பகுதியைச் சார்ந்த மழவரையர்கள் பலரைப்பற்றிக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவர்கள் முதற்பராந்தகன் காலம் முதல் முதலாம் இராஜராஜன் காலம் வரை சோழர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக விளங்கியிருக்கின்றனர்.

சுந்தரசோழன், ஈழநாட்டுடன் நடத்தியபோரில் படைநடத்திச் சென்று வீழ்ந்துபட்டதாகக் கொல்லிமழவன் ஒருவன் குறிப்பிடப் பெறுகிறான்.[7] கொல்லிமழவன் ஒற்றியூரன் பிரிதிகண்ட வர்மன் ஆன சுந்தரசோழன் இவனது மகன் ஆவான்.[8] பழுவேட்டரையன் மறவன் கண்டனின் மாமடியென (மாமன்) மழவர் கொங்கணி சென்னிநம்பி என்பவரைக் கீழப்பழுவூர்க் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[9] கண்டராதித்தன் மனைவியும் சிவத்தொண்டிற் சிறந்தவரும் ஆன செம்பியன் மாதேவியாரை, 'மழவரையர் மகளார்' என்றும், 'மழபெருமான் அடிகள்' என்றும் கல்வெட்டுகள் தவறாமல்

5. Ibid.
6. ARE-1905, No:16.
7. S.I.I.Vol.III, No:212.
8. Ibid, No:233.
9. S.I.I.Vol.XIX, No:237.

சுட்டுகின்றன. கோவிந்தப்புத்தூர்க் கல்வெட்டு அண்டநாட்டு மழவர் ஒருவரைக் குறிக்கிறது.[10] உத்தமசோழனின் தேவி தென்னவன் மாதேவி மழபாடியைச் சேர்ந்தவராகச் சுட்டப்பெறுகிறார்.[11] பரகேசரி வர்மனின் 14 ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த வளப்பூர் நாட்டுக் கல் வெட்டு 'மழபெருமாள்' ஒருவரைக் குறிக்கிறது.[12] இவர்கள் அனைவரும் முதலாம் இராஜராஜன் காலத்திற்கு முன்னர் வாழ்ந்தவர்கள்.

பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையன் அதியமான்களை வெற்றி கொண்டதன் பின்னர், இப்பகுதியில் பல்வேறு குலத்தைச் சேர்ந்த குறுநிலத்தலைவர்கள் வாழ்ந்துள்ளனர். எனினும் மேலே குறிக்கப்பட்ட கொங்குநாட்டு மழவரையர்கள், அதியமான்களின் வழித் தோன்றல் களாக இருந்திருக்கலாம் என்று கருதலாம். துணிந்து முடிவுக்கு வர உதவும் நேரடிச் சான்றுகள் இல்லை. இருப்பினும் சோழப்பேரரசின் ஆக்கத்திற்குத் துணைபுரிந்த – இயற்கையாகவே வீரம் காட்டிய மறவர்களைக் கொண்ட இக்குலத்துடன் ஆட்சியதிகாரத்தில் முன்னேறி வந்து கொண்டிருந்த சோழர்கள் மணவுறவு கொண்டிருந்தனர் என்பது ஏற்புடையதே. எனவே அதியர்மரபு முழுவதுமாக மறைந்துவிட்டது என்று கருதுவதைவிட, சோழப் பேரரசுக்குத் துணைபுரிந்த மழவரையர்கள் அதியமான்களின் வழித்தோன்றல்களாக இருக்கலாம் என்று கருதத் தோன்றுகிறது. இவர்கள் வாழ்ந்த பகுதி இந்த ஊகத்திற்கு அரணாய் அமைகிறது.

சோழப் பேரரசு

சோழ மன்னர்களில் முதலாம் இராஜராஜன் சோழ நாட்டுப் பகுதியை மட்டும் அல்லாமல், பல அண்டை நாடுகளையும் வெற்றி கொண்டு தன்னாட்சிக்கு உட்படுத்தினான். அவனது எட்டாம் ஆட்சியாண்டிலிருந்து (கி.பி.993) அவனது முழுவெற்றிகளையும் குறிக்கும் மெய்க்கீர்த்தி அவன் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. எனினும், எல்லாப் பகுதிகளையும் அவன் பேரரசின் நிர்வாக அமைப்புக்குள் கொண்டுவர மேலும் சில ஆண்டுகள் ஆயின எனலாம். அவனது 24 ஆம் ஆட்சியாண்டுக்கு முன்னர் (கி.பி.1009) அவனாட்சிப் பரப்பு முழுவதும் அளக்கப்பட்டு வரிக்கட்டமைப்பும் செய்யப்பட்டது. வரி செலுத்துவதற்கான முறைகள் வகுக்கப்பட்டன. சோழமண்டலம் என்ற நாட்டுப்பிரிவு வரையறுக்கப்பட்டது. பிறநாட்டுப் பிரிவுகளும் இணைக்கப்பட்டன. சோழநாடு என்ற பெயர், சோழமண்டலம் என்றும், தொண்டைநாடு, ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்றும், பாண்டிநாடு, இராஜராஜ மண்டலம் என்றும், நுளம்பபாடி நிகரிலி சோழ மண்டலம் என்றும், ஈழம் மும்முடிச் சோழ மண்டலம் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டன. இவ்வாறு பெயர் சூட்டப்பட்டதோடு,

10. S.I.I.Vol.XIX, No:272
11. Ibid, No:311.
12. Ibid, No:360.

பழைய அரசுகளும், இயற்கையான நாட்டுப்பிரிவுகளும் முழுவதும் மறக்கடிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.[13] இவனது மகனான இராஜேந்திரன் ஆட்சியின் போது, ஒவ்வொரு மண்டலப்பிரிவுக்கும் அரச குடும்பத்தினரே அரசியல் தலைவர்களாகச் சென்று ஆங்காங்கு ஆட்சிப் பொறுப்பேற்றனர்.[14] ஆங்காங்குத் தலைமைப் பொறுப்பில் இருந்த குறுநிலத்தலைவர்கள் சோழப் பேரரசில் சேனைத் தலைவர்களாகவும் (Military Chief), நிர்வாகத் தலைவர்களாகவும் (Administrative Chief) இணைத்துக் கொள்ளப்பட்டனர்.[15] இவ்வாறு ஒருமித்த சோழப் பேரரசு (Centralized Monarchy) எவ்வித நெகிழ்வும் இன்றி இராஜராஜன் மற்றும் இராஜேந்திரன் காலம் வரை நிலவியது.[16]

சோழப் பேரரசு ஒருமித்த அரசு (Unitary State) அல்ல என்றும், அங்கு மத்திய அரசு நிர்வாகமோ, முறையான நிர்வாக அடுக்கு முறைகளோ (bureaucratic set up) இல்லை என்றும், அது ஒருவகையான கூறாக்க நிலை அரசு (Segmentary State) என்றும் அண்மைக் காலத்தில் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.[17] ஆனால் இராஜராஜன் மற்றும் இராஜேந்திரனின் ஆட்சிக் காலங்களில் மிகச் சிறந்த மத்திய அரசு நிர்வாகமுறை அவர் ஆட்சிப்பரப்பு முழுவதும் செயற்படுத்தப்பட்டது என்பதை மிகத்தெளிவாகக் கூறத்தக்க சான்றுகள் பல உள்ளன.

முதலாவதாக, கல்வெட்டு எழுதும் முறையினைக் கூறலாம். இவ்விரு அரசர் காலங்களிலும் தமிழகத்தின் எந்தப் பகுதியிலும், வேறு எந்தக்குலத்தைச் சார்ந்தவர்களின் கல்வெட்டுகளும் இடம்பெற்றதாகச் சான்றுகள் இல்லை. இதுவே இவர்களது ஆளுமைக்கு முதற்சான்றாகும். நாட்டுப் பகுதியில் எல்லா இடங்களிலும் வரிவசூலிலும், பிறநிர்வாக முறைகளிலும் குற்றங்கள் ஏற்படும்போது அவற்றை ஆராயவும், களையவும், சரிசெய்யவும், தண்டனை வழங்கவும். மத்திய அரசின் அலுவலர்கள் வந்ததைப் பல கல்வெட்டுகள் காட்டுகின்றன.[18] ஒவ்வொரு

13. Y. Subbarayulu, Political Geography of The Chola Country, Madras: State Department of Archaeology, 1973, p.7
14 என் சேதுராமன், பாண்டியர் வரலாறு, கும்பகோணம் ராமன் & ராமன் பிரைவேட் லிட், 1989, பக்.26–40.
15. Y. Subbarayulu, p.80.
16. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் தமது 'சோழர்கள்' என்ற ஆங்கில நூலில் Centralized Monarchy என்ற சொல்லைப் பயன்படுத்தினார் அதே பொருளைக் குறிக்கும் வகையில் திரு. பர்டன் ஸ்டீன் தமது 'Peasant State and Society in Medieval South India' என்றும் நூலில் 'Unitary State' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். அதே சொற்கள் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன.
17. Burton Stein, Peasant State and Society in Medieval India, Oxford: Oxford University press, 1980, p.8.
18. அ.. K.A.N. Sastri, pp.477-479.
ஆ. இராஜேந்திரன் (பதிப்), அருண்மொழி, சென்னை· தமிழ்நாடு அரசு தொல் பொருளாய்வுத் துறை, இல.தியாகராசன், குற்றங்களும் தண்டனைகளும், 1986. பக் 94–105

செப்பேடும் அதில் வழங்கப்பட்ட தானங்களைச் செயற்படுத்தும்போது, மத்திய அரசு மற்றும் நிர்வாக அடுக்குமுறைகளில் உள்ள அதிகாரிகளையும், அவர்களுக்கும் உள்ளாட்சியில் (Local Administration) இருந்த குழு உறுப்பினர்களுக்கும் உள்ள தொடர்பினையும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. 'சபை' (அந்தணர்களுக்கான நிர்வாக அமைப்பு), ஊர், நாடு (வேளாண் மக்களுக்கான நிர்வாக அமைப்பு), நகரம் (வணிகர்களுக்கான நிர்வாக அமைப்பு) ஆகியன தனித்தனியே இருப்பினும், அவரவர்களுக்கான நிர்வாகத்தில் மத்திய அரசின் மேலாண்மை இருந்தது என்பதை இச்சான்றுகள் தெளிவாகச் சுட்டுவனவாய் உள்ளன.

சோழப் பேரரசில் பிரம்மாதிராயர்களும், மூவேந்தவேளார்களும் உயர்மட்ட அதிகாரிகளாகச் செயல்பட்டனர்[19] பெருந்தரம் என்ற ஓர் அதிகாரி நாட்டுப் பிரிவு நிர்வாகத்தில் தலைமைப் பொறுப்புடையவனாக இருந்தான். இத்தகைய சான்றுகள் சோழ அரசு ஒன்றுபட்ட அரசு என்பதைத் தெளிவாக்கும்.

பேரரசில் அதியரின் நிலை

இராஜராஜனின் எட்டாம் ஆட்சியாண்டிற்கு முன்னர் அவன் கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி ஆகிய பகுதிகளை வெற்றி கொண்டான். நுளம்பபாடியான நிகரிலிச் சோழமண்டலம் என்ற பெயரை இராஜராஜனின் 14 ஆம் ஆட்சியாண்டிலிருந்து காண்கிறோம். முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டு, கங்கநாடான முடிகொண்ட சோழ மண்டலத்தினைக் குறிக்கிறது. இப்பகுதிகளே, தமிழகத்தின் வடமேற்கு எல்லைப்புறமான அதியமானின் தொடக்ககால நாட்டுப்பகுதிகள் ஆகும். தனியாக அதியமான்களை வெற்றி கொண்டதாக இராஜராஜன் கூறவாய்ப்பில்லை. ஏனெனில் இம்மரபினரே, மழவரையர்கள் என்ற பெயருடையவராய், சோழப் பேரரசுடன் மணவுறவுடையவராய்த் திகழ்ந்திருந்தனர் என முன்பே கூறியுள்ளோம். இப்பகுதி, 'பஞ்சவன் பிரம்மாதிராயன்' என்ற சோழப் பேரரசின் பொருந்தரத்து அதிகாரி ஒருவனின் நிர்வாகத்தில் இருந்ததைச் சேலம் மாவட்டத்துப் பட்டுக்கணாம்பட்டி என்ற ஊரில் கிடைத்த இராஜராஜனின் 25 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.1010) தெளிவாக்குகிறது.[20] இத்தகைய நிர்வாக முறையே கி.பி.1070-ஆம்

---

19. ஆ. Burton Stein, pp.111-112.

    ஆ. திருவெண்காட்டில் அண்மையில் த அ தொ ஆ துறையால படியெடுக்கப்பட்ட முதலாம் இராஜாதிராஜனின் கல்வெட்டில் 33 மூவேந்த வேளார்கள் கையெழுத்திட்டிருக்கின்றனர். அவர்கள் பேரரசின் பல்வேறு நாட்டுப் பகுதிகளிலும் பொறுப்புடைய பதவியில் பணிபுரிந்தவாகள் என்பது கவனத்திற்குரியது.

20. S.I.I. Vol.XXIV, No:268.

ஆண்டுவரை அதாவது முதற்குலோத்துங்கன் ஆட்சிக்கட்டில் ஏறிய காலம்வரை நீடித்தது. எனவேதான் இக்காலகட்டத்தில் அதியமான் என்ற பெயர்கொண்டோர் யாரையும் நம்மால் காண இயலவில்லை.

தமிழக வரலாற்றில் ஆளும் அரசுகளாக விளங்கிய பல்லவ, பாண்டிய அரசுகளின் வீழ்ச்சியின் பின்னர், சோழ அரசு தோன்றியது. அச்சோழ அரசமரபில் வந்த முதலாம் இராஜராஜனும், முதலாம் இராஜேந்திரனும் சோழப் பேரரசை நிறுவினர். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பல குறுநிலத் தலைவர்கள் தன்னாட்சி பெற்று வளர்ந்துவரும் பேரரசுக்குப் படைநல்கி உதவியதன் மூலம் தாமும் வாழ்ந்து பேரரசின் ஆக்கத்திற்கும் உதவினர். அவர்களோடு வளர்ந்து வரும் அரசு மணவுறவும் கொண்டு நெருக்கமாக வாழ்ந்ததால் பேரரசு என்னும் பெரும் அமைப்பில் குறுநிலத் தலைவர்கள் ஓர் அங்கம் ஆகிவிட்டனர். அத்தகைய குறுநில அரசமரபுகளுள் ஒன்றான பண்டைய அதியர் மரபு பேரரசுக்காலத்தே ஆளும்மரபாக இல்லாமல், பேரரசுக்குத் துணையாக ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த அதிகாரிகள் மரபாகத் தொடர்ந்து நின்றது.

இயல் IV

பேரரசு வீழ்ச்சிக் காலத்தில் அதியர் நிலை
(கி.பி. 1070 முதல் கி.பி 1280 வரை)

முதலாம் இராஜராஜனால் விரிவுபடுத்தப்பட்டுத் தொடர்ந்து முதலாம் இராஜேந்திரனாலும், அவன் மக்களாலும் நிர்வகிக்கப்பட்ட சோழப் பேரரசின் ஆட்சிப்பரப்பு தொடர்ந்து நீடித்திருக்கவில்லை. இராஜேந்திரனின் மக்கள் அனைவரும் போரிலும் நோயிலும் மடிந்தனர். எனவே மகள்வழியில் சாளுக்கிய விமலாதித்தனுக்குப் பிறந்த மகனான முதலாம் குலோத்துங்கன் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றான். இவன் ஆட்சிக்கு வருமுன்னர்ச் சிலகாலம் சோழநாடு அரசனின்றி இருந்தது. பாண்டியர் தனியாட்சியை மீண்டும் தொடங்கினர். சோழராட்சி பரவி இருந்த நாட்டுப்பகுதிகள் பலவும் தனியாகிப் பேரரசின் கட்டுப்பாட்டில் இருந்து பிரிந்தன. எனவே முதலாம் குலோத்துங்கன் குறைந்த நிலப்பரப்பினையே ஆள வேண்டியவன் ஆனான். ஆங்காங்கு குறுநிலத்தலைவர்கள் தனியுரிமை பெற்றனர். அதுமுதற்கொண்டு சிறிது சிறிதாக வலிமை குன்றிய சோழ அரசர்களும் இத்தகைய குறுநிலத்தலைவர்களுடன் அரசியலில் ஒத்துப்போக வேண்டிய நிலையினை அடைந்தனர். பேரரசின் வீழ்ச்சியில் பல இடங்களிலும் குறுநிலத் தலைவர்களின் ஆட்சி முகிழ்த்தது.

இப்பின்னணியில் முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலம் தொடங்கி, அதியமான்களின் பெயர்கள் வரலாற்றில் மீண்டும் இடம் பெறுவதைக் காண்கிறோம். அவர்கள் முதலில் படைத்தலைவர்களாகத் திகழ்ந்தும், பாடிகாவலும் வரிவசூலும் செய்யும் ஊர்த்தலைவர்களாக விளங்கியும் வந்துள்ளனர். பின்னர் அவர்கள் குறுநிலத்தலைவர்கள் அளவிற்கு வளர்ந்து சில நேரங்களில் பேரரசுக்கு அடங்கியும் தனியாகவும் ஆட்சிபுரிந்துள்ளனர். இவ்வகையில் அதிகாரிகள், சேனாதிபதிகள் என்னும் நிலைகளில் இருந்த அதியமான்கள் சிலர். தகடூரைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்த தந்தை மகன் முறையிலான அதியமான்கள் மூவர். குடிவழியுறவு புலப்படாத – ஆனால் கல்வெட்டுகளில் சிறப்பாகக் குறிக்கப்படும் அதியமான்கள் சிலர். இறுதியில் சோழர் முழுவதுமாக மறைந்தபோது கி.பி. 13–ஆம் நூற்றாண்டில், தமிழகத்தின் பெரும்பரப்பை வெற்றிகொண்டு மீண்டும் அரசமைத்த பாண்டிய அரசின்கீழ் அதிகாரிகளாகத் திகழ்ந்த அதியமான்கள் சிலர். அவர்களைப் பற்றி ஈண்டு விரிவாகக் காணலாம்.

பல்வேறு குறுநிலத் தலைவர்களின் நிலை

சோழப் பேரரசின் வீழ்ச்சிக் காலத்தில் பொறிக்கப்பட்ட பல கல்வெட்டுகளின் துணைகொண்டு அவை குறிக்கும் பல்வேறு குறுநிலத்தலைவர்களின் தன்மையினை ஆராய்ந்தால் ஒரு குறிப்பிட்ட வகையிலான வளர்ச்சி மற்றும் மாற்றத்தினைத் தெளிவாக உணர முடிகிறது.

1. முதற் குலோத்துங்கன் காலம் முதல் இரண்டாம் இராஜாதிராஜன் காலம்வரை அரசிடம் செயல்திறம் மிக்க வீரர்களாக – சேனாதிபதிகளாகச் செயல்பட்டவர்கள். (கி.பி. 1070–1177)

2. மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து சிறுசிறு பகுதிகளில் பாடிகாவல் செய்யும் தலைவர்களாகவும், ஆயங்களைத் திரட்டும் உரிமை பெற்றவர்களாவும் இடம் பெற்றவர்கள். (கி.பி. 1178 முதல்)

3. அவர்களில் சிலர் படிப்படியாக வளர்ந்து குறுநில மன்னர்களாகித் தனியரசாகச் செயல்பட்டவர்கள்.

இவ்வாறு மூன்று நிலைகளாகக் கொண்டு பார்க்கும்போது இக்காலகட்டத்தில் இருந்த குறுநிலத் தலைவர்களின் தன்மை தெளிவு பெறுகிறது.

பல்வேறு குலமரபுகள்

பெருகனூர் நாட்டுக் கூடலூருடையான் அரையன் முனையன் மோகன் ஆன இராஜேந்திர சோழக்காடவராயன் என்பான் முதலாம் குலோத்துங்கனின் பதினான்காம் ஆட்சியாண்டிலும், கஞ்சனூர் உடையான் சேனாதிபதி ஆதித்தன் திருச்சிற்றம்பலமுடையான் ஆன காடவராயன் என்பான் முப்பத்து ஒன்றாம் ஆட்சியாண்டிலும் குறிக்கப்படுகின்றனர்[1]. குலோத்துங்கனின் மனைவியொருத்தி காடவன்மாதேவி என்பதைத் திருவொற்றியூர்க் கல்வெட்டு கூறும்.[2] இவ்வாறாகத் தொடங்கிய காடவராயர்கள், மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சியின் இறுதிப்பகுதியில் 'சகல புவனச் சக்கரவர்த்திகள்' என்று கூறிக்கொள்ளும் அளவிற்கு வளர்ந்துவிட்டனர். இக்குலத்தைச் சேர்ந்த கோப்பெருஞ்சிங்கன், சோழமன்னன் மூன்றாம் இராஜராஜனைச் சிறைவைக்கும் அளவிற்கு வளர்ந்த – கி.பி. 1211 முதல் தனியரசனாகவே ஆட்சி நடத்திய – மன்னன் ஆகிவிட்டான்.

முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டுக்களில், திருக்கோயிலூர் மலையமான் குலத்தைச் சேர்ந்த பலர் குறிக்கப்படுகின்றனர். இக்குலத்தைச் சேர்ந்த விக்கிரம சோழச் சேதிராயன், விக்கிரசோழனின் கங்கநாட்டுப் படையெடுப்பில் பங்கு கொண்டு போரிட்டான்[3]. தொடர்ந்து சோழர்களுக்குத் துணையாக நின்றுதவிய மலையமான்கள், சோழரின் மனறவுக்குப் பின்னர், பாண்டியருக்குக் கீழடங்கியோராக மாறத்தொடங்கினர். விரதமுடித்தான் பகவதியாழ்வான் சேதிராயன் என்பான் சடையவர்மன் குலசேகரபாண்டியன் கல்வெட்டிலும் இடம்

---

1. ARE-1939-40. No:234; ARE-1925-26, 144.
2. Ibid 1912. No:111.
3. M.S. Govindasamy, The Role of feudatories in Later Chola History, Annamalai Nagar: Annamalai University, 1979, p.296.

பெறுகிறான்[4]. இவ்வாறே பலகுடிகளையுடையவராய்ப் பல சம்பு வரையர்களையும் முதலாம் குலோத்துங்கன் காலம் முதல் காண்கிறோம். இவர்களும் சோழர்கால இறுதிவரை அவர்களுக்கும், பின்னர் பாண்டியர்களுக்கும் அடங்கியிருந்து, கி.பி 1322–இல் தனியாட்சி தொடங்கிவிடுகின்றனர்.[5] காளஹஸ்திப் பகுதியில், விக்ரமசோழன் காலம் முதல் குறுநிலத்தலைவர்களாக விளங்கிய யாதவராயர்கள், மூன்றாம் இராஜராஜன் காலம்வரை சோழர்களுக்கும், பின்னர்த் தெலுங்குச் சோழமன்னன் வீரகண்டகோபாலனுக்கும், பாண்டியர்களுக்கும் அடங்கியவராக விளங்கினர்.[6] பல்வேறு குலமரபுகளைச் சேர்ந்த வீரர்களின் வளர்ச்சியினை இச்சான்றுகள் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

சேனாதிபதிகளாக விளங்கியோர்

முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்தவுடன், தனியுரிமை பெறவிரும்பிய குலமரபுகளுக்குச் சிற்றரசுகளாகும் வாய்ப்புக் கிட்டியது. பாண்டியர், சேரர், மேலைச்சளுக்கியர், வட, தென் கலிங்க நாடுகள், கங்கம், ஈழம் ஆகிய அனைத்து அரசுகளுமே தனியாட்சி முரசு கொட்டத் தொடங்கிய காரணத்தால், அனைவரையும் அடக்கவேண்டிய கட்டாய சூழலில் இருந்தான் குலோத்துங்கன். எனவே போரும் தவிர்க்க முடியாததாயிற்று. அப்போர்களில் பல குலமரபினைச் சேர்ந்தவர்களும் சேனைத்தலைவர்களாகப் பணிபுரிந்திருத்தல் வேண்டும். வடகலிங்கப் போர்மேற்சென்று வெற்றிவாகை சூடிவந்த கருணாகரத் தொண்டைமானைக் கலிங்கத்துப்பரணி மிகச் சிறப்பாகப் பாராட்டுகிறது. குலோத்துங்கனிடமும் தொடர்ந்து விக்ரமசோழனிடமும் படைத்தலைவனாக விளங்கிச் செயற்கரும் செயல்புரிந்த வீரன் அரும்பாக்கிழான் மணவிற்கூத்தனான காலிங்கராயனைச் சிதம்பரம், திருவதிகை, சித்திலிங்கமடம் ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுகள் மிகவிரிவாகப் பாராட்டுகின்றன. குலோத்துங்கன் கேரளத்தை அடக்கித் தன்கட்டுப்பாட்டில் வைக்கும் பொருட்டு அங்கு நிறுத்திய 'கோட்டாற்று நிலைப்படை'யின் தலைவனாக விளங்கிச் சிறப்புப் பெற்றவன் அரையன் மதுராந்தகனான குலோத்துங்க சோழக் கேரளராசன் ஆவான். குலோத்துங்கன் மேலைச்சாளுக்கிய விக்கிரமாதித்தனோடு நடத்திய போரில் வெற்றி வாகை சூடி, வச்சத்தொள்ளாயிரம் என்ற இலக்கியத்தின் தலைவனாகும் பெருமையைப் பெற்றவன், கஞ்சாறம் பஞ்ச நதிவாணன் முடிகொண்டான் ஆன வத்சராஜன் ஆவான். இவ்வாறு பலகுல மரபுகளைச் சேர்ந்த பெருவீரர்கள் பலர் படைத்தலைவர்களாக விளங்கிக்

---

4. ARE-1921-22, No:202.
5. என் சேதுராமன், பாண்டியர் வரலாறு, கும்பகோணம், ராமன் & ராமன் பிரைவேட் லிட், 1989, ப 229
6. M.S. Govindasamy, p.219.

குலோத்துங்கனின் வெற்றிக்குக் காரணமாயினர்[7] இவர்களைப் போலத் தகடூர் நாட்டுப் பகுதியில் அதியமான் என்ற பெயரில் பெருவீரன் ஒருவன் சோழநாட்டின் எல்லைப்புறப் பாதுகாவலனாக விளங்கியதைச் சில கன்னடக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.[8]

இக்கல்வெட்டுகள் ஹொய்சள மன்னன் விஷ்ணுவர்த்தனனுடையவை. பேலூர், ஹளேபீடு பகுதியினை மட்டும் ஆண்டு கொண்டிருந்த இம்மன்னன், குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்ததும், இராஜராஜன் காலம் முதல் தொடர்ந்து சோழராட்சிக்குட்பட்டிருந்த கங்கபாடிப் பகுதியினைத் (அதுவே தகடூர்ப் பகுதி) தன்னாட்சிப் பரப்பில் இணைத்துக் கொள்ளும் பொருட்டுப் போரிட்டான். இவனது தளபதி கங்கராஜன் என்பவன் களத்திற்கு வந்த பெருவீரன். அப்பகுதியின் தலைநகராக அன்று விளங்கிய தலைக்காட்டுக்கருகில் அப்போர் நிகழ்ந்திருத்தல் வேண்டும். அப்பகுதியின் பாதுகாவற் பொறுப்பினை ஏற்றிருந்தவன் அதியமான் ஆவான். அவனைச் 'சாமந்தன்' என்று அக்கன்னடக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அவை அதியமானைத், 'தலைக்காட்டுக் கணவாய்களான பெருங்கதவுகளுக்கு இடப்பட்ட தாழ்ப்பாள் ஆக விளங்கினான்' என்றுரைக்கின்றன. பெரும்போர் நடைபெறும் போது கங்கராஜன், அதியமானைக் சரணடையுமாறு கூறியிருக்கிறான்.

ஆனால் அதியனோ, 'என் பொறுப்பில் ஒப்படைக்கப் பட்டிருக்கும் இப்பகுதியினை இறுதிவரை நான் விட்டுத்தரமாட்டேன்' என்று கூறியதோடு, 'என்னிடம் போரிட்டு வெற்றிஎய்தினால் பெற்றுக்கொள்' என்று வீரமாகச் சூளுரைத்தான் என்று மிகவிரிவாகப் போர்க்கள நிகழ்ச்சியை எடுத்துரைக்கின்றது அக்கல்வெட்டு. போரில் அதியமான் இறந்தான். வெற்றி எய்திய கங்கராஜன் மிகப்பெருமையோடு, 'அதியமானின் மார்பைக் கிழித்தவன்' என்று பட்டம் சூட்டிக் கொண்டான். இப்போர் கி.பி **1116**–இல் நடைபெற்றது. அவ்வாண்டு முதல் ஹொய்சள விஷ்ணுவர்த்தனன் 'தலைக்காடு கொண்ட' என்ற பட்டத்தினைப்புனைந்து கொண்டிருக்கிறான். எனவே பெருமைக்குரிய காவலனாக – சாமந்தனாக மீண்டும் பன்னிரண்டாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இவ்வதியர்மரபின் வீரனைக் காண்கிறோம்.

ஸ்ரீரங்கத்தில் உள்ள குலோத்துங்கனின் *13*–ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சேனாதிபதி வீரராஜேந்திர அதியமான் என்றொருவன் குறிக்கப்படுகிறான்.[9] சேனாதிபதி என்ற பட்டம் பெற்றவனாகவும்,

---

7. விக்கிரம சோழனுலாவில், அரசனின உலாவில் உடன்வரும் சிறபபுப பெற்றவாகளாகப பல தலைவாகள குறிக்கபபடுகினறனா அவாகள அனைவரும குறுநிலத் தலைவாகள் எனபதும், விககிரமசோழனுககுப படைமுதலிகளாக (சேனாதிபதிகளாக) விளங்கினர் என்பதும கவனததிற்குரியது அடி 137–178.
8. E.C. Vol II, Nos: 90. 138,143.
9. ARE. 1938-39. No:118.

வீரராஜேந்திரன் என்று மன்னன் பெயரைத் தன்பெயரில் ஏற்றுக்கொண்டிருந்தவனாகவும் அவன் விளங்கியதை நோக்க, இவன் வீரராஜேந்திரன் காலத்திலிருந்தே படைத்தலைவனாகத் திகழ்ந்து குலோத்துங்கன் காலம் வரை தொடர்ந்து அப்பதவியில் இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். விக்கிரம சோழன் உலா, கலிங்கப்போரில் ஈடுபட்டு வீரம் காட்டிய அதியமான் ஒருவனை,

'ஒட்டிய
மானவரசர் இரிய வடகலிங்கத்
தானை துணித்த அதிகனும்' (அடி 171–172)

என்று சுட்டுகிறது. இவைகளில் இருந்து ஹொய்சள விஷ்ணுவர்த்தனின் சேனாதிபதி கங்கராஜனால் கி.பி 1116–இல் கொல்லப்பட்ட அதியமானும், மேற்குறிக்கப்பட்ட இருவரும் ஒருவரே எனக் கருத வாய்ப்புள்ளது. இவ்வாறு ஒருவர் என்று ஏற்றுக்கொள்வோமாயின் சோழ அரசில் சுமார் *33* ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்து சாமந்தனாக விளங்கியிருக்கிறான் ஓர் அதியன் என்று கொள்ள நேரிடுகிறது. இறுதியில் அவன் தகடூரான கங்கபாடியின் காவற்பொறுப்பு மிக்க வீரனாக விளங்கி வீரமரணம் எய்தியிருக்கிறான் என்றும் அறிகிறோம்.

ஸ்ரீரங்கத்திலேயே உள்ள முதற்குலோத்துங்கனின் 20–ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்றிலும், ஆண்டறியப்படாத இதேமன்னனின் மற்றொரு கல்வெட்டிலும் பொன்பற்றியுடையான் அரையன் சேனன் ஆன இராஜேந்திரசோழ அதியமான் என்ற ஒருவன் குறிக்கப்படுகிறான்[10]. நெல்லை மாவட்டத்தில் கிடைக்கும் இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டு பொன்பற்றியுடையான் சேந்தன் கோநம்பி ஆன அதியமானைக் குறிக்கிறது[11]. இம்மூன்று கல்வெட்டுகளிலும், இரண்டு அதியமான்கள் குறிப்பிடப்படுகின்றனர். இருவருமே பொன்பற்றியெனும் ஊரைச் சேர்ந்தவர்கள். இவ்வூர் இராஜராஜப்பாண்டி நாட்டு, இராஜேந்திரசோழவளநாட்டுத் திருமிழலைக் கூற்றத்தைச் சார்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. 20–ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'அரையன் சேனன்' என்றும், அடுத்ததில் 'அரையன் சேந்தன்' என்றும் பெயர் வருகிறது. இது ஒருவேளை எழுதுவோரின் பிழையாக இருக்கலாம். ஏனெனில் மூன்றாம் கல்வெட்டிலும், பொன்பற்றியுடையான் சேந்தன் கோநம்பி ஆன அதியமான் என்றே உள்ளது.

எனவே பொன்பற்றியைச் சேர்ந்த சேந்தன் என்பானின் மக்களே முதற்கல்வெட்டு கூறும் இராஜேந்திரசோழ அதியமானும், பிற்கல்வெட்டு கூறும் கோனம்பி ஆன அதியமானும் ஆக இருந்திருக்கலாம் எனலாம். இவ்விருவரும் அண்ணன், தம்பியராகச் சோழர் படையில் பொறுப்புள்ள பதவியுடையோராக இருந்தனர்

---

10. S.I.I. Vol. XXIV, Nos: 33,65.
11. Ibid. Vol.V, No:727.

என்பதை அரையன் என்ற பட்டம் தெளிவுபடுத்துகின்றது. ஆனால் இவர்களுக்கும் தலைக்காட்டுப் போரில் இறந்த சேனாதிபதி வீரராஜேந்திர அதியமானுக்கும் உள்ள உறவு புலப்படவில்லை. இருப்பினும் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் பாண்டிநாட்டில் அதியர் குலத்தைச் சேர்ந்த படைத்தலைவர்கள் பதவியில் இருந்திருக்கின்றனர் என்பது உண்மை. முதலாம் சடையவர்மன் குலசேகரன் என்னும் பாண்டிய அரசன், சோழ அதிகாரிகளையும், குறுநிலத்தலைவர்களையும் கி.பி.1172–க்குப் பின்னர் பாண்டிய நாட்டை விட்டே விரட்டினான் என்ற செய்தியும்[12] இதற்கரண் செய்வதாய் உள்ளது.

அனுமதிக்கப்பட்ட ஆட்சியாளர்களாக விளங்கியோர்

மேற்குறித்த வகையில் அதிகாரிகளாக இல்லாமல் சிலரைத் திறைசெலுத்திக் கொண்டு ஆட்சிபுரிய அனுமதிக்க வேண்டிய தேவையும் குலோத்துங்கனுக்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தவர்களும், சோழரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டவர்களே. குறுநிலத்தலைவர்களாக அவ்வப்பகுதியில் உரிமையுடையவர்களாக அவர்கள் விளங்கியதுமட்டும் இன்றி, அப்பகுதிக்குரிய பாதுகாவற்பொறுப்பினையும் அவர்கள் ஏற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

இவ்வகையில் இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் சோழப் பேரரசர்கள் ஆனபோது, அவர்களுக்குச் சமகாலத்தில் அதியர் மரபிலும், சிலர் சிறப்புடன் விளங்கியிருக்கின்றனர். இவர்களுடைய கல்வெட்டுகள் சேலம், வட, தென்னார்க்காடு மாவட்டங்கள், மற்றும் ஆந்திர மாநிலத்துச் சித்தூர் வட்டங்களில் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகளுக்கு உரிய அதியமான்கள் இருவர் என்றும், மூவர் என்றும் கொள்ளும் போக்கு வரலாற்றாசிரியர்களிடம் காணப்படுகின்றது. மேலும் கிடைத்துள்ள கல்வெட்டுகள் யார்யாருக்கு உரியன என்று பகுத்தறிவதிலும் தடுமாற்றம் காணப்படுகின்றது. இருவர், இராஜராஜ அதிகமான் என்பதைத் தம் பெயருடன் இணைத்துக் கொண்டனர். இது ஆய்வாளர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியது.

திரு. எம். எஸ். கோவிந்தசாமி அவர்கள், இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் ஒரு அதியமானும், இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் காலங்களில் இரண்டாமவனும், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் காலங்களில் மூன்றாமவனும் வாழ்ந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். திரு. சொ. சாந்தலிங்கம் அவர்கள், மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலேயே இராஜராஜ அதிகமான் இருந்தான் என்று கூறினாலும் அவன் எதுவரை இருந்தான் என்று கூறவில்லை. ஆனால் அவனதுமகன் விடுகாதழகிய பெருமாள், மூன்றாம் குலோத்துங்கனின்

12. என் சேதுராமன், பக் 116–117

20–ஆம் ஆட்சியாண்டு முதல், மூன்றாம் இராஜராஜனின் மூன்றாம் ஆட்சியாண்டு வரை வாழ்ந்தான் என்று கூறுகிறார். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ராஜராஜஅதிகமான் என்ற விடுகாதழகிய பெருமாளை மட்டும் குறிப்பிட்டு, மற்றொரு அதிகமான் என்று குறிப்பிடுவதன் மூலம், இரண்டு அதிகமான்களை ஏற்றுக் கொண்டாலும், இவ்விருவருக்கும் உரிய வரலாறுகளை ஒன்றாக்கியே கூறிவிடுகிறார். இவ்வாறே பிற அறிஞர்களும் விடுகாதழகிய பெருமாளின் இறுதி ஆண்டாக இராஜராஜனின் மூன்றாம் ஆட்சியாண்டையே கருதுவர்.[13] திரு. சாஸ்திரியும், திரு. சதாசிவப் பண்டாரத்தாரும் இராஜராஜ தேவனான அதியமான், அவனது மகன் விடுகாதழகிய பெருமாள் ஆகிய இருவரையும் ஏற்றுக்கொள்கின்றனர். இவர்கள் இருவரும் இவ்வதிகமான்களின் காலத்தை வரையறுக்கவில்லை. எனவே கிடைத்திருக்கும் கல்வெட்டுகளைக் கொண்டு இவர்களை முறைப்படுத்தி ஆய்வு செய்து முடிவுக்கு வரவேண்டியது அவசியமாகின்றது.

கிடைத்துள்ள கல்வெட்டுகளுள், திருமாணிக்குழியிலுள்ள குலோத்துங்கனின் 19 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மட்டுமே மூன்றாம் குலோத்துங்கனுடையது என்று வரையறுத்துக் கூறும் வகையில் அமைந்தது.[14] பிற கல்வெட்டுகளுள் குலோத்துங்கன் அல்லது இராஜராஜன் என்று வரும் பெயர்கள் எதிலும் மெய்க்கீர்த்தியோ அல்லது யாரென வரையறுக்க உதவும் குறிப்புகளோ இல்லை. அனைத்தும் 'திரிபுவனச் சக்கரவத்திகள்' என்று மட்டுமே தொடங்குகின்றன, கிடைத்துள்ளவை, குலோத்துங்கனின் 10–ஆம் ஆட்சி ஆண்டு முதல் 23–ஆம் ஆட்சி ஆண்டு வரையிலும், இராஜராஜனின் 7–ஆம் ஆட்சி ஆண்டு முதல் 10–ஆம் ஆட்சியாண்டு வரையிலும் உள்ளன. இவையன்றி மேலாதிக்க மன்னன் பெயர் குறிப்பிடப்படாமல், பாடல் வடிவில் அமைந்த விடுகாதழகிய பெருமாள் என்ற பெயருடன் கூடிய கல்வெட்டுகள் வடார்க்காடு மாவட்டம் திருமலையிலும், சித்தூர் வட்டம் லட்டிகத்திலும் உள்ளன. செங்கமா கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள உடன்படிக்கையிலும் மேலாதிக்க மன்னன் பெயரில்லை. அதுபோல கரடிக்குடியில் கிடைத்த கல்வெட்டு அதியமானின் ஓலை என்று மட்டுமே உள்ளது. அதிலும் மேலாதிக்கமன்னன் பெயரில்லை. அதியர் பெயர் பற்றிய குறிப்புகளைப் பொறுத்தவரை, எந்தவித அடைமொழியோ, இயற்பெயரோ இல்லாமல் 'அதிகமானார்' என்று மட்டுமே குறித்த கல்வெட்டுகள் இரண்டும், 'இராஜராஜ அதிகைமான்' என்று பெயர் கூறும் கல்வெட்டுகள் இரண்டும், 'விடுகாதழகிய பெருமாள்' என்று பெயர் கூறும் கல்வெட்டுகள் ஐந்தும் கிடைத்துள்ளன.

---

13. 'Seminor on social and cultural History of Dharmapuri District,' Salem: Institute of Kongu Studies, 1983. A. Mohan Ram, 'Vidukathalakiya perumal.' n.p.

14. ARE-1902, No:161.

அதியமானார் (கி.பி.1144 - 1156)

அதியமானார் என்ற பெயரை மட்டும் குறிக்கும் கல்வெட்டுக்கள் இரண்டும்[15] இரண்டாம் குலோத்துங்கன் காலத்தன என்று கருத வாய்ப்புள்ளது. இவ்விரு கல்வெட்டுகளையும் முதலாம் குலோத்துங்கனுக்கு உரியதாகத் திரு. சதாசிவப் பண்டாரத்தார் எழுதியுள்ளார். இதனை மறுத்துத் திரு. சாந்தலிங்கம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தன என்கிறார். இருவருமே தத்தம் கருத்துகளுக்குக் காரணம் கூறவில்லை. இவ்விரு கல்வெட்டுகளும் தருமபுரியிலேயே உள்ள கோட்டைக் கோயில் என்று வழங்கப்படும் கோயிலில் உள்ளன. குலோத்துங்கனின் பத்தாம் ஆட்சி ஆண்டில் வண்ணானைக் கும்பிட்டார் என்ற பெயருடைய, திருக்காளத்தியினின்று வந்த ஆண்டார் (துறவி) ஒருவர், இவ்வளாகத்தில் உள்ள மூன்று கோயில்களும் வழிபாடின்றிக் கிடப்பதைக் கண்டு, தகடூர்த் தலைவனான அதியமானிடம் கூற, அவன் ஆண்டார் விருப்பப்படியே சிவப்பிராமணர்களை வருவித்துப் பூசையினை மீண்டும் ஏற்படுத்திக்கொடுத்ததை ஒரு கல்வெட்டு குறிக்கிறது. அதியமானே நேரில் வந்து சிவப்பிராமணர்களுக்குக் காணிப்பிரமாணம் (உறுதி உரிமை) செய்து கொடுத்துள்ளான். இதற்கு அதியமானின் அரசியலதிகாரியான அரசூருடையான் சான்றளித்துள்ளான். இரண்டாண்டுகட்குப் பின்னர் எழுதப்பட்ட அடுத்த கல்வெட்டு, அதியமானடியான பம்மாரக் கூத்தன் பூலியூர்க்கிழவன் தம்பிரான் ஆன சோழன் என்பவன் அதியமானின் நன்மைக்காக மேற்குறித்த மூன்று கோயில்களுள் ஒன்றான திருவேளாவீச்சுரத்தில் பிரதிஷ்டையும் திருப்பணிகளும் செய்வித்ததைக் குறிக்கிறது. இவ்விரு கல்வெட்டுகளிலும் அதியமானுக்கு எவ்வித அடைமொழியும் இல்லை. ஆனால் 'அதியமானார்' என்று மரியாதையோடு சுட்டப்படுகின்றான். இவனுக்கெனத் தனி அரசியலதிகாரி உள்ளான். எனவே இவனே தகடூரில் மீண்டும் தனியாட்சி தொடங்கிய முதல் மன்னன் எனலாம். எனவேதான் தன்தலைநகரான தகடூரில் உள்ள கோட்டைக் கோயிலில் – அதுவரை வழிபாடின்றிக் கிடந்தவற்றில் வழிபாட்டுக்கு வகைசெய்துள்ளான். இவனது அடியான் ஒருவனும் இவனுக்கு நன்மையுண்டாகும் பொருட்டு இறைவனை வேண்டுமுகத்தான் ஒரு கோயிலிற் திருப்பணி செய்துள்ளான். எனவே இவனே கி.பி.1144,1146–ஆம் ஆண்டுகளில் இப்பகுதியில் உரிமையுடைய முதல் அதியர் தலைவன் எனலாம். இவனும் சோழர் தலைமையை ஏற்றுக்கொண்டவனே ஆவான்.

இராஜராஜ அதியமான் (கி.பி.1157 - 1190)

அடுத்து இராஜராஜ அதிகைமான் என்றும், இராஜராஜதேவனான அதிகைமான் என்றும் பெயர் குறிக்கப்பெற்ற இரு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. முன்னது இராஜராஜனின் 11–ஆம் ஆட்சி ஆண்டில்

15. இரா நாகசாமி, (பதிப்), தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள்–இரண்டாம் தொகுதி, சென்னை: தொல் பொருளாயவுத்துறை, 1975, எண்·115

சிவாடியிலும்,[16] பின்னது குலோத்துங்கனின் 10–ஆம் ஆட்சி ஆண்டில் திருவண்ணாமலையிலும் எழுதப்பட்டுள்ளன. திருவண்ணாமலைக் கல்வெட்டு குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் சாஸ்திரியவர்கள், தகடூர் நாட்டுப் பெண்ணை வடகரையில் உள்ள மலையனூர் என்னும் சிற்றூர் முழுவதையும் திருவண்ணாமலைக் கோயிலுக்குத் தானமளிக்கும் அளவிற்கு உரிமையுடைய அவன் நிலையினைக் கூறுவதோடு, அவன் பெயரின் அடைமொழியான இராஜராஜன் என்பதை இரண்டாம் இராஜராஜனுடையதாகவே எடுத்துக்கொண்டிருக்கிறார். சிவாடிக் கல்வெட்டும் இராஜராஜ அதிகைமானார் தனக்கு அளித்த பதின்கண்டக விதைநிலத்தினை கோச்செங்கணீஸ்வரம் உடையார்க்குத் தகடூர்த் தளமுடைய வியாபாரி கந்தமுழான் என்பவன் அளித்துள்ள செய்தியினையே குறிக்கிறது. எனவே இங்குக் குறிக்கப்படும் இராஜராஜ அதியமானும், திருவண்ணாமலைக் கல்வெட்டு குறிக்கும் இராஜராஜ அதியமானும் ஒருவர் எனக் கொள்வது பொருத்தமுடையது எனலாம். இவ்வதிகைமானின் முயற்சியாலேயே சோழர்களுக்கும், ஹொய்சளர்களுக்கும் ஓர் இணைப்பு ஏற்பட்டது என்பது திரு. சாஸ்திரியார் கருத்து. இரண்டாம் குலோத்துங்கனின் கலிங்க, கங்க வெற்றிகளுக்குப் பின்னர் மீண்டும் வடமேற்கு எல்லைப்புறம் அதியமான்களிடமே ஒப்படைக்கப் பட்டிருத்தல் வேண்டும். எனவே இவ்விரு கல்வெட்டுகள் குறிக்கும் இராஜராஜ அதிகமான் இரண்டாம் இராஜராஜனின் 11–ஆம் ஆட்சிஆண்டிற்குச் சற்று முன்பிருந்து மூன்றாம் குலோத்துங்கனின் 10–ஆம் ஆட்சி ஆண்டுக்குச் சற்று பின்புவரை (கி.பி. 1157–1190) சோழ மன்னர்கள் மூவரின் மேலாதிக்கத்தை ஏற்ற எல்லைப்புறப் பாதுகாவலனாக, உரிமைபெற்ற மன்னனாக விளங்கியிருக்கிறான் என்பது தெளிவாகிறது.

வீரசேகரனான கடவராயனும் இராஜராஜ அதியமானும்

பல்லவர் குலத்துத் தோன்றல்கள் என்று தம்மைக் கூறிக்கொண்ட காடவராயர்களில் ஒருவனே புகழ்பெற்ற கோப்பெருஞ்சிங்கன் ஆவான். கோப்பெருஞ்சிங்கன் குலத்து, அவனுக்கு முந்தியவனாகக் 'கூடல் அவனியாளப் பிறந்தான் வீரசேகரன் ஆன காடவராயன்' என்பவன் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றான். இவனுக்குரிய கல்வெட்டு ஒன்றின் இருபடிகள் விருத்தாசலத்திலும். திருவெண்ணெய் நல்லூரிலும் உள்ளன. இக்கல்வெட்டின் காலம் சகம் 1108 (கி.பி.1186) ஆகும். இக்கல்வெட்டில்,

> 'கண்டாராதித்தன் வாசலுக்கு மேற்கே புறப்பட்டுக்
> கற்கடகமாராயன் கூடலும் அதியமானாடும் அழித்து
> வெற்றிக்கொடி உயர்த்தி அனுமனும் பொறித்தான்
> ஆளப்பிறந்தான் வீர சேகரனான காடவராயன்'

என்று குறிக்கப்படுகிறான். இதில் வரும் கற்கடமாராயன் என்பான்

16. அ. இரா நாகசாமி, எண் 115
ஆ S.I.I. Vol. VIII, No:126.

அருர்வட்டம், தீர்த்தமலையினைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு சிறுபகுதியை ஆண்டவன். தீர்த்தமலை இறைவனின் பெயர் கூடலாழ்வார் என்று கல்வெட்டுகளில் கூறப்படுதலின், தீர்த்தமலையே கூடல் என்பது தெளிவு. காடவர்கள் கூடலில் பெற்ற வெற்றிதான், இவர்களை ஆளும் குலத்தவராக ஆக்கியிருத்தல் வேண்டும். இவ்வெற்றி கோப்பெருஞ்சிங்கனாலும் இணைத்துக் கொள்ளப்பட்டது. இப்பகுதியை அடுத்துத் தகடூரைத் தலைநகராகக் கொண்டிருந்த அதியமான் நாட்டினையும் அழித்ததாகக் கூறிக் கொள்கிறான். இக்காலத்தில் இருந்த அதியமான் இராஜராஜ அதியமானே ஆவான். எனவே காடவராயனோடு நடந்த போரில் பங்கு பற்றியவன் இவனே ஆதல் வேண்டும்.

விடுகாதழகிய பெருமாள் (கி.பி.1190 - 1227)

இராஜராஜ அதியமானின் மகன் விடுகாதழகிய பெருமான் என்னும் பெயருடையவன். தந்தை பெயரான இராஜராஜ அதிகன் என்பதைத் தன் பெயருக்கு முன்னால் இணைத்துக் கொண்டவன். இவனுக்குரிய கல்வெட்டுகள் மேலாதிக்க மன்னன் பெயர் கொண்டும், இல்லாமலும் பல கிடைத்துள்ளன. இவனுக்கு 'விலங்காமொழி' என்ற பட்டப்பெயரும் உண்டு. அவனது பெயரான 'விடுகாதழகியான்' என்பதன் நேரடி சமஸ்கிருத மொழிபெயர்ப்பான 'வ்யாமுக்தமனோஜ்வலன்' என்னும் பெயராலும் இவன் குறிக்கப்படுகிறான். இவனது கல்வெட்டுகள் பல பாடல்வடிவில் கிடைக்கின்றன. இவைகளில் இருந்து மூன்றாம் குலோத்துங்கனின் 10–ஆம் ஆட்சியாண்டுக்குச் சற்று முன்பிருந்து, மூன்றாம் இராஜராஜனின் 11–ஆம் ஆட்சியாண்டு வரை (கி.பி. 1190–1227) இவன் சுமார் 37 ஆண்டுகள் இப்பகுதியில் உரிமையுடைய தலைவனாக விளங்கியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம்.

இவனது கல்வெட்டுகள் வடக்கில் சித்தூர் மாவட்டத்திலிருந்து வட, தென்னார்க்காடு மற்றும் தருமபுரி மாவட்டங்களில் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவற்றை ஆய்வு செய்த திரு. ஹூல்ஷ் அவர்கள், 'இவனது ஆட்சி வடக்கில் பாலாறும், மேற்கில் பொன்னியும்(காவிரி) கொண்டிலங்க, தன்தலைநகரான தருமபுரிக்கு மிகத்தொலைவில் இல்லாத பெண்ணாறு வடகிழக்கில் தென்னெல்லையாக விளங்கியது' என்கிறார் [17]. இவனது கம்பைநல்லூர்க் கல்வெட்டு,

திரைமருவுந் தடங்கமலத் தகடை மன்னன்
செழும்பாலி பெண்ணைத் திருநதி மூன்றுடைய
விரைமருவுந் தார்மார்பன்'


என்று இதனைத் தெளிவாக்குகிறது.

லட்டிகம் கல்வெட்டு இன்றைய ஆந்திரமாநிலம், சித்தூர் மாவட்டம், புங்கனூர் வட்டத்திலுள்ள லட்டிகம் நீலகண்டேசுவரர் கோயிலில்

17. E.I. Vol. VI, pp. 331-333.

விடுகாதழகியானின் கல்வெட்டுகள் பல உள்ளன. இவற்றிலிருந்து இவனது வெற்றிகளை அறிந்துகொள்கிறோம். இவன் தனது புகழிலும் பண்புகளிலும் மகாமேருவைப் போன்றவன் என்றும், வலிமிகுந்த களிறுகள் மிக எளிதாக மரங்களைத் தூக்குவது போல, பகைமன்னர்களின் முடிதகலன்களைத் தூக்கி எறிபவன் என்றும், நிலவினை விழுங்கும் ராகுபோல மிகுந்த வேகத்துடன் பகைவர் வெண்கொற்றக் குடைகளை அகற்றிப் பகைமன்னர்களைத் தனக்குள் அடங்கியிருக்கச் செய்வதன் மூலம், தன்நாட்டினைப் பாதுகாக்கும் திறம் கொண்டவன் என்றும், இவன் வருகையைக் கேட்ட மாத்திரையில் பகைவர், இடியோசை கேட்ட பாம்புக்கூட்டம் போல ஓடி ஒளிந்துகொள்ளுவார்கள் என்றும் பொதுவாகக் கூறுவதோடு, வடபுலத்திற்குப் படையெடுத்துச் சென்று கோயற்றூரில் இருங்கோள மன்னன் நாட்டில் தன் சிலைச் சின்னத்தினைப் பொறித்தவன், பல்லவர்களை வேரோடு அழித்தவன் என்றும் குறிப்பிட்டு அவன் வெற்றிகளைக் கூறுகிறது.

எனவே இவன் லட்டிகம் வரை படையெடுத்துச் சென்றுள்ளான் என்பதும், கோயற்றூரில் உள்ள இருங்கோளீஸ்வரத்தில் தன் சின்னமான வில்லினைப் பொறித்தான் என்பதும் ஒருதலை. இங்குள்ள தமிழ்க் கல்வெட்டுகளில், இவன் சேரகுலத்தைச் சேர்ந்தவன் என்றும், திருமாலை ஒத்தவன் என்றும், வடதிசையில் விற்சின்னத்தைப் பொறித்தான் என்றும் செல்லப்பட்டுள்ளது. தன் சின்னத்தைப் பொறித்தான் என்று பெருமையோடு சொற்களால் கூறிய அளவில் நிறுத்திக்கொள்ளாத இவன், இக்கோயிலின் வாயிலின் இருபுறமும், வில் குடை வெண்கொற்றக்குடை, வாள், இருசாமரங்கள் ஆகியவற்றைச் சிற்பமாகச் செதுக்கியும் வைத்துள்ளான் (படம்: 2) இவ்வூருக்கருகில்



படம்–2

விடுகாதழகிய பெருமாள் – பெயரும் சின்னமும், லட்டிகம், சித்தூர் வட்டம்.

உள்ள அகஸ்தியகொண்டா மலையிலும் இவன் கல்வெட்டுகள் மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

திருமலைக் கல்வெட்டு [18] இங்குள்ள தமிழ்க்கல்வெட்டு இவனை வஞ்சியர் குலபதி (சேரன்) என்றும், எழினி என்றும், 'அஞ்சியின் வழிவந்தவன்' என்றும் குறிக்கிறது. இங்குள்ள சமஸ்கிருதக்கல்வெட்டு தென்தகடை மன்னன் என்றும், இவனது எதிரிகளான காடவர், மகதர், கங்கர் ஆகியோரை வென்றான் என்றும் கூறுகிறது. தமிழ்க்கல்வெட்டில் 'விடுகாதழகியான்' என்னும் பெயரும், மற்றதில் அதன் மொழியாக்கமும் இடம் பெறுகின்றன.

இவ்விரு கல்வெட்டுகளுமே இவனது வடதிசை வெற்றியோடு, பல்லவர், மகதர், கங்கர் வெற்றியினையும் குறிப்பிடுவதால் இப்போர்கள் நடந்தன என்பது உறுதி. இக்காலத்தில் தென்னார்க்காடு மாவட்டம் சேந்தமங்கலத்துக் காடவராயர்கள் தம்மைப் பல்லவ வழியினர் என்று கூறிக்கொண்டனர் என்பதை முன்பே கண்டோம். அக்குலத்தில் ஏழிசை மோகன் மணவாளப் பெருமாள் ஆன வாணிலை கண்ட பெருமான் இராஜராஜக் காடவராயன் மற்றும் கோப்பெருஞ்சிங்கன் ஆகிய இருவரும் இவன் காலத்து இருந்துள்ளனர். இவர்களில் ஒருவருடன் நடத்திய போரையே இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. ஆறகழூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த பாணர்கள், தம்மை மகாபலிச்சக்கரவர்த்தியின் வழி வந்தோர்களாகக் கூறிக்கொண்டனர். இவர்கள் தலைவன் மகதைப்பெருமாள் என்று வழங்கப்பட்டான்; நாடு மகதை மண்டலம் என்றழைக்கப்பட்டது. இக்குலத்தில், இராஜராஜதேவன் ஆன மகதைநாடாழ்வான் என்பானும் குலோத்துங்க சோழ வாணகோவரையன் என்பானும் இக்காலத்தில் இப்பகுதியில் சிறந்து விளங்கியிருக்கின்றனர். இவர்களில் ஒருவனை வென்று பெற்ற வெற்றியே இங்குக் குறிக்கப்பட்டதாதல் வேண்டும். சோளேந்திர சிம்ம பிரிதிவிகங்கன் என்பானொருவனும், குலோத்துங்கசோழப் பிரிதிவிகங்கன் ஆன திருவண்ணாமலையுடையான் என்று மற்றொருவனும், சோளேந்திர சிம்மனின் மகன் சீயகங்கன் ஆன சிறைமீட்ட பெருமாள் என்ற ஒருவனும் ஆக மூவர் இக்கால இடைவெளியில் கங்ககுலத்தைச் சேர்ந்தவர்களாக ஆட்சிபுரிந்துள்ளனர். இம்மூவருள் ஒருவனிடம் பெற்ற வெற்றியினையே இக்கல்வெட்டு குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

இம்மன்னர்கள் அனைவரும் சோழப்பேரரசின் ஆதிக்கத்தினை எதிர்த்தவர்கள் அல்லர். ஆனால் அதே நேரத்தில், பேரரசின் கட்டுப் பாட்டின் கீழ் இருந்தவர்களும் அல்லர். மேலாதிக்க மன்னன் பெயரளவில் இருந்தான் போலும். சோழ மன்னர்களின் ஒப்புதலோ, கருத்தறிந்தோ செயல்படாமல், தமக்குள் போரிட்டுக் கொண்டிருந் திருக்கின்றனர். இதில் மேலாதிக்க மன்னனின் நேரடிப்பங்கு ஏதும் இல்லை. ஒவ்வொருவரும் தத்தம் வலிமையைப் பிற சிற்றரசுகள்

18. S.I.I.Vol.I, No:75; E.I.Vol.VI, pp. 331-333.

முன்னிலையில் நிலைநாட்டிக்கொள்ளவும், தேவைப்பட்டபோது அவர்களுக்குள் ஒரு குழுவாகச் செயல்படவும் இத்தகைய போர்கள் உதவியிருத்தல் வேண்டும். இது பேரரசின் கட்டுப்பாடற்ற நிலையினைப் புலப்படுத்துவதோடு, எல்லைப்புறத்தேயுள்ள சிற்றரசுகளின் தன்மையையும் படம் பிடித்துக் காட்டும். இத்தகைய நிலையில் செங்கமா என்ற ஊரில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டு மூலம் அதியர் நிலையினையும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

செங்கமா கல்வெட்டு கூறும் பிறந்த பெருமாளான இராஜராஜ அதிகைமான்

தமிழகத்தின் வடபகுதிகளில் சிற்றரசுகள் தமக்குள் போரிட்டுக்கொள்வதும் சோழப்பேரரசு என்ற ஒன்று இருக்கிறது என்ற எண்ணம் சிறிதுகூட இன்றித், தமக்குள் உடன்படிக்கைகள் செய்து கொள்வதும் பொதுவிதியாக இருந்த அக்காலகட்டத்தில், இவர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைகள் மூலம், தமக்குள் பகை ஏற்படாவண்ணம் பாதுகாப்புச் செய்து கொண்டனர் எனலாம், அன்றியும் தாயத்திற்குரியவர்கள் இருவராகவும், அதற்குமேலும் இருக்கும்போது ஒவ்வொருவரும் தத்தமக்கென ஆதரவாக இருக்கும் வகையில் ஓர் ஏற்பாட்டினைச் செய்துகொள்ளவும் இவ்வுடன்படிக்கைகள் உதவின. இவ்வுடன்படிக்கைகளுக்குள் எந்த ஒரு பேரரசையும் இணைத்துக்கொள்ளவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய உடன்படிக்கைகள் இரண்டினைச் செங்கமா கல்வெட்டுகள் காட்டுகின்றன.[19] ஒன்று மூன்றாம் குலோத்துங்கனின் 20–ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டது.

> 'மலையன் வினையை வென்றான் ஆன கரிகாலச்
> சோழ ஆடையூர் நாடாழ்வானுக்கு, செங்கேணி
> அம்மையப்பன் ஆன விக்கிரமசோழச் சம்புவராயன்'

எழுதிக்கொடுத்த உடன்படிக்கை இது.

> 'நானும் இவரும் உள்ளதனையும் எங்களிலே தப்பாதிருக்
> கக் கடவோமாவும்'

என்ற உறுதிப்பாட்டினையும்,

> 'பிறந்த பெருமாளான இராஜராஜ அதிகைமானாருடன்
> உறவு பண்ணுதல், பகைகொள்ளுதல் செய்யுமிடத்து
> இரண்டு திறத்தோமுக்கு மேவிச்செய்யக் கடவேனாகவும்
> மற்றுமிவற் கின்னாதாருடன் கூடி இவற்கு விரோதமா
> யிருப்பன செய்யக் கடவேனல்லாதேனாகவும்,
> இப்படிக்குத் தப்பினேன் ஆகில் என்ஓட்டை யான் எடுத்துத்

19. Ibid. Vol. VII, Nos: 119,127.

தம்பலமும் கலச்சோறும் தின்றேன் ஆவேன்'

என்று மற்றொரு குறுநிலத் தலைவன்பால் இவர்களிருவரும் நடந்து கொள்ள வேண்டிய முறைமையினை இவ்வுடன்படிக்கை கூறுகிறது.

மற்றொரு கல்வெட்டு, இராஜராஜதேவன் விடுகாதழகிய பெருமாளான இராஜராஜ அதிகைமான், மலையன் வினையை வென்றனான கரிகாலச்சோழ ஆடையூர் நாடாழ்வானுக்கும், செங்கேணி அம்மையப்பன் அத்திமல்லன் ஆன விக்கிரமசோழச் சம்புவராயனுக்கும் எழுதிக்கொடுத்த உடன்படிக்கை ஆகும். அதில்,

'இவர்கள் எனக்கு ஒருகாலமும் தப்பாதிருக்க நானும்
இவர்களுக்கு ஒருகாலமும் தப்பாதிருக்கக் கடவேன் ஆகவும்'

என்றும்,

'இவர்களுக்கின்னாதார் எனக்கின்னாதார்களாகவும்,
எனக்கின்னாதார் இவர்களுக்கின்னாதார்களாகவும்'

'இவர்கள் பகை என்பகையாகவும், என்பகை
இவர்கள் பகை ஆகவும்'

என்றும் வரும் வரிகள் இம்மூவரும் நமக்குள் ஒரு குழுவினை ஏற்படுத்திக் கொண்ட தன்மையை நமக்குப் புலப்படுத்துகின்றன. மேலும்,

'யாதவராயர் பக்கலும் செய்யகங்கன் பக்கலும்
குலோத்துங்க சோழச் சம்புவரையர் பிள்ளைகள்
பக்கலும், ஆளும் ஒலையும் போகக் காட்டுதல்,
உறவு பண்ணுதல் செய்யாதேநாகவும்'

என்று அவ்வுடன்படிக்கை கூறுவதன் மூலம், எதிரணியினர் யார் யார் என்பதையும் இக்கல்வெட்டு விளக்குகிறது.

இதில் இருதிறத்திலும் சம்புவராயர் குலத்தினர் இருக்கின்றனர், எனவே ஒருகுலத்தில் உதித்த ஒருவனை ஏற்றும், மற்றொருவனை மறுத்தும் செயல்படும் நடைமுறைக்கு இவ்வுடன்படிக்கை உதவியது என்பதும் வெளியாகின்றது. அதுபோல இவ்விரு உடன்படிக்கைகளுள் முன்னதில் கரிகாலச்சோழ ஆடையூர் நாடாழ்வானாலும், விக்கிரமசோழச் சம்புவரையனாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறந்த பெருமாள் ஆன இராஜராஜ அதிகைமானை விலக்கித் தனக்குரிய நண்பர்களாக அவர்களை ஆக்கிக் கொள்ளும் பொருட்டு, விடுதாதழகிய பெருமாள் ஆன இராஜராஜ அதிகைமான் இரண்டாம் உடன்படிக்கையினைச் செய்திருக்க வேண்டும். எனவே விடுகாதழகிய பெருமாளுக்கு இணையான உரிமையுடையோனாகப் பிறந்தபெருமாளான இராஜராஜ அதிகைமான் என்ற மற்றொருவனும் இருந்துள்ளான் என்பது தெளிவு. இவனைப் பற்றிய வேறுசெய்திகள் ஏதும் அறியக் கூடவில்லை.

கரடிக்குடிக் கல்வெட்டு[20]

பொதுவாகப் பெயரளவிலேனும் மேலாதிக்க மன்னன் பெயரினைக் கொண்டே கல்வெட்டுகள் எழுதப்படும். சில நேரங்களில் மேலாதிக்க மன்னன் வலிகுன்றியிருக்கும் நிலையில், குறுநிலத் தலைவர்கள் – அவர்களே தனிப்பட்ட முறையில் உரிமையுடையவர்களாக விளங்கும் நிலையில் ஆணைகளை வெளியிட்டு, கல்லில் பொறித்திருப்பதையும் காண்கிறோம். மன்னன் தொலைதூரத்தில் இருக்கையில் அரசியல் அதிகாரிகள் பெயரிலும் ஓலைகள் (ஆணைகள்) வழங்கப்பட்டு அவை பொறித்துவைக்கப் படுவதுண்டு. இத்தகைய அதியமானின் ஓலை ஒன்றினை வடார்க்காடு மாவட்டம், வேலூர் வட்டத்துக் கரடிக்குடி என்ற ஊரில் காண்கிறோம். இவ்வூர் இறைவன் திருவேகம்பமுடையாருக்கு 14–ஆம் ஆண்டு முதல் திருவிடையாட்ட நிலங்களின் மீதுள்ள வரியினை அளிக்குமாறு தருமக்குறுக்கை ஊரவருக்கு இட்ட ஆணையினை இக்கல்வெட்டு காட்டுகிறது. இது இராஜராஜ அதிகமான் அல்லது விடுகாதழகிய பெருமாளின் கல்வெட்டாக இருத்தல் வேண்டும்.

கி.பி 1227-இல்

இந்த ஆண்டு தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆண்டு ஆகும். கி.பி 1218–19–இல் வளர்ந்து வரும் பாண்டியப் பேரரசின் தலைவனான முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், சோழநாட்டின் மீது படையெடுத்து வெற்றி எய்தி, பழையாறை ஆயிரத்தளியில் சோழனின் அபிஷேக மண்டபத்தில் வீராபிஷேகம் செய்துகொண்டு, பின்னர் சிதம்பரம் சென்று ஆடல்வல்ல பெருமானை வணங்கிவிட்டு, தன்னடி அடைந்த சோழனுக்குச் சோணாட்டைத் திருப்பியளித்துச் ‘சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன்’ என்ற சிறப்புப் பெயரும் பெற்றான். ஆனால் அடங்கிய சோழருக்கு ஹொய்சளரின் ஆதரவு இருந்தது. 1219–முதல் ஹொய்சளர் தம்மைச் ‘சோழமண்டல பிரதிஷ்டாச்சாரியர்’ என்று கூறிக்கொள்கின்றனர். சோழர்களுக்கு உதவ, ஹொய்சளரின் நிலைப்படை, காஞ்சிபுரத்தில் தங்கியது. ஹொய்சளர் உதவி சோழருக்குக் கிடைத்ததனால், பாண்டியர் வெற்றியும் வரையறைப்படுத்தப்பட்டு இருந்தது.

இதனைப் பொறாத பாண்டியர் மீண்டும் கி.பி.1229–இல் சோழநாட்டின்மீது படையெடுத்தனர்.[21] இவ்வாறு வருவதையறிந்த மூன்றாம் இராஜராஜன் காஞ்சிபுரத்தில் உள்ள நிலைப்படையினை அடையும் பொருட்டுக், காஞ்சிபுரத்திற்கு விரைந்தான். வழியில் அவனை மடக்கிப் பிடித்துக் காடவகுலத்து உதித்த கோப்பெருஞ்சிங்கன் தன் தலைநகரான சேந்தமங்கலத்தில் சிறையிலிட்டான்.

அந்த நேரத்தில் சோழருக்கு உதவிசெய்ய ஹொய்சளரின்

20. ARE-45-46. No:65

21. என் சேதுராமன, ப 98,

கன்னடப்படைப்பிரிவு ஒன்றும் தமிழகம் நோக்கி வந்தது. வடமேற்கு எல்லையில் வழக்கம்போல முதற்போர் நிகழ்ந்தது.

கத்யகர்ணாமிருதம் கூறும் போர் நிகழ்ச்சி [22]

கத்ய கர்ணாமிருதம் என்னும் வடமொழிக் காவியத்தில் ஒரு போர் நிகழ்ச்சி குறிக்கப்படுகிறது. ஹொய்சள மன்னன் வீர நரசிம்மன் தன் மகனான வீரசோமேஸ்வரனுக்கு மணம் செய்ய எண்ணியிருக்கும் வேளையில், சோழ ஒற்றன் ஒருவன் வந்து,

'சாமந்தர்களும், குறுநில மன்னர்களும் இணைந்து

பாண்டியனின் தலைமையை ஏற்றுப் போர்க்

கொடி உயர்த்தியுள்ளார். எனவே ஹொய்சளர்

சோழமன்னனுக்கு உதவவேண்டும்'

என்றான். கேட்டவுடன் வீரநரசிம்மனும், மகன் வீரசோமேஸ்வரனும் படையுடன் கிளம்பினர். முதலில் தர்மபுரியாகிய மகேந்திர மங்கலத்து அதியமானைத் தாக்கினர். கடும்போர் நடக்கும் வேளையில், 'காடவ கோப்பெருஞ்சிங்கன் இராஜராஜனைச் சேந்தமங்கலச் சிறையில் அடைத்தான்' என்ற செய்தி வந்து. மேலும் மிகுந்த சினமடைந்த ஹொய்சள மன்னர் அதியமானைக் கொன்றுவிட்டு உட்புகுந்து ஸ்ரீரங்கம் வந்தடைந்தனர். மீண்டும் இராஜராஜனை முடிகொண்ட சோழபுரத்து அரண்மனையில் அமர்த்தினர்.

எனவே கி.பி.1227.இல் நடந்த எல்லைப்போரில் அதன் பாதுகாவலனாக விளங்கிய அதியமானையே இப்போர் நிகழ்ச்சியில் வடமொழிக் காவியம் குறிக்கிறது. இது மூன்றாம் இராஜராஜனின் **11–ஆம்** ஆட்சி ஆண்டே ஆகும். இப்போரில் பங்கெடுத்துக்கொண்டு உயிர்துறந்த அதியமான், விடுகாதழகிய பெருமாளாக இருத்தல் வேண்டும். குடிமல்லத்தில் கிடைக்கும் மூன்றாம் இராஜராஜனின் கல்வெட்டில் அதியமானின் பிரதானியாகக் 'கட்டிமான்' என்ற ஒருவன் குறிக்கப்படுகிறான்.[23] எனவே அதுவரை (கி.பி.1226) இராஜராஜனிடம் நட்புடனிருந்த, தனக்குத் தனியாக அரசுஅமைப்புக் கொண்ட உரிமையுடையவனாக விளங்கிய அதியமான் அடுத்த ஆண்டில் காவியம் கூறுவதுபோல, பிற குறுநிலமன்னர்களோடு சேர்ந்து இராஜராஜனுக்கு எதிரணியினன் ஆயினான் போலும்! எனவேதான் ஹொய்சளர் எல்லைப்புறத்துக் காவல் பொறுப்பேற்றிருந்த அதியமானைக் கொல்லும்நிலை ஏற்பட்டது எனத் துணியலாம்.

பல கன்னடக் கல்வெட்டுகள் அதியகுல மன்னர்களை 'அதியமரச' என்றும், அவரை வெல்லும் கன்னட அரசர்களை, 'அதியமன யம' (அதியனுக்கு எமன்) 'அதியம நிவாரண' (அதியமானை

---

22. என சேதுராமன், ப 99.
23. S.I.I. Vol. VIII. No:517.

அடக்குபவன்) 'அதியம மதநிவாரண' (அதியமானின் செருக்கடக்குபவன்)[24] என்றெல்லாம் பெருமையுடன் கூறிக்கொள்ளும் அளவிற்கு அதியர்குல அரசர்கள் பெரும் வீரர்களாக விளங்கியிருந்தனர் என்றும் அறியலாம்.

கி.பி.1277.க்குப் பின்

மேற்குறித்த போரின்போதே அதியமான்கள் பாண்டியருக்கு உதவுவோராக மாறியிருந்தனர் எனக் கண்டோம். இருப்பினும் அவ்வுறவு நிலையானதாக இருக்கவில்லை என்பதை, இப்போருக்குப்பின்னர் எழுதப்பட்ட குடிமல்லத்தில் உள்ள மூன்றாம் இராஜராஜனின் 16-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.1232),[25] திருவத்தியூரில் உள்ள இவனது 19-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.1235)[26] போன்றவற்றின் மூலம் அறிகிறோம். இவை ஆளும் சோழ மன்னன் பெயரிலேயே பொறிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் முதல் கல்வெட்டில் 'யாதவராயதேவர் பிரதானி அதிகையான்' என்று ஒருவனும், பின்னதில் 'அம்மையப்பனான அதியமான்' என்று மற்றொருவனும் குறிக்கப்படுகின்றனர். இவர்களுக்கென் எவ்விதத் தனித்தகுதியும் (Status) இல்லை. எனவே விடுகாதழகிய பெருமாளின் வீரமரணத்திற்குப் பின்னர் ஆளும் குலம் என்ற தகுதியை அதியர்கள் இழந்துவிட்டனர் என்பது உறுதியாகின்றது.

ஹொய்சளரும், பாண்டியரும் போராடியபடியே இருந்தனர். பாண்டியர்களாலேயே ஹொய்சள வீர சோமேஸ்வரன் இறந்தான். பாண்டியர்களில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஹொய்சளர்களையும், சளுக்கிய சேமனையும், கோப்பெருஞ் சிங்கனையும் வென்றதோடு நெல்லூர் வரை சென்று அங்கு வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் செய்து கொண்டான். எனவே வடபகுதியில் இருந்த அதியரும் அவனுக்கு அடங்கிப் போனதில் வியப்பேதும் இல்லை. பிற்காலப் பாண்டியப்பேரரசு உருவானபோது அதியன் ஒருவன் அவரது அரசியல் அதிகாரியாக இடம் பெறுகிறான். இச்சுந்தர பாண்டியனின் 9-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1260). சாமந்தன்காமன் அரசன் ஆன அதியமான் தேவனை இரண்டு கல்வெட்டுகள் கூறுகின்றன.[27] இப்பாண்டியனைத் தொடர்ந்து ஆண்ட சடையவர்மன் வீரபாண்டியனின் கீழ் கி.பி.1278 அல்லது 1279-இல் சோழநாட்டு அதிகாரியாய் இருந்த அதியமானை வல்லம் சோழீஸ்வரர் கோயிற் கல்வெட்டு காட்டும்.[28] இரு சடையவர்ம

24 இரா மதிவாணன், சொலலாய்வுக்கட்டுரைகள், சென்னை சேகா பதிப்பகம் 1982, ப.37.

25. S.I.I. Vol. VIII. No:520

26. ARE.1939-40. No:85

27. *S.I.I. Vol. VII. Nos:533.534.*

28. *ARE.1913. No:303.*

வீரபாண்டியர்களுக்கும் பின் ஆட்சிக் கட்டில் ஏறின எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகரதேவனின் 'திருவாசல் முதலி' யாக விளங்கிய அதிகைமான்தேவனைத் திருப்பத்தூர் வட்டம் சாக்கோட்டைக் கல்வெட்டுக் காட்டுகின்றது.

ஆக, பேரரசின் சரிவுக்காலத்தில் பல்வேறு குலமரபுகளும் தனியாதிக்கம் பெற்றன. அவற்றுள் ஒன்றான அதியர் மரபும் அம்முயற்சியில் இறங்கியபோது முதற்படியாகச் சேனைத் தலைவர்களாகவும், பின்னர்க் காவற்பொறுப்பேற்ற குறுநிலத் தலைவர்களாகவும் வளர்ந்தனர். அவ்வளர்ச்சியில் குறிப்பிட்டத்தக்க வகையில் மூன்று அதியமான்கள் சிறப்புடன் ஆட்சிபுரிந்தனர். இறுதியில் சோழர்கள் முழுவதுமாக மறைந்து பாண்டியர் ஆட்சிப் பொறுப்பேற்றபோது அவர்களுக்குக் கீழும் அதிகாரிகள் என்ற நிலையில் தொடர்ந்து விளங்கினர். அதன் பின்னர் அதியர் மரபு ஆட்சியாளர் என்ற தகுதியினை முழுவதுமாக இழந்தது.

பகுதி II - வாழ்வியல்

இயல் V

அதியர் வளர்த்த இலக்கியக் கலை

ஒவ்வொரு நாட்டிலும் ஆளுவோரின் ஆதரவு இருக்கும் போதுதான் மதிப்பிடற்கரிய கலைகள் தோன்றி வளம் பெறுகின்றன. அதற்குத் தமிழகமும் விதிவிலக்கன்று. தமிழகத்தை அவ்வப்போது ஆண்ட மன்னர்களின் அரவணைப்பில், இலக்கியம், சமயம், அதையொட்டிய கட்டட, சிற்பக்கலைகள் ஆகியன வளர்ந்துள்ளன. இதுபோல அதியர் மரபும் கலைகளுக்குப் பேராதரவு நல்கி வளர்த்துள்ளது.

கலைகள் ஏற்றம் பெறுவதற்கு அவ்வக்காலத்தின் பொருளாதார நிலை அடிப்படைக் காரணமாக அமையும். எனவே ஆளும் பொறுப்பில் உள்ள மன்னர்கள், அடிப்படைத் தொழில்களான வணிகத்திலும், வேளாண்மையிலும் தங்கள் கவனத்தினை மிகுதியாகச் செலுத்துவர். அவற்றிலிருந்து பெறும் செல்வமே மேலே குறித்த கலைகளின் செழுமைக்கு ஆதாரமாய் அமையும். இத்தகைய பொருளாதாரத் துறைகளிலும் அதியர் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளனர். இவ்வாறு வாழ்வியல் பற்றி அமையும் இலக்கியம், சமயம், வணிகம், வேளாண்மை ஆகியன பற்றி இவ்விரண்டாம் பகுதி விரிவாக ஆராய்கிறது.

இந்நூலின் முதற்பகுதியில் குலமரபுச் சமுதாய காலம் முதல், பேரரசின் வீழ்ச்சிக்காலம் வரை தமிழக வரலாற்றில் அதியர் பெற்றிருந்த இடம் ஓரளவு விரிவாக ஆராயப்பட்டது. அந்த ஆய்வில் இருந்து அதியர் மரபு முதலில் குலமரபுச் சமுதாய காலம், அடுத்துச் சோழப் பேரரசு தோன்றுவதற்கு முன்னுள்ள காலம், இறுதியில் பேரரசின் வீழ்ச்சிக் காலம் ஆகிய மூன்று கால கட்டங்களிலும் குறிப்பிடத்தகுந்த சிறப்புடன் விளங்கியது என்பது தெளிவாகின்றது. இவ்வாறு சீரோடு வாழ்ந்த காலங்களில் அவர்களால் தமிழ் இலக்கியம் பெரிதும் வளம் பெற்றது. இலக்கியம் பெற்ற வளர்ச்சியினை அதே காலமுறை அடைவில் இவ்வியல் ஆராய்கிறது.

குலமரபுச் சமுதாய காலத்தில் அதியர் இலக்கியம்

குலமரபுச் சமுதாய காலத்தில் தமிழ்கூறு நல்லுலகம் என்று தமிழ் மொழியோடு இணைத்து நாட்டினை கூறும் வழக்கு இருந்தது. புலவர்கள் தம் தாய்மொழியான தமிழில், தம்மைப் புரக்கும் புரவலர்களைப் பாராட்டினர். சமுதாயக் கடமைகளை மேற்கொண்ட புலவர்தம் கருத்துகள் அன்றைய நிலையில் வாய்மொழி இலக்கியங்களாக வெளிப்பட்டன. வயதிலும் அனுபவத்திலும் மூத்த

புலவர் பெருமக்களால் இவ்வாய்மொழிப் பாடல்களைப் பாடும் வகையில் இளையவர்கள் பயிற்றுவிக்கப்பட்டதையும், பாடுவதற்குரிய முதல், கரு, உரிப்பொருட்கள், துறைகள் ஆகிய இலக்கணங்கள் வரையறுக்கப்பட்டிருந்ததையும் அறிகிறோம். இந்த அடிப்படையில் எழுந்த குலமரபுச் சமுதாயப் பாடல்கள் தமிழின் தொன்மைப் பாடல்களாய் நிலைத்துள்ளன. அவை வீரத்தில் சிறந்துநின்ற பெருமகன்களையும், சமுதாயத்தில் ஆளும் தகுதியும் சிறப்பும் பெற்ற குலங்களையும் பாராட்டும் பாடல்கள். இவ்வகையில், சிறந்து நின்ற அதியரைப் பற்றியும் புலவர்கள் பாடியுள்ளனர்.

அதியரைப் பாடிய புலவர்கள் : அஞ்சியத்தை மகள் நாகையார், ஔவையார், பரணர், அரிசில்கிழார், மாமூலனார், காப்பியாற்றுக்காப்பியனார், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், பெருஞ்சித்திரனார் ஆகிய எட்டுப் புலவர்கள் அதியரைப் பாடியுள்ளனர். இவர்கள் எண்மருள் இறுதியிற் கூறப்பட்ட இருவரும், அதியரை அவர் மறைந்த பின்னர்ப் பாடிய புலவர்கள் ஆவர். எனவே இவ்விருவரும் மற்றவர்களைவிடச் சிறிது காலத்தாற் பிற்பட்டவர்கள் என்று தெரிகிறது.

ஔவையாரும், பரணரும் அதியனைப் பாடியுள்ளனர், எனினும் பசும்பூட்பாண்டியனுக்கு வினைவல்லோனாக விளங்கிய முதல் அதியனைப் பரணர் பாடுகிறார். திருக்கோவலூர்ப் போரில் வெற்றி சூடிய ஓர் அதியனையும் அவர் பாடினார் என்று ஔவையார் குறிப்பிடுகிறார். அந்தப் பாடல் கிடைக்கவில்லை. அன்றியும் அதியன், இமிழ்குரல் முரசின் எழுவரொடு போர்செய்து பெற்ற வெற்றியையும் பரணர் பாடினார் என்கிறார் ஔவையார். அந்தப் பாடலும் இன்றில்லை. ஆனால் பரணர் பொகுட்டெழினியைப் பாடவில்லை. ஔவையார் அதியனின் திருக்கோவலூர் வெற்றியையும், அவன் மகன் பொகுட்டெழினி தகடூர்ப் போரில் பெற்ற வெற்றியையும் பாடுகிறார். இவைகளை ஒப்புநோக்க, பரணர் முதல் அதியனாகிய, பசும்பூட் பாண்டியனின் வினைவல்லோனான அதியன் காலத்திலும் இரண்டாம் அதியனின் திருக்கோவலூர்ப் போர் வெற்றி வரை வாழ்ந்த ஔவையாரினும் சிறிது மூத்தவராகவும் (elder contemporary), ஔவையார் அவரிலும் சிறிது இளைவராகவும் (younger contemporary) இருந்திருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது. இவர்கள் இருவருமே முன்னர்க் கூறிய நத்தத்தனாருக்கும், பெருஞ்சித்திரனாருக்கும் முற்பட்டவர்கள்.

இனி, காப்பியாற்றுக்காப்பியனார் பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தினையும், அரிசில் கிழார் எட்டாம் பத்தினையும் பாடியுள்ளனர். களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலால் வெற்றி கொள்ளப்பட்ட நெடுமிடல் (நான்காம் பத்து) அதியர் குலத்தில் காலத்தால் முந்தியவன்.

---

1. K. Kailasapathy, Tamil Heroic Poetry, Oxford: Oxford University Press, 1968, pp.95-134.

தகடுரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையிடம் தோற்ற அதியமான் பொகுட்டெழினி காலத்தாற் பிந்தியவன். பதிற்றுப்பத்தின் வரிசை முறையும் இதற்கு அரண் செய்யும். நெடுமிடலாகிய முதலாம் அதியனைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார் மூத்தவராகவும், அதியமான் நெடுமானஞ்சியான இரண்டாம் அதியனையும், மூன்றாம் அதியனாகிய பொகுட்டெழினியையும் பாடிய அரிசில் கிழார் இளையவராகவும் இருந்திருத்தல் வேண்டும். தகடூர்ப் போரைப் பாடிய ஔவையும், அரிசில்கிழாரும் சமகாலத்தவராக இருந்திருத்தல் வேண்டும்.

இனி, மாமூலனார், எழினி–மத்தி போரினையும், அள்ளன்–அதியன் போரினையும் பாடுகின்றார். இப்போர்களைப் பற்றி முன்னர்க் கூறிய எவருமே பாடவில்லை. மேலும், இயற்கையிலேயே வரலாற்றுச் செய்திகளுக்குச் சிறப்பிடம் கொடுத்துப் பாடும் மாமூலனார், திருக்கோவலூர்ப் போரையோ, தகடூர்ப் போரையோ குறிப்பிடவில்லை. அவர் பாடல்களில் குறிக்கப்படும் அதியரின் போர்கள் குலமரபுத் தலைவரான தொடக்க நிலையில் செய்த போர்கள் ஆதல் வேண்டும். இவையனைத்தையும் நோக்க மாமூலனார் காலத்தால் மிக முற்பட்டவர் என்று கருதத் தோன்றுகிறது.

எனவே மாமூலனார், காப்பியாற்றுக்காப்பியனார், பரணர், அரிசில்கிழார், ஔவையார், நத்தத்தனார், பெருஞ்சித்திரனார் என்ற கால வரிசையில் அதியர் மரபினரைப் புலவர்கள் பலர் பாடியுள்ளனர்.

அதியனும் ஔவையும் : அதியரைப் பற்றிப் பாடிய புலவர்கள் பலர். ஆயினும், மிகுதியான பாடல்களைப் பாடியவர் ஔவையாரே ஆவார். வாழ்வின் பெரும்பகுதியை அதியருடன் கழித்தவர் ஔவையார் என்று கருதப்படுவதாலும், அதியரைப் பற்றிய அரசியல் மற்றும் தனிப்பட்ட வரலாற்றுச் செய்திகளைப் பெரிதும் நாம் ஔவையார் பாடல்களில் இருந்தே அறிந்து கொள்வதாலும், அவ்விருவரையும் பற்றிய விரிவான ஆய்வு இங்கு மேற்கொள்ளப்படுகிறது. ஔவை என்ற சொல், தாய், பாட்டி, வயதானவர், தவப்பெண் என்று பல பொருள்களில் தமிழ், கன்னடம், தெலுங்கு, குடகு, கொண்டா, கோண்டி ஆகிய திராவிட மொழிகளில் வழங்குகின்றது. எனவே இந்தப் பொருள்கள் அனைத்துக்கும் ஏற்ப, சங்கச் சான்றோரான ஔவையைச் சுற்றிப் பல கதைகள் எழுந்துள்ளன. இவர் பெற்ற பெரும்புகழ், பிற்காலத்தும் வந்த பல பெண்பாற் புலவர்களையும் இப்பெயரை ஏற்கச் செய்தது. எனவே அவரால் எழுதப்பட்டனவாகக் குறிக்கப்படும் தமிழ்ப்பாடல்கள் பலவும் எவ்வெக் காலத்தன என்பது குறித்தும், எந்த ஔவையாரால் பாடப்பட்டன என்பது குறித்தும் பல்வேறு கருத்துகள் எழுந்துள்ளன. ஔவையைப் பற்றிய கதைகளையெல்லாம் தொகுத்தால், அவ்வாராய்ச்சியே ஒரு நூலளவு விரியும் என்கிறார் அறிஞர் ஒருவர்.[2]

---

2. மு அருணாசலம், தமிழிலக்கிய வரலாறு, பன்னிரண்டாம் நூற்றாண்டு, திருச்சிற்றம்பலம்· காந்தி வித்யாலயம், 1973, பக் 443–520.

குலமரபுச்சமுதாய காலத்தே ஔவையார் ஒருவர் இருந்தார் என்பதையும், அவர் நெடுமானஞ்சியையும், அதியமான் பொகுட்டெழினியையும் பாடியுள்ளார் என்பதும் ஐயத்திற்கிடனின்றி அறியக் கிடக்கின்றது. அவரது பாடல்களையே சான்றாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆய்வின்வழி, அதியமானிடம் அவர் கொண்டிருந்த நட்பும், அன்றைய நிலையில் புலவருக்கிருக்க வேண்டிய பண்புகளினின்று வேறுபடாத அவர் நிலையும் தெளிவாகின்றன.

ஔவையின் அகப்பாடல்களை ஆய்வு செய்து, அவற்றிலுள்ள கருத்துகள் சிலவற்றை அவரது உண்மை வாழ்க்கைக் குறிப்புகளாகக் கருதியுள்ளனர் அறிஞர்.

> எம், இளநலம் இற்கடை யொழிய
> சேறும் வாழியோ முதிர்கம் யாமே (நற். 295)

என்ற பாடலைக் கொண்டு ஔவையார் காதலின் காரணமாக இற்செறிக்கப்பட்டார் என்றும்,

> நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
> வெள்ளி வீதியைப் போல நன்றுஞ்
> செலவயர்ந்திசினால் யானே (அகம். 147)

என்பது கொண்டு அவர் உடன்போயினார் என்றும்,

> முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்
> ஓரென் யானுமோர் பெற்றி மேலிட்டு
> ஆ அஒல்லெனக் கூவுவென் கொல்
> அலமர லசைவளி யலைப்ப வென்
> உயவு நோயறியாது துஞ்சுமூர்க்கே

என்ற பாடலில் தன் காதலையே வெளிப்படுத்தியுள்ளார் என்றும்,

> இழையணிப் பொலிந்த ஏந்து கோட்டல்குல்
> மடவரலுண்கண் வாணுதல் விறலி (புறம்.89)

எனத் தன்னைக் கூறியதிலிருந்து இவர் விறலி இனத்தைச் சேர்ந்தவர் என்றும் பல்வேறு விதமாகக் கூறியுள்ளனர்.[3]

ஆனால் தமிழ்ச் செய்யுளிலக்கண மரபினைக் குறித்து எழுந்த தொல்காப்பிய நூற்பா,

> மக்கள் நுதலிய அகன்ஐந்திணையும்
> சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்

என்கிறது. இந்நிலையில் தாமே பாடிய பாடல்களை – தம் பெயர் குறிக்காது எழுந்த பாடல்களை எவ்வாறு கொள்வதென முடிவாகக்

3. கோவிந்தசாமி, ஔவையும் நக்கீரரும், சென்னை பாரி நிலையம், 1967

கூறுவதற்கில்லை. எனினும் இவரது அகப்பாடல்கள் மூலம் ஒளவையாரின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய முடிவுக்கு வர இயலாவிடினும், அவர் புறப்பாடலில் தன்னை 'விறலி' என்றழைத்துக் கொள்வதையும், அவர் அதியனுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றதையும் போன்ற குறிப்புகளை வைத்து, உலக வீரயுகப் பாடல்களோடு அவற்றை ஒப்புமைப்படுத்தி, அக்காலத்திற்கேயுரிய விறலியருள் ஒருவராக ஒளவையும் திகழ்ந்திருக்கிறார் எனத் திரு. கைலாசபதி கூறியுள்ளது ஏற்றுக் கொள்ளத் தக்கதாய் உள்ளது.[4]

அதன்படி, விறலியர் என்போர், பாடியாடும் பணிபுரிந்த கூத்தர், பொருநர் ஆகியோரின் மனைவியர் ஆவர்.[5] எனினும் தனிப்பட்ட விறலியரும், தன் திறமையால் சிறந்து விளங்குவதும் உண்டு. தன் திறமையால் வீரர்களின் வீரச்செயல்களையும், புகழுக்குரிய பிற செயல்களையும் பாடி அவர் ஆடுவர். அக்காலத்தில் அது சடங்காகவும், மந்திரத்தன்மை பொருந்தியதாகவும் கருதப்பட்டது. தலைவர்களுக்கு அப்பாடல்கள் தகுதியையும், புகழினையும் அளித்தன. அத்தகைய புகழினைக் கொண்டவனாக அதியன் விளங்கினான் என்பதை,

நல்லிசை நிறுத்த நயவரு பனுவல்
தொல்லிசை நிறீஇய வுரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணினை (அகம்.352)

உடையவன் என்ற அடிகள் காட்டி நிற்கின்றன. இத்தொல்லிசை நிறுத்தும் பணியினை மேற்கொண்ட புலவர்களில் ஒரு சிலர், ஒரே புரவலனிடம் அன்பு காரணமாகத் தங்கி விடுதலும் உண்டு. அவ்வகையில்தான் ஒளவையார் அதியருடன் தங்கியிருத்தல் வேண்டும். எனவே அவர் பாடிய பாடல்கள் பலவும் அதியரைப் பற்றியனவாகவே அமைந்துள்ளன. ஒளவையாரின் பாடல்களாக மொத்தம் 59 பாடல்கள் சங்கத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் புறநானூற்றில் 33 பாடல்களும், அகநானூற்றில் 4 பாடல்களும், குறுந்தொகையில் 15 பாடல்களும், நற்றிணையில் 7 பாடல்களும் உள்ளன. புறநானூற்றில் ஒளவையார் பாடியனவாக அதியரைப் பற்றி மட்டும் 25 பாடல்கள் இடம் பெறுகின்றன. அவற்றில் 22 அதியமான் நெடுமானஞ்சியையும், 3 பொகுட்டெழினியையும் பற்றியவை. முன்னவனைப்பற்றி 269 அடிகளும், பின்னவனைப் பற்றி 39 அடிகளும் உள்ளன. பிறவற்றுள், சேரன், சோழன், பாண்டியன் மூவரும் ஒன்றாக இருந்தபோது பாடிய பாடல் ஒன்று. பிற 6 பாடல்கள் பொதுவான பொருண்மொழிக்காஞ்சி, உண்டாட்டு, வேத்தியல், குடிநிலையுரைத்தல், உவகைக்கலுழ்ச்சி, பாண்பாட்டு, ஆகிய துறைகளில் பாடப்பட்டவை. ஒரேயொரு பாடல்தான் நாஞ்சில் வள்ளுவனைப் பற்றிய பாடல். ஆகவே

---

4. K Kailasapathy, p.107.

5. Ibid. p.105.

பெரும்பாலான பாடல்களை அதியரைப் பற்றியே பாடிய ஔவையார் அதியமானுடனே வாழ்வின் பெரும்பகுதிக்காலம் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது.

அவ்வாறிருந்த ஔவைக்கும், அதியனுக்கும் நெருங்கிய நட்பு இருந்திருத்தல் வேண்டும். பொதுவான 'பாண்கடன்' என்ற நிலையினையும் மீறி, அதியன் ஔவை மீது அன்பு கொண்டு இருந்திருத்தல் வேண்டும். எனவேதான் பெறற்கரிய அமிழ்தமன்ன நெல்லிக்கனியினை ஔவைக்கு அதியன் அளித்திருக்கிறான். தன்னிடம் அதியன் கொண்டிருந்த அன்பினை,

யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்கு
அருள் வந்தனவாற் புதல்வர் தம்மழலை
என் வாய்ச்சொல்லு மன்ன (புறம்.92)

என்ற அடிகளில் வெளிப்படுத்துகிறார் ஔவையார். ஔவையின் வாய்ச்சொற்களைக் கேட்ட அளவிலேயே மகிழ்ந்து நிற்கும் அளவிற்கு அன்புடையவனாய் இருந்திருக்கிறான் அதியன். அதேபோல ஔவைக்குக் காட்சிக்கு எளியனாயும், மகிழ்ச்சியூட்டுபவனாயும் அதியன் விளங்கினான் என்பதை ஔவையின்,

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே (புறம்.94)

என்ற அடிகள் உணர்த்தும். மேலும் ஔவையிடம் அதியன் கொண்டிருந்த அன்பினை வெளிப்படுத்துகின்ற உணர்ச்சிமிகு பாடல்கள், அதியன் இறந்தபோது ஔவையாரால் பாடப்பட்ட கையறுநிலைப் பாடல்கள் ஆகும்.

இல்லாகியரோ காலை மாலை
அல்லாகியர் யான் வாழுநாளே

நரந்தநாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவருமன்னே

ஆசாகெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப்பாடுநருமில்லை பாடுநர்க்கொன்று ஈகுநருமில்லை
(புறம்.235)

என்றெல்லாம் ஔவையார் புலம்பும் தொடர்கள் அவ்விருவரது நட்பின் நெருக்கத்திற்குச் சான்றுகள்.

மேலும் மிகுந்த அறிவும் கடமையும் கொண்ட விறலியாக ஔவையார் இருந்ததால், அதியனுக்காகத் தொண்டைமானிடம் சென்று மறைமுகமாகப் போரை நிறுத்தும் முயற்சியையும் அவர் மேற்கொண்டார் என்பதை ஒரு பாடல் காட்டுகின்றது (புறம்.95),

வீரயுகத்துப் பாண்மக்கள் அரசியலிலும் பங்கு பெற்றிருந்தனர் என்ற உலகப் பொதுப்பண்பினை[6] இங்கு நாம் காண்கிறோம்.

அதியனைப் போர்க்களத்திலும், நாண்மகிழிருக்கையிலும், இறப்பிலும் பாடியது மட்டுமின்றி, மகன் பிறந்து அவன் மகிழ்ந்திருந்த போதும் அவர் பாடிய பாடல் ஒன்று உள்ளது (புறம்.100). இவையெல்லாம் ஔவையார் மிக நீண்ட காலம் அதியருடன் இருந்தார் என்பதைக் காட்டுவனவாகக் கொள்ளலாம்.

குலமரபுச் சமுதாய காலத்திற்குரிய சிறந்த ஒழுக்கமான புலவரைப் புரக்கும் பண்பினிற் சிறந்து விளங்கியதால் அதியமானைப் பற்றிய பாடல்கள் மிகுந்த அளவில் எழுந்தன. அவை அக்காலத் தமிழிலக்கியத்தின் மிகச் சிறந்த பாடல்களாய்த் திகழ்கின்றன.

பேரரசு தோன்றுவதற்குமுன் அதியர் தமிழ்: தகடூர் யாத்திரை

குலமரபுச் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர், கி.பி. 7,8–ஆம் நூற்றாண்டளவில், பண்டைய குலமரபுகளில் சில புத்துயிர் பெற்று ஆளும் வாய்ப்பைப் பெற்றபோது, அதியரும் பெற்ற வளர்ச்சியினை இரண்டாம் இயலில் விரிவாகக் கண்டோம். அக்கால கட்டத்தில் மிகுந்த அளவில் இலக்கியங்கள் தோன்றவில்லை. எனினும் காவியங்கள் எழுதும் போக்கு அக்காலத்தில் தொடங்கியது எனலாம். பெருமை மிக்க குடியிற் பிறந்த உணர்வு காரணமாக, அக்கால அதியர்கள், தம் குல முன்னவர்களான அதியரைப் பற்றிய பல பாடல்களையும் தொகுத்து, அக்கால நிலைக்கேற்ப ஒரு பெருங்காவியமாக உருவாக்கிய முயற்சியில் வெற்றி பெற்றனர் எனலாம். அவ்வகையில் எழுந்த காவியமே 'தகடூர் யாத்திரை' ஆகலாம் என்று கருதத் தோன்றுகிறது. எனவே அதனைக் குறித்து இங்குச் சற்று விரிவாக ஆராயலாம்.

தகடூர் யாத்திரை என்ற அந்நூல் கி.பி.19ஆம் நூற்றாண்டு வரை இருந்து, அதன் பின்னர் மறைந்துவிட்டது.[7] இந்நூலுக்குத் 'தகடூர் மாலை' என்ற பெயரும் உண்டு. இந்த நூலுக்குரியனவாகப் 'புறத்திரட்டு' என்னும் நூலில் நாற்பத்து நான்கு பாடல்களும், தக்கயாகப் பரணி உரையின்வழி ஒரு பாடலும், தொல்காப்பியப் பொருளதிகாரத்து நச்சினார்க்கினியர் உரையின்வழி மூன்று பாடல்களும் ஆக நாற்பத்து ஏழு பாடல்கள் கிடைத்துள்ளன.[8] புறத்திரட்டில் வரும் நாற்பத்து நான்கு பாடல்களும் புறத்திரட்டின் ஆசிரியர் வகுத்துக் கொண்டதற்கேற்பப் பல்வேறு புறத்துறைகளுக்குரிய பாடல்களாகத் தொகுக்கப்பட்டவை. அதில் நூலின் பெயர் மட்டுமே குறிக்கப்

6. K. Kailasapathy, pp.90- 91.

7. உ.வே. சாமிநாதய்யர், என் சரித்திரம், சென்னை. உ.வே சாமிநாதய்யர் நூல் நிலையம், 1950, பக்.876–877.

8 நச்சினார்க்கினியர் மொத்தம் 8 பாடல்களை எடுத்து மேற்கோள் காட்டுகிறார். எனினும், அவற்றுள் மூன்று மட்டுமே புறத்திரட்டில் இல்லாதன

படுகிறது. ஒரு பாடல் 'தகடூர் யாத்திரைப் பாடல்' என்ற குறிப்புடன் கூடியது. ஆனால் நச்சினார்க்கினியரால் எடுத்தாளப்படும் பாடல்களில் இரண்டில் மட்டும் 'தகடூர் யாத்திரை' என்ற பெயருள்ளது. பிறவற்றில் எந்த நூலுக்குரியது என்ற குறிப்பில்லாவிடினும், அவர் கூறுகின்ற விளக்கக் குறிப்புகளைக் கொண்டு, அவையும் தகடூர் யாத்திரைக்குரிய பாடல்களே என்ற முடிவுக்கு வர முடிகின்றது.

நூலமைதி

இந்நூல் முழுவதுமாகக் கிடைக்காத நிலையில் இந்நூல் குறித்து உரையாசிரியர்கள் ஆங்காங்கு கூறியுள்ள விளக்கங்கள்தான் இந்நூலைப் பற்றி நாமறிந்து கொள்ளப் பெரிதும் துணை நிற்கின்றன. தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர், 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்பதற்கு உரையெழுதுகையில்,

> ஒரு பாட்டு இடையிடை கொண்டு நிற்கும் குறிப்பினான் வருவன எனப்படும்; என்னை? பாட்டுவருவது சிறுபான்மையாகலின். அவை தகடூர் யாத்திரை போல்வன

என்றும்,

> சூத்திரத்தாற் சொல்லாத பொருளை உரையாற்சொல்லித் தொடர்பு படுப்பது பாட்டிடை வைத்த குறிப்பாவது[9]

என்றும் கூறுகிறார். இந்த நூற்பாவின் உரையின் அடிக்குறிப்பில் நச்சினார்க்கினியரும், இளம்பூரணரும், சிலப்பதிகாரத்தையும் உதாரணமாகக் காட்டுவதாகக் கூறப்பட்டுள்ளது.[10] இளம்பூரணர் ஒரு பாடலைப் பயன்படுத்தியுள்ளார். அது புறத்திரட்டிலும் இடம் பெற்றுள்ளது.

இவ்விருவரின் உரைக்குறிப்புகளும், 'தகடூர் யாத்திரை' நூலின் அமைதியை நமக்குணர்த்துவனவாய் உள்ளன. இந்நூல் முழுநீளச் செய்யுள் நூலல்ல என்பதும், பாட்டு இடையே வர உரைநடையானியன்ற நூல் இது என்பதும், உரைநடை மிகுதியும், செய்யுள் சிறுபான்மையும் கொண்ட நூல் என்பதும் வெளிப்படை ஆகின்றன. இடையிடையே வரும் உரைகள் நூலின் ஆற்றொழுக்கான கதைப்போக்கிற்கு உதவி நிற்கும் தகைமைத்தாய் அமைந்திருந்தன என்று அறிகிறோம். நச்சினார்க்கினியர், தானை நிலை, யானை நிலை, குதிரை நிலை ஆகியவற்றினை விரித்துக்கூறும் மற்றோரிடத்து 'அஃது அரசர் மேலும், படைத்தலைவர் மேலும், ஏனையோர் மேலும் யானை சேறலும், களிற்றின் மேலுந் தேரின் மேலுங் குதிரை சேறலுந் தன் மேலிருந்து பட்டோருடலை மோந்து நிற்றலும் பிறவுமாம்' என்று

9. தொல்காப்பியம் – பொருளதிகாரம் – பேராசிரியம், சென்னை கழகம், 1966, ப.388

10. தொல்காப்பியம், பொருளதிகாரம் – பேராசிரியம், சென்னை, கழகம், 1966, ப 368 அடிக்குறிப்பு

கூறுவதோடு,

> இவை தனித்து வராது தொடர்நிலைச் செய்யுட்கண் வரும். அவை தகடூர் யாத்திரையிலும், பாரதத்திலும் காண்க[11]

என்கிறார். இந்தக் கூற்று இந்நூல் தனிச்செய்யுட்களால் ஆனதன்று; தொடர்நிலையான செய்யுட்களைக் கொண்டு அமைந்தது என்பதை மிகத் தெளிவாகச் சுட்டுகிறது.

நூற்பொருள்

பேராசிரியர் செய்யுளியலில் 'தொன்மை' என்ற இலக்கிய வகையினை விரித்துக் கூறுமுகத்தான்,

> தொன்மை என்பது உரைவிராய்ப் பழைமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது என்றவாறு. அவை பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன[12]

என்று உரைக்கிறார். இதன்மூலம் தகடூர் யாத்திரையின் பொருள் பண்டைக்காலத்திய கதையொன்றினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றிருந்தது என்பது தெளிவாகிறது. கிடைத்துள்ள பாடல்கள், அதியனுக்கும் பொறையனுக்கும் நடந்தபோர் என்பதைக் குறிப்பால் உணர்த்துவதால், சங்க இலக்கியம் சுட்டும் தகடூர்ப் போரே இவ்விலக்கியத்தின் கதைக் கருவாய் அமைந்திருத்தல் வேண்டும் என்று துணியலாம். இந்நூலின் பெயர் இக்கருத்துக்கு அரண் சேர்க்கிறது.

நூல் காட்டும் தகடூர்ப் போர்

கிடைத்துள்ள பாடல்களில் இருந்து இப்போர் நிகழ்ச்சிகள் சிலவற்றை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. தகடூர்ப் போருக்கு முன்னர்ப் படைத்தலைவர் போன்றோர் தூது சென்று போரைத் தவிர்க்க முயற்சி செய்திருக்கின்றனர்.

> களிறுகெழு வேந்தே
> வினவுதியாயிற் கேண்மதி சினவா
> தொருகுடர்ப்படுதர வோரிரை தூற்றும்
> இருதலைப் புள்ளின் ஓருயிர் போல
> அழிதரு வெகுளி தாங்காய் வழிகெடக்
> கண்ணுறு பொழுதிற் கைபோ லெய்தி
> நும்மூர்க்கு நீதுணை யாகலு முளையே நோதக
> முன்னவை வருஉங் காலை நும்மு
> னுமக்குத் துணையாகலு முரிய னதனாற்
> றொடங்க வுரிய வினைபெரிதாயினும்

11. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியம், சென்னை கழகம், 1967, ப 198–99.

12. தொல்காபபியம், பேராசிரியம், ப 428.

அடங்கல் வேண்டுமதி யத்தை அடங்கான்
துணையலன் தமியன் மன்னும் புணையிலன்
பேர்யா றெதிர் நீந்து மொருவ னதனைத்
தாழ்த லன்றோ வரிது தலைப்படுதல்
வேண்டிற் பொருந்திய
வினையி னடங்கல் வேண்டும் (புறத்.785)

என்ற பாடல்மூலம், போரிடத்துணிந்த அதியனும், சேரலும் தாயத்தார் என்பதையும், இருதலைப்புள்ளின் ஒருயிரன்னர் என்பதையும், இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக விளங்குவதே நூல்வல்லார் கூறியுள்ள கருத்தென்றும் எடுத்துரைத்துள்ளனர் என்று அறிகிறோம். மேலும்,

> 'குறித்த குறிப்பினை முடிக்கின்ற வேந்தனது சிறப்பினை அவன் படைத்தலைவன் முதலியோரும் வேற்று வேந்தன்பால் தூது செல்வோரும் எடுத்துரைத்தல்'

என்ற நச்சினார்க்கினியர் கூற்றாலும்,[13] தூது என்ற தலைப்பில் புறத்திரட்டு தரும் பாடல்களாலும் (புறத்.776, 785–86). இதனை அறிகிறோம். இத்தூது முயற்சிக்குப் பின்னரும் போர் தொடங்கியது. ஒருவேளை முதல்முறை தூது வெற்றி பெற்று, அடுத்த முறை பயனற்றுப் போயிருக்கலாம்.

போரில் சேரமானே முதலில் படையெடுத்துச் சென்றிருக்கிறான். உழிஞைத் திணையினை விளக்கும் நச்சினார்க்கினியர்,

> ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது தன்மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின் அது உழிஞையின் அடங்கும், அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதிகமான் இருந்ததாம்

என்கிறார்.[14] எனவே மண்ணிடத்துக் கொண்ட வேட்கையால் ஆண்டு வாழ்வார்க்கு அஞ்சுதலுண்டாகச் சென்றவன் சேரமானே எனத் தெரிகிறது.

அதியனின் தகடூர் மிகப்பழைய பெரிய காவலுடைய மதிலுடையது என்பதைப் புறப்பாடலாலும் அறிகிறோம். அதனைத் தகடூர் யாத்திரைப் பாடலும் வலியுறுத்துகின்றது. அத்தகைய மதிலினை ஒரேநாளில் அழித்து விடுவோம் என்று உறுதி எடுத்துக்கொண்டு சேரமான் படை போருடற்றியிருக்கின்றது என்பதை நச்சினார்க்கினியரின்,

> ஒரு காலத்தும் அழிவில்லாத மதிலை இற்றைப் பகலுள் அழித்துமென்று கூறி அஃது அழித்தற்கு விருப்பஞ் செய்தல்

13. தொல்காப்பியம் – நச்சினாக்கினியம, ப.176
14. தொல்காப்பியம் – நச்சினாக்கினியம, ப 191

என்ற கூற்றும்,[15] அதற்கு எடுத்துக்காட்டாக 'பொன்முடியார் பாடல் இது' என்ற குறிப்போடு அவர் காட்டும்,

மறனுடை மறவர்க் கேறவிடனின்றி
நெய்யோ டையவியப்பியெவ் வாயு
மெந்திரப் பறவை யியற்றின நிறீஇக்
கல்லும், கவணும் கடுவிசைப் பொறியும்
வில்லுங் கணையும் பலபடப் பரப்பிப்
பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலு
மென்றிவை பலவுஞ் சென்று சென்றெறியு
முந்தை மகளிரை யியற்றிப் பின்றை
யெய்பெரும் பகழி வாயிற் றூக்கிச்
சுட்டல் போயின்றாயினும் வட்டத்
தீப்பாய் மகளிரின் திகழ்நலம் பேர
நோக்குநர் நோக்குநர் நொந்து கைவிதிர்க்குஞ்
தாக்கருந் தானை யிரும்பொறை[16]

என்ற தகடூர் யாத்திரைப் பாடலும் சான்றாகி நிற்கின்றன.

மதிலகத்தே இருந்த அதியனின் செல்வச் சிறப்பு மட்டும் இன்றி, அவன் மேற்கொண்ட போர் உத்தியும் சேரமான் படையினைப் பெரிதும் வருத்தியிருக்கின்றது. ஊரின் வெளிப்புறத்தேயுள்ள மிளையினைத் தகர்த்ததைப் பெரும்சாதனையாகக் கூறும் சேரமான் படை, மறுநாள் ஊரைக் கொள்ளுவோம் என்று உறுதி கூறும் பாடல் ஒன்று,

களையாக் கழற்கால் கருங்கண் ஆடவர்
உருகெழு வெகுளியர் செறுத்துனர் ஆர்ப்ப
மிளை போயின்று நாளை நாமே
ஒருமிசைக் கொண்ட மயிர்க்கட்
டிருமுர சிரங்க வூர்கொள் குவமே

என வருகிறது. இதற்குரிய உரைக்குறிப்பு,

> இது சேரமான் பொன்முடியாரையும், அரிசில் கிழாரையும் நோக்கித் தன் படைபட்ட தன்மை கூறக் கேட்டோருக்கு அவர் கூறியது [17]

என்றுளது.

அனைத்துக் காவலையும் கடந்து சேரமான் படைகள் உள்வந்த பின்னரும் கூட அதியன் சிறிதும் அச்சம் இன்றி அமர்ந்திருந்திருக்கின் றான். ஏனெனில் அரசனுக்கு மட்டும் சிறப்பாகத் தனியரண் ஒன்று

15. தொல் பொருள்.நச்சி,ப 177
16. தொல் பொருள் நச்சி,ப 177–178
17. தொல்காபபியம், நச்சினார்க்கினியம், ப 180

அவனிருக்குமிடம் அறியாவகையில் அமைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும் என்பதை,

> எவ்வழியாயினு மவ்வழித் தோன்றித்
> திண் கூரெஃகின் வயவர்க் காணிற்
> பண்கூர் மெய்யி னுராஅய்ப் பகைவர்
> பைந்தலை யுதைத்த மைந்துமலி தடக்கை
> யாண்டகை மறவர் மலிந்து பிறர்
> தீண்டல் தகாது வேந்துறை யரணே

என்ற பாடல் அடிகளும், அவற்றிற்கு நச்சினார்க்கினியர் கூறும்,

> இஃது அகத்தோன் செல்வம் போற்றுதற்கு ஏதுவாகிய முழுவரண் கூறுதலிற் செல்வத்துள் அடங்காததாயிற்று. இது பொன்முடியார் தகடூரின் தன்மை கூறியது.[18]

என்ற விளக்கமும் சான்றுகள் ஆகும்.

இப்போரில் பெரும்பாக்கன் என்பான் அதியமானின் சார்பில் அவனது படைத்தலைவனாகப் போர்முனையில் சென்று போரிட்டுள்ளான். இவன் அதியமானிடம் 'மாராயம்' பெற்றவனாதல் வேண்டும். இதனை ஒரு பாடலுக்கு,

> இஃது அதிகமானாற் சிறப்பெய்திய பெரும்பாக்கனை மதியாது சேரமான் முனைப்படை நின்றானைக் கண்டு அரிசில் கிழார் பாடியது[19]

என்ற உரையாசிரியர் குறிப்பால் உணர்கிறோம். மேலும் இவன் தன்மேற்படை வந்து தாக்கியபோதும் தன்படை நிலையாற்றாது கலங்கியவழி எதிர்வரும் படையினைத் தானொருவனாக நின்று தாக்கியுள்ளான். இதனைத் தகடூர் யாத்திரைப் பாடலொன்றினைச் சான்று காட்டி அதற்குரிய குறிப்பாக, 'இது பொன்முடியார் ஆங்கவனைக் கண்டு கூறியது'[20] என்று எழுதியுள்ளதால் உணர்ந்து கொள்கிறோம்.

அதியர் சார்பில் நெடுங்கோளன் என்ற படைத்தலைவனும் போரிட்டுப் போர்க்களத்திலேயே மடிந்துள்ளான்.[21] அவனுடம்பு கண்டு தன்னுயிரை மாய்த்துக் கொண்டாள் அவனது தாய். தன்மகன் பட்ட செய்தி கேட்டுப் போர்க்களம் சென்றாள். அவன் உடல் முழுவதும் அம்புகளால் மறைக்கப்பட்டு விட்டது. மகன் நிலையிழந்து கழற்காயினைப் போன்று ஆகிவிட்டான். தன் மகனை அடையாளம் காணமுடியாது தடுமாறும் தாயின் அரற்றல் இதோ:

18. தொல்காப்பியம், நச்சினார்க்கினியம் ப 181,
19 மேலது, ப 166
20 மேலது, ப.167
21 மேலது, ப 250

எற்கொண்டறிகோ எற்கொண்டறிகோ
என்மகனாதல் எற்கொண்டறிகோ
கண்ணே கணை மூழ்கினவே தலையே
வண்ணமாலை வாள்விடக் குறைந்தன
வாயே பொருநுனைப் பகழி மூழ்கலிற் புலால்வழிந்
தாவ நாழிகை அம்புசெறித் தற்றே
நெஞ்சே வெஞ்சரங் கடந்தன குறங்கே
நிறங் கடந்து பல்சர நிறைத்தன வதனால்
அவிழ்பூ வம்பணைக் கிடந்த காளை
கவிழ் பூங்காற்றின் காய் போன்றனனே (புறத்.1405)

பெயர் தெரியாத புலவர் ஒருவர் பிடித்துக் காட்டிய படம் இது.

இப்போரில் காரியும் பங்கேற்றிருத்தல் கூடுமோவென்ற ஐயத்தினை இருபாடல்கள் (புறத்.1372,1376) நமக்களிக்கின்றன. அவை தானை மறம் என்ற தலைப்பில், 'கட்டியன்ன காரிமேலோன்' என்று வரும் தொடரும்,' புள்ளிக்காரி மேலோன் தெள்ளிதின் உள்ளினும் பனிக்குமொரு வேலோனே' என்ற தொடரும் ஆகும். காரியென்ற பெயருடைய குதிரையை மலையமான் திருமுடிக்காரி கொண்டிருந்தான் என்ற புறநானூற்றுச் செய்தி மூலம் இங்கும் இப்போரில் காரி பங்குபற்றியிருக்கக்கூடும் எனலாம்.[22]

கணவனை இழந்த மனைவியர், தலைவன் உடல்மேற்பட்ட பெரும் புண்ணினைக் கண்டு அஞ்சிய நிலையினையும் மிகுந்த புகழுடைய வீரமகன் ஒருவன் மாய, அவனைச் சுற்றிச் சுற்றமுடைய பெண்கள் பெருங்குரலிட்டு அழுதுபுலம்பும் நிலையினையும் கிடைத்துள்ள சில பாடல்கள் காட்டுகின்றன (புறத்.1403--1409).

முன்னரே கண்டபடி, கதைப்போக்கிற்கு ஏற்ப பாடல்களும் உரைகளும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதியனின் இறப்புக்கு முன்னரே அவன் தாய்க்குக் கனவே போலவும், நனவே போலவும் பல தீய நிகழ்வுகள் (உற்பாதங்கள்) தோன்றினவாம். கருநிறக் காக்கையும், வெண்ணிறக் கூகையும் தோன்றினவாம். பேய்க்கணங்கள் மண்டையிற் குருதி ஏந்திக் கொண்டு ஆடினவாம். பறையன்ன விழித்த கண்ணும், பிறையன்ன பேரெயிறும் கொண்ட பேய்மகளொருத்தி இடியன்ன பெருங்குரலோடும், கடுவிசையோடும், கொடுந் தோற்றத்தோடும் தலைவிரித்துத் தடக்கை நாற்றிப் பூவிரல் காட்டி, நீறுபொங்கத் தன் கைகளால் நிலத்தை அடித்து, ஊரை இடஞ்செய்து காடுபுகக் கண்டாளாம்.[23] இவற்றைக் குறிக்கும் மிக அழகிய பகுதி

22. மலையமான் திருமுடிக்காரி இப்போரில் பங்குகொண்டான் என்று உறுதியாகக் கூறுவார் மயிலை சீனி வேங்கடசாமி மறைந்த தமிழ் நூல்கள், சென்னை: சாந்தி நூலகம், 1967, ப 5.

23. தக்கயாகப் பரணி, சென்னை· உ.வே சாமிநாதயயர் நூல் நிலையம், 1960, ப 211

ஒன்றினைக் 'காளிக்குக் கூளி கூறியது' என்னும் வகையில் அமைந்த தக்கயாகப் பரணியின் தாழிசையொன்றுக்கு உரையெழுதிய பெயர்தெரியாப் பெரும்புலவர் ஒருவர் மேற்கோளாகத் தருகிறார்.

இந்நூலைப் பற்றிய மிக அரிய செய்தியொன்றினையும் அவ்வுரையாசிரியர் தெரிவிக்கிறார். ஒரு தாழிசையின் பொருளை உணர்த்திப் பின்னர், 'இது தர்க்கவாதம் இது தமிழில் தகடூர் யாத்திரையிலுமுண்டு' என்றெழுதுகிறார்.[24] எனவே கதையோட்டத்தின் நடுவே வாதங்கள் நிகழ்த்துவதாகப் பாடல்களும் இருந்திருக்க வேண்டும் என்பதும் உய்த்துணரக் கிடக்கின்றது.

காலம்

இந்நூலின் காலம் குறித்துப் பல்வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. புறத்திரட்டு நூலினை முதன்முதலிற் பதிப்பித்த திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள்,

> இது சரித்திர நிகழ்ச்சி பற்றிய நூலாயினும், அந்நிகழ்ச்சி நடைபெற்ற காலத்துத் தானே இயற்றப் பெற்றதன்று; மிகப் பிற்பட்ட காலத்திலே இது தோன்றியதெனக் கொள்ளல் வேண்டும். ஏனென்றால் இதனைப் பழையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படும் தொன்மை என்பதற்கு இலக்கியமாகப் பேராசிரியர் காட்டுகிறார்[25]

என்று தம் நூன்முகத்தில் கூறியுள்ளார். பின்னர் மறைந்துபோன தமிழ்நூல்களை ஆய்வு செய்த ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை.சீனி.வேங்கடசாமி அவர்கள்,

> கடைச்சங்க காலத்திலேயே கி.பி.2–ஆம் நூற்றாண்டில் தகடூர்ப்போர் நிகழ்ந்தது. இப்போர் நிகழ்ந்த காலத்திலேயே பொன்முடியார், அரிசில்கிழார் முதலிய புலவர்கள் பாடிய செய்யுட்கள் தகடூர் யாத்திரையென்னும் நூலில் காணப்படுகின்ற படியினாலே இந்தநூல் கி.பி.2–ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாதல் வேண்டும்[26]

என்கிறார். நூலின் அகச்சான்றாகச் சங்ககாலப் புலவர் பாடியனவாகிய பாடல்களை ஏற்றுக் கொண்டு உரையாசிரியர் கூற்றினைப் புறச்சான்று என்று விடுக்கிறார் இவர்.

தகடூர் யாத்திரையினைப் பொறுத்தவரை, புறத்திரட்டின் மூலம் பெயர் மட்டுமே அறிந்து கொள்ளும் நிலையுள்ளது. உரையாசிரியர்

24. தக்கயாகப் பரணி, சென்னை உ வே சாமிநாதய்யர் நூல் நிலையம், 1960, ப 55.

25. எஸ். வையாபுரிப்பிள்ளை, புறத்திரட்டு, சென்னை சென்னைப் பல்கலைக்கழகம, 1939, நூன்முகம்

26. மயிலை சீனி வேங்கடசாமி, பக்.55–56.

தரும் குறிப்புகளே இந்நூலைப் பற்றிய பிற விவரங்களை நாமறிய உதவுகின்றன. 'பொன்முடியார் பாட்டு இது' அல்லது 'அரிசில்கிழார் கூறியது' என்பது போன்ற குறிப்புகளைக் கூட உரையாசிரியர் மூலமே பெறுகிறோம். இந்நிலையில் அவர்கள் கூற்றில் ஒருபகுதியை அகச்சான்றாகவும், ஒருபகுதியைப் புறச்சான்றாகவும் கொள்ளுதல் ஆய்வு நெறியன்று.

உண்மையில் அகச்சான்று என்று பார்ப்போமாயின் பாடற்பகுதிகளை மட்டுமே எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

வெள்ளத்தானை நும்வேந்தொப்பான் முன்
உள்ளழித்துப் புகேனனாயினுள்ள
திரப்போன் இன்மை கண்டும்
கரப்போன் சிறுமை யானுறுகவ்வே (புறத்.1304)

என்ற பாடலில் குலமரபுச் சமுதாயத்தின் – வீரயுகத்திற்கேயுரிய வஞ்சினத் திறமும், கொடைப் பண்பும் எதிரொலிக்கின்றன.

நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்திற்குரிய தகடூர் யாத்திரைப் பாடல், 'துறவறம் மேற்கொண்டு துவராடை அணிந்து அவிர்முருக்கங் கோலினைக் கையில் ஏந்திக் கொண்டு, பெருக்கத்தின்போது நூற்றிதழ்த் தாமரையன்ன சிறப்பினராய், தாமுண்ணின் தீமூட்டியுண்ணும் படிவத்தராய இருபிறப்பாளரை விட்டுத் தீமை நீங்குக' என்றமைகிறது. இது, குலமரபுச் சமுதாய வீழ்ச்சியின் போது ஏற்பட்ட சமயச் சடங்குகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருப்பது கண்கூடு.

இந்நிலையில் பொதுவான தமிழிலக்கிய வளர்ச்சி, காலத்தைக் கணிக்கப் பெரிதும் உதவுகிறது. உரைபெரிதும் கொண்ட நூல் என்று குறிக்கும்போதே அது ஏறத்தாழ 8–ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தான் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று கருதலாம். தமிழின் மிகப்பழைய உரையாகக் கருதப்படும் இறையனார் களவியல் உரைக்கு அறிஞர்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட காலம் பத்தாம் நூற்றாண்டாகும்.[27] தமிழகத்தின் மிகப்பழைய தமிழ்ச்செப்பேடான பள்ளன் கோயில் செப்பேடு கி.பி. ஆறாம் நூற்றாண்டினதே.[28] எனவே உரைநடையினை மிகுதியும் இடையில் இட்டுக் கதைப்பாடல் செய்யும் மரபு இக்காலத்தின் பின்னர் தோன்றியிருக்கலாம். இவ்விலக்கியத்திற்குத் 'தகடூர் மாலை' என்ற மற்றொரு பெயர் இருப்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது. தகடூர்ப் போர் குலமரபுச் சமுதாயக் காலத்தில் நடந்த புகழ்மிக்க போர். அப்போரினைக் குறித்த பல பாடல்கள் படைக்கப்பட்டு இருந்திருக்கலாம். அவை தனித்தனிப் பாடல்களாகவே முதலில் வாய்மொழியாகவே பாடப்பெற்று வழக்கில் இருந்திருக்கும்.

27. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பத்தாம் நூற்றாண்டு. திருச்சிற்றம்பலம் காந்தி வித்யாலம, 1972, பக் 139,571–72.

28 பல்லவா செப்பேடுகள் முப்பது, சென்னை. தமிழ் வரலாற்றுக் கழகம், 1966, ப.9.

மக்கள் மனதில் நன்கு பதிந்த வீரப்போர் ஒன்றினைக் குறித்துத் தொடர்ந்து பலகாலம் பாடல்கள் தோன்ற வாய்ப்புண்டு. வீரயுகத்தின் பாரதம் போன்று தாயத்தாரிடை நிகழ்ந்த இப்போர்க்கதை, தமிழ்நாட்டுக் கதையாதலின் இதனையும் பாரதத்தைப் போல முழுநீள கதைப்பாடலாகச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தால், அக்கால வழக்கான உரைநடையினை மிகுதியும் பயன்படுத்தி அதுவரை பாடப்பட்ட தகடூர்ப் போர் பற்றிய பாடல்களை இடையிடையே இட்டு ஒரு முழு நூலாகச் செய்திருக்க வேண்டும்.[29] இக்கருத்தினை மயிலை. சீனி. வேங்கடசாமி ஏற்றுக் கொள்கிறார். எனினும் நூல் செய்யப் பெற்ற காலம் கி.பி. 2–ஆம் நூற்றாண்டாகும் என்று கூறுகிறார். திரு. வையாபுரிப்பிள்ளை, இதனை மிகப் பிற்பட்ட கால நூலென்று கூறுகிறார். மேற்குறித்த ஆய்வின்வழி, இது கதைபொதிந்த நீண்ட தொடர்நிலையாகச் செய்யப்பட்டிருத்தலானும், உரைபெரிதும் பெய்து செய்யப்பட்டது ஆதலாலும், கி.பி.7,8–ஆம் நூற்றாண்டுகளுக்கு முன் செய்யப்பெற்றிருக்கும் என்று கூறுதற்கில்லை. பேரரசு தோன்றுவதற்கு முன்னுள்ள காலகட்டத்தில் காவியங்கள் பல எழுதப் பெற்றகாலத்தில் எழுச்சியுடன் இருந்த அதியர் குலத்தினராலேயே இது செய்விக்கப் பெற்றிருக்கும் என்ற முடிவுக்கு வரலாம்.

சமஸ்கிருதத்திற்குத் தந்த ஆதரவு

இக்காலகட்டம் தமிழைப் போலவே சமஸ்கிருத மொழிக்கும் ஆட்சியாளர்கள் ஆதரவு தந்த காலம் ஆகும். பாண்டியரும், பல்லவரும் தமது செப்பேடுகளிலும், ஆவணங்களிலும் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தியது மட்டுமின்றித் தம் பட்டப்பெயர்களையும் சமஸ்கிருதத்தில் புனைந்து கொண்டு, தம் ஆவணங்களிலும், தம்மால் எடுக்கப்பெறும் கோயில்களிலும் எழுதிவைத்த காலம் இது. அப்பண்பு அக்கால நிலையில் பெருமைக்குரிய ஒன்றாகத் திகழ்ந்தது. எனவே அவ்வகையில் அதியரும் நாமக்கலில் அமைத்த குடைவரைக் கோயிலில் தம்பணிகளைச் சமஸ்கிருதச் செய்யுட்களாக எழுதியதோடு, தம் சமஸ்கிருதப் பட்டப் பெயர்களையும் கல்லில் பொறித்து வைத்துள்ளனர்.[30]

---

29. சேரவேந்தர் செய்யுட் கோவை' என்ற நூலைப பதிப்பித்த திரு மு இராகவ ஐயங்கார் அவர்கள், தகடூா யாத்திரையில் அரிசில்கிழார், பொன்முடியார் ஆகிய சங்ககாலத்துப் புலவர்களால் பாடப்பட்டவை என்று வருவன எல்லாம், அவர்களால் பாடப்பட்டவையல்ல என்றும், கதையமைதிக்கேற்ப, அவர்கள் கூற்றாகத் தகடூர் யாத்திரை நூலியற்றிய ஆசிரியரால் பாடப்பட்டவை என்றும் கொள்ள இடமுண்டு எனக் கருதுகிறார். மு. இராகவய்யங்கார், சேரவேந்தா செய்யுட் கோவை, தொகுதி II, திருவனந்தபுரம். திருவனந்தபுரம் பல்கலைக்கழகம், 1951, பக் 172–177.

30. E.I. Vol.XXXVI, No.81.

கி.பி.12-13-ஆம் நூற்றாண்டுகளில் அதியர் தமிழ்

பேரரசின் வலியற்ற நிலையில் எண்ணற்ற குலமரபுத் தலைவர்கள் மீண்டும் தலை தூக்கியதையும், அவர்கள் தம் பெயரில் கல்வெட்டுகளைப் பொறித்ததையும் நான்காம் இயலில் கண்டோம். அக்காலத்தில் சிறந்து விளங்கிய அதியர்குடியினரின் கல்வெட்டுகள் பல பாடல்களாக உள்ளன. கல்வெட்டில் பாடல்களை எழுதுவது அரிதானதே ஆகும். எனினும் அதியர் பணியினைக் குறிக்கும் கல்வெட்டுகள் பல பாடல்களாக இருப்பதை நோக்க, அவர்கள் தமிழின்பால் கொண்ட ஈடுபாட்டினை அவை வெளிப்படுத்துவனவாகக் கொள்ளலாம். இவ்வகையில் லட்டிகம், கம்பையநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள பாடற் கல்வெட்டுகள் அமைகின்றன. அவை கவிதைகளாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சான்றாகச்

சேரன் அதிகன் திருநெடுமான் தென்தகடை
வீரன் விடுகாதழகியான் – பாரளந்து
செங்கோடு போலச் சிலையை வடதிக்களவுங்
கங்கோடு வெட்டினான் கல்

என்றும்,

மேதினிநீர வேந்தில் விடுகாதழகியான்
கோடில் புகழதிகன் கோயற்றூராடி
வடவிருங் கோளீச்சுரத்தில் வைத்தசிலை மார்பில்
இடவிருங் கோளமண்ணார் இசைந்து

என்றும் பொறிக்கப்பட்டுள்ள லட்டிகம் பாடல்களும்,[31]

உரை மருவும் குலோத்துங்க சோழ தேவர்க்கு
　உரைத்த யாண் டிருபதின் மேலிரண்டிற் பெண்ணைக்
கரை மருவுஞ் சிறுக்கோட்டை குலன்நாகை நாயகற்
　களித்துக் கற்றளி தன்பேரிட்ட காரணையகையான்
திரை மருவுந் தடங்கமலத் தகடை மன்னன்
　செழும்பாலி பெண்ணைத் திருநதி மூன்றுடைய
விரை மருவுந் தார்மார்பன் ராஜராஜ அதிகன்
　விலங்காமொழி விடுகாதழகிய பெருமாளேய்[32]

என்ற கம்பைய நல்லூர்க் கல்வெட்டுப் பாடலும் அமைந்திருப்பதைக் குறிக்கலாம்.

இக்காலத்திலும் வடமொழிக்கு ஆதரவு நல்குவோராக மன்னர்கள் திகழ்ந்தனர். விடுகாதழகிய பெருமாளின் திருமலை, லட்டிகம்

---

31. B.N. Mukharjee, D.R. Das and others (Ed.), pp.89-90.

32 இரா நாகசாமி(ப ஆ), தருமபுரி மாவட்டக் கல்வெடடுகள் முதல் தொகுதி, சென்னை தொல்பொருள் ஆயவுததுறை, 1975, எண் 83

கல்வெட்டுகள் வடமொழிப் பாடல்களாகவும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தன் பெயரான விடுகாதழகியானை வடமொழியாக்கி வழங்கியதைத் திருமலைக் கல்வெட்டு சுட்டுகிறது.[33] லட்டிகத்தில் மூன்று வடமொழிப் பாடல்கள், 'சார்தூல விக்ருதித்த' என்ற வடமொழி யாப்பு வகையில் எழுதப்பட்டுள்ளன.[34] இவையெல்லாம் இவர்தம் இலக்கிய ஆதரவினைக் காட்டும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

ஆளும் குலமாக விளங்கத் தொடங்கிய காலம் முதல் கி.பி. 13–ஆம் நூற்றாண்டு வரை பலநிலைகளில் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்தது அதியர் குலம். இந்த நீண்ட வரலாற்றில், குலமரபுச் சமுதாய காலத்தில் புலவர் பலராலும் பாராட்டப்பட்ட காரணத்தால், தமிழில் அதியரைப் பற்றிய இலக்கியங்கள் தோன்றிய வகையும், பின்னர் பேரரசு தோன்றுவதற்கு முன்னுள்ள காலத்தில் பெருமை மிக்க தொல்குடியுணர்வு காரணமாகத் தம் குடி பற்றிய பாடல்களையெல்லாம் தொகுத்து அக்கால இலக்கிய வகைக்கு ஏற்பத் தகடூர் யாத்திரையென்ற நீண்ட கதைப்பாடல் தோன்ற வகை செய்த அதியர் தன்மையும், பேரரசின் வீழ்ச்சிக் காலத்தில் அக்கால வகையில் அமைந்த தனிப்பாடல்களாகக் கருதத்தக்க வகையில் தம் வெற்றிகளையும், பணிகளையும் பாடல்களாக வடித்துக் கல்வெட்டுகளாகப் பொறிக்கச் செய்த முனைப்பும் விரிவாக இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வு அதியர் பற்றிய இலக்கியங்களைத் தெளிவாக்கி நிற்கிறது.

---

33. S.I.I. Vol.I, No.75, 76.

34. ARE 1906, No.544, 545, 547.

இயல் VI

அதியர் ஆட்சியில் சமயமும் கலைகளும்

தன் ஆற்றலுக்கடங்காத இயற்கைச் சக்திகளைத் கண்ட மனிதன் வியப்பிலும், அச்சத்திலும் முதலில் அவற்றை வணங்கத் தலைப்பட்டான். இறந்துபடும் பெரியோர் நம்மிடையே ஆவியாய் வாழ்கிறார்கள் என்ற நம்பிக்கை, நீத்தோர் வழிபாட்டுக்கு வித்திட்டது. உயிர்களைத் தோற்றுவிக்கும் தாயும் தெய்வமானாள். இவ்வாறு இவை மனிதனின் வழிபாட்டு நெறியின் முதற்படிகளாய் அமைந்தன.

மனிதனின் அறிவு வளர்ச்சிக்கும், கற்பனைத் திறனுக்கும் சமுதாயத் தேவைகளுக்கும் ஏற்ப, வழிபாட்டு நெறிகளில் மாற்றமும் வளர்ச்சியும் ஏற்பட்டுப் பலவகையான சமயங்களும், கோட்பாடுகளும், கதைகளும் பல்கிப் பெருகின. பல்லாயிரக் கணக்கான மக்களின் உணர்வோடு கலந்துவிட்ட சமயத்தினை அவர்களை ஆளும் மன்னர்களும் ஆதரித்தனர். உரிய வகையில் பயன்படுத்தினர். சமய அடிப்படையில் கோயில்களும், சிற்பங்களும், கலைகளும் இணைந்து வளர்ச்சிபெற்றன.

தமிழக வரலாற்றின் தொடக்ககாலம் முதலே வாழ்ந்துவந்த அதியர்களும், அக்காலச் சமயவளர்ச்சிக்கு ஏற்பத் தம் ஆதரவினைப் பல்வேறு சமயங்களுக்கும் நல்கியதோடு, தமிழகத்திற்கும் அரிய கலைச் செல்வங்கள் பலவற்றை விட்டுச் சென்றுள்ளனர். சமயத்தின்பால் அதியர் கொண்ட ஈடுபாட்டினையும், அதன் காரணமாக அவர்களால் படைக்கப்பட்ட சிற்ப, கட்டடக் கலைச் செல்வங்களையும் பற்றி இவ்வியல் விரிவாக ஆராய்கிறது.

குலமரபுச் சமுதாய வழிபாட்டு நிலை

குலமரபுச் சமுதாயத்தில் தமிழக மக்களிடையே, எந்தக் குறிப்பிட்ட நெறிப்படுத்தப்பெற்ற சமயமும் வேருன்றவில்லை. நம்பிக்கைகள், சடங்குகள் என்ற அளவில் அமைந்த சமயக் கருத்துகள் சங்க இலக்கியங்கள் முழுவதிலும் நிறைந்து காணப்படுகின்றன. வேலன் வெறியாட்டும், சுறாக்கொம்பு வழிபாடும், கந்து வழிபாடும், நடுகல் வழிபாடும் ஆகிய வாழ்க்கையோடமைந்த இயற்கை வழிபாடுகள் இருந்தன. சிவன், திருமால், பலராமன், முருகன், கொற்றவை போன்ற சில தெய்வ அறிமுகங்கள் இருப்பினும், நெறிப்படுத்தப் பெற்ற சமயங்களாக அவை வளராத நிலையே காணப்படுகிறது. புத்தம், சமணம், ஆசீவகம் போன்ற மதங்கள் தொடர்பான கருத்துகளும் சங்க இலக்கியங்களில் ஊடாடிக் கிடப்பதை அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்.[1] இலக்கியங்களின்வழி நாமறியும்

1 கோ தஙகவேலு, மெயபபொருளியல்' தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம் வாழவியல, செனனை தமிழ்நாடடுப் பாடநூல் நிறுவனம, 1988, பக் 268–335

இவ்வகைச் சமயக் கருத்துகள், மக்கள் நடைமுறை வாழ்க்கையில் பெற்றிருந்த இடத்தினை இலக்கியங்களேயன்றி, அக்காலக் கல்வெட்டுகள், அகழ்வாய்வுகள் போன்ற பிற சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. இக்காலகட்டத்தில் எந்தச் சமயமும் தனக்கெனத் தமிழகத்தில் நிறுவனங்களை ஏற்படுத்தித் கொள்ளவில்லை. எனவே இவற்றிற்கென உரிமையுடைய, அசையாத சொத்துக்களும் இல்லை. ஆளும் நிலையிலுள்ள வேந்தரும், மன்னரும், தமது ஆதரவினை அவ்வக் கொள்கையினைக் கடைப்பிடிக்கும் பெரியோரை ஆதரிப்பதன் மூலமும், அவ்வவர்களின் ஒழுக்கங்களைத் தாமும் ஏற்று நடப்பதன்மூலமும் வெளிப்படுத்தியுள்ளனர். பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் கோஆதன் செல்லிரும்பொறை, செல்வக் கடுங்கோ வாழிஆதன் போன்றோர், சமண சமயப்பெரியோர்களுக்கு வாழ்விட வசதிகளைச் செய்தளித்துள்ளனர் என்பதை மதுரையை அடுத்த மாங்குளம், கருவூரை அடுத்த புகளூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் தெளிவாகத் தெரிவிக்கின்றன.[2] பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (புறம்.115), சோழன் கரிகாற் பெருவளத்தான் (புறம்.224), சேரமான் மாரி வெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோர் (புறம்.367) வேதவேள்விகளுக்கும் அவற்றை இயற்றிய பார்ப்பாருக்கும் பெரும் ஆதரவளித்துள்ளதை இலக்கியங்கள் நமக்குணர்த்தி நிற்கின்றன.[3]

இவ்வரிசையில், மன்னனான அதியமானும் சமண சமயத் துறவியருக்குக் கற்படுக்கை வசதி செய்தளித்துத் தனது ஆதரவினை அளித்துள்ளான் என்பதைச்

'சதியபுதோ அதியந் நெடுமாந்அஞ்சி ஈத்த பாளிய்' என்றும் ஜம்பைப் பண்டைத்தமிழ்க் கல்வெட்டு தெளிவாக்குகின்றது.[4] வேத வேள்விகளுக்கு அவனளித்த ஆதரவினை (புறம்.99) இலக்கியம் காட்டி நிற்கிறது. மூவேந்தரை அடுத்து அதியமான் செய்த செயல்களே இவ்வகையில் கல்வெட்டாகத் தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள சான்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. வேறெந்தக் குறுநிலத்தவரும் செய்ததாக இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை. குலமரபுச் சமுதாய நிலையில் மூவேந்தரைப் போலச் சிறப்புக்குரிய நிலையுடையவராக அதியர் இருந்ததாலேயே சமணரும் பார்ப்பாரும் அவரிடம் இருந்து ஆதரவினைப் பெற்றனர். அதன்வழி அவர் குலத் தகுதியும் நிலை பெற்றது.

---

2 கலவெடடுக் கருததரங்கு, சென்னை தமிழ்நாடு அரசுத தொல் பொருள் ஆய்வுத்துறை, I. Mahadeven, 'Corpus of Tamil Brahmi Inscriptions', 1968, pp. 57-73.

3 புறம 15, 224, 367.

4. இரா நாகசாமி, 'ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான கல்வெடடு', தினமணி நாள், 12 10.1981

பௌத்த சமயத்தினைப் பொறுத்தவரை அதியரின் நேரடிப் பங்கேற்பினை நாமறிந்து கொள்ளப் போதிய சான்றுகள் இல்லை. எனினும் அசோகனது கல்வெட்டு அதியமான்களைக் குறிப்பிடுகிறது.[5] சேரருக்கும், அசோகனுக்கும் இருந்த பண்பாட்டுத் தொடர்பினை அறிஞர் எடுத்துக் காட்டியுள்ளனர்.[6] சேரருக்கும், அவரது கிளையினரான அதியருக்கும் பௌத்த சமயமும், அதன் கோட்பாடுகளும் தெரிந்திருத்தல் வேண்டும். பௌத்த சமயக் கோட்பாடுகள் செயற்படுத்தப்பட வேண்டிய பகுதிகளில் ஒன்றாக அதியரின் ஆட்சிப்பரப்பும் அசோகனால் குறிக்கப்படுகிறது. எனவே தமிழக மக்களும், அதியமான்களும், அசோகனது காலத்திலேயே பௌத்த மதத்தினையும், அதன்கொள்கைகளையும் ஓரளவேனும் அறிந்திருந்தனர் என்று கூறலாம். அசோகன் கல்வெட்டிலும் தமிழகத்தைப் பொறுத்தவரை மூவேந்தரை அடுத்து இடம் பெற்றுள்ள ஒரே ஆளும் குலம் அதியர் குலம் மட்டுமே என்பதும் இங்கே குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

நடுகல் வழிபாடு

குலமரபுச் சமுதாயத்தில் மிகச் சிறந்து விளங்கிய மற்றொரு வழிபாடு நடுகல் வழிபாடு ஆகும். குறிஞ்சி, முல்லை நிலமக்களின் அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நினைவுக்கற்களான நடுகற்களைத் தவிர வேறெதனையும் தொழாத மக்கள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். இதனை,

> ஒன்னாத் தெவ்வர் முன்நின்று விலங்கி
> ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தென
> கல்லே பரவின் அல்லது
> நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே (புறம்.335)

என்ற பாடல் வலியுறுத்தும். இச்சமுதாய அமைப்பும் நடுகல் வழிபாடும் பல்லவ பாண்டிய காலங்களில் கூட (பேரரசு தோன்றுவதற்கு முன்னுள்ள நிலையில்) இப்பகுதியில் சிறப்புக்குரியதாகத் தொடர்ந்து வந்ததென அறிகிறோம். இன்றும் தருமபுரி, வடார்க்காடு மாவட்டம், செங்கம் வட்டப் பகுதிகளில், வணக்கத்துக்குரியதாக நடுகல்லும், அக்கல் நடப்பெற்று விளங்கும் மன்றுகளும் விளங்குகின்றன. இவ்வழிபாட்டின் காரணமாகவே இயற்கையெய்திய அதியனுக்கு நடுகல் எடுத்தனர் என்ற செய்தியைப் புறநானூறு தெரிவிக்கிறது எனலாம். எனவே குலமரபுச் சமுதாயத்திற்குரிய நடுகல் வழிபாடு இப்பகுதியில் தொடர்ந்து வழக்கில் இருந்தது என அறிகிறோம்.

---

5. C.I.I. Vol.I, p.28.
6. T.K. Ravindran (ed.) Journal of Indian History, Vol.LIII, Part II, Trivandrum: University of Kerala, 1975.

குலமரபுச் சமுதாய வீழ்ச்சிக் காலத்தில் தான், தமிழகத்தில் வைதிகக் கோட்பாடுகளும், சமணமும், பௌத்தமும் நிலைகொண்டென. மூன்றுமே தனித்தனியாக வளர்ச்சி பெற்றிருப்பினும், சமய மறுமலர்ச்சிக் காலத்தில் வைதிகம், சமண, பௌத்த சமயக் கோட்பாடுகளையும், வழிபாட்டு முறைகளையும் தன்னுள் ஏற்றுக்கொண்டு செழித்தது. கி.பி.6,7–ஆம் நூற்றாண்டு அளவில் வைதிகம் வெற்றி பெற்றதென்றே கருதவேண்டியுள்ளது. இந்திய நாடு முழுவதும் ஒரு முன்னேற்றமான அரசியல் சூழ்நிலையினை எய்தியது. தென்னகத்தில் ஆந்திரம், கர்னாடகம் ஆகிய பகுதிகளிலும் சமயமும், அரசும் ஒருநிலை கொண்டன. தமிழகத்திலும், சமயவளர்ச்சி நிலையான இடத்தைப் பெற்று ஒவ்வொரு மதமும் தனித்தனியாகப் பல தெய்வத் திருவுருவங்களையும், கோயில் அமைப்புகளையும், அதனையொட்டிய நிறுவனங்களையும் பெற்றுக் கிளைத்து நின்றது. மன்னர்கள் சமயத்திற்குத் தமது ஆதரவினைத் தெரிவிக்கும் முகத்தானும், தமது தனிப்பட்ட சமய ஈடுபாடு காரணமாகவும் பல கோயில்களை அமைத்தனர். சமணம், சைவம், வைணவம் ஆகிய பல சமயங்கட்கும் உரிய கோயில்களும் தமிழகத்தில் இடம் பெற்றன. எனவே கி.பி.6,7–ஆம் நூற்றாண்டு தொடங்கித் தமிழகத்தில் பல கோயில்களைக் காண்கிறோம். அக்காலத்திலிருந்து அதியமான்களின் சமயத் தொண்டுகளைத் தனித்தனியாக விரிவாகக் காணலாம்.

சமணம்

குலமரபுச் சமுதாய நிலையில் அதியரது சமண சமய ஆதரவினை முன்னரே கண்டோம். அடுத்து வந்த காலங்களில் தகடூரில் அதியர் ஆட்சியில்லாது போயிற்று. மாறாக நுளம்பர், கங்கர் ஆகியோரது ஆட்சி நிலவியது. அவர்கள் ஆதரவிலும் தகடூரில் சமண சமயம் செழித்திருந்தது. கி.பி.893–இல் தகடூரில் மடமொன்றும் மிகப் பெரிய சமணக் கோயிலொன்றும் இருந்ததையும், நுளம்பர்கள் அதற்குக் கொடையளித்ததையும் அங்குள்ள பின்வரும் பழைய கன்னடக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

While the Nolamba was staying at the royal mansion (Srimada) at Tagaduru, Chandiyanna and Nidhiyanna; (and) when with libations of water, the Nolamba give to that basadi for (repairing) gaps and cracks, for new works (and) for worship of the deities etc. (the village) Mulapalli, free from all encumbrances, Nidhiyanna received (it) (and) give to Kanakasenasiddhantada Bhatara pupil of Vinayasenasiddhantada Bhatara of Pogariya gana the formost of the teachers of Sen-anvaya in the glorious Mulasanga, having first washed (his) feet (with water).

The prosperous Ayyapadeva, the asylum of truth; son of the illustrious Mahendra Nolamba, having given Buduguru with libations of water, the

glorious Lokayya, younger brother of Dosayya, who is the illuminator of the doctrine of the Arhats, presented (that village) to the basadi of Nidhiyanna and Nidhiyanna too presented (to the same Basadi) for worship (therein) a garden on the western bank of ... having acquired (it).[7]

மேற்குறித்த சமணப்பள்ளி தொடர்ந்து அரசர்களின் ஆதரவினைப் பெற்று விளங்கியது. தருமபுரியின் நடுவே இருந்து கொண்டுவரப்பட்டுத் தற்போது அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அடியவர் சிற்பங்களும், அதியமான் கோட்டையில் உள்ள பார்சுவநாதர் சிற்பமும் கி.பி.9ஆம் நூற்றாண்டில் விளங்கிய சமண சமயச் சிறப்பின் எச்சங்களாகத் திகழ்வன. சோழ மன்னன் முதலாம் இராஜாதிராஜன்காலக் கல்வெட்டு, ஊத்தங்கரை வட்டம், பனையகுளம் என்ற ஊரில் சமணப்பள்ளியொன்று இருந்ததைச் சுட்டுகிறது.[8]

கி.பி.12ஆம் நூற்றாண்டளவில் அதியமான்கள் மீண்டும் ஆளும் மரபாக விளங்கியதும், தமது ஆட்சிப்பரப்பு முழுவதும் ஆங்காங்குள்ள சமணப் பள்ளிகளுக்கும், கோயில்களுக்கும் பல திருப்பணிகளைப் புரிந்துள்ளனர். ஊத்தங்கரை வட்டத்தில் அமைந்துள்ள இன்றைய ஆம்பள்ளி என்னும் ஊர் பண்டைக்காலத்தில் வழங்கப்பெற்ற ஆழ்வான்பள்ளி என்பதன் மருவிய பெயரே ஆகும். அவ்வூரில் விடுகாதழகிய பெருமாளின் பெயரில் 'விடுகாதழகியப் பெரும்பள்ளி' என்ற சமணப்பள்ளி இருந்தது. மூன்றாம் இராஜராஜனின் ஏழாம் ஆட்சியாண்டில், இவ்விடுகாதழகியப் பெரும்பள்ளிக்குப் பள்ளிச் சந்தமாகக் கங்க காமிண்டன் என்பான் நீர்நிலையொன்றினை அமைத்துக் கொடுத்ததை இவ்வூரில் உள்ள கி.பி.1224–ஆம் ஆண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.[9]

வடார்க்காடு மாவட்டத்திலுள்ள திருமலையென்ற ஊர் மிகச் சிறந்த சமணத்தலம் ஆகும். பல்லவர் கலைப்பாணியில் அமைந்த பாகுபலி மற்றும் சமணத் தீர்த்தங்கரர்களின் சிற்பங்களையும், முதலாம் இராஜராஜன் காலத்தில் அவனது தமக்கையார் குந்தவையின் பெயரால் எடுக்கப் பெற்ற 'குந்தவை ஜினாலயம்' ஒன்றையும் கொண்டிருந்த பெருமைக்குரியது இவ்வூர். இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனாலும், பல்வேறு சோழ மன்னர்களாலும் பெரிதும் ஆதரிக்கப் பெற்ற இச்சமணக் கோயிலுக்கு, விடுகாதழகிய பெருமாளும் பல திருப்பணிகளைப் புரிந்துள்ளான்.

---

7. E.I. Vol.X, No.14, H. Krishna Sastri, 'Two Nolumba Inscriptions from Dharmapuri of the 9thC. A.D.'. pp.54-70. பழங்கன்னடத்திலுள்ள கல்வெட்டின், ஆங்கில மொழிபெயர்ப்பு இங்குத் தரப்பட்டுள்ளது
8. இரா. நாகசாமி(ப.ஆ.), தருமபுரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி, சென்னை:
9. தருமபுரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி, 30.1972,

வஞ்சியர் குலபதி யெழுனி வகுத்த வியக்க ரியக்கியரோடு
எஞ்சிய வழிவு திருத்தி யெண்குணவிறை திருமலை வைத்தான்
அஞ்சிதன் வழிவரு மவன் வழிமுதலி கலிஅதிகனவன்
விஞ்சையர் தலைபுனை தகைமையர் காவலன் விடு
காதழகிய பெருமாளேய்[10]

என்பது திருமலைக் கோயிலில் காணப்படும் கல்வெட்டு. திருமலையில் உள்ள சமணத் தெய்வங்களான இயக்கன், இயக்கியர் உருவங்களிலும், மற்றும் கோயிலிலும் ஏற்பட்டிருந்த அழிவுகளையெல்லாம் செப்பம் செய்து, எண்குணத்தானான அருகதேவனையும், திருமலையின் மீது வீற்றிருக்கச் செய்திருக்கிறான். இக்கோயிலிலேயே உள்ள மற்றொரு வடமொழிக் கல்வெட்டு, இச்செய்தியினை வடமொழியில் உரைக்கின்றது. 'எழினி' என்பது 'யாவனிகா' என்றும், 'விடுகாதழகிய பெருமாள்' என்பது 'வ்யாமுக்த மனோஜ்வலன்' என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மற்றொரு கல்வெட்டு இப்பள்ளிக்குச் சேகண்டிகை ஒன்றினை அவன் பரிசளித்ததோடு, இவ்வூரில் கால்வாய் ஒன்று செய்தமைத்ததையும் தெரிவிக்கின்றது.[11] இவை அதியர் சமண சமயத்தின்பாற்கொண்டிருந்த ஈடுபாட்டினைத் தெரிவிக்கும் சான்றுகளாக விளங்குகின்றன.

சைவம்

குலமரபுச் சமுதாய நிலையில், அதியர் வைதிக சமயத்திற்குச் செய்த ஆதரவினை முன்னரே கண்டோம். அதியனைப் புகழ்ந்து பாடவந்த ஔவையார், 'நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும' என்று வாழ்த்துகிறார். இவ்வடி நஞ்சுண்ட பின்னரும் என்றும் நிலைத்து நிற்கும் சிவன் போல, எத்தகைய இடர் வரினும் தொடர்ந்து வாழவேண்டும் என்ற ஔவையின் வாழ்த்தினைத் தெரிவிப்பதாக இருந்தாலும், இப்பகுதியில் சிவன் பெற்றிருந்த சிறப்பினையும், அதியன் மற்றும் ஔவையின் சிவவழிபாட்டு நெறியினையும் காட்டுவதாகவும் கொள்ளலாம்.

பெரியபுராணம் சுட்டும் அதியனின் சிவபக்தி நெறி குறிப்பிட்டுக் கூறுதற்குரியது.[12] புகழ்ச் சோழனை எதிர்த்துப் போர் புரிந்த அதியன் சிவபக்தி நிறைந்தவன் எனக் கூறுகிறார் சேக்கிழார். போரிட்ட சோழனது படை, பிற வீரர்களுடன், அதியமான் தலையினையும் கொணர்ந்து புகழ்ச்சோழர் முன் வைத்தது. கொணர்ந்த தலைகளில் ஒன்று சிவனடியாரின் தோற்றத்தில் அமைந்து சடைமுடியும், திருநீறும் துலங்க இருந்ததைக் கண்ட புகழ்ச்சோழர் நடுங்கினார் என்பதைச் சேக்கிழார்

10. S.I.I. Vol.I, No.75,76.
11. S.I.I. Vol.I, No.75,76.
12. குமரகுருபரன் பிள்ளை (பதிப்), திருத்தொண்டர் புராணம், ஸ்ரீவைகுண்டம்: திருப்பனந்தாள் மடம், 1964, பக் 773-779

எண்ணிற் பெருகும் தலையாயினும்
நண்ணிக் கொணரும் தலையொன்றின் நடுக்
கண்ணுற்ற தோர்புன் சடைகண்டனரே

என்று கூறியதோடு,

கண்டபொழு தேநடுங்கி மனங்கலங்கிக் கைதொழுது
கொண்டபெரும் பயத்தினுடன் குறித்தெதிர் சென்றது
கொணர்ந்த
திண்திறலோன் கைத்தலையில் சடைதெரியப் பார்த்தருளிப்
புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்தார்

என்கிறார். பின்னர் அரசினைப் புதல்வருக்கீந்துவிட்டுப் புகழ்ச்சோழர், 'தான், கண்ட சடைச்சிரத்தினை ஓர் கனகமணிக் கலத்தேந்திக் கொண்டு மண்டு தழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புகுந்தார்' என்கிறார் சேக்கிழார். மிகச் சிறந்த சிவபக்தனாய்ச் சிவனடியார்க்குரிய புறவொழுக்கத்தினைப் போர்க்களத்திலும் மாற்றாத மன்னனாக விளங்கியிருக்கிறான் ஓர் அதிகன். இச்சிவபக்தியில் சிறந்த அதியனது கலைப்படைப்புகள் எதுவும் இன்று நாம் காணுமாறு இல்லை. உறையூரைத் தலைநகராகக் கொண்டிருந்த புகழ்ச்சோழனது சமயப் படைப்புகளிலும் எவையும் இன்று கிடைக்கவில்லை.

இக்காலத்திற்குப் பின்னர் கி.பி.12,13–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அதியமான்கள் சைவ சமயத்திற்கு மிகச்சிறந்த ஆதரவினை நல்கியுள்ளார். தருமபுரியில் தற்போது கோட்டைக்கோயில் என்று வழங்கப்படும் கோயிலினுள் இருகோயில்கள் உள்ளன. தொடக்கத்தில் நுளம்ப மகேந்திரவர்மனின் காலத்து கி.பி.9–ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட இக்கோயில்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு, 13–ஆம் நூற்றாண்டில் பல அழிவுகளுக்குள்ளாகிப் பூசையும் பாழ்பட்டு நின்றுவிட்டது. இந்நிலையில், புதிதாக மீண்டும் தலையெடுத்த அதியமானார் இக்கோயில்களைப் புதுக்கித் திருப்பணிகள் பலவும் செய்துள்ளார். இதனை மூன்றாம் குலோத்துங்கனின் பத்து மற்றும் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் (கி.பி.1144,1146) காட்டுகின்றன. முழுமாயிரம் உடையார் என்று அன்று வழங்கப்பட்ட திருவேளாலீச்சுரம் உடையார் கோயிலை, அதியமானாருக்கு நன்மை விளையும் பொருட்டு அவரது அடியானான பம்மாரக் கூத்தன் என்பவன் புதிதாகக் கட்டி, பூச்சுப் பணிகளை மேற்கொண்டு, இறைவனையும் மீண்டும் எழுந்தருளச் செய்துள்ளான். இக்கோயில்களில் முதலில் பூசை நின்றுவிட்டது என்பதைத் திருக்காளத்தியிலிருந்து வந்த ஆண்டார் (துறவி) ஒருவர் அதியமானிடம் முறையிடவே அந்த ஆண்டாரின் ஏற்பாட்டின்படியே மூன்று சிவபிராமணர்களை அக்கோயில்களில் பூசை செய்ய நிரந்தர ஏற்பாடு செய்ததோடு, அவர்களுக்குப் பூசை உரிமையினை நீர்வார்த்துக் கொடுத்தான் என்பதை மிக எளிமையாகவும் விரிவாகவும் அங்குள்ள கல்வெட்டொன்று கூறுகிறது.

நிகரிலி சோழமண்டலத்துக் கங்கநாட்டுத் தகடூர் நாட்டுத் தகடூரில் சாணாயிர முழமாயிரமுட்பட்ட கோயில் உடையார் திருவேளாலீஸ்வரமுடையாரும், உடையார் ஓராயீஸ்வரமுடையார் கோயிலும் இக்கோயில்கள் இன்னதனை காலம் பாழ்பட்டுக் கிடந்ததென்று அறிவாரில்லை திருக்காளத்தியினின்றும் ஆண்டார் வண்ணாரைக் கும்பிட்டார் எழுந்தருளி இக்கோயில்கள் கிடக்கிற அனுக்கிரகத்தைக் கண்டு, அதியமானார் மாட்டிலேன் தேவரே சாணாயிர முழமாயிரமுட்பட்ட கோயில்கள் மூன்றும் சிவப்பிராமணர் பூஜிக்க வேண்டுமென்று ஆண்டார் அதியமானார்க்குச் சொல்ல அவரும், 'ஆண்டீர் உமக்கு ஆவானொரு சிவப்பிராமணனைக் கொண்டு வாரும்' என்ன, ஆண்டாரும், அட...த்தில் காணி உடைய சிவப்பிராமண...யன் தேவரு லகத்தே கொண்டுவந்து காட்ட, 'சாணாயிர முழமாயிரமுட்பட்ட கோயில்கள் உனக்கே காணியாகத் தந்தோம்' என்று அதிரோகதியாகி வாசலுக்குள்ளே இருந்து திருக்கையாலே நீர் வார்த்துக் குடுத்து அப்போதே காணிப் பிரமாணமாக எழுதி(ட்டு)க் குடுத்தோமென்று திருவெழுத்துமிட்டு[13]

என்று, அச்செய்தியினைத் தற்போது காமாட்சியம்மன் கோயிலென வழங்கும் தருமபுரியிலுள்ள பண்டைய வேளாலீசுரமுடையார் கோயிற் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. எனவே தன் தலைநகரில் உள்ள கோயில்களைப் புதுக்குதல் மற்றும் பூசைகளை முட்டின்றி நடத்துதல் ஆகியவற்றைத் தன் முதற்கடமையாக அதிகன் நினைத்துச் செயற்படுத்தியுள்ளான் என்பது தெளிவாகிறது.

தருமபுரியில் உள்ள மற்றொரு கோயில் அரியரநாதர் கோயில் என்று இன்று வழங்கப்படுகிறது.இக்கோயில் பண்டைக் காலத்துக் கோச்செங்கணீஸ்வரம் என்றும்,[14] ராஜராஜீஸ்வரம் என்றும் வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. இக்கோயிலின் திருப்படிமாற்றுக்குத் தகடூர் வியாபாரி கந்தமூழான் என்பவன் பதின் கண்டக விதை நிலத்தினைக் கொடையாக அளித்தான். அந்த நிலம், அந்த வணிகனுக்கு இராஜராஜ அதிகைமானால் வழங்கப்பட்டது.[15] ஆளும் மன்னன் தனக்களித்த நிலத்தினை, மன்னன் மனம் களிக்கத் தக்க வகையில் தலைநகரில் உள்ள இறைவனுக்கு அவ்வணிகன் அளித்துள்ளான். இதன்மூலம் இராஜராஜ அதியமானின் சிவத்தொண்டினைக் குறிப்பால்

13. S.I.I. Vol.VII, No.533.

14. இரா நாகசாமி(பஆ), தருமபுரிக் கல்வெடடுகள் இரண்டாம் தொகுதி, சென்னை: தமிழ்நாடு அரசுத தொல்பொருளாய்வுத்துறை, 1978, எண் 123

15. தருமபுரிக் கல்வெட்டுகள் தொகுதி 1, 2/1974

உணர்கிறோம். இவ்விராஜராஜ அதியமான், திருவண்ணாமலைக் கோயிலில் அர்த்தசாமப் பூசையின்போது நானாழி அரிசி அமுது செய்விப்பதற்கும், இரண்டு திருநந்தா விளக்கிடுவதற்கும், பெண்ணையாற்றின் வடகரையில் உள்ள ஆனந்தூரின் கீழ்பிடாகையான மலையனூர் என்ற ஊரினைத் தானமாக அளித்துள்ளான்.[16] பெண்ணேஸ்வரமடத்துக் கோயிலில் உள்ள 'அதிகைமான் பிள்ளையார்' இம்மன்னனால் எழுந்தருளுவிக்கப் பட்டதாக இருக்கலாம் எனக் கருதுவர்.[17]

இவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த விடுகாதழகிய பெருமாள் மேலும் பல சிவன் கோயில்களுக்குப் பல கொடைகளும், திருப்பணிகளும், செய்துள்ளான். இவனால் பெருஞ்சிறப்புப் பெற்றது, கோட்டைக் கோயில் என்று வழங்கப்பெறும் கம்பையநல்லூர் சிவன் கோயில் ஆகும். இக்கோயிலில் பாடல் வடிவில் அமைந்துள்ள கீழ்வரும் கல்வெட்டு காணப்படுகிறது.

> உரைமருவும் குலோத்துங்க சோழதேவர்க்கு
> உரைத்த யாண்டிருபதின் மேலிரண்டிற் பெண்ணைக்
> கரைமருவும் சிறுக்கோட்டை குளந்நாகை நாயகற்
> களித்துக் கற்றளிதன் பேரிட்ட காரனையகையான்
> விரைமருவுந் தார்மார்பன் ராஜராஜஅதிகன்
> விலங்காமொழி விடுகாதழகிய மெருமாளேய்[18]

இதனால் குலோத்துங்கனின் 22ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1200) சிறுக்கோட்டையில் (அன்றைய பெயர்) நாகை நாயனாருக்குக் கல்லால் ஆன திருக்கோயில் ஒன்றைத் தன்பெயரால் இவன் எடுப்பித்தான் எனத் தெரிகிறது. அப்பெயர் விலங்காமொழியீஸ்வரம் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.[19]

இக்கோயிலைக் கட்டியதோடு, இங்கு இவனுக்கு ஐந்தெழுத்து மந்திரமான 'நமசிவாய' என்பதில் உள்ள ஈடுபாட்டினைத் தெரிவிக்கும் வகையில் அச்சொல்லை இருவகையாக மந்திரம்போல் எழுதி வைத்துள்ளான். ஒவ்வொரு எந்திரத்தின் மூலமும் பலமுறை இம்மந்திரத்தை உச்சரிக்கும் வகையில் எழுதியிருப்பது அறிந்து இன்புறத்தக்கது. அவை வருமாறு:[20]

---

16. S.I.I. Vol.VIII, No.126.
17. ச. கிருஷ்ணமூர்த்தி, தருமபுரி வரலாறும் பிரகலாதன் சரித்திரமும், பாப்பாரப்பட்டி: தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை, 1978, ப.31
18. தருமபுரிக் கல்வெட்டுகள் தொகுதி 1, எண் 1974/83
19. க குழந்தைவேலன் 'விடுகாழகிய பெருமாள், 'கல்வெட்டு இதழ்:5 ஆ. இல்லை, பக்.33–36.
20. தருமபுரிக் கல்வெட்டுகள், முதல் தொகுதி, 135, 1974.

வா	ம	ய	ந	சி
ந	சி	வா	ம	ய
ம	ய	ந	சி	வா
சி	வா	ம	ய	ந
ய	ந	சி	வா	ம

ந	சி	ய	ம	வா
ய	ம	வா	ந	சி
வா	ந	சி	ய	ம
சி	ய	ம	வா	ந
ம	வா	ந	சி	ய

திருமூலரின் திருமந்திரம் நான்காம் தந்திரத்தில் ஐந்தெழுத்து மந்திரத்தைப் பல சக்கரங்களாக எழுதிவைத்து உச்சரித்து வழிபடும் முறை கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் எந்திர அமைப்பு முறை திருமூலரின் சக்கரங்கள் எதனோடும் ஒத்ததாக இல்லை என்பது ஆய்வாளர் முடிவு.[21] இவன் தனது மற்றொரு பெயரான விலங்காமொழி என்பதையும் இவ்வாறு சக்கரவடிவில் அமைத்து எழுதியுள்ளமை கவனத்திற்குரியது.[22] இவை இசையின் பண்களாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக. முனைவர். ஆ. பத்மாவதி அவர்கள் அண்மையில் எழுதியுள்ளார். இம்மன்னனுக்குச் சைவசமயக் கிரியைக் கோட்பாடுகளில் இருந்த மட்டற்ற மதிப்பினையும், சிவத்தின் மீதுள்ள பற்றினையும், இசையின் மீது இருந்த ஈடுபாட்டினையும் இவை காட்டி நிற்கின்றன.

இம்மன்னன் மூன்றாம் இராஜராஜனின் 8—ஆம் ஆட்சியாண்டில் *(கி.பி.1224)* தருமபுரியில் உள்ள அரியரநாதர் கோயிலில் திருமண்டபம் ஒன்றினைக் கட்டுவித்துள்ளான். இதனை 'விடுகாதழகிய நல்லூர் ராஜராஜீஸ்வரமுடைய நாயனார் திருமண்டபம் விடுகாதழகிய பெருமாள் தன்மம்' எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அதோடு இம்மண்டபப் பராமரிப்புக்காகப் 'புறக்கரை' என்னும் ஏரியின்கீழ் நீர்நிலம் இருபதின் கண்டகத்தினையும் கொடையாக இவன் அளித்தாதெனனவும் தெரிகிறது.[23]

வடார்க்காடு மாவட்டம், வாணியம்பாடியில் இன்று ஆதித்தேஸ்வரம் என்று வழங்கப்படும் கோயில் பண்டு விடுகாதழகிய ஈஸ்வரம் என்று பெயர் பெற்றிருந்ததை[24] நோக்க, இக்கோயில் இவனாலோ, அல்லது இவன் காலத்திலோ கட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்று தெரிகிறது. தருமபுரி மாவட்டம், அரூர்வட்டத்துச் சிந்தல்பாடி சிவனீஸ்வரம் உடைய நாயனாருக்குத் திருமடைப்பள்ளிப் புறமாகப் புளியாழ்வார்பட்டு என்னும் நிலத்தினை விடுகாதழகிய பெருமாள் வழங்கியதை அக்கோயிற் கருவறை அதிஷ்டானத்தில்

---

21. க. குழந்தைவேலன், 'கல்வெட்டில ஐந்தெழுத்து', கல்வெட்டு இதழ்: 6. ஆண்டு இல்லை, பக். 18–21

22. தருமபுரிக் கல்வெட்டுகள் – முதல் தொகுதி, எண் 136/1974

23. தருமபுரிக் கல்வெட்டுகள் – இரண்டாம் தொகுதி, 167/1974.

24. ARE 1963, No.185.

உள்ள கல்வெட்டு கூறுகிறது.[25] இன்னும் தான் வெற்றி கொண்ட சித்தூர் வட்டத்தில் உள்ள லட்டிகம் என்ற ஊரில் உள்ள நீலகண்டேசுவரர் கோயிலில் தன் வெற்றியினைக் குறிக்கும் வகையில் வில்லினைப் பொறித்து வைத்துப் பெருமை கொண்டான். சேரர் வழியாதலின் வில் சின்னத்தையே பெற்றான் எனலாம். அதே நேரத்தில், அவ்விறைவன் பாதம் பணிந்து, அக்கோயிலுக்கு மூன்று நந்தாவிளக்கெரிக்கப் பொருள் கொடுத்த செய்தியையும் இக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று காட்டுகிறது.[26] இவ்வூரை அடுத்துள்ள அகஸ்தியகொண்டா மலையிலும் இவனது பணிகளைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்று சிதைந்த நிலையில் உள்ளது.[27]

தாராபுரம் வட்டம், அரசப்பாளையம் என்னும் ஊரில் உள்ள கோயிலில் மண்டபம் ஒன்றினைக் கூத்தன் கூத்தனாகிய அதியமான் என்பவன் கொங்குச் சோழ மன்னன் குலோத்துங்கனின் 9–ஆம் ஆட்சியாண்டில் கட்டுவித்ததை அக்கோயிலில் உள்ள கல்வெட்டுக் கூறுகிறது.[28] இதனால் ஆளும் தகுதியை இழந்த பின்னருங்கூட இவர்களின் சமயத் தொண்டு நின்று விடாமல் தொடர்ந்து இருந்தது என்று அறிகிறோம்.

வைணவம்

கி.பி.8–ஆம் நூற்றாண்டளவில், அதியர் குடியின் ஒரு பிரிவினர் வளமான காவிரிக்கரைக்குக் குடிபெயர்ந்து, மழகொங்கப் பகுதியினையும் தன்னாட்சிக்குட்படுத்திக் காவிரியின் வடகரையில் ஆட்சி புரிந்தனர் என்பதை இரண்டாம் இயலில் கண்டோம். காவிரியின் வடகரையில் அமைந்துள்ள இன்றைய நாமக்கல், பண்டைக்காலத்து ஆறைக்கல் என்று வழங்கப்பட்டது.[29] வடகொங்கில் ஏழூர் நாட்டுப் பிரிவில் இது அமைந்திருந்ததாகக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.[30] இவ்வாறைக்கல் அதியரின் சிறப்புக்குரிய சமயத் திருத்தலமாக விளங்கியது. அதியர் வைணவத்தின்மீது கொண்டிருந்த ஈடுபாட்டினையும், கலைப்பணியில் சிறந்து நின்ற மேன்மையினையும் உலகுக்கு வெளிப்படுத்தும் கலைக்கோயிலாக அவர்தம் குடைவரைக் கோயில்கள் அங்கு விளங்குகின்றன. அவற்றை விரிவாக அறிவதன் மூலம், வைணவத்தின் மீது அவர்கள் கொண்ட ஈடுபாட்டுடன்,

---

25. தருமபுரிக் கல்வெட்டுகள் – முதல் தொகுதி, 157/1974.
26 ARE - 1906, எண்கள்: 544, 545
27. ARE - 1906, எண்கள் 552.
28. தி நா ராமச்சந்திரன், தெ இ.கோ. சாசனங்கள், சென்னை 5 அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், 1957, எண் 632, 634.
29. ARE - 1906, No.7; ARE- 1938-39, No.328.
30. ARE-1906 Intro, p.59.

கலைகளின் மீது அவர்கள் கொண்ட ஆர்வமும், அதற்குப் புரிந்த தொண்டும் தெளிவாகின்றன.

குடைவரைக் கோயில்கள்

அ. நாமக்கல்

நாமக்கல் மலையில் இரு இடங்களில் குடைவரைக் கோயில்கள் உள்ளன. ஒன்று மலையின் கிழக்குப் புறத்தே, பாதி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது அனந்தன் மீது பள்ளி கொண்டவராகக் காட்சி அளிக்கும் திருமாலுக்கு எடுக்கப்பட்டது. அரங்கநாதப் பெருமாள் கோயிலெனத் தற்போது இது வழங்கப் பெறுகின்றது. மற்றொன்று மலையின் அடிவாரத்தில் மேற்குத் திசையில் அமைக்கப் பெற்றுள்ளது. இது இரணியன் ஆகம் கீண்ட பெருமாளான நரசிம்மமூர்த்திக்கென அமைக்கப்பட்டது. தற்போது இலக்குமி நரசிம்மப் பெருமாள் கோயிலென இது வழங்கப்பெறுகிறது. இன்றைய நாமக்கல் நகரின் நடுவிலேயே அமைந்துள்ள இவ்விரு குடைவரைகளும் அதியனின் கீர்த்திமிகு கலையுணர்வின் எழில்மிகு வெளிப்பாடுகள் ஆகும்.

கட்டட அமைதி


(1) அரங்கநாதப் பெருமாள் கோயில்

இக்கோயிலில் கருவறையொன்றும், முன்மண்டபம் ஒன்றும் குடையப்பெற்றுள்ளன. கருவறை உயர்ந்த பீடம் போன்று செவ்வக வடிவினதாய் முன்னால் இரு தூண்களைக் கொண்டதாகவும், கருவறையின் முன்னுள்ள மண்டபம் அதனினும் நீண்ட வடிவில் இரண்டு தூண்களைக் கொண்டதாகவும் அமைக்கப் பெற்றுள்ளன. மலையின் முகப்பு, மண்டப விதானம் வரை சிறிது முன்புறம் நீண்டு விளங்குகிறது. இது திறந்த வடிவினதாய் பண்டைக்காலத்தில் அமைக்கப் பெற்றதாயினும் பிற்காலத்தே கட்டப்பெற்ற சுவரால் ஒரு மூடிய கோயில் போன்ற தோற்றத்தினைத் தற்போது அளிக்கின்றது (*வரைபடம்:1அ*).

(2) இலக்குமிநரசிம்மப் பெருமாள் கோயில்


மலையின் மீது சுவரிலிருந்து நீண்டு அமைந்த உயர்ந்த பீடம் போன்ற கருவறையினையும், பீடத்தினின்று இருபுறங்களிலும் நீண்ட சுவர்ப்பகுதியையும் கொண்டதாய்த் தொடர்ந்து முன்புறம் வரை நீண்ட மண்டபத்தினையும் கொண்டு இக்குடைவரைக்கோயில் விளங்குகிறது. கருவறை பீடத்தில் நான்கு தூண்களும், முன்மண்டபத்தில் இரு தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன. குடைவரை அமைக்கப்பெற்ற காலத்துத் திறந்த மண்டபத் தோற்றத்திலிருந்த இக்குடைவரையும், தற்போது முன்புறம் மூடும் சுவரையும், கதவுகளையும் கொண்டு விளங்குகிறது (வரைபடம் 1ஆ).

அரங்கநாதப் பெருமாள் கோயில்



வரைபடம். 1அ.

இலக்குமி நரசிம்மப் பெருமாள் கோயில்



வரைபடம். 1ஆ

சிற்பங்கள்:

(1) அரங்கநாதர் கோயில்

> *தன்உரு உறழும் பாற்கடல் நாப்பண்*
> *மின்அவிர் சுடர்மணி ஆயிரம் விரிந்த*
> *கவைநா வழுந்தலைக் காண்பின் சேக்கைத்*
> *துளவம் சூடிய அறிதுயிலோன்*

எனப் பரிபாடல் *(13:26–29)* போற்றும் அரவணை துயின்ற அம்மானுக்கு எடுக்கப்பட்டது இக்குடைவரை. படநாகத்தணை கிடந்து தாமரைக்கண் துயிலமர்ந்த தலைவனாகக் காட்சி அளிக்கிறார் திருமால். ஊழிக்காலத்தின் முடிவில் உலகனைத்தையும் ஒரு கடலாக்கி காத்தற் கடவுளாம் திருமாலை யோக நித்திரையில் ஆழ்த்தினாள் மாயாசக்தி. அச்சமயத்தே தொல்லை கொடுத்த மது, கைடபர் என்னுமிரு அரக்கர் துன்புறுத்தவே, நான்முகன் தேவியை வணங்கிப் போற்றினார். தேவி தன் மாயையால், உறங்கும் பெருமான் கண் விழித்து அல்லல் தரும் அரக்கரை அழிக்க வேண்டும் என்று நான்முகனும், தேவர்களும், தேவியாரிடம் வேண்டியபடியே திருமாலின் விழிப்பார்வை யனலிற்பட்ட அரக்கர்கள் அஞ்சியோட, தேவர்கள் வணங்கும் நிலை சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது (புகைப்படம் *3-6*). சிற்ப நூல்கள் இவரை யோகசயன விஷ்ணு என்று பெயரிட்டழைக்கும். அரவரசனைக் கார்க்கோடகன் என்று புராணங்கள் கூறுகின்றன. ஐந்துதலை கொண்ட இப்பாம்பரசனின் கொடுமையினைக் காட்டும் வகையில் சிங்கமுகத்தினை ஒவ்வொரு தலையிலும் வடித்திருக்கிறான் சிற்பி. இரண்டு கைகளையுடைய் திருமால் ஒரு கையினை நீட்டிய நிலையிலும் மற்றொரு கையினை நண்டு அமைப்பிலும் (கடகஹஸ்தம்) வைத்துள்ளார். துயில் கொள்ளும் பெருமானைச் சுற்றிப் பிறதேவர்களும், முனிவர்களும் நிறைந்து காட்சியளிக்கின்றனர். திருமாலின் திருவடிப் பக்கம் மது, கைடபர் என்ற இரு அரக்கர்களும் அஞ்சி ஓடும் நிலையில் பின்புறமாகக் காட்டப்பட்டுள்ளனர். இரு ஓரங்களிலும் ஞாயிறும் திங்களும் மனித உருவிலும், அண்ணலின் கொப்பூழில் இருந்து உலகை மீண்டும் படைக்கும் நான்முகன் தாமரையில் தோன்றும் நிலையிலும், நாரதர், தும்புரு போன்ற பிற முனிவர்களும் காட்சியளிக்கின்றனர். பாம்பணையின் அடிப்புறத்தில் மாலின் கருவிகளான (ஆயுத புருஷர்) சார்ங்கம் (சக்கரம்) கௌமோதகம் (கதை), நந்தகம் (கட்கம்) பாஞ்சசன்யம் (சங்கு) ஆகியவை மனித உருவில் வடிக்கப்பட்டுள்ளன. அரவணையில் கீழ்ப்புறம் தேவியும், முனிவரும் வணங்கிய நிலையில் தோற்றமளிக்கின்றனர். இவ்வாறு குறையின்றி வடிக்கப்பட்ட சிற்பத்தினைச் சிற்ப நூல்கள் உயர்ந்த சிறப்புக்குரியது (உத்தம யோக சயனமூர்த்தி) என்று உரைக்கின்றன. மிக உன்னதமான கலைப்படைப்பாக இவ்வுருவினைச் செய்தமைத்துள்ளனர் அதியர்.

இந்த அரங்கநாதரின் வலப்புறம் கருவறையினையும், முக மண்டபத்தினையும் நிறைத்ததாகச் சுவரில் திருமாலின் தோற்றங்களுள் (அவதாரங்கள்) ஒன்றான வாமன–திரிவிக்கிரமத் தோற்றம் இடம் பெற்றுள்ளது.

வெந்திறல் வாணன் வேள்வியிடம் எய்தி அங்கு
ஓர்குறளாகி மெய்ம்மை உணர
செந்தொழில் வேதநாவின் முனியாகி வையம்
அடிமூன்றுஇரந்து பெறிலும்
மந்தரமீது போகி மதிநின்று இறைஞ்ச
மலரோன் வணங்க வளர்சேர்
அந்தரம் ஏழினூடு செலவுய்த்த பாதம்[31]

ஆன திருவுருவாக இச்சிற்பம் காட்சியளிக்கிறது. கருவறையின் ஓரத்தில் மாபலி மன்னனின் திருவுருவம் கையில் கலசத்துடன் நீர்வார்த்துக் கொடுக்கும் நிலையிலும், அர்த்த மண்டபச் சுவரில் திருமால் உலகளந்த மூர்த்தியாய் (திருவிக்கிரமர்) தோள்வரை தூக்கிய காலுடனும் காணப்படுகின்றன. அவரது,

மாவலி வேள்வியில் மாணுருவாய்ச் சென்று
மூவடி தாவென்று இரந்த இம்மண்ணினை
ஓரடியிட்டு இரண்டாம் அடி தன்னிலே
தாவடியிட்ட தோற்றம் இது.[32]

அவரது காலின் இடப்புறம் நீர்வார்த்துக் கொடுக்கும் மாவலியிடம், இரந்து நிலம் பெற்றுக்கொள்ளும் குறளனான திருவுருவம் உள்ளது.

அருமாநிலம் அன்று அளப்பான் குறளாய்
அவுணன் பெருவேள்வியில் சென்றிரந்த
பெருமான்[33]

ஆன தோற்றம், தோளில் சார்த்திய தாழைக் குடையுடனும், இடுப்பில் செருகிய ஒற்றையாடையுடனும் காட்சி தருகிறது. நான்கு கரங்களுடன் விளங்கும் உலகளந்த அண்ணலின் பெருமையினைக் கண்டு வியக்கும் நிலையில் (விஸ்மயஹஸ்தம்) தூக்கிய காலின் கீழே ஊர்தியான கருடனுடனும், வானில் சுழற்றிப் பிடித்த நமுசியுடனும், தலையில் மகுடத்துடனும் விளங்குகிறார் உலகளந்த பெருமான். திருமாலின் தலைக்குமேலே ஜாம்பவான் மத்தளம் இசைத்துப் பறந்து செல்ல, அவருக்கு முன்னும், அண்ணலின் இடப்புறமும் இரு தேவர்களும் உடன்பறந்து செல்வது போலக் காட்டப்பட்டுள்ளனர். அனைத்திற்கும் மேலே இரு கந்தர்வர்கள் மேகத்தினூடே இடுப்புவரை தெரியும் வகையில் பறந்து செல்கின்றனர்.

---

31. பெரிய திருமொழி, 11–4.5.
32. பெரியாழ்வார் திருமொழி 2–10–7.
33. பெரிய திருமொழி, 3.2 4.

கருவறையின் இடப்புறம் உள்ள சுவரில் திருமாலின் மற்றொரு தோற்றமான நரசிம்மத் திருவுரு வடிக்கப்பட்டுள்ளது. மாறுகொண்டு உடன்றெதிர்ந்த வல்லவுணன்தன் மார்பகம் இருபிளவாகக் கூறுகொள்ள இருக்கும் இளைய நரசிம்மர் (பால நரசிம்மர்). மிக அழகிய கருணை வடிவான அமைதி தவழும் முகத்துடன் மலர்களால் ஆன அரசமுடி (கிரீடமகுடம்)யுடன் நான்கு கரங்களுடன் விளங்குகிறார். கீழிடக்கரம் இடுப்பில் ஆடைமீது ஊன்றியவராய், நிற்கும் நிலை கண்டு இன்புறற்குரியது. மலரால் ஆன முப்புரிநூலும், கைகளில் கேயூரமும், கங்கணமும், வயிற்றில் உதரபந்தமும், அழகிய வேலைப்பாட்டுடன் அமைதிக்கு எழில் கூட்டுவதாய் அமைந்துள்ளன. இவ்வாறு மென்மை உணர்வோங்க வடிக்கப்படும் உருவத்தினைச் சிற்ப நூல்கள் 'பாலநரசிம்மர்' எனச் சுட்டும். இந்நிலையில் கொடுமை (உக்ரம்) ஒரு சிறிதும் காணப்படவில்லை.

மாலும் அரியும் இணைந்த திருவுருவம் ஒன்றுண்டு. திருமால், அரியும், சிவனும் ஒருவரேயென முனிவர்கட்குக் கூறிக் காட்சியளித்ததாக வாமனபுராணம் கூறும். சிற்ப நூல்கள், 'சங்கர நாராயணன்' என்றும், 'ஹரிஹரர்' என்றும் இவ்வடிவினைக் குறிப்பிடும். இத்தெய்வத் திருவுரு பண்டைத் தமிழ்நாட்டில் சிறப்புக்குரிய இறைவனாய் விளங்கியது. இத்திருமேனி ஒன்றினையும் இவ்வரங்கநாதப் பெருமான் குடைவரையில் அர்த்தமண்டபச் சுவரில் இடப்புறம் காண்கிறோம் (படம் 7). நான்கு கரங்களுடன் விளங்கும் இவரது மேல்வலக்கரம் மானினை ஏந்தியிருக்க, மேலிடக் கரம் சங்கத்தினை ஏந்தியுள்ளது. மகுடத்தில் சிவன்புறம் பிறையணிந்த சடைமுடியாயும், மால்புறம் அரசமுடியாயும் காட்சியளிக்கின்றன. சிவன் காதில் நாகஅணியும் (சர்ப்ப குண்டலம்), மால் காதில் மீன் அணியும் (மகரகுண்டலம்) அணி செய்கின்றன. நேராக நின்ற கோலம் (சம்பங்க நிலை) இது. இடுப்புயரம் வரை இரண்டு உருவங்கள் தம்மொரு கையினைத் தூக்கிய நிலையிலும், மற்றொரு கையினை இடுப்பிலூன்றிய நிலையிலும் காட்டப்பட்டுள்ளன. அவை சிவன், திருமாலின், ஊர்திகளான நந்தியும், கருடனுமாக இருக்கலாம். அரியரனின் தலைக்கு மேலே காட்டப்பட்டுள்ள உருவங்கள் ஞாயிறும், திங்களுமாக இருக்கலாம். மேலே இரு பெண் உருவங்களும் ஒரு ஆணுருவமும் இடம் பெற்றுள்ளன. அவர்கள் யாரென உறுதியாகக் கூற இயலவில்லை. இரு பெண் உருவங்களையும் உமையும் திருமகளுமாகலாம் எனக் கருதுவர்.[34] உறரிஉறரனின் சிற்பங்கள் பல கிடைத்திருப்பினும் சிற்ப நூல்கள் கூறும் உருவ அமைதியைக் காட்சியாக வடித்திருக்கும் இவ்வகைச் சிற்பம் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

---

34. Vidya Daheja. Namakkal Caves, Madras: State Dept. of Archaeology, 1977, p.35.

(2) இலக்குமிநரசிம்மர் கோயில்

அரங்கநாதர் குடைவரையினை விட அளவில் பெரியதான இக்குடைவரையில் சிற்பங்களும் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. இக்குடைவரையினை ஆய்வு செய்தோர், வாதாபியில் உள்ள நான்காம் குடைவரையுடன் ஒப்பிட்டு விளக்கியுள்ளனர்.[35] இக்குடைவரையின் கருவறையில், அமர்ந்த நிலையில் நரசிம்மர் வடிக்கப்பட்டுள்ளார். உறிரண்யனின் ஆகம் கீண்டு முடித்த நிலையில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கும் இப்பெருமானின் இருபுறமும் ஞாயிறும், திங்களும் கவரி வீசுகின்றனர். இடப்புறம் சிவனும், வலப்புறம் நான்முகனும் நின்று வெகுண்டெழுந்த உணர்வினைச் சமன்செய்யும் வகையில் வடிக்கப்பட்டுள்ளனர். சனகரும் சனந்தனருமான முனிவர் இருவரும் ஓர் அரியுருவாய்த் திசையனைத்தும் நடுங்கத் தேவரோடு தானவர்கள் திகைப்ப இரணியனை நண்ணி அவன் மார்பகலத்து உகிர் மடுத்த செய்தியினை உலகுக்கு அறிவிப்பது போலத் தோற்றமளிக்கின்றனர். இவருக்கென எடுக்கப்பட்டதே இக்குடைவரைக் கோயில் ஆகும்.

கருவறையின் வலப்புறம் நீளும் சுவர்ப்பகுதியில் மேலும் ஒரு நரசிம்ம அவதாரச் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது (படம் 8). அளந்திட்ட தூணினின்று வளர்ந்திட்டு வாருகிர்ச் சிங்க உருவாய் உளந்தொட்டு இரணியன் ஒண்மார்பகலம் பிளந்திட்ட வடிவம் இது. அந்தியம் போதில் அரியுருவாக வந்து முடியுடை அமரர்க்கு இடர் செய்யும் அசுரர்தம் பெருமானை மடியிடை வைத்து மார்பை முன்கீண்ட மாயனின் தோற்றம். எட்டுக் கரங்களுடன், வலக்கரங்கள் இரண்டும் சக்கரமும் வாளும் ஏந்தியிருக்க, இடக்கரங்கள் இரண்டும் சங்கமும் கேடயமும் ஏந்திப் போரிடும் நிலையில் விளங்குகின்றன. வேறு இரு கரங்களில் வலக்கரம் இரணியனின் தொடையினைத் தூக்கிப்பிடித்திருக்க, இடக்கரம் அவனது கையினை அழுந்தப் பற்றியிருக்கின்றது. மேலுமிரு கரங்கள் வயிற்றினைக் கிழித்துக் குடல்மாலை வெளிவந்த நிலையில், கையில் ஏந்தியிருந்த கேடயமும் வாளும் சோர்ந்துவிட துவண்டு விழும் நிலையில் இரணியன் காட்சியளிக்கிறான். மனிதனும் விலங்கும் அல்லாத உருவில் இறைவனும், வானும் நிலனும் இல்லாத இடத்தில் இரணியனும் வடிக்கப்பட்டுள்ள நிலை மிகமிக அழகு வாய்ந்தது. கனல் தெறிக்கும் முகத்துணர்ச்சி இன்றும் கொப்புளிக்க இலங்கும் மிக அரிய இரண்யவதைக் காட்சி இது.

கருவறையின் இடப்புறம் நீண்டுள்ள சுவரில் மற்றொரு திருமாலின் தோற்றமானவராகத் திருமேனி காட்சியளிக்கின்றது (படம்9). ஊழிக்காலத்தின் முடிவில் வந்த வெள்ளத்திலிருந்து இவ்வுலகை (பூமிதேவி) மீட்டுத்தந்த மாலை,

---

35. Vidya Daheja. Namakkal Caves, Madras: State Dept. of Archaeology, 1977,, p.24.

தீதறு திங்கள் பொங்குசுடர் உம்பர்
உம்பருவ கேழினோடும் உடனே
மாதிரம் மண்சுமந்த வடகுன்றும் நின்ற
மலையாறும் ஏழுகடலும்
பாதமர் சூழ் குளம்பின் அகமண்டலத்தின்
ஒரு பால் ஒடுங்க வளர்சேர்
ஆதிமுன் ஏனமாகி அரனாய மூர்த்தி[36]

என்று ஆழ்வார் பரசுவர். இரண்டு கைகளுடன், கூரிய பல்லும், நீண்ட காதுகளும் கொண்ட வராக முகம். பெருமான் வலக்காலைச் சிறிது தூக்கி மடக்கி நிறுத்திய நிலையிலும், இடக்காலை நேராகவும் ஊன்றி, ஊழிப் பெருவெள்ளத்திலிருந்து மேலெழுவது போன்ற தோற்றத்தில் விளங்குகிறார். பூமித்தாயைத் தன்னிரு கரத்தாலும் தூக்கிப் பிடித்திருக்க, தாயோ இருகரமும் கூப்பி வணங்கிய நிலையில் வலத் தோளில் அமர்ந்திருக்கிறார். மாலின் காலின்கீழே ஆதிசேடன், இவரது செயற்கரும் செயல் கண்டு வியந்து அண்ணாந்து பார்த்திருக்க, அவரது மனைவி அடிதொழும் நிலையில் இருக்கின்றார். சனகர், சனந்தனர், சனத்தனர், சனத்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களும் விண்ணிலிருந்து கண்டு இறைவனின் திறம் வியந்து பாடுவதாக விஷ்ணு புராணம் உரைக்கின்றது. இக்காட்சியிலும் முனிவர் நால்வர் இடம் பெற்றுள்ளனர்.

இக்குடைவரையின் அர்த்தமண்டபத்தில் வலப்புறம் திருமால் வைகுந்த நாதனாய்க் காட்சி அளிக்கும் கோலம் வடிக்கப்பட்டுள்ளது (படம் 10). அனந்தனே ஆசனமாய்ச் சுருண்டிருக்க, அவனது படமே குடையாய் விரிந்திருக்க, நடுநாயகமாக வலக்காலைக் குத்திட்டு, இடக்காலைத் தொங்கவிட்டுக் கம்பீரமாக அதே நேரத்தில் மிக இயல்பாய் அமர்ந்திருக்கும் காட்சி இது. காலின் கீழே இடப்புறம் பால நரசிம்மரின் உருவமும் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. ஆதிநாதரின் இருபுறமும் நான்முகனும் சிவனும் நின்றநிலையில் வடிக்கப்பட்டுள்ளனர். நான்முகன் நான்கு கரங்களுடன் அக்கமாலை, கமண்டலம் ஏந்திய கையராயிருக்கச் சிவன் மானும் பாம்பும் ஏந்திய நிலையில் விளங்குகிறார். இடப்புறம் நான்முகனுக்கு மேலே திங்களும், வலப்புறம் சிவனுக்கு மேலே ஞாயிறும் கூப்பிய கரங்களுடன், மேகத்திலிருந்து வெளிப்படுகின்றனர். ஆதிநாதரின் காலின் கீழே, வலப்புறம் மார்க்கண்டேய முனிவரும், பெண்ணொருத்தியும் (பூமிதேவி ஆகலாம்) காட்சியளிக்கின்றனர்.

அர்த்த மண்டபத்தில் இடப்புறம் வாமன, திரிவிக்கிரம அவதாரங்கள் மீண்டும் வடிக்கப்பட்டுள்ளன. அரங்கநாதர் குடைவரையில் இடம்பெற்ற அதே காட்சி இங்கு மீண்டும் இடம் பெறுகின்றது. வாமன உருவில் மட்டும் சிறிய மாற்றத்தினைக்

---

36. பெரிய திருமொழி, 11 4 3

காண்கிறோம். அங்கு ஒற்றையாடையில் பெரியவனாகக் காட்சி அளித்த வாமனர், இங்கு மிகச் சிறிய கொழுகொழுவென விளங்கும் சிறுவனாகக் காட்சியளிக்கிறார் (படம் 11-12). முன்னதில் இக்காட்சி இருபிரிவாக இருக்க, இங்கு ஒரே காட்சியாக வடிக்கப்பட்டுள்ளது. மேலும் அசுவமேத யாகத்தின் போது, மால் வந்து மாபலியிடம் மூன்றடி இரந்தார் என்ற கதையை விளக்கும் வகையில், இக்காட்சியின் இடப்புற மூலையில் குதிரையொன்றின் முகம் யூபத்தூணுடன் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளது. திருவிக்கிரமருக்கு வடிக்கப் பெற்றுள்ள குடை மிகமிக நேர்த்தியான கலைப் படைப்பாகும் (படம் 13).

இக்குடைவரைச் சிற்பங்கள் சுமார் கி.பி.7–8ஆம் நூற்றாண்டுகளில் தென்னகம் எங்கும் குறிப்பாகப் பல்லவ, பாண்டிய, சாளுக்கிய நாடுகளின் குடைவரைகளில் இடம் பெற்றவையே ஆகும். சாளுக்கியரின் கலைப்படைப்பான வாதாபியில் உள்ள நான்காம் குடைவரையில் இந்த உருவங்களில் பல இடம் பெற்றிருப்பதையும், பல்லவ பாண்டியர் குடைவரையமைப்பிலேயே இக்குடைவரைகள் அமைந்திருப்பதையும் அறிஞர் எடுத்துக் காட்டியுள்ளனர்.[37] குறிப்பாக அமர்ந்த நரசிம்மரின் கருவறைச் சிற்பம் பாண்டியரது ஆனைமலை நரசிம்மரோடும், இரணியன் ஆகம் கீண்ட பெருமானின் தோற்றம் திருப்பரங்குன்றத்துச் சிற்பத்தோடும், அனந்தசயனம் மற்றும் திரிவிக்கிரம அவதாரச் சிற்பங்கள் பல்லவர் குடைவரைகளான சிங்கவரம், மகாபலிபுரச் சிற்பங்களோடும், பாண்டியர் படைப்பான திருமெய்யம், மலையடிப்பட்டிச் சிற்பங்களோடும் ஒப்பிட்டு நோக்குதற்குரியன (ஒப்புமைப் புகைப்படங்கள் 14-16). கலைப் படைப்புக்களுக்கு எடுத்துக்கொண்ட கரு ஒன்றாக இருப்பினும், தமக்கெனத் தனிச்சிறப்புப் பெற்ற சிற்பங்களாகிப் பிற பெரிய அரசகுலங்களின் கலைப்படைப்புகளினின்றும் சிறிதும் குறைவு படாத நிலையில், தமக்கேயுரிய கலைச் செல்வங்களாக மிளிரச் செய்த பெருமை அதியருக்குண்டு என்பதை மேற்கண்ட செய்திகள் தெளிவு படுத்துகின்றன.

மிகத் தெளிவான உருவ அமைதி, சரியான இடப்பங்கீட்டு வடிவமைப்பு (distribution); ஆடை அணிகலங்களை எளிமையாக்கியதன் மூலம் எடுத்துக்கொண்ட கதைக் கருவின் நுண்ணிய கருத்துகளையும் கூடக் காண்போரை உணரச் செய்யும் திறன், சிற்ப வடிவமைப்பின் போது கதை முழுவதையும் சாட்சியாக அமைக்கும் தன்மை ஆகியவை நாமக்கல் குடைவரைச் சிற்பங்களுக்கே உரியவை. அதற்குரிய பெருமை குடைவரையினை உருவாக்கிய சிற்பிக்கும், உருவாக்கச் செய்த அதியருக்குமே உரியது.

சில சிறப்புக் கூறுகள்

இக்குடைவரையினைச் செய்வித்தவன் அதியர் குலத்தினைச்

---

37. Vidya Daheja, p.39.

சேர்ந்தவன்; குணசீலன் என்ற பெயர் கொண்டவன்; சயனக் கோயிலாகச் (சய்யா கிருஉறம்) செய்தவன்; 'அதியநாத விஷ்ணுக் கிருகம்' என்றும் 'அதியேந்திர விஷ்ணுக்கிருகம்' என்றும் இக்குடைவரைகளுக்குப் பெயர் கொடுத்தவன். இவ்வரலாற்றுச் செய்திகளையெல்லாம், இக்குடைவரையிலேயே கல்வெட்டுகளாகப் பொறிக்கவும் செய்தவன். இச்செய்திகளைத் தவிரத் தன் பட்டப் பெயர்கள் ஒன்பதனை இக்கோயிலின் மேற்கூரைப் பகுதிகளிலும், தூணின் பக்கங்களிலும் வெட்டி வைத்துள்ளான் (படம் 17).

இக்கல்வெட்டு அரங்கநாதர் குடைவரையினைச் 'சய்யா கிருஉறம்' என்ற பெயரால் சுட்டுகின்றது. கிடந்த கோலத்திலமைந்த விஷ்ணுவுக்குரிய கோயில் அமைப்பாகச் 'சயன பிரசாதம்' என்பதை 'மானசாரம்' என்ற கோயிற்கலை நூல் செப்புகிறது.[38] அதியனுக்குரியதாகப் பொறிக்கப்பட்டுள்ள பட்டப் பெயர்களில் 'மானசாரன்' என்பதும் ஒன்றாகும். எனவே மானசாரம் என்ற கலை நூற்கருத்துகளில் தோய்ந்து அவற்றைத் தன் கலைப்படைப்புகளில் இடம் பெறச் செய்த மன்னன் இவன் என்று தெளியலாம். தமிழகக் கல்வெட்டில் வரும் மிகப் பழைய 'கட்டடக்கலைச்சொல்' இதுவே என்ற பெருமையினையும் இது பெறுகின்றது.

இக்கலைப்படைப்பில் மற்றொரு மிகச் சிறந்த கூறு அரங்கநாதப் பெருமானின் திருவுருவக் காட்சியின் மேற்பகுதியில், அக்காட்சியில் இடம் பெறுவோர் அனைவரின் பெயரையும் பொறித்துவைத்தமை ஆகும். இது போன்ற வழக்கினைப் பாண்டியரின் குடைவரையான திருமெய்யத்திலும் காணலாம். இங்கு மார்க்கண்டேய மகரிஷி, பர்ணன் (கருடன்), வருணன், பிரம்மன், ஈசன், தக்ஷன், சசி, சூரியன், தும்புரு, நாரதர், குரு, பிருகு, சார்ங்கன், கௌபோதகம், சக்கரம், நந்தகம், பாஞ்சசன்யம், ஸ்ரீமது, கைடபர் ஆகிய பெயர்கள் மேலே வரிசையாகப் பொறிக்கப்பட்டுள்ளமை தமிழகக் கோயிற்கலை வரலாற்றில் ஒரு சிறப்பு மிகுந்த எடுத்துக்காட்டாகும்.

அதியனின் கலைப்படைப்புத் திறனை வியக்கும் பிற்காலக் கொங்குமண்டல சதகம்,

> புதிதாய் மலையைக் குடைந்து நற்சிற்பப் புலவரைக்
> கொண்டிதிகாசமான கதையைச் செதுக்குவித்திம்பர்
> மகிழ்ந்ததியேந்திர விஷ்ணுகிரகம் என்றேத்த
> வமைத்தவனாம் மதியூகியான அதிகன்[39]

என்கிறது. இக்கலைப் படைப்புகள் அதியரின் கலையுணர்வுக்கும், வைணவ பக்திக்கும் சான்றுகளாய் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

---

38. E.I., Vol.XXXVI, p.133, F.N.2 Manasara Chap. XIX 11, 7-9.

39. கொங்கு மண்டல சதகம், பாடல் 80

ஆ. தான் தோன்றி

கரூரில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில், காவிரியின் வடகரையில் திண்டுக்கல் சாலையில் தான்தோன்றிமலையென்ற ஒரு குன்றுள்ளது. மிகக் குறைந்த உயரம் கொண்ட இம்மலையில் ஒரு குடைவரையுள்ளது. இக்குடைவரை ஒரேயொரு உயர்ந்த பீடம் போன்ற கருவறையுடையதாய் இரண்டு தூண்களுடன் செதுக்கப்பட்டுள்ளது. இக்கருவறையின் பின் சுவரில் திருமால் நின்ற கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளார். இப்பின்சுவரில் இருந்து தொடர்ந்து வரும் சுவரமைப்பில் ஒரு மண்டபம் போன்ற பகுதியும் செதுக்கப் பெற்று, இரண்டு ஓரங்களிலும் இரு துவார பாலகர்களின் உருவங்களும் வடிக்கப்பட்டுள்ளன. பாறையின் முகப்புப் பகுதியில் மிக அழகிய பூதவரியொன்று செதுக்கப்பெற்று விளங்குகின்றது (வரைபடம் 2).

கருவறைத் திருமால் சுமார் 10 அடி உயரமுடையதாகவும், இரு துவாரபாலகர்களும் ஏறக்குறைய அதே உயரம் உடையவர்களாகவும் வடிக்கப்பட்டுள்ளனர் (படம் 18). மிகவும் தேய்ந்த நிலையில், தட்டையான உருவ அமைதியில் இவை மூன்றுமே விளங்குவதால், கலைத்திறனை அறிய இயலாத நிலையினை இன்று அடைந்து விட்டன. எனினும், அங்குள்ள பூதவரி, கலைஞரின் கலைத் திறனையும், குடைவரையின் காலத்தினையும் அறிய உதவும் சான்றாய் அமைந்துள்ளது (படம் 19).

அறிஞர் ஒருவர்[40] இக்குடைவரையின் வடிவமைப்பினைக் கொண்டு நாமக்கல் இலக்குமி நரசிம்மர் குடைவரைக்கும் இதற்குமுள்ள ஒப்புமையினைச் சுட்டிக்காட்டி இதுவும் அதியமான்களாலேயே செய்விக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்கிறார்.

மேலும் இக்கோயிலுக்குரியதாய் இன்றும் வழங்கப் பெறும் தலபுராணம்[41] இக்கருத்துக்கு அரண் சேர்ப்பதாய் விளங்குகின்றது. சோமசர்மன் என்ற அந்தணன் குழந்தை இன்மையால் சோர்ந்து இம்மலையினைச் சுற்றிவரும் காலத்து, இங்குச் சுயம்பு மூர்த்தியாய் (தான் தோன்றி) வெளிப்பட்ட இறைவன் அவனுக்கு அருள்பாலித்தான். தான் வழிபட்ட இறைவனுக்கு, அச்சோமசர்மன் அவ்விடத்தில் கோயில் எடுத்தான் என்று அங்கு வழங்கும் தலபுராணம் கூறுகிறது. நாமக்கல் குடைவரையினைச் செய்வித்த மன்னனும் சோமன் என்ற பெயருடையவன் அல்லது சோம குலத்தினன் (சந்திர குலத்தினன்) என்ற கல்வெட்டுச் செய்தி இங்கு நினைவுகூரத்தக்கது.

அதியர் குல அரசர்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் கரூர்,

40. எச். சர்க்கார், 'தான் தோன்றி மலை', கொங்கு, தேனடை 4, தேனீ 4

41. ஆய்வாளர் நேரிற்சென்று கோயில் பட்டாச்சாரியரிடம் கேட்டறிந்த நாள் 23.11.91.

நாமக்கல் உள்ளிட்ட பெரும்பகுதியினைக் குறைந்தது ஒரு நூறாண்டு காலமாவது ஆண்டிருத்தல் வேண்டும் என்றும், இக்காலகட்டத்தே அமைதியாகக் கலைப்பணிகளையும் செய்திருத்தல் வேண்டுமென்றும், அவர்களது வளர்ச்சியினை விரும்பாத பாண்டிய நெடுஞ்சடையன் ஆயிர வேலி அயிரூர், புகழியூர் ஆகிய இடங்களில் அதியரை வென்றான் என்றும் இந்நூலின் இரண்டாம் இயலில் விளக்கப்பட்டுள்ளது. எனவே இத்தான்தோன்றியும் கி.பி.8ஆம் நூற்றாண்டில் அதியரால் எடுக்கப்பட்ட குடைவரையெனக் கூறலாம். இக்கருத்து திரு. சர்க்கார் அவர்களாலும் கூறப்பெற்றுள்ளது.[42]

இ. குணசீலச் சதுர்வேதி மங்கலம்

திருச்சி – நாமக்கல் சாலையில் திருச்சியை அடுத்து ஐந்து கிலோமீட்டர் தொலையில் குணசீலம் என்றொரு ஊர் தற்போது உள்ளது. இங்குத் திருமாலுக்கொரு கோயில் உள்ளது. இன்றைய நிலையில் இக்கோயிலின் காலத்தைக் கணிப்பதற்குரிய கல்வெட்டுகளோ, வேறு சான்றுகளோ இல்லை. ஆனால் ஸ்ரீரங்கத்தில் கிடைத்த கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹொய்சள மன்னன் வீரராமநாதனின் கல்வெட்டு,[43] குணசீலச் சதுர்வேதி மங்கலம் என்ற ஊரினை அவன் ஸ்ரீரங்கம் கோயிலுக்குத் தானமாக அளித்ததைக் குறிக்கிறது. இவ்வூர் அதியர் குலத்துக் குணசீலனின் பெயரால் வழங்கப் பெற்றதாதல் வேண்டும். இவ்வூரிருக்கும் இடமும் இக்கருத்துக்கு அரண் சேர்ப்பதாய் உள்ளது.

இதே கால கட்டத்தில் தென்னார்க்காடு மாவட்டம் திருவேந்திபுரத்தில், ஸ்ரீவைகானசக் காணியாக 1500 காசுகளைக் கொடையளித்து, அதன் பொலிசையால், ஒரு நொந்தா விளக்கெரிக்கச் சாமந்தன் அதியமான் என்பான் கொடுத்த கொடை அவ்வூர்க் கல்வெட்டில் குறிக்கப்படுகிறது.[44] இவையெல்லாம் அதியர் குலத்தவர் தொடர்ந்து வைணவத்தினை ஆதரித்து வந்தனர் என்பதனைக் காட்டும் சான்றுகளாகக் காணப்படுகின்றன.

கொற்றவை வழிபாடு

பண்டைத் தமிழரிடையே தாய்த்தெய்வ வழிபாடு மிகச் சிறந்த இடத்தினைப் பெற்றிருந்தது. 'பழையோள்' என்ற சொல் 'முதற்பண்டைத் தெய்வம்' என்ற பொருளது (திருமுருகு:259).

கானமர் செல்வியான தாய்த்தெய்வத்தின் அருளாற் சிறப்புப்பெற முடியும் என்ற நம்பிக்கை மிக்கு இருந்தது (அகம்.345). தொல்காப்பியர் கொற்றவையைக் குறிப்பிடுகிறார் (பொருள். புறத்.4).

42. எச். சர்க்கார், 'தான் தோன்றி மலை', பக்.1–5.

43. ARE 1938-39, No.118; S.I.I. Vol.XXIV, No. 272

44. ARE- 1955-56, No.244.


பெருமலையின் அடுக்கத்து விளங்கும் பெற்றிமிகு சூலியினைக் குறிப்பிடுகிறது குறுந்தொகை (218). கொல்லிக் குடைவரையில் 'கொல்லிப் பாவையெனும் எழில்மிக்க தெய்வம் இருந்ததைச் சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன (நற். 201:5,6). அன்னை வழிபாடு தமிழகத்தின் தொன்மை வழிபாடாகத் திகழ்ந்ததை இச்சான்றுகள் காட்டும். போரில் வெற்றி பெறும் பொருட்டுக் கொற்றவையை வணங்கிச் சூளுரைத்து செல்வதும், வெற்றி பெற்றபின் பலியாகத் தம் தலையினை அரிந்து கொடுத்து வழிபடுவதும் பண்டைய மரபு. இவ்வகையில் தொல்குடியாகத் தொடர்ந்து அதியர் வாழ்ந்த தகடூர்ப் பகுதியில் கி.பி.8ஆம் நூற்றாண்டினதாகக் கருதத்தக்க கொற்றவைச் சிற்பம் ஒன்று, 'ஸ்ரீபகவதி குறுச்சூலி' என்ற பெயரோடு கிடைத்துள்ளது.[45] எட்டுக் கரங்களுடன் விளங்கும் இவ்வுருவம், தீர்த்த மலையின் அடுக்கத்தில் கிடைத்திருப்பது பண்டைய வழிபாட்டு நெறியினை அவர்கள் தொடர்ந்து போற்றி வந்துள்ளமையைச் சுட்டி நிற்கும் சிறந்த சான்றாகும்.

குறிப்பிடத்தகுந்த எந்தவகையான நெறிப்படுத்தப்பெற்ற சமயமும் தோற்றம் பெறாத குலமரபுச் சமுதாய காலத்தில், குல மரபுக்கேயுரிய வழிபாடுகளுள் ஒன்றான நடுகல் வழிபாடு அதியரிடையே சிறப்புப் பெற்றிருந்த நிலையும், அக்காலத்திலேயே சிறிது சிறிதாகப் பரவிக் கொண்டிருந்த வைதிக, சமண, பௌத்த சமயங்களுக்கு அதியர் அளித்த ஆதரவும், பின்னர்ச் சமய மறுமலர்ச்சியினைத் தொடர்ந்து எழுச்சி பெற்ற சமயங்களான சைவத்தையும், வைணவத்தையும் அதியர் ஆதரித்த வரலாறும், அதன் அடிப்படையில் தன்னாட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு கால கட்டங்களிலும் கட்டடச் சிற்பக்கலைக் கூடங்களாகக் குடைவரைகளையும் கோயில்களையும் அவர்கள் அமைத்த வகையும், தொல்குடியாய்த் தொடர்ந்து அதியர் வாழ்ந்த தகடூர்ப் பகுதியில், பண்டைய தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாகக் கொற்றவை வழிபாடு இடம்பெற்ற தன்மையும் இவ்வியலில் இதுவரை விரிவாக ஆராயப்பட்டன.

இவ்வாய்வின்வழி, குலமரபுக் காலம் தொட்டுத் கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை, பல்வேறு கால கட்டங்களிலும் அதியர் பல்வேறு வழிபாட்டு நெறிகளிற் சிறந்து விளங்கினர்; தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் வளர்ச்சி பெற்றிருந்த சமய வாழ்வினுக்கு ஏற்பவும், பெரிய அரச மரபுகளுக்கிணையாகவும் இவர்கள் கட்டட, சிற்பக் கலைகளை வளர்த்தனர் என்னும் செய்திகள் தெளிவாக்கப் பெற்றுள்ளன.

---

45. தருமபுரிக் கலவெட்டுகள், முதல தொகுதி, எண.53. தற்போது சென்னை கோரனட் நிறுவனத்தாரிடம் இச்சிற்பம் உள்ளது



படம் 3. அறிதுயில் கொள்ளும் அண்ணல்
அரங்கநாதப் பெருமாள் கோயில், நாமக்கல்.



படம் 4. பணிந்து நிற்கும் கருடன்
அரங்கநாதப் பெருமாள் கோயில், நாமக்கல்.



படம் 5. உந்திக் கமலத்தெழுந்த நான்முகன்
அரங்கநாதப் பெருமாள் கோயில், நாமக்கல்.



படம் 6. பாடிப்பரவும் அரம்பையரும் முனிவரும்
அரங்கநாதப் பெருமாள் கோயில், நாமக்கல்.




படம் 7. மாலும் அரியும் இணைந்த பெருமான்
அரங்கநாதப் பெருமாள் கோயில், நாமக்கல்.



படம் 8. இரணியன் ஆகம் கீண்ட எம்மான்
இலக்குமி நரசிம்மர் கோயில், நாமக்கல்.



படம் 9. புவிமடந்தையை இடந்து புல்கிய கோலம்
இலக்குமி நரசிம்மர் கோயில், நாமக்கல்.



படம் 10. தேவதேவனாகிய திருக்கோலம்
இலக்குமி நரசிம்மர் கோயில், நாமக்கல்.






படம் 11. வாமனத் திருமேனிகள் படம் 12.


அரங்கநாதர் கோயில் - இலக்குமி நரசிம்மர் கோயில்கள், நாமக்கல்



படம் 13. அந்தரம் ஏழினூ டு சேல உய்த்த பாதம்
(திருவிக்கிரம மூர்த்தி)
இலக்குமி நரசிம்மர் கோயில், நாமக்கல்.




படம் 14. வராகமூர்த்தி, மாமல்லபுரம், பல்லவர் கலை.



படம் 15. அனந்த சயனப் பெருமாள், மாமல்லபுரம், பல்லவர் கலை.




படம் 16. ஹிரண்ய சம்ஹார மூர்த்தி,
மதுரை, பாண்டியர் கலை



படம் 17. அதியனின் பட்டப் பெயர்கள், நாமக்கல்.



படம் 18. துவாரபாலகர்கள், தான்தோன்றி மலை



படம் 19. பூதவரி - தான் தோன்றி மலை

இயல் VII

அதியர் ஆட்சியில் வணிகமும் வேளாண்மையும்

பண்டைக்காலத்தே உலக அரங்கில் நடைபெற்ற வணிகத்தில் தமிழகம் மிகச்சிறந்த இடத்தினைப் பெற்றிருந்தது. வணிக வளர்ச்சியே தமிழ்நாட்டுக்கும், தமிழக மன்னர்களுக்கும் பெரும் செல்வத்தை அளித்தது. சங்க காலம் பொற்காலம் என்று கூறத்தக்க பழம்பெருமைக்கு பெருமளவு அன்றைய வணிகச் செழிப்பு அடிப்படையாய் விளங்கியது எனலாம்.

பொதுவான வணிகம் பற்றிய முன்னுரையுடன் தொடங்கும் இவ்வியல் குலமரபுச் சமுதாய காலத்திலேயே தமிழகத்தில் சிறப்புப் பெற்றிருந்த வெளிநாட்டு, உள்நாட்டு வணிகம் பற்றியும், வணிகத்திற்கு அடிப்படைத் தேவையாக விளங்கிய இயற்கைக் கனிமவளங்கள், மற்றும் வணிகப் பொருட்களைக் கொண்டு செல்லப் பயன்பட்ட பெருவழிகள் பற்றியும், இவ்விரு அடிப்படைத் தேவைகளில் அதியர் ஆட்சிப்பகுதி சிறந்திருந்த தன்மை பற்றியும், குலமரபுத் தலைவர்கள் சிலரிடையே நடந்த போர்களிற் சில வணிகம் காரணமாக நடந்திருக்க வேண்டும் என்ற கருத்து பற்றியும், குலமரபுச் சமுதாயம் வீழ்ந்த பின்னரும், தொடர்ந்து இடைக்காலத்திலும், கி.பி.12,13–ஆம் நூற்றாண்டு வரையிலும், அதற்குப் பின்னரும் கூட தருமபுரி மற்றும் கரூர் வரையுள்ள மேலைக் கடற்கரையில் இருந்து வரும் பெருவழிப் பகுதிகள் வணிகத்திற் சிறந்து நின்ற தன்மையினையும் விரிவாக ஆராய்கிறது.

ஒருவருக்கொருவர் அறிந்த மக்களுக்குள்ளேயோ அல்லது பண்பாட்டு கலப்பில்லாத மக்களுக்குள்ளேயோ தமக்குள் இசைந்து பொருள்களை மாற்றிக் கொள்வதே வணிகம் எனப்படுகிறது. இவ்வணிகத்தினைக் கொடை வணிகம் (gift trade), நெறிப்படுத்தப் பெற்ற வணிகம் (administered trade) மற்றும் சந்தை வணிகம் (Market trade) என்று பலவகைப்படுத்துவர்.[1] இருவருக்கிடையே உள்ள உறவால் நடப்பது முதல்வகையிலும், ஒப்பந்தங்கள், சேமிப்பு, சட்டப்படியான பாதுகாப்புச் செய்தல், விலை குறித்து உடன்படிக்கைகள் போன்ற செயல்முறைச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு அரசு என்ற நிறுவனத்தின் மூலம் நடைபெறுவது இரண்டாம் வகையிலும், தேவையின் அடிப்படையில் தம்முள் இசைந்த விலையினை ஏற்று அவ்வப்போது வாங்குதலும், கொடுத்தலும் என்ற நிலை மூன்றாம் வகையிலும் கருதத்தக்கன. இம்மூன்று வகையிலும் பண்டைய வணிகம் நடைபெற்றமைக்கான குறிப்புகள் அதியர் ஆட்சிப்பரப்பில் நமக்குக் கிடைக்கின்றன.

---

1. H.P. Ray, Monastry and Guild (intro), Oxford: Oxford University Press, 1986, p.1.

வெளிநாட்டு வணிகம்

மேற்கு ஆசியாவில் பிர்ஸ், நிம்ருட், ஊர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள தேக்கு மரத்துண்டுகளை ஆய்வு செய்த அறிஞர்கள், அவை இந்திய வகையின என்றும், அவை அங்குள்ள கட்டடங்களில் பயன்படுத்தப்பட்ட காலம் கி.மு.6–5–ஆம் நூற்றாண்டாகலாம் என்றும் முடிவு செய்கின்றனர்.[2] கி.மு. இரண்டு மற்றும் முதல் நூற்றாண்டுகளில் கிரேக்க மற்றும் இந்திய வணிகர்களின் குடியிருப்புகள் தமிழகத்தில் இருந்ததைப் பெரிப்புளூஸ் குறிப்பிடுகிறது.[3] திரு. வெர்மிங்டன் அவர்கள் கருத்துப்படி, இந்தியாவிலிருந்து நான்கு முறை தூதர்கள் கிரேக்கம் சென்றுள்ளனர்.[4] அவர்களுள் தமிழகத் தூதர்கள் இருமுறை சென்றுள்ளனர். கிழக்குக் கடற்கரையின் அரிக்கமேட்டில் கிரேக்கக் குடியிருப்புகள் இருந்தன என்பதை அங்குச் செய்யப்பட்ட அகழாய்வுகளும், ஆராய்ச்சிகளும் வெளிப்படுத்தியுள்ளன.[5] மேலும் தமிழகத்தில் கரூர், காஞ்சிபுரம், புகார், கொற்கை, வசவசமுத்திரம் போன்ற பல ஊர்களில் செய்யப்பட்ட அகழாய்வுகளில் உரோமநாட்டு மதுச்சாடிகள் கிடைத்திருப்பது அங்கிருந்து மது இறக்குமதி செய்யப்பட்டதை ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கும் சான்றாகும்.[6] மேலும் கி.மு. முதல் நூற்றாண்டில் ஆண்ட அகஸ்டஸ் என்ற உரோமானிய மன்னன் முதல் கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் ஆண்ட செனோ மன்னன் வரையிலான பல மன்னர்கள் வெளியிட்ட காசுகள், கரூர், மதுரை போன்ற சங்ககாலத் தலைநகரங்களிலும், வெள்ளலூர், கலயமுத்தூர், கண்ணனூர், நவலை போன்ற பிற இடங்களிலும் புதையல்களாக மிக அதிக எண்ணிக்கையில் கிடைத்திருப்பது அந்நாட்டுடன் தமிழகம் கொண்டிருந்த வணிக உறவினைப் புலப்படுத்தி நிற்கின்றது.[7]

உள்நாட்டு வணிகம்

சங்க இலக்கியங்கள் வணிகம் பற்றிய பல குறிப்புகளைத் தருகின்றன.[8] உப்பு வணிகமே பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றது. உமணச் சாத்துகள் குறிப்பிடத்தக்கவை. கழுதைகள் மீதேற்றிக்

2. M.A.S. VII, pp.139-156.
3. Indian Antiquary, Vol.VIII, p.80.
4. E.H. Warmington, The Commerce between the Roman empire and India, Delhi: Vikas Publishing House Pvt. Ltd., 1974. p.37.
5. R.E.M. Wheeler, Arikamedu - an Indo-Roman Trading station on the east coast of India, Ancient India No.11 Delhi: ASI, 1970, pp.17-124.
6. தமிழ்நாட்டு வரலாறு–சங்ககாலம், வாழ்வியல், சென்னை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983, பக்.174
7. R.E.M. Wheeler, pp.116-121.
8. தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம், வாழ்வியல், பக்.156–176.

கொண்டு சென்று மிளகு விற்கப்பட்டதை அறிகிறோம். பெரும்பாலும் உள்நாட்டு வணிகம் பண்டமாற்றாகவே நடைபெற்றது. பெரிய நகரங்களில் மட்டுமே அங்காடிகள் இருந்ததாகத் தெரிகிறது. காவிரிப்பூம்பட்டினம், மதுரை ஆகிய ஊர்களில் நாளங்காடி மற்றும் அல்லங்காடிகள் இடம் பெற்றிருந்தன.[9] மற்றபடி பண்டமாற்று பற்றிய குறிப்புகளையே சங்க இலக்கியங்கள் மிக அதிக அளவில் காட்டுகின்றன. தமிழகத்திற்குள் மட்டுமின்றி இந்தியா முழுவதும் வணிகத் தொடர்பு இருந்துள்ளது. தென்னகத்துக் கனிம வளங்களையும், தெற்கு நோக்கிச் சென்ற பெரு வழிகளையும் குறிக்கும் அர்த்தசாஸ்திரம், தாமிரபரணி முத்தினையும், சங்கினையும், பிற இடங்களில் கிடைத்த வைரம், வைடூரியம் மற்றும் பல்வகை வண்ணக் கற்களையும் மிக விரிவாக எடுத்துரைக்கிறது.[10] இவ்வகை மணிகள் கோவை மற்றும் சேலம் மாவட்டப் பகுதிகளில் கிடைத்த மணிகளாக இருக்கலாம் என்று கருத இடமுள்ளது. பெரியார் மாவட்டம், கொடுமணல் என்ற இடத்தில் அண்மையில் தொடர்ந்து நடைபெற்று வரும் அகழாய்வுகள் அவ்வூரில் மிகச் சிறந்த மணிகள் தயாரிக்கும் தொழிற்சாலையொன்று இருந்திருக்க வேண்டும் என்பதை உறுதி செய்கின்றன.[11] பதிற்றுப்பத்தும் 'கொடுமணம் பட்ட வினைமான் நன்கலன்'களைச் சுட்டுகின்றது.[12]

வணிகமும் நகர்ப்புற வளர்ச்சியும்

வணிகமும் நகர்ப்புற வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அரேபியாவின் மிகப்பெரிய நகரங்கள், செழிப்புற்ற வணிகவழித் தடங்களில் அமைந்திருந்ததையும், சாதவாகனப் பேரரசின் பெரிய நகரங்களும், குடைவரைக் கோயில்களும் வணிக வழிகளில் அமைந்திருந்ததையும் ஆராய்ச்சியாளர் கண்டு துணிந்துள்ளனர்.[13] வணிகத்தின் மூலம் வரும் வருவாய் விவசாயத்திற்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது என்றும், அதன் மூலம் நகர்ப்புறங்களில் பெருகிய மக்களின் உணவுத்தேவை நிறைவு செய்யப்பட்டது என்றும் கருதப்படுகிறது. எனவே வணிக வளர்ச்சி, வேளாண்மைத் துறை செழிக்கவும், பெருநகரங்கள் தோன்றவும் வழி கோலியது எனலாம். தமிழகத்தில் சங்ககாலத் தலைநகரங்களும், துறைமுகங்களும் மிகப் பொலிவுடனும், செல்வச் செழிப்புடனும்

9 மதுரைக் அடி.430, சிலம்பு 5.63,196

10. P.T. Srinivasa Iyengar, History of the Tamils, Delhi: Asian Educational services, 1982, p.26.

11. செ இராசு, 'நெடும்புகழ்க் கொடு மணம்', ஐந்தாவது உலகத் தமிழ மாநாட்டு மலர், 1981, பக்.394–97

12. பதிற்று 67 1,74.5.

13. D.D. Kosambi, An Introduction to the study of Indian History, Bombay: Popular Prakashan Pvt. Ltd., 1975, p.275.

விளங்கியதை அக்கால இலக்கியங்கள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. பண்டைய இச்செழுமைக்கும் பொலிவுக்கும் காரணமாக இருந்தது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகமே எனலாம்.

பெரு வழிகள்

முல்லைநிலக் கால்நடை வளர்ப்புக் குழுவினர் தம் கால்நடைகளுக்காகக் குடிபெயர்ந்து சென்ற வழிகளே தொடக்கத்தில் பிறருக்கும் வழிகளாக அமைந்தன. வணிகர்களும், வழிபாட்டுக்கெனச் செல்வோரும் பயன்படுத்தப்படும் வழிகளாகவும் பின்னர் அவை பயன்பட்டன. அவ்வழிகள் பெரும்பாலும் ஆற்றங்கரையினை ஒட்டியே சென்றன. வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்கள் பல தமிழகத்தின் பல்வேறிடங்களிலும் அண்மையில் கண்டறியப் பட்டுள்ளன.[14] அவையெல்லாம் புதிய கற்கால மற்றும் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் விட்டுச் சென்றுள்ள தடயங்கள் ஆகும். அத்தகைய ஓவியங்கள் பலவும் பெருவழிகளிலேயே கிடைத்துள்ளன. அவ்வகையில் தமிழகத்தில் கண்டறியப்பெற்றுள்ள ஓவியங்கள் தருமபுரி மாவட்டத்தில் உள்ள மல்லப்பாடி, மகாராஜாக்கடை, மல்லசமுத்திரம், தாளப்பள்ளி, குருவிநாயனபள்ளி போன்ற பல ஊர்களில் இருப்பதோடு, அவை அனைத்தும் கணவாய்களை ஒட்டிய வழித்தடங்களில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பண்டைய வணிகநெறிகள் பற்றி ஆய்வு செய்த அறிஞர் ஒருவர், காஞ்சியிலிருந்து பூனா வரையொன்றும், கோவாவிலிருந்து பாலக்கோடு வழியாகத் தஞ்சாவூர் நாகப்பட்டினம் வரை ஒன்றும், கள்ளிக்கோட்டையிலிருந்து இராமேசுவரம் வரையொன்றுமாக மூன்று பெருவழிகள் இருந்தன என்று கூறியுள்ளார்.[15] பிற்காலக் கல்வெட்டுகளில் கோட்டாற்றுக்குப் போகிற பெருவழி, தஞ்சாவூர்ப் பெருவழி, வஞ்சி வழி, ஆதன் பெருவழி, மலைக்கிறங்கின பெருவழி, சிற்றூர்க்கிறங்கின பெருவழி, காரைத் தொழுவுப் பெருவழி, இராசகேசரிப் பெருவழி, சேரனை மேற்கொண்ட பெருவழி, சோழமாதேவிப்பெருவழி, இராசமகேந்திரன் பெருவழி எனப் பல்வேறு தமிழகப் பெருவழிகள் குறிக்கப் பெறுகின்றன.[16] இத்தகைய குறிப்புகள் எல்லாம் தமிழகத்தில் வணிகப் போக்குவரத்திற்கெனப் பல்வேறு பெருவழிகளை அவ்வக்கால அரசுகளே கவனமாக இட்டுப் பராமரித்தன என்பதற்குரிய சான்றுகள் எனலாம்.

கோவை மற்றும் சேலம் மாவட்டப் பகுதிகளிலேயே

---

14. K. Rajan, `Archaeology of Dharmapuri District, Tamilnadu, Indian Society for Prehistoric and Quarterly studies Vol.XIV, No.1, p.43-46.
15. Moti Chandra, Trade and Trade Routes in Ancient India, Delhi, Abınav Publications, 1977, p.24.
16. க. குழந்தைவேலன், 'பெருவழிகள்', ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு விழா மலர், மதுரை.1981, பக். 398–402.

பெரும்பாலான பெருவழிகளின் பெயர்கள் பற்றிய குறிப்புகள் கிடைத்திருப்பது அப்பகுதியின் வணிகச் சிறப்பினைப் புலப்படுத்துவதாய் உள்ளது. வெளிநாட்டிலிருந்து மேலைக் கடற்கரையில் வந்திறங்கிய வணிகர்கள் பாலக்காட்டுக் கணவாய் வழியாகத் தமிழகத்திற்குள் வந்து, பேரூர், வெள்ளலூர், பல்லடம், காங்கேயம், கரூர் வழியாகத் தமிழகத்தின் ஏனைப் பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். மேலும் வடஇந்தியாவிலிருந்து தமிழகம் வருவோரும் வடமேற்கு எல்லைப்புறத்தில் உள்ள கணவாய்களின் வழியாகவே உள்ளே நுழைந்துள்ளனர். தருமபுரியிலிருந்து தேன்கனிக்கோட்டை ஓசூர் வழியாகத் தென்கன்னட நாட்டினை இணைக்கும் பெருவழியும், தருமபுரியினைக் கிருஷ்ணகிரி வழியாகச் சித்தூருடன் இணைக்கும் வடுகப்பெருவழியும் குறிப்பிடத்தக்கவை. இத்தகைய வசதியான பெருவழிகள் பல கூடும் இடமாக அதியரின் ஆட்சிப்பரப்பு விளங்கியதால் தமிழக வணிகத்தில் அவர்கட்கொரு சிறந்த இடம் இருந்தது. தருமபுரி மாவட்டம் நவலையில் கிடைத்துள்ள முத்திரை குத்தப் பெற்ற வெள்ளிக்காசுகளும், உரோமானியக் காசும் இதனை வலியுறுத்தும் மிகப் பழைய தொல்பொருட் சான்றுகளாக உள்ளன.

குலமரபுச் சமுதாய கால வணிகம்

மேற்குறித்த அடிப்படையில் காணும் போது, பண்டைய தமிழ்நாட்டு வணிகத்தில் அதியரின் பங்கு குறிப்பிடத்தக்க அளவு இருந்தது எனலாம். அதனை வலியுறுத்தும் சான்றுகள் பல உள்ளன. சான்றாக, அதியமான் பொகுட்டெழினியை ஔவையார்,

> எருதே யிளைய நுக மூணராவே
> சகடம் பண்டம் பெரிது பெய்தன்றே
> அவலிழியினும் மிசையேறினும்
> அவண தறியுநர் யாரென உமணர்
> கீழ்மரத்து யாத்த சேமவச்சன்ன
> இசை விளங்கு கவிகை (புறம்.302)

என்றும்,

> அச்சொடு தாக்கிப் பாருற்றியக்கிய
> பண்டச் சாகாட்டாழ்ச்சி சொலிய
> வரிமணல் ஞெமிரக் கற்பக நடக்கும்
> பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ (புறம்.90)

என்றும் பாடுகிறார். சங்கப் பாடல்களில் உப்பு விற்கும் வணிகரும், அவரது சாத்துகளும் (வணிகக்கூட்டம்) பரந்த அளவில் பேசப்படுகின்றனரெனக் கண்டோம். நெடுந்தொலைவு கொணர்ந்து (தருமபுரிக்கருகில் கடலில்லை என்பது குறிப்பிடத்தக்கது) விற்கப்படும் பொருளான அடிப்படைத் தேவையான உப்பு வணிகத்தில் ஈடுபடும் காளைகளின் அருமை பெருமையினையும், உப்பு வண்டிகளின் சேம அச்சினையும், அவை மலையும் காடுமான பகுதிகளில் ஏறி

இறங்கிவரும் சிறப்பினையும் கண்ட ஔவையார் வணிகத்தின் சிறப்பினை அறிந்தவராதலின் மேற்காட்டியவாறு அவற்றை அதியனுக்கு உவமையாக்குகிறார் எனலாம்.

போரும் வணிகமும்

திருக்கோவலூர்த் தலைவனான மலையமான் திருமுடிக்காரி அதியனின் சமவெளிப் பகுதிக்கும், தமிழகத்தின் உட்பகுதிக்கும் (கொங்கு நாட்டிற்கும், தொண்டை மண்டலத்திற்கும் நடுவே) இடையேயான வழியில் இருந்த வேறொரு குலத்தலைவன் ஆவான். சேரனின் சார்பாளனாக இருந்த காரிக்கும், அதியனுக்கும் போர் ஏற்பட்டது. இப்போர் வணிகப் பெருவழியினைத் தனக்குரியதாக ஆக்கிக் கொள்ளும் பொருட்டுக் காரியிட்ட போராகவே இருத்தல் வேண்டும். இப்போரில் திருக்கோவலூர் துகளெழும் வகையில் அதியன் வெற்றி வாகை சூடினான். வெற்றி கொண்ட அதியன் மீளும் வழியில் சமணர்க்கு அளித்த கொடை, தருமபுரி திருக்கோவலூர்ப் பெருவழியில் அமைந்துள்ள ஜம்பையில் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டிருப்பது கவனத்திற்குரியது.

வாகைப்பறந்தலையில் நன்னனின் சார்பாகப் போரிட்ட மிஞிலியுடன், பாண்டியனின் சார்பாக அதியமான் நெடுமிடல் போரிட்டு இறந்தான். பாண்டியனின் வணிகத்திற்கு ஏதுவாக எல்லைப்புறத்தில் அதியன் விளங்கியிருத்தல் வேண்டும். பாண்டியனின் கொற்கை முத்தும், பிறவும் வடஇந்தியாவுக்குச் செல்லும் வழியிது. நன்னனின் நாடு இயல்பாகவே பெருவளம் பழுநிய நாடு. மலைபடு பொருட்களும், காடுபடு பொருட்களும் நிறைய உள்ள நாடு. அவனது நியமம் என்னும் பேரூர் திருநகராக (செல்வச் செழிப்புடையதாக) விளங்கியது என்பார் பெருங்கௌசிகனார் (மலைபடு.480,548). நியமம் என்ற பெயரே வணிகத்துடன் தொடர்புடையது.[17] எனவே அவனும் அதியனின் நாட்டுப் பகுதியினை வணிக வழிகளுக்காகப் பெறவேண்டும் என்று கருதியிருக்கலாம். இவ்வகையிலேயே இவ்விருவருக்கும் போர் ஏற்பட்டது எனலாம்.

தகடூரும் வணிகமும்

தகடூரை 'விரவுமொழித் தகடூர்' என்று குறிக்கிறது அகநானூறு. பொதுவாகப் பலமொழி பேசுவோரும் வாழும் இடமாக வணிக நகரங்கள் விளங்கியிருக்கின்றன. காவிரிப்பூம்பட்டினத்தைப் பாடும் கடியலூர் உருத்திரங்கண்ணார்,

மொழிபல பெருகிய பழிதீர் தேயத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் (பட்டினப்.216–218)

17. நிகமம் என்பது வணிகக் குழுவினைக் குறிக்கும் சொல்லாகும் அதுவே தமிழில் 'நியமம்' என்று வழங்கப்பட்டது. பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகளில் 'திருவெள்ளறை நிகமம்' போன்ற பெயர்கள் இடம் பெறுகின்றன.

என்கிறார். இதுபோலவே பல்வேறு மொழி பேசும் மக்கள் வாழும் ஊராகத் தகடூர் விளங்கியதென்ற குறிப்பினைக் கொண்டு, தகடூர் வணிகத்தில் சிறந்த இடம் பெற்றிருந்தது எனக் கருதலாம்.

தகடூரும் கனிம வளங்களும்

தகடூர்ப் பகுதியின் கனிம வளங்களின் செழுமையினை நிலவியல் அமைப்புப் பகுதியில் கண்டோம். குலமரபுச் சமுதாயப் போர்களுக்கும், அன்றாட வாழ்க்கைப் பயன்பாட்டுக்குமான கருவிகளைச் செய்ய இப்பகுதியில் கிடைத்த இரும்பு இன்றியமையாததாய் இருந்திருத்தல் வேண்டும். மேலும் இப்பகுதியில் கிடைத்த பல வண்ண மணிகளும், படிகக் கற்களும், தமிழகப் பண்டைய வணிகத்தில் சிறப்பிடம் பெற்றிருந்ததால் குலமரபுச் சமுதாய வணிகத்தில் அதியர் சிறப்புப் பங்கு பெற்றிருந்தனர் எனலாம்.

பேரரசு தோன்றுவதற்கு முன் வணிகம்

குலமரபுச் சமுதாய இறுதியில் வீழ்ச்சியடைந்த வணிகம், பல்லவ பாண்டியர் ஆட்சியின் போது மலர்ச்சியடைந்தது. மணிக்கிராமத்தார், நானாதேசிகன், திசையாயிரத்து ஐந்நூற்றுவர், அஞ்சுவண்ணத்தார், வளஞ்சியர், பதினெண்விஷயத்தார் போன்ற பல வணிகக் குழுக்கள் தோன்றிச் சிறந்தன. இவர்கள் தமிழகத்திற்கு மட்டும் உரியவர்கள் என்றில்லாது, தென்னகம் முழுமைக்கும் செல்பவர்களாகவும், கடல்கடந்தும் வணிகம் மேற்கொண்டவர்களாகவும் விளங்கினர். குறிப்பாக நானாதேசிகள் வெளிநாட்டு வணிகத்தில் பெரும்பங்காற்றினர். பல்லவர், பாண்டியர் கல்வெட்டுகளில் இத்தகைய வணிகர் பற்றிய குறிப்புகள் மிகப்பரந்த அளவில் கிடைக்கின்றன. நகரத்தார் என்ற சொல் வணிகர் அனைவரையும் குறிக்கும் பொதுச் சொல்லாக விளங்கியது. அவர்களது நிர்வாக அமைப்பு நகரம் என வழங்கப்பட்டது. வணிகக் குழுவினர் தாம் செல்லும் வழிகளில் தங்கிச் செல்ல வசதியாகத் குறிப்பிட்ட இடைவெளியில் தங்குமிடங்களைக் கொண்டிருத்தல் அவசியமான ஒன்று. மேலும் இவர்கள் வணிகப் பொருட்களைப் பல பெருவழிகள் கூடும் இடங்களில் சேமித்து வைத்துத் தேவைக்கேற்ப எடுத்துச் செல்லுதல் மற்றும் பரிமாறிக் கொள்ளுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் தங்குமிடங்களிலும், பொருள்களைச் சேமித்து வைக்குமிடங்களிலும் காவலுக்கெனத் தம் வீரர்களை நிறுத்தி வைத்திருந்தனர். இவையன்றிப் பெருவழிகளிலும், எல்லைப் பகுதிகளிலும், ஆற்றைக் கடக்குமிடங்களிலும், பட்டினப் பகுதிகளிலும் அமைந்த வரி (சுங்கம்) வசூலிக்கும் இடங்களிலும், காவல் வீரர்கள் இருந்தனர். இவ்வாறு சுங்கம் பெறும் இடங்கள் 'சாரிகைக் கொட்டகைகள்' எனக் கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின்றன. இவற்றின் அருகிலும் காவல் வீரர்கள் தங்கியிருந்தனர்.

இப்படை வீரர்கள், முனைவீரர், செட்டிவீரர், கொடிவீரர், எறிவீரர் எனப் பல பெயர்களால் அழைக்கப் பெற்றனர். வணிகர்கள் மற்றும் வணிகப் பொருட்களின் முகாமிடங்கள் 'தாவளங்கள்' என்றும்,'அடிக்கீழ்த்தளங்கள்' என்றும் பெயர் பெற்றன.[18]

இத்தகைய வணிகக் குழுக்கள், நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்புகளாய் இருப்பதோடு, அறப்பணிகள் பலவும் செய்துள்ளன. அறச்செயல்களுக்குப் பெரும்பொருளை அள்ளித் தருவதோடு நின்றுவிடாமல் அவ்வறங்களைப் பராமரிக்கும் பணியினையும் இக்குழுவினர் பல இடங்களில் ஏற்றுள்ளனர். பல்வகைப்பட்ட மக்களும் தாம் செய்யும் அறப்பணிகளுக்கு முதலாக வைக்கும் பணத்தினை ஏற்று அதன் பலிசை (வட்டி) மூலம் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பினை இவர்கள் ஏற்றதால் நாட்டின் பொருளாதாரம், அறம் ஆகிய இரண்டுமே வணிகர்களால் வளர்ந்தன என்றறிகிறோம்.

முன்னரே குறித்தபடி இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், மேலை நாட்டிலிருந்தும் வந்து தமிழகத்தின் உள்நாட்டுப் பகுதிகளுக்குச் செல்லும் வழியில் தகடூர் இருந்ததால், இங்குப் பல்வகையான வணிகம் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் ஒன்றில் 'வதிசெல்வான் கல்' என்ற தொடர் காணப்படுகிறது.[19] பெருவழியில் காவல்புரிந்த வீரன் ஒருவன் இறந்துபட்டதையே இக்கல்வெட்டுத் தெரிவிப்பதாதல் வேண்டும். வணிகர்களே ஊராளும் தலைவர்களாகவும் இப்பகுதியில் விளங்கியிருக்கின்றனர். தொல்குடியினராகவே பெரும்பாலும் விளங்கிய மக்கள் வாழ்ந்த இப்பகுதியில் வணிகர்களே ஓரளவு செல்வம் படைத்தவர்களாகச் சிறந்திருத்தல் வேண்டும். பல்லவ மகேந்திரவர்மனின் கல்வெட்டு, 'மீவேணாட்டு கிப்பையூர் ஆளும் வணிகர், ஒருவரைக் குறிக்கின்றது.[20] இப்பகுதிகளில் ஏற்படும் சிறுசிறு பூசல்களிலும் வணிகக் கூட்டத்தாரின் வீரர்களே பங்குபற்றினர் போலும். அதியமான் வழிவந்த தொல்குடித் தலைவனான 'தெழினியார்' ஒருவரின் சார்பாக வணிகச் சடையன் என்ற வீரன் ஒருவன் யானை மீதமர்ந்து போரிட்டு வீரமரணம் அடைந்தான் என்பதையும் ஒரு கல்வெட்டு தெரிவிக்கின்றது.[21] எனவே வணிக

18. தி. சுப்பிரமணியன், 'தாவளம்', தொல்லியல் ஆய்வுத்தொகுதி, மதுரை தொல்பொருள் தொழில்நுட்பப் பணியாளர் கழகம, 1985, பக் 107–115. 'அடிக்கீழ்தளம்', தொல்லியல் கருத்தரங்கு, சென்னை தமிழ்நாடு அரசு தொல்பொருள்ஆய்வுத் துறை,1982,பக் 17–22.

19. இரா. நாகசாமி(ப ஆ.), தருமபுரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி, சென்னை தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை, 1975, எண்:1973/2

20. தருமபுரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி, 1972/21.

21. தருமபுரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி, 1972/2

வீரர்கள் யானைகள் வைத்திருந்தனர் என்பதும் தெளிவாகிறது.[22] ஊத்தங்கரை வட்டத்தில் உள்ள ரெட்டியூரில் வளஞ்சியர் ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுவினர் அம்பலம் (கோயில் அல்லது மன்டபம்) ஒன்று எடுத்ததை ஒரு கல்வெட்டு சுட்டுகின்றது.[23] இவ்வாறு எந்த ஒரு பெருமன்னரும் இல்லாத காலத்திலும் கூட, இப்பகுதியில் வணிகர்கள் பற்றிய கல்வெட்டுகள் கிடைப்பதிலிருந்து, இப்பகுதியின் வணிகச் சிறப்பு புலப்படுகிறது.

கி.பி.12,13-ஆம் நூற்றாண்டுகளில் வணிகம்

கி.பி.12–13–ஆம் நூற்றாண்டளவில் மீண்டும் அதியமான்களின் ஆட்சி நிலைபெற்றபோது, அவர்கள் வணிகத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனரென்பதற்குச் சான்றுகள் பல காணப்படுகின்றன. கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் ஓசூர்ப்பகுதியில் மயிலாப்பூரைச் சேர்ந்த வணிகக் குழுவினர் வந்து தங்கியிருந்துள்ளனர் என்பதை அவ்வூர்க் கோயிலுக்குச் சந்திவிளக்குக்கென அவர்கள் நிவந்தம் அளித்துள்ள செய்தி மூலம் அறிகிறோம்.[24] சிந்தல்பாடியெனும் ஊர் தேசிப்பட்டணம் என்று வழங்கப்பட்டது.[25] பொதுவாகப் பட்டணம் என்ற சொல் வணிக நகரத்தைக் குறிப்பதாகும். சூரபட்டணம், நானாதேசிப்பட்டணம் போன்று, தகடூரைச் சுற்றிச் சுமார் 12,13–ஆம் நூற்றாண்டளவில் இருந்த ஊர்களின் பெயர்கள், அப்பகுதியின் வணிகச் செழுமையினைக் குறிப்பனவாகும். சிந்தல்பாடியான தேசிப்பட்டணத்தைச் சேர்ந்த வணிகன் அளித்த கொடையினை ஒரு கல்வெட்டும், சூரபட்டணத்தில் இருந்த குலோத்துங்க சோழநாட்டு வீரஞ்செய்வார்க்கு ஊதியம் அளிக்க வகை செய்ததை வாணியம்பாடிக் கல்வெட்டும் தெரிவிக்கின்றன.[26] தருமபுரிக்கருகில் உள்ள கடகத்தூர் நானாதேசிப் பட்டணம் எனப் பெயர் பெற்றிருந்தது. 'நானாதேசி'யெனும் பன்னாடுகளுக்குச் சென்று வணிகம் செய்யும் குழு தருமபுரிப் பகுதியில் கால்கொண்டிருந்ததை இக்கல்வெட்டு மூலம் அறிகிறோம்.[27]

தகடூர் வணிகரின் தளமாக விளங்கியது என்பதைக் கி.பி.1227–ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று தெளிவாகக்

---

22 வணிகர்கள் வைத்திருந்த யானைப்படையின் தலைவர்கள், அத்திகோசத்தார எனபபட்டனர் ஆர் பூங்குன்றன், 'அத்திகோசத்தார்', தொல்லியல் கருத்தரங்கு, பக்.72–85

23 தருமபுரிக் கலவெட்டுகள் முதல் தொகுதி, 1972/27

24. தருமபுரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி, 1974/31–ஆ

25 மேலது, 1974/150.

26 மேலது, 1974/174

27 ஆர். நாகசாமி(ப.ஆ.), தருமபுரிக் கல்வெட்டுகள், இரண்டாம் தொகுதி, சென்னை: தொல்பொருள் ஆய்வுத்துறை, 1978, எண் 124

காட்டுகின்றது.[28] திருக்கோச்செங்கணீஸ்வரம் என்றழைக்கப்பட்ட கோயிலுக்கு இராஜராஜ அதியமான் கொடுத்த பதின்கண்டக விதை நிலத்தினைக் கந்தமுழான் செயங்கொண்டான் திருவண்ணாமலை யுடையான் என்பவன், தானமாக அளித்தான். அவனைத் 'தகடூரில் தளமுடைய வியாபாரி' என்று அக்கல்வெட்டு சுட்டுகின்றது. முன்னர்க் குறிப்பிட்டபடி இவ்வூர் வணிகர்கள் தங்குமிடமாகவும், வணிகப் பொருட்களின் சேமிப்பிடமாகவும் விளங்கியதையே இது காட்டுகிறது. மேலும் தீர்த்தம், குந்தாணி ஆன கொத்தூர் ஆகிய ஊர்களிலும் வணிகர்களைத் குறிக்கும் கல்வெட்டுகள் அமைந்துள்ளன. கொத்தூரில் உள்ள கல்வெட்டு, வணிகர்களின் சின்னங்கள் பலவற்றைக் கொண்டிருப்பதோடு அடிக்கீழ்த்தளம், அத்திகோசத்தார், நான்குதிசைப் பதினெண்விஷயத்தார் ஆகியோரையும் குறிப்பிடுகின்றது.

கல்வெட்டுகள் கிடைத்திருக்கும் ஊர்கள் அனைத்தும் பெரும்பாலும் பெருவழிகளில் உள்ளவையே ஆகும். இவ்வாறு மிகச்சிறந்த வணிகவழியில் தன் பரப்பினைக் கொண்டிருந்த அதியர்குல விடுகாதழகிய பெருமாளும், கி.பி.12–ஆம் நூற்றாண்டில் வணிகத்தினை ஊக்குவிக்கும் வகையில் பல செயல்களைச் செய்திருக்கின்றான். அவற்றுள் ஒன்றே தொலைவினைக் குறிக்கும் கற்கள் ஆகும். அவை கிடைத்தமை வரலாற்றின் பேறே எனலாம். அவை 'அதியமான் பெருவழி' என்ற பெயர் பொறிக்கப்பட்ட கற்பலகைகளாகும். அக்கல் நடப்பெற்றிருக்கும் பெருவழியின் பெயரையும், அப்பெருவழி எங்குச் செல்கிறது என்ற செய்தியினையும், அவை நடப்பெற்ற இடத்திலிருந்து சென்றடையும் ஊர் எவ்வளவு தொலைவில் உள்ளது என்ற தகவலையும் அளிப்பதாக அமைந்துள்ளன. இத்தகைய கற்கள் இதுவரை இரண்டு கிடைத்துள்ளன. அதியமான் கோட்டைக்கும் பாலக்கோடுக்கும் இடையே சாலை ஓரத்தில் வயல்களுக்கிடையே ஒன்றும், தருமபுரி–கிருஷ்ணகிரி சாலையில் தருமபுரியில் இருந்து எட்டுமைல் தொலைவில் கெங்குரெட்டிபட்டி என்னும் ஊரில் ஒன்றும் ஆக இரண்டுள்ளன.[29] முன்னதில்,

அதியமான் பெருவழி
நாவற் தாவளத்துக்கு

---

28 தருமபுரிக் கல்வெட்டுகள், இரண்டாம் தொகுதி.115.


29. இதில் குறிக்கப்படும் நாவல் தாவளம் எங்குளது என்று முடிவாகக் கூறுதற்கில்லை. எனினும், இரண்டு கற்களுக்கும் இடையே உள்ள எண்களைக் கொண்டு ஆராய்ந்தால், வடார்க்காடு மாவட்டம் வேலூருக்கருகிலோ அல்லது செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்திற்கருகிலோ இத்தாவளம் இருந்திருக்கலாம் என ஊகிக்கலாம் ஏறத்தாழ இதேகாலத்தில் ஆறகழூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட குறுநிலத் தலைவன் மகதேசன் என்ற பாணர்குலச் சிற்றரசனும் தன் பெயரால் 'மகதேசன் பெருவழி' என்ற பெருவழியொன்றினை அமைத்துள்ளான். அது காஞ்சிபுரம் வரை சென்றதெனத் தெரிகிறது எனவே இவ்வதியமான் பெருவழி குறிக்கும் நாவற்தாவளமும், காஞ்சிக்கருகிலேயே இருந்திருக்க வாய்ப்புள்ளது.

காதம் 29

என்றும், பின்னதில்,

அதியமான் பெருவழி
நாவற்தாவளத்துக்கு
காதம் 27

என்றும் எழுதப்பட்டுள்ளது. இதில் எண்கள் தமிழ் எண்களாக எழுதப்பட்டுள்ளன. ஆனால் அதையொட்டிக் கல்லாதோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் இரு பத்துகளைக் குறிக்க இரு பெரிய குழிகளும், ஒன்பதினையும், ஏழினையும் குறிக்க முறையே ஒன்பது, ஏழு சிறிய குழிகளும் பொறிக்கப்பட்டுள்ளன (படம் 20). இதிலிருந்து இப்பெருவழிகளைச் செய்தமைத்ததோடு அதன் பராமரிப்பிலும், விடுகாதழகிய பெருமாள் மிக்க கவனஞ் செலுத்தியிருத்தல் வேண்டும் என ஊகிக்கலாம்.



படம் 20 : பெருவழிக்கல்

வேளாண்மை

இயற்கையிலேயே நன்செய்ப் பயிர்களைப் பயிர் செய்வதற்கேற்ற வளமான நிலப்பரப்பினை மிகுதியாகப் பெற்றிராத பகுதி அதியர் பகுதியாகும். இருப்பினும் தகடூர் என்னும் தலைநகர் அமைந்திருந்த சமவெளியில் மட்டும் ஓரளவு விவசாயம் நடைபெற்றிருக்க வாய்ப்புள்ளது.

மிகப் பழங்காலத்திலேயே கரும்பினை உம்பர் உலகத்திலிருந்து அதியர் கொணர்ந்தனர் என்ற குலமரபுச் சமுதாயகாலத் தொன்மக் கதை, வழக்கிலிருந்தது பற்றிய ஆய்வு இவ்வியலில் இடம் பெறுகிறது. குலமரபுச் சமுதாய காலத்தே வேளாண்மையில் மிகுந்த சிறப்புப் பெற்றிராத அதியரின் ஒரு கிளையினர் பின்னர் வளமான காவிரிக் கரைக்கு வந்து அங்கு வேளாண்மையாற் மிகச் சிறந்து செழிப்புடன் வாழ்ந்த வரலாறும், இறுதிவரை வேளாண்மையில் மிகச் சிறந்த இடத்தினைப் பெறாவிடினும் அதியர் அம்முயற்சியில் ஓரளவு வெற்றிபெற்ற திறனும் இப்பகுதியில் ஆராயப்படுகிறது.

குலமரபுச் சமுதாய காலத்தில் வேளாண்மை

பண்டைய தகடூர்ப் பகுதியின் நிலவளம் பற்றி நூலின் தொடக்கத்திலேயே விளக்கப்பட்டுள்ளது. பல சிறிய ஆறுகள் பாயும், மிகச் சிறுசிறு சமவெளிகளைக் கொண்டு இப்பகுதி விளங்குகிறது. அதியராட்சிப்பரப்பில் தகடூரும், அதைச் சுற்றிய சிறுபகுதியும் அன்றும், இன்றும் கூட வளமான பகுதியாக உள்ளது. அதியனை ஔவையார், 'மலையலர் அணியும் தலைநீர் நாடன்' என்று பாடுகிறார். காவிரி, தமிழகத்தினுள் புகுவது இன்றும் தருமபுரி மாவட்டப் பகுதியில்தான். அன்றும் காவிரி முதலில் புகும் நாட்டவனாக அதியன் விளங்கியிருக்கின்றான் என்பதையே 'தலைநீர் நாடன்' (புறம்.390) என்ற சொல் குறிப்பதாகக் கொள்ள வேண்டும்.

... ... பரம்பணைந்து
இறங்குகதிர் அலம்வரும் கழனிப்
பெரும்புனற் படப்பை யவர் அகன்றலை நாடே (புறம்.98)

என்று அவர் பாடுதலின் அவன் நாடு ஓரளவேனும் நன்செய் நிலம் பெற்றிருந்திருக்க வேண்டும் எனலாம். அதியமான் இறந்தபோது கையற்றுப்பாடும் ஔவையார்,

எறிபுனக் குறவன் குறையலன்ன
கரிபுற விறகின் ஈம ஒள்ளழல் (புறம்.231)

என்று பாடுவதை நோக்க அவனது பகுதியில் குறிஞ்சி நில மக்கள் வரகு, தினை போன்ற புன்பயிர்களைப் பயிர் செய்யும் பொருட்டுப் புனத்தினை விளைச்சலுக்குத் தயார் செய்வதற்காக இயற்கையில் முளைத்திருந்த செடிகளைச் சுட்டு நிலத்தினைப்

பண்படுத்திய செய்தியை அறிகிறோம். பலநூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட இதே முறையில் பயிரிடப்பெறும் புன்பயிர்களே அங்குக் காடுகளில் விளைகின்றன. மலைச்சரிவுகளில் அடுக்கடுக்காகப் புன்செய்ப் பயிர் செய்யும் நிலை (Terace Cultivation) இன்றும் அங்கு நிலவுகிறது. இருப்பினும் தகடூர் யாத்திரைப் பாடல் ஒன்று,

பெருநீரால் வாரி சிறக்க இருநிலத்
திட்டவித் தெஞ்சாமை நாறுக நாறார
முட்டாது வந்து மழைபெய்க பெய்தபி
னொட்டாது வந்து கிளைபயில்க வக்கிளை
பால்வார் பிறைஞ்சிக் கதிரீன்க வக்கதிர்
ஏர்கெழு செல்வர் களநிறைக்க வக்களத்துப்
போரெல்லாங் காவாது வைகுக (புறத்.844)

என்று தாம் வேண்டியாங்கு மழைவளஞ் சிறக்கவும், தொடர்ந்து பயிர் செய்தல், நன்கு பயிர் விளைந்து பொலிதல் ஆகியவற்றை வேண்டியும் பாடுவதாக அமைகிறது. குலமரபுச் சமுதாயத்தில் இணைந்து குழுவாகப் பாடுவதன்மூலம் தாம் வேண்டியதை இயற்கையினின்று பெற முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பாடப்படும் பாடலாக இதனைக் கொள்ளுதல் பொருத்தமுடையது. மழைவளம் சிறக்க வேண்டுமென உயர்பலி தூவும் குறிஞ்சி நில மக்களை வேறிடத்திலும் சங்கப்பாடல்களில் காணலாம்.[30]

கரும்பு பயிரிடல்

புறநானூற்றில் அதியர் குடியின் முதன்மக்கள் கரும்பினை, இங்கு (இவ்வுலகிற்கு)க் கொணர்ந்தளித்ததாகப் பெருமையுடன் பேசப்படுகின்றனர்.

அரும்பெறல் மரபிற் கரும்பிவண் தந்த
....
தொன்னிலை மரபின் நின்முன்னோர் (புறம்.99)

என்றும்,

... ... அந்தரத்து
அரும்பெறல் அமிழ்தம் அன்ன
கரும்பிவண் தந்தோன் (புறம் : 392)

என்றும் அமைகின்றன அப்பாடல் அடிகள். அரும்பெறல் அமிழ்தம் அன்ன கரும்பு என்றதால், இன்றைய கரும்பாகவே இது இருத்தல் வேண்டும். இக்குறிப்பினைக் கொண்டு, மிகமிகப் பழங்காலத்தில் இவர்களில் முன்னோரே முதன்முதலில் கரும்பினைப் பயிர்செய்யும் தொழிலில் சிறந்து இருந்தனர்: அதன் பின்னரே தமிழகத்தின்

30. கா. சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாய வாழ்க்கை, சென்னை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 1982, ப.17.

பிறபகுதிகளுக்குக் கரும்பு பயிர் செய்யும் வழக்கம் பரவியது என்று கொள்ள இடமுள்ளது. சங்கப் பாடல்களில் கரும்பினைப் பற்றிய குறிப்புகள் மிகப் பரவலாகக் கிடைக்கின்றன. சோழ, சேர, பாண்டிய நாட்டுப் பகுதிகளில் கரும்பின் வளத்தினைச் சுட்டும் பாடல்கள் பல உள்ளன (புறம்.386, 384, 322, 137, 42, 35, 28, 24, 22, 16). நாஞ்சில் வள்ளுவனின் நாடு, வேள் எவ்வியின் மிழலைக் கூற்றம் ஆகிய பகுதிகளிலும் கரும்பு வயல்கள் நிறைந்து இருந்ததாகப் பாடல்கள் பேசுகின்றன. கரும்புப் பயிரின் அடிப்படையில் 'கரும்பனூர்' என்ற ஊரும் பெயர் பெற்றிருக்கின்றது. எனவே கரும்பின் பயன் பெரிதும் பரவி, தம் வேளாண்மையுள் ஒன்றாக இயல்பாகக் கருதும் நிலை தமிழகத்தில் குலமரபுச் சமுதாய காலத்திலேயே வந்து விட்டது என்பது தெளிவு.

கரும்புப் பயிரின் தொடக்ககால வரலாறு, மற்றும் அதன் வேளாண்மை பற்றி ஆய்வு செய்தோர்,[31] உலகெங்கிலும் காட்டுச் செடியாக இருந்த கரும்பினை எந்தெந்தப் பகுதிகளில் வேளாண்மைக்குரியதாக ஆக்கினர் என்பது பற்றி விரிவாக எழுதியுள்ளனர். கிரிடேசியஸ் (Createceous) காலம் என வழங்கப் பெறும் காலத்திலேயே (கி.மு.15,000) ஆஸ்திரேலியாவின் வடபகுதி, புதிய ஜெனிவா, போர்னியோ, சுமத்ரா, பிலிப்பைன் தீவுகளில் மிக அதிகமாக இயற்கையிலேயே காட்டுச் செடியாகக் கரும்பு இருந்தது: பண்டைய மனிதன் இதனை வேளாண்மைக்குரிய பயிராகத் தேர்வு செய்து பயிரிட்டிருத்தல் வேண்டும்; இப்பகுதிகளில் இருந்தே மலேசியா மூலம் இந்தியாவுக்கு வந்திருத்தல் வேண்டும் என்று ஒரு சாராரும், மேற்குறித்த காலத்திலேயே இந்தியாவிலேயே இப்பயிர் இருந்தது என ஒரு சாராரும் கூறுகின்றனர். இவ்வாறு இந்தியாவுக்கென்று தனித்தொடக்கம் இருந்தது என்று கூறப்படும்போது, இங்கேயே இருவகை (S. Barberis Sinense Parentage, S. Officinarun) கரும்புகள் இருந்ததெனவும், ஒன்று மெல்லிய கடினமான தண்டினை உடையது என்றும், மற்றது மென்மையான ஆனால் பருமனான தண்டினையுடையது என்றும் கூறுகின்றனர். முன்னது வட இந்தியாவிலும், பின்னது தென்னிந்தியாவிலும் இருந்தது என்றும் உயிர்மங்கள் மற்றும் மொழியியலடிப்படையில் ஆய்வு செய்கையில் வட இந்தியக் கரும்பின் காலம், தென்னிந்தியக் கரும்பின் காலத்திலும் பிற்பட்டதாகவே உள்ளது என்றும் முடிவுக்கு வருகின்றனர். எனவே இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் காட்டுச் செடியாக இருந்த கரும்பினை வேளாண்மைக்குரிய பயிராக, நினைவுக்கு அப்பாற்பட்ட காலத்திலேயே செய்த குடி அதியர் குடியாக இருத்தல் வேண்டும் என்பதையே இவ்வடிகள் உணர்த்துகின்றன எனக் கொள்ளுவதற்கு இடமுள்ளது.

---

31. Encylopaedia Britannica, The New, The Macropaedia, 15th ed. Chicago: University of Chicago, 1982.

பேரரசு தோன்றுவதற்கு முன் வேளாண்மை

இக்கால கட்டத்தில் தகடூரை விட்டு ஒரு கிளையினர் குடி பெயர்ந்ததற்கு நிலவளமே காரணமாக அமைந்திருத்தல் வேண்டும் என்பதை முன்பும் குறித்துள்ளோம். பாண்டியரும் பல்லவரும் தமதாட்சிப் பரப்பினைப் பரப்பிய பகுதிகளுக்கும், அதியமான்களின் தகடூருக்கும் இடையே அமைந்த கருவூருக்கு வடக்கேயுள்ள காவிரிக் கரைக்கு வேளாண்மை நிலத்தேவை காரணமாக இவர்கள் குடி பெயர்ந்தனர். விரும்பியபடியே காவிரியின் வடகரைக்கு வந்த அதியர் குடி செழிப்புற்றது.

மாயிரும் பெருப்புனற் காவிரி வடகரை
ஆயிரவேலி அயிரூர் தன்னிலும்
புகழியூரிலும் திகழ் வேலதியனை[32]

பாண்டியன் ஓடுபுறம் கண்டதாகச் சீவரமங்கலச் செப்பேடு கூறுகிறது. எனவே அயிரூர், புகழியூர் என்னும் வளமிக்க ஊர்களைக் கொண்டவராய் அதியர் விளங்கினர் என்பது வெளிப்படை. ஒலியுடை மணித்தேரும் குதிரைப் படையும் கொண்டவராக அவர் விளங்கியதற்கு வேளாண்மையால் அவர்கள் பெற்ற பெருஞ்செல்வமும் காரணமாக அமைந்திருக்கலாம்.

பேரரசு வீழ்ச்சிக் காலத்து வேளாண்மை

கி.பி.13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த விடுகாதழகிய பெருமாள்,

திரைமருவும் தடங்கமலத் தகடை மன்னன்
செழும்பாலி பெண்ணை திருநதி மூன்றுடைய
விரைமருவும் திருமார்பன்[33]

என்று பாராட்டப் பெறுகிறான். பாலாறு, பெண்ணையாறு, பொன்னியாறு என்னும் மூன்று ஆறுகளையும் உரிமையாகக் கொண்ட சிறப்பினைப் பெற்றுள்ளான். தென்பெண்ணையாறு அதியரின் நாட்டுக்குப் பெருவளம் தருவது. இன்றும் தருமபுரி, அரூர் வட்டங்களின் செழுமைக்குக் காரணமாவது இவ்வாறுதான்.

இப்பகுதியில் ஏரிப்பாசனம் சிறந்த இடத்தினைப் பெற்றிருந்தது. ஏரி செவிடை சமுத்திரம் என்ற பெரிய ஏரியும், வரகூர்ப் பெரிய ஏரி, சக்கரப்பள்ளி ஏரி, பாரூர் ஏரி, பொன்னேரி, பெரிய ஏரி, புறக்கரை ஏரி ஆகிய பல ஏரிகள் 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.[34] ஏரிநீரை வெளிக்கொணரத் தூம்புகள்

---


32 பாண்டியர் செப்பேடுகள் பத்து, சென்னை தமிழ் வரலாற்றுக் கழகம், 1967, ப 65

33. E.I. Vol.VI, p.332.

34 தருமபுரிக் கல்வெட்டுகள், முதல் தொகுதி, 1974/4, இரண்டாம் தொகுதி, எண் 131–144

அமைக்கப்பட்ட செய்தியைச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. எனவே ஏரிப் பாசனத்தாலும் இப்பகுதி ஓரளவு வளம் பெற்றது எனலாம். ஆறுகளில் அணைமூலம் நீரைத் தேக்கியும், ஏரிகளினின்று தூம்புகள்மூலம் நீரைக் கொணர்ந்தும் வேளாண்மையினை மேற்கொண்டிருக்கின்றனர்.

கி.பி.13ஆம் நூற்றாண்டளவில் நீரைக் குழாய்கள் மூலம் நிலத்திற்கடியிலேயே கொணர்ந்து பாசனத்திற்குப் பயன்படுத்திய மைக்கான தொல்பொருட் சான்று இப்பகுதியில் கிடைத்துள்ளது.[35] இத்தகைய சான்று கிடைத்திருப்பது தமிழக வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க வொன்றாகும். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஊத்தங்கரை வட்டத்திலுள்ள விவசாயி ஒருவருக்குத் தன் நிலத்தினைப் பண்படுத்தும்போது சுடுமண்ணால் ஆன குழாய்கள் கிடைத்தன. அப்போது கிடைத்த 34 மண் குழாய்களும் தற்போது தருமபுரி அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன (படம் 21). ஒன்றோடொன்று பொருந்தும் வகையிலமைத்துச் செய்யப்பட்ட இக்குழாய்ப் பாசன முறை பதின்மூன்றாம் நூற்றாண்டளவிலேயே இப்பகுதியில் நிலவியது என்பதை இதனால் அறிகிறோம்.



21. நீர்பாசனக் குழாய்கள்

35. சொ. சாந்தலிங்கம், வரலாற்றில் தகடூர், பாப்பாரப்பட்டி: தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை, 1990, ப.199.

ஓசூர் வட்டத்திலுள்ள பாரந்தூரில் கிடைத்த கல்வெட்டு ஒன்று, சித்திரமேழிப் பெரியநாட்டார் அளித்த கொடையினைக் குறிக்கிறது.[36] இப்பகுதியில் சித்திரமேழி விண்ணகர் என்ற பெயரில் திருமாலுக்குக் கோயிலொன்றையும் இவர்கள் எடுத்துள்ளனர். சித்திரமேழிப் பெரிய நாட்டார் என்போர் உழவையே தொழிலாகக் கொண்ட வேளாண் குழுவினர் ஆவர். இவர்கள் இப்பகுதியில் தங்கிப் பாசனத்தை மேம்படுத்தியிருக்கின்றனர். கி.பி.13ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் பாசன மேம்பாட்டுக்கு அவர்கள் செய்த முயற்சியும், பெற்ற வெற்றியும் கவனத்திற்குரியன.

இதுகாறும் செய்த ஆய்வின்வழி, தமிழகத்தின் வடமேற்கில் உள்ள கணவாய்களைக் கடந்து உள்ளே நுழையும் வாயிற்பகுதியில் தகடூர் அமைந்திருந்ததும், இயற்கையிலேயே கனிம வளங்களை நிரம்பப் பெற்றிருந்ததும் அதன் வணிகத்திற்கு மூலகாரணமாய் அமைந்தது என்பதும், பெருவழிகள் கூடுமிடத்தே ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த அதியர், தொலை தூரத்தில் இருந்த ஓரளவு பெரிய அரசான பாண்டியர்க்குச் சார்பாளராய், அவர்தம் வணிகத்தின் காவலராய் குலமரபுச் சமுதாய காலத்தில் விளங்கினர் என்பதும், வணிகத்திற்குரிய இந்த அடிப்படை வசதிகள் காரணமாகத் தமிழக வரலாற்றுக் காலம் முழுவதிலும் அதியர் வணிகத்திற் சிறந்து விளங்கி, வணிகத்தைப்பெருக்கி, அவர்களும் வளம் பெற்றனர் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளன.

குலமரபுச் சமுதாய காலம் முதல் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரையில் வேளாண்மையில் மிகச் சிறந்த இடத்தினை அதியர் எட்ட முடியவில்லை என்பது உண்மை. எனினும் நினைவுக்கெட்டாத பண்டைக் காலத்தில் அதியர் உம்பருலகத்தில் இருந்து கரும்பினைக் கொணர்ந்தனர் என்ற தொன்மக் கதையின்வழி, அதியரே தமிழகத்தில் கரும்பு பயிரிடுவதை முதன்முதலில் அறிந்திருத்தல் வேண்டும் என்று கருதலாம் என்பது விளக்கப்பட்டுள்ளது. மேலும் பேரரசு தோன்றுவதற்கு முன்னுள்ள காலத்தில் அதியரின் ஒரு கிளையினர் காவிரியின் வடகரையில் வந்து குடியமர்ந்ததன் காரணமாகச் செழுமை பெற்றிருந்தனர் என்பதையும், சிறுசிறு ஆறுகள், ஏரிகள் மூலம் வேளாண் முயற்சியினைத் தொடர்ந்து செய்தும், கி.பி.13ஆம் நூற்றாண்டளவிலேயே குழாய்ப் பாசன முறையைச் சிறந்த முறையில் செய்தும் ஓரளவு வளம் பெற்றனர் என்ற தெளிவினையும் பெற முடிகிறது.

36 தருமபுரிக் கல்வெட்டுகள், முதல் தொகுதி, 1974/14

முடிவுரை

குலமரபுச் சமுதாயங்களில் மக்களின் குடியிருப்பு அமைதிகள் (Settlement patterns) தோன்றிய வகையினைப் போலவே இரத்த உறவுள்ள 'குடி'களாக முதலில் வாழ்ந்த மக்கள் பின்னர்ப் பல குடியினர் ஒரே இடத்தில் தங்கி வாழ்ந்ததன் காரணமாக இணைந்து குலங்களாயினர். இக்குலங்களின் அன்றாடத் தேவைக்கும் பொருளாதார வாழ்க்கைக்கும் என நிகழ்ந்த போராட்டத்திற்குப் போர்க்காலத் தலைவன் ஒருவன் தேவைப்பட்டான். அவனே அமைதிக்காலத்திலும் தலைவனாகி, நிலம் பொருள் இவற்றைப் பங்கீடு செய்து தரும் உரிமையுடையவனாக மாறினான். அந்நிலையில் கடமைகளிலும், பொறுப்புகளிலும் மேம்பட்டு விளங்கிய தலைவன் எந்தக் குலத்திற்கு உரியவனோ அந்தக் குலத்திற்கு ஆளும் உரிமை பரம்பரைச் சொத்தாகியது. இவ்வாறு ஆளும் குலமரபுகள் தோன்றிப் பெருகின.

தமிழகம் முழுவதிலும் ஒரே மாதிரியான வளர்ச்சி ஏற்படாததால், குலமரபுகளில் சில குறுகிய ஆட்சிப் பரப்பினையும், சில அகன்ற ஆட்சிப் பரப்பினையும் உடையனவாயின. இவ்வேறுபாடு குலமரபுகளுக்குள் சில படிநிலைகளை (Strata) உருவாக்கியது. இத்தகைய படிநிலைகளையே கிழார், சீறூர் மன்னர், வேள், வேந்தர் என்பன போன்ற சொற்கள் உணர்த்தி நிற்கின்றன.

இத்தகைய வளர்ச்சி அடிப்படையில் தமிழ்ச் சமுதாயத்திலும் குடி, குழு, குலம், குலமரபு ஆகியன தோன்றின. அவ்வாறு தோன்றிய குல மரபுகளுள் ஒன்றாக அதியர் மரபு நிலைத்த வகையும், அம்மரபின் தலைவர்களாகவும், பெருமகன்களாகவும் சிலர் வளர்ந்த முறையும், அவர்களுக்கு அதியர் என்ற பெயர் அத்தி என்ற மரப்பெயரின் அடிப்படையில் வந்திருக்கலாம் என்ற உண்மையும், அம்மரபினர் ஆளும் மரபாகக் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரே நிலைபெற்று விட்டனர் என்பதும் இவ்வாய்வினால் தெளிவு பெறுகின்றன.

சங்க இலக்கியங்களின்வழி இம்மரபில் அதியர் மூவர் தொடர்ந்து ஆண்டனர் என்பதும், அவர்கள் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு வரை ஆகலாம் என்பதும் அறியப்பட்டுள்ளன. அம்மூவரும் ஈடுபட்ட போர்கள், அதியரின் நகரம், நாடு, மலை பற்றிய செய்திகள், அதியமான் நெடுமானஞ்சி இறந்தபோது நடுகல் எடுக்கப்பட்ட வரலாறு, அதியரைச் சுற்றி எழுந்த தொன்மக் கதைகள், அக்குலமரபுடன் தொடர்புடைய வேறு சில குலமரபுத் தலைவர்கள் ஆகியன பற்றிய வரலாறு முழுமையாக வெளிக் கொணரப்பட்டுள்ளது.

குலமரபுத் தலைவர்களுக்கான தகுதிகளில் இருந்து ஆளுவோர் தாழ்ந்து விட்டதாலும், முறையான திட்டமிட்ட பொருளாதார அடிப்படை இல்லாத காரணத்தாலும் குலமரபுத் தலைவர்களின் ஆட்சி

வீழ்ந்துவிட்ட காலத்தில், வேளாண்மையினை அடிப்படையாகக் கொண்ட புதிய சமுதாயம் தோன்றியது. அப்போது பழைய குல மரபுகள் சில மீண்டும் துளிர்விடத் தொடங்கின. அவற்றுள் ஒன்றாக அதியர் மரபும் புத்துயிர் பெற்றது. அக்கால கட்டத்தில் அதியரின் ஒரு கிளையினர் தொல்குடிகளாகவே தகடூர்ப் பகுதியில் தங்கி விட்டனர்; மற்றொரு கிளையினர் வேளாண்மை முன்னேற்றம் கருதிக் காவிரிக் கரையில் நாமக்கல் பகுதிக்கு வந்து சிறந்தனர். இவ்விரு குடிகளிலும் தோன்றிய அதியமான்களையும், அக்கால அரசர்களான பல்லவ பாண்டியர்கட்கும் அதியருக்கும் இடையே நிலவிய உறவு மற்றும் போர்கள் பற்றியும் விரிவாக ஆய்ந்ததன் பயனாக, சிறிய நிலப்பிரப்பினைக் கொண்டதாக இருப்பினும் ஒரு குலமரபு தம் திறமையால் பெரும்பரப்பின் ஆட்சியாளர்களைப் போல வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்பினைப் பெற முடியும் என்பதும், அவ்வாறு பெருமை பெற்ற குடியினராக அதியர் விளங்கினர் என்பதும் தெளிவாகின்றன.

சோழரின் பேரரசுக் காலத்தில் வேறு எந்த அரச குலத்தினரும் வரலாற்றில் இடம்பெற இயலாது போயினர். அந்நிலையிலும் தாம் வாழ்ந்த பகுதியில் 'மழவரையர்கள்' என்ற பெயரில் எல்லைப் புறத்தில் வாழ்ந்து, பேரரசுடன் மணவுறவு கொள்ளும் அளவிற்குச் சிறந்த ஒரு குலமாக அதியர் குலம் விளங்கியிருக்கின்றது. காலத்திற்கேற்பத் தன் பெருமை மிக்க குலப்பெயரான 'அதியர்' என்பதை வழக்கிலிருந்து மாற்றிக்கொண்டு, மழவரையர் என்ற பெயரில் இவ்வதியர் சிறப்புற்ற செய்தியினை அறிகிறோம்.

பேரரசின் கட்டுறுதி குலையும் நிலையினைப் புரிந்து கொண்டவுடன், தமது ஆளும் திறமையின் அடிப்படையில், வீரமிக்க அதிகாரிகளாகவும், அமைச்சர்களாகவும் (சாமந்தன்) அதியமான்கள் வெளிப்படத் தொடங்கினர்; மிக விரைவில் தமது பண்டைய ஆட்சிப் பரப்பில் தகடூரைத் தலைமையிடமாகக் கொண்டு தன்னாட்சி புரியும் அளவிற்கு மீண்டும் உயர்ந்தனர். பெயரளவில் சோழர் தலைமையை ஏற்றுக் கொண்டிருந்தாலும், தன் தனியாட்சியினை நிலைநிறுத்தும் வகையில், பல செயல்களைப் புரிந்துள்ளனர். நிலவியல் அமைப்பு காரணமாகச் சோழரின் எல்லைப்புறப் பாதுகாப்பினைச் சிறப்புறச் செய்த ஆட்சியாளராக இக்குடியினர் விளங்கினர்.

இக்காலகட்டத்தில் குறுநில மன்னர்களாக விளங்கிய பிற மரபினருடன் தம் ஆட்சியினை நிலைநிறுத்தும் வகையிலும், தமது வலிமையினை வெளிப்படுத்தும் வகையிலும் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டும், தேவையேற்பட்டபோது போரிட்டுக் கொண்டும் வாழ்ந்தனர். இந்நிலையில், அதியர் மரபில் தன்னாட்சியுடைய ஆட்சியாளர்களாக அதியமானார், இராஜராஜ அதிகைமான், விடுகாதழகிய பெருமாள் என்ற மூவர் மேம்பாடுற்றனர். இறுதியாக விடுகாதழகிய பெருமாள், ஹொய்சள விஷ்ணுவர்த்தனனுடன் நடந்த

போரில் இறந்த பின்னர், இம்மரபு மீண்டும் வலுவிழந்தது.

தமிழக வரலாற்றில் குலமரபுச் சமுதாய காலத்திலேயே அதியர் மரபு ஒரு சிறிய ஆளும் குலமரபாகத் தோன்றி வளர்ந்தது: குலமரபுச் சமுதாயம் வீழ்ந்துபட்டபோது, தன் முயற்சி காரணமாக மீண்டும் புத்துயிர் பெற்றுப் பெருமன்னர்களுக்கிணையாக ஆட்சியில் தொடர்ந்தது; பேரரசுக் காலத்தில் தன் பழம் பெயரை மட்டும் மாற்றிக் கொண்டு, பேரரசுடன் உறவுகொண்ட குடியாக வரலாற்றில் இடம் பெற்றது; பேரரசு வீழ்ச்சியில் தன்னாட்சி பெற்ற குலமரபாக ஏற்றம் பெற்றது. இவ்வாறாகச் சங்ககாலம் முதல் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து வந்த மூத்த தொல்குடியாகத் தமிழக வரலாற்றில் ஏறத்தாழ 1600 ஆண்டு காலம் வாழ்ந்த அதியர் பரம்பரையின் அரசியல் வரலாற்றினைத் தொடர்ச்சியாக ஆய்ந்து காட்டும் முயற்சி இவ் ஆய்வின் முதற்பகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு நீண்ட காலமாகத் தமிழக வரலாற்றில் இடம் பெற்றிருந்த இச்சிறிய குலமரபு இலக்கியம், சமயம் ஆகிய வாழ்வியற் கூறுகளுக்குச் சிறந்த ஆதரவினை நல்கியுள்ளது. இவர்கள் தந்த ஆதரவு காரணமாகச் சங்கப்பாடல்களில் முடியுடை மூவேந்தருக்கு அடுத்த நிலையில் அதிகமான பாடல்களைத் தனக்கெனக் கொண்ட சிறப்புக்குரியதாகவும், இடைக்காலத்தே தகடூர் யாத்திரை போன்ற காப்பியங்கள் தோன்ற ஆதரவு அளித்த குலமாகவும் அதியர் மரபு விளங்கியது என்பதை இவ் ஆய்வின்வழி அறிகிறோம்.

சமணம், சைவம், வைணவம் ஆகிய சமயங்களுக்கு அவர்கள் அளித்த ஆதரவின் பயனாய், அச்சமயங்கள் அவர்கள் ஆட்சிப் பரப்பில் பெரிதும் வளர்ந்தன. அதையொட்டி, அதியர் செய்த கலைப்பணிகள் மிக அதிக அளவில் அவர்தம் ஆட்சிப் பகுதி முழுவதும் பரவிக் கிடக்கின்றன. அவற்றை விரிவாக ஆராய்ந்ததன் பயனாக, தமிழகக் கலை வரலாற்றில் இவ்வதியர் குலம் பெற்ற சிறப்பு தெளிவாகின்றது. அவர்தம் பணியான கலைக் கருவூலங்களால் தமிழகம் பெற்ற பயனும் இவ் ஆய்வில் வெளிப்படுத்தப் பெற்றுள்ளது.

ஒரு நாட்டின் கலையிலக்கியச் சிறப்புக்கு அந்நாட்டின் பொருளாதார மேம்பாடும், அமைதியான ஆட்சியும் காரணங்களாக அமையும். அதியர் ஆட்சியமைந்திருந்த பகுதியின் நிலவியல் அமைப்பு இதற்கு ஏற்றதாக இருந்தது. இயற்கையிலேயே இப்பகுதி கனிமவளம் மிக்கது. தமிழகத்தின் வடமேற்கு எல்லைப்புறமாக விளங்கிய அதியரின் ஆட்சிப்பரப்பு தமிழகத்தினுள் வெளிநாட்டவரும், வடநாட்டவரும் நுழையும் வாயிற்பகுதியாகவும், பெருவழிகள் பல கூடும் இடமாகவும் அமைந்திருந்தது. எனவே குலமரபுச் சமுதாய கால முதலே, அதியரால் வணிகத்தில் மிகச் சிறந்த இடத்தினைப் பெற முடிந்தது. இவ்வணிகச்

சிறப்பு கி.பி.13ஆம் நூற்றாண்டு வரையிலும் தொடர்ந்து நிலவி, அவர்கட்குப் பொருளாதாரச் செழிப்பினை நல்கியது.

இவ்வதியர் இயற்கையிலேயே வேளாண்மைக்கு ஏற்றதான நிலப்பரப்பினை உடையவர் அல்லர். எனினும் அதியர், தம் பகுதியில் பாயும் சிறிய ஆறுகள் மூலமும், ஆறுகளைத் தேக்கி ஏரிகள் அமைத்தும் குழாய்ப் பாசனத்தின்மூலமும் சிறிய சமவெளிகளிலும், மலைச் சரிவுகளிலும் வேளாண்மையினை மேம்படுத்தி, ஓரளவு தன்னிறைவு பெற்றிருந்தனர். இவ்வாய்வின்வழி அதியரின் பொருளாதார மேம்பாட்டுக்குப் பெரும்பான்மை வணிகமும், சிறுபான்மை வேளாண்மையும் உதவின என்ற முடிவுகள் இவ் ஆய்வின் இரண்டாம் பகுதியில் பெறப்பட்டன.

இவ்வாய்வின் பயனாகப் பல நூற்றாண்டு காலம் வரலாற்றில் தொடர்ந்து வந்த அதியர் மரபு பற்றிய முழுமையான வரலாற்றினைத் தெரிந்து கொள்கிறோம். அதியர்குலம் குலமரபுக் காலத்தில் சிறப்பிடம் பெறுவதற்கு அக்காலத்திற்குரிய மிக அவசியமான பண்பான வீரமும் கொடையும் அடிப்படைக் காரணங்கள் ஆயின; பேரரசுக் காலத்திற்கு முன்னரும், பேரரசுக் காலத்திலும் அக்குலம் சிறப்பிடம் பெறுவதற்கு, அரசியல் அமைதியை ஏற்படுத்தும் வகையில் எல்லைப்புறத்தில் துன்பங்கள் கலகங்கள் ஏற்படாதவாறு காப்பாற்றிய வலிமையும், பொருளாதாரத் தன்னிறைவும் அடிப்படைக் காரணங்கள் ஆயின. பெருமன்னர்கள் நிலை குலைந்து, நாடு பல துண்டுகளாகிப் பலரால் ஆளப்படும் நிலையில் தம் ஆட்சிப் பரப்பில் நிலைத்த அமைதியினை அளித்து, தம்மோடொத்த குறுநில மன்னர்கட்கிடையே வலிமையும், திறமையும் கொண்டவராய் அதியர் விளங்கியதே அவர்தம் சிறப்பிற்கு அடிப்படைக் காரணம் ஆயிற்று. இவ்வகையில் சிறப்புடன் விளங்கும் எந்தக் குலமும், அது சிறிய குலமாயினும் கால வெள்ளத்தில் கரையாது நிலைத்து நிற்க முடியும் என்ற அரசியல் – சமுதாயவியல் கோட்பாட்டினை அதியர் மரபு பற்றிய இவ்வாய்வு உறுதி செய்யக் காண்கிறோம்.

துணை நூற் பட்டியல்

அ. முதன்மைச் சான்றாதாரங்கள்

குமரகுருபரன் பிள்ளை, (ப.ஆ.), *திருத்தொண்டர் புராணம்*, ஸ்ரீவைகுண்டம்: திருப்பனந்தாள் மடம், 1964.

சாமிநாதய்யர், உ.வே. (ப.ஆ.), *தக்கயாகப் பரணி*, சென்னை: உ.வே.சா.நூல் நிலையம், 1960.

--------------------, *புறநானூறு மூலமும் உரையும்*, (ஏழாம் பதிப்பு), சென்னை: உ.வே.சா. நூல் நிலையம், 1971.

வையாபுரிப்பிள்ளை,சு. (ப.ஆ.), *சங்க இலக்கியம்*, சென்னை: பாரி நிலையம், 1965.

--------------------, *புறத்திரட்டு*, சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம், 1939.

கலிங்கத்துப் பரணி, சென்னை: ராஜம் பதிப்பு, 1960.

தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம், சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1967.

தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியம், சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1966.

தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம், சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1966.

பல்லவர் செப்பேடுகள் முப்பது, சென்னை: தமிழ் வரலாற்றுக் கழகம், 1966.

பாண்டியர் செப்பேடுகள் பத்து, சென்னை: தமிழ் வரலாற்றுக் கழகம், 1967.

மூவருலா, சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1967.

Annual Report on Indian Epigraphy,	Archaeological Survey of India, New Delhi. 1902, 1905, 1906, 1912, 1913, 1921-22, 1925-26, 1938-39, 1939-40, 1945-46, 1946-47.
Corpus Inscriptions Indicarum,	Vol.I.
Epigraphia Carnatica,	Vol.I.
Epigraphia Indica,	Vol.I, VI, XXVI.
South Indian Inscriptions,	Vols. I, II, III, IV, V, VII, VIII, XIX XXIV.
Topographical List of Inscriptions of Madras Presidency,	Vol.I, II, & III.

ஆ. துணைமைச் சான்றாதாரங்கள்

நூல்கள்: தமிழ்

அருணாசலம், மு.,	தமிழ் இலக்கிய வரலாறு, பத்தாம் நூற்றாண்டு, திருச்சிற்றம்பலம்: காந்தி வித்யாலயம், *1972.*
———————————,	தமிழ் இலக்கிய வரலாறு,பன்னிரண்டாம் நூற்றாண்டு, திருச்சிற்றம்பலம்: காந்தி வித்யாலயம், *1978.*
இராகவ ஐயங்கார், மு. (தொ.ஆ.),	பெருந்தொகை, மதுரை: செந்தமிழ் பிரசுரம், *1935–36.*
———————————, (ப. ஆ.),	சேரவேந்தர் செய்யுட்கோவை, திருவனந்தபுரம்: திருவனந்தபுரம் பல்கலைக்கழகம், *1951.*
இராசேந்திரன்,அ. (ப.ஆ.),	தொல்லியல் கருத்தரங்கு, சென்னை: தமிழ்நாடு அரசு தொல் பொருளாய்வுத் துறை, *1983.*
———————————,	அருண்மொழி, சென்னை: தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, *1988.*

இராமச்சந்திரஞ் செட்டியார், கோ.ம., கொங்குநாட்டு வரலாறு, பேரூர்: தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி, 1972.

இராமன், கே.வி., பாண்டியர் வரலாறு, சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1977.

இராமலிங்கம், அரங்க., சங்க இலக்கியத்தில் வேந்தர், சென்னை: ஐந்திணைப் பதிப்பகம், 1987.

எங்கெல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு இவைகளின் தோற்றம், (நாலாம் பதிப்பு), மாஸ்கோ: அயல்மொழிப் பதிப்பகம், 1981.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், மதுரை: 1981.

கிருஷ்ணமூர்த்தி, ச., தருமபுரி வரலாறும் பிரகலாதன் சரித்திரமும், பாப்பாரப்பட்டி: தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை, 1989.

கோவிந்தசாமி, ஔவையும் நக்கீரரும் (மூன்றாம் பதிப்பு), சென்னை: பாரி நிலையம், 1967.

சஞ்சீவி, ந., சங்ககாலச் சான்றோர்கள் (5ஆம் பதிப்பு) சென்னை: பாரி நிலையம், 1978.

சதாசிவப் பண்டாரத்தார், தி.வை., பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974.

சாந்தலிங்கம், சொ., வரலாற்றில் தகடூர், பாப்பாரப்பட்டி: தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை, 1990.

சாமிநாதய்யர், உ.வே., என் சரித்திரம், சென்னை: உ.வே. சாமிநாதய்யர் நூல் நிலையம், 1950.

சுப்பிரமணியம், கா., சங்ககாலச் சமுதாயம், சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 1982.

சேதுராமன்,என்., பாண்டியர் வரலாறு, கும்பகோணம்: ராமன் அண்டு ராமன் பிரைவேட் லிமிட். 1989.

தமிழ்நாட்டு வரலாறு, சங்க காலம் அரசியல், சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.

தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம், வாழ்வியல். சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.

தேவநேயப் பாவாணர், ஞா., செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலி, முதன்மடலம், முதற்பகுதி, சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1985.

தொல்லியல் ஆய்வுத் தொகுதி, மதுரை: தொல்பொருள் தொழில் நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம், 1985.

நாகசாமி, இரா. (ப.ஆ.), தருமபுரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி, சென்னை: தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1975.

————————, தருமபுரிக் கல்வெட்டுகள், இரண்டாம் தொகுதி, சென்னை: தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத்துறை, 1978.

————————, செங்கம் நடுகற்கள், சென்னை: தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1972.

பாலசுப்பிரமணியம், எஸ்.ஆர். கோப்பெருஞ்சிங்கன், சென்னை: பாரி நிலையம், 1965.

மதிவாணன், இரா., சொல்லாய்வுக் கட்டுரைகள், சென்னை: சேகர் பதிப்பகம், 1982.

மயிலை மாதவதாசன், நாலாயிர திவ்யப்ரபந்தம், (இரண்டாம் பதிப்பு), சென்னை: 1950.

வேங்கடசாமி, மயிலை, சீனி., கொங்குநாட்டு வரலாறு, சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 1974.

————————, மறைந்து போன தமிழ் நூல்கள். சென்னை: சாந்தி நூலகம், 1967.

வையாபுரிப்பிள்ளை, எஸ். இலக்கியச் சிந்தனைகள், சென்னை: பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், 1989.

ஜகந்நாதன், கி.வா., அதிகமான் நெடுமான் அஞ்சி, சென்னை: 1959.

நூல்கள்: ஆங்கிலம்

Burrow, T. & Emeanew, M.L.,	Dravidian Etymological Dictionary, Oxford: Clarandan Press, 1960.
---------------------------,	Collected Papers on Dravidian Linguistics, Annamalai Nagar: Annamalai University, 1968.
Burton Stein,	Pesant State and Society in Medeival South India. Oxford: Oxford University Press, 1980.
Dorai Rangasamy, M.A.,	The Surnames of the Cankam age,•Literary and Tribal, Madras : University of Madras, 1968.
	Encylopaedia Britanica, The New, The Macropaedia (15th ed.) Chicago: University of Chicago, 1982.
Govindasamy, M.S.,	The Role of Feudatories in Pallava History, Annamalai Nagar: Annamalai University, 1965.
---------------------------,	The Role of Feudatories in the Later Chola History, Annamalai Nagar: Annamalai University, 1979.
Kailasapathy, K.,	Tamil Heroic Poetry, Oxford: Oxford University Press, 1968.
Karashima Noboru,(Ed.)	Indus Valley to Mekang Delta, Madras: New Era Publications, 1985.
Kośambi, D.D.,	An Introduction to the study of Indian History, Bombay : Popular Prakashan, 1975.
---------------------------,	The Culture and Civilization of Ancient India (7th ed.), Delhi: Vikas Publishing House, 1982.
Lefanu, H.,	Salem Manual, Madras: Government of India, 1883.
Mahalingam, T.V.,	The South Indian Polity, Madras: University of Madras, 1955.
Moti Chandar,	Trade and Trade Routes in Ancient India, Delhi: Abinav Publications, 1977.

Mukkarjee, B.N., Das, D.R. and others (ed.), *Sri Dinesh Chandrika - studies in* Indology, Delhi: Sundeep Prakashan, 1983.

Nagaswamy, R. (Ed.), Seminar on Inscriptions, Madras: Book (India) Pvt. Ltd., 1968.

--------------------------. Thiruttani and Velancheri Copper Plates, Madras: State Dept. of Archaeology, 1979.

Narain, A.K. (ed.), Corpus Inscriptions Indicarum, Vol.I, Varanasi: Indological Book House, 1961.

Pillai, K.K., South India and Sri Lanka, Madras: University of Madras, 1975.

Ramachandra Dikshitar, V.R., Studies in Tamil Literature and History, Madras: University of Madras, 1947.

Ramachandran, C.E., Ahananuru in its Historical Setting, Madras: University of Madras, 1972.

Raman, K.V., K.G. Krishnan and others (ed.), Srinidhi, Madras; New era Publications, 1983.

Ramamurthy, V. The History of Kongu, Madras: International Society for the investigation of Ancient Civilizations, 1986.

Ray, H.P., Monastry and Guild, Delhi: Oxford University Press, 1986.

Richards, F.T., Madras District Gazetteers - Salem, Vol.I, Part I & II, Madras: Govt. of India, 1918.

Romila Thapar, From lineage to State, Oxford: Oxford University Press, 1984.

---------------------------, Ancient Indian Social History, Hydrabad: Orient Longman, 1978.

Sampath, M.D., Chittoor Through the ages, Delhi: B.R. Publishing Corporation, 1980.

Sathianathan, R., Studies in the ancient History of Tondaimandalam, Madras, Prof. R. Sathianathaiar Commemoration Committee, 1987.

Sastri, K.A.N., The Cholas, Madras: University of Madras, 1984.

Seminar on Social and Cultural History of Dharmapuri District, Salem: Institute of Kongu Studies, 1983.

Sethuraman, N., — Early Cholas, Kumbakonam: Raman and Raman Pvt. Ltd., 1980.

Singaravelu, S., — Social life of the Tamils - The Classical Period, Kualalumpur, University of Malaya, 1966.

Sivaraja Pillai, K.N., — The Chronology of the Early Tamils, (rpt) Delhi: Asian Educational Service, 1984.

Smith Vincent, A., — Asoka, (3rd Edn.), Delhi: S. Chand & Co., 1970.

Srinivasa Iyengar, P.T., — History of the Tamils, (rpt) Delhi: Asian Educational Services, 1982.

Subbarayalu, Y., — Political Geography of the Chola Country, Madras: State Dept. of Archaeology, 1973.

Subramaniya Iyer, K.V., — Historical Sketches of Ancient Deccan, Coimbatore, 1917.

Tamil Lexicon, Vol.III (rpt) Madras: University of Madras, 1982.

Vaiyapuri Pillai, S., — History of Tamil Language and Literature, Madras: NCBH, 1956.

Vasudeva Rao, T.N. — Buddhism in the Tamil Country, Annamalai Nagar: Annamalai University, 1979.

Vidya Daheja, — Namakkal Caves, Madras: State Dept. of Archaeology, 1977.

Warmington, E.H., — The Commerce between the Roman empire and India (2nd edn.) Delhi: Vikas Publishing House, 1974.

2. இதழ்கள்

ஆராய்ச்சி, ஜூலை 1971,

கல்வெட்டு, இதழ்கள் 4,5,6, ஆ.இல்லை.

கொங்கு, தேனடை:4, தேனீ:4, ஏப்ரல் 1974.

செந்தமிழ் தொகுதி XII, 1913–14.

செந்தமிழ்ச்செல்வி XIII, *1934–35.*

Indian Archaeology- A Review 1909, 1980-81, 1981-82.

Journal of Indian History, Vol.LIII. Part II, 1975.

Journal of Royal Asiatic Society, 1923.

Studies in History, Vol.IV, No.2, 1982.

Tamil Culture, Vol.IX, 1961.

Tamil Studies, Vol.III, 1982.

கட்டுரைகள்: தமிழ்

இராசு செ., 'அதியரது தகடூர்', தகடூர் நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கில் படித்த கட்டுரை, 1990.

————————, 'அதியர் மரபு – சங்ககாலம்', சேலம்: கொங்கு ஆய்வகம், 1988, பக், இல்லை.

இராமச்சந்திரஞ்செட்டியார், சி.எம்., 'தர்மபுரி' செந்தமிழ்ச்செல்வி, தொகுதி 13, சென்னை: கழகம், 1934–35, பக். 259–63.

குழந்தைவேலன்: க., பெருவழிகள்' ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், மதுரை – 1982, பக்.398–402.

————————, 'கோச்செங்கணானைப் பற்றிய புதிய செய்தி'. கல்வெட்டு இதழ், 4, சென்னை: தொல்பொருள் ஆய்வுத்துறை, ஆ.இ., பக்.37.

————————, 'கல்வெட்டில் ஐந்தெழுத்து', கல்வெட்டு இதழ்: 6, சென்னை: தொல்பொருள் ஆய்வுத்துறை, ஆ.இ., பக். 34–37.

————————, 'விடுகாதழகிய பெருமாள்' கல்வெட்டு இதழ்–5, சென்னை: தொல்பொருள் ஆய்வுத்துறை, ஆ.இ, பக்.33–36.

சதாசிவப் பண்டாரத்தார், 'குதிரைமலை', 'அதிகமான் நெடுமானஞ்சி செந்தமிழ் தொகுதி XII, மதுரைத் தமிழ்ச் சங்கம், 1913–14, பக்.320.

சரவணன், ச., 'தமிழகக் கனிமவளம்', ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், மதுரை: 1982, பக்.248–53

சர்க்கார், எச்., 'தான் தோன்றி மலை' கொங்கு இதழ், தேனடை 4, தேனீ:4, ஏப்ரல், 1974.

சிவத்தம்பி, கா., 'திணைக் கோட்பாட்டில் சமூக அடிப்படைகள்', ஆராய்ச்சி இதழ், ஜூலை 1971. பக்.337–352.

சுப்பிரமணியன், தி., 'அடிக்கீழ்தளம்', தொல்லியல் கருத்தரங்கு, சென்னை: தொல்பொருள் ஆய்வுத்துறை, 1982, பக். 17–22.

———, 'தாவளம்', தொல்லியல் ஆய்வுத் தொகுதி, மதுரை: தொல் பொருள் தொழில்நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம், 1985, பக்.107–115

சோதிபாய் தேவதாஸ், 'சங்கப் புறப் பாடல்களின் திணை துறை அமைப்பு', முனைவர் பட்ட ஆய்வேடு, மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1984.

தியாகராசன், இல., 'சோழர் காலக் குற்றங்களும் தண்டனைகளும்', அருண்மொழி, சென்னை:தொல்பொருள் ஆய்வுத்துறை, 1988, பக்.97–107.

நாகசாமி, இரா., 'இருளப்பட்டி நடுகற்கள்', தகடூர் அருங்காட்சியகச் சிறப்பு மலர், பாப்பாரப்பட்டி:1988.

———, 'ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான் நெடுமானஞ்சி', தினமணி, நாள் 12.10.84.

பூங்குன்றன்,ஆர்., 'அத்தி கோசத்தார்', தொல்லியல் கருத்தரங்கு, சென்னை: தொல் பொருளாய்வுத் துறை, 1982, பக்.73–85.

——— 'செங்கம் நடுகற்களில் தொறுப்பூசல், தொல்குடிகள், அரசியல்', எம்,ஃபில். பட்ட ஆய்வேடு, கோயமுத்தூர்: பாரதியார் பல்கலைக்கழகம், 1989.

மணி, பெ.சு., 'சங்ககால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும்', மதுரை: ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் அளிக்கப்பட்ட கட்டுரை, *1981. பக். 1–29.*

வேங்கடசாமி, சீனி, மயிலை, 'எழினி – யாவனிகா', Tamil Culture, Vol.IX., *1982. பக். 397–94.*

வையாபுரிப் பிள்ளை, எஸ், 'அதியமான் நெடுமானஞ்சி', இலக்கியச் சிந்தனைகள், சென்னை: வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், 1989, *பக்.320–21.*

Ganesan, M., `Report on Archaeological excavation at Adiyaman Kottai, Dharmapuri District', Report submitted for M.A. Degree, Madras: University of Madras, 1982.

Kasınathan, Natana., Pulankurichi Inscription - a relook (Pamphlet) Madras: State Dept. of Archaeology, 1988.

Mahadevan Iravatham., Tamil Brahmi Inscriptions of the Sangam age (off-print) Paper submitted at II International conference, Seminar of Tamil Studies, Madras, 1968, pp.1-41.

Nagaswamy, R., 'An outstanding Epigraphical Discovery ın Tamilnadu' (off print) Paper submitted at the 5th World Tamil Conference, Madurai, 1981.

Narayanan, M.G.S., `The Mauran Problem in Sangam works ın Historical Perspective' Journal of Indian History, Vol.LIII, Part II, Trivandrum: University of Kerala, 1975, pp.243-254.

Rajan Gurukkal, `Social formation and political process in Early Tamilagam' Paper submitted in the school of social sciences, Delhi: Jawaharlal Nehru Unıversity, n.d., n.p.

Sampath, M.D., `Laddigam Inscriptions', Sri Dinasachandrika - studies in Indology, Delhi: Sundeep Prakashan, 1983, p.87-90.

Samy, P.L., `Atiyaman and Satyaputra', Tamil Studies', Vol.III, 1982,p.

Suddharsan Seneviratne, `Pre State to state societies: Transformation in the political ecology of south India with special reference to Tamil nadu', Paper submitted in the school of social sciences, Delhi: Jawaharlal Nehru University, n.d., n.p.

Subbarayalu, Y., `The Chola State', Studies in History Vol.IV, No.2, 1982, pp.266-306.

Wheelar, R.E.M., `Arikamedu an Indo-European Trading station on the east coast of India', Ancient India, No.11, Delhi: ASI, 1970.